# இஸ்லாமிய சிந்தனை

## - சில கட்டுரைகள்

மவ்லானா வஹீதுத்தீன் கான்



# இஸ்லாமிய சிந்தனை

– சில கட்டுரைகள்

மவ்லானா வஹீதுத்தீன் கான்

மொழிபெயர்ப்பு : யூசுப் ராஜா

குட்வேர்ட் புக்ஸ்

இஸ்லாமிய சிந்தனை – சில கட்டுரைகள்
ஆசிரியர் : மவ்லானா வஹீதுத்தீன்கான்
மொழிபெயர்ப்பு : யூசுப் ராஜா
மீளாய்வு : ஃபைஸ் அஹ்மத் காதிரி
முதற்பதிப்பு : செப்டம்பர் 2018
வெளியீடு : குட்வேர்ட் புக்ஸ்

**Islamiya Chinthanai - Sila Katturaigal**
(Essays from Islam Rediscovered)

Author : Maulana Wahiduddin Khan

Translation by : Yusuf Raja

Reviewed by : Faiz Ahmed Qadiri

First Edition : September 2018

**Publisher :**

**Goodword Books**
324, Triplicane High Road, Chennai - 600 005.
☎ +91-44-4352 4599
+91 97908 53944
☎ chennaigoodword@gmail.com

**Head Office :**
1, Nizamuddin West Market, New Delhi - 110 013.
info@goodwordbooks.com
www.goodwordbooks.com


₹ 120/-

Goodword

## பொருளடக்கம்


- இறைவனின் படைப்புத் திட்டம் 5
- இஸ்லாத்தை கண்டடைதல் 16
- அஹிம்சையும் இஸ்லாமும் 30
- இஸ்லாமிய அடிப்படைவாதம் 71
- இஸ்லாமிய ஷரிஆ சட்டங்களும் அதன் பயன்பாடும் 99
- இஸ்லாமியச் செயல்பாடு 117
- பாதுகாத்தல், மறுசீரமைத்தல், அழைப்புப் பணி 128
- இஸ்லாத்தின் புரட்சிகரமான பாத்திரம் 138
- இஸ்லாமிய முன்னெடுப்பில் முஸ்லிமல்லாதவர்களின் பங்களிப்பு 148


மவ்லானா வஹீதுத்தீன் கான் எழுதிய Islam Rediscovered என்னும் ஆங்கில நூலில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில கட்டுரைகளின் மொழிப்பெயர்ப்பை ஒரு நூலாகத் தமிழ் வாசகர்களிடம் அறிமுகப்படுத்துவதில் மகிழ்கிறோம்.



## மவ்லானா வஹீதுத்தீன் கான்

1925ல் உத்திரபிரதேச மாநிலம் ஆஸம்கரில் பிறந்து தற்சமயம் புதுடில்லியில் வசித்து வருகிறார். மதரஸா மற்றும் நவீன கல்வியைக் கற்று பெரும் சிந்தனையாளராக உயர்ந்தவர். மத நல்லிணக்கத்திற்காகவும், இனங்களிடையே நல்லுறவு ஏற்படவும் களப்பணியாற்றுபவர். வாழ்க்கை முழுவதும் ஆய்வு செய்து உருது மற்றும் ஆங்கில மொழிகளில் 200க்கும் அதிகமான நூல்களை எழுதியுள்ளார். மிக முக்கியமாக திருக்குர்ஆனுக்கு அவர் அளிக்கும் பொருளுரை மற்றும் மொழிப்பெயர்ப்பு தனித்தன்மையுடன் விளங்குகிறது. மேலும் Ar-Risala என்ற மாத இதழ் மிக புகழ் பெற்றது. கடந்த 40 ஆண்டுகளாக உருதுவிலும், பெங்களூரிலிருந்து Spirit of Islam என்ற ஆங்கிலத்திலும் மாத இதழ்களாக தொய்வின்றி வெளிவந்து கொண்டிருக்கின்றன. அமைதியின் மகத்துவத்தை விளக்கி வைக்க உலகம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து வருகிறார். சமாதானத்திற்கான அவரின் பங்களிப்பை பன்னாட்டு சமூகம் அங்கீகரிக்கும் விதமாக கீழ்க்காணும் விருதுகளை வழங்கி கௌரவித்துள்ளது.

- தைமியுர்குஸ் அமைதி விருது
- பத்ம பூஷன் (இந்திய அரசின் உயர் விருது)
- சத்பாவனா (இராஜீவ் காந்தி தேசிய விருது)

www.goodwordbook.com

www.cpsglobal.org

# 1

# இறைவனின் படைப்புத் திட்டம்

*"மனித வரலாறு என்பது மனித குலத்தின் குற்றங்கள், முட்டாள்தனங்கள் மற்றும் துரதிர்ஷ்டவசமான நிகழ்வுகள் ஆகியவற்றின் பதிவேடு என்பதை விட சற்றே பெரிது" என்று பிரபல வரலாற்று அறிஞர் எட்வர்ட் கிப்பன் குறிப்பிடுகிறார். தத்துவவாதிகள் கனவு கண்ட இலக்கணப்படியான மனித வாழ்வு மனித சமூகத்தில் எங்கும் காணப்படவில்லை என்பதால் மற்ற அறிஞர்களும் அதனைப் போன்ற முடிவுக்கே வந்துள்ளனர். இஸ்லாமிய வரலாறும் அதற்கு பெரிய அளவில் விதிவிலக்கல்ல என்று மனித வரலாற்றை ஆழமாக ஆய்வு செய்த கீழ்த்திசை அறிஞர்களும் தெரிவிக்கிறார்கள்.*

*இஸ்லாமிய வரலாற்றின் பொற்காலம் என்று கொள்ளப்படும் இஸ்லாமிய வரலாற்றின் முதற் கட்டம் மற்ற காலகட்டங்களைக் காட்டிலும் சிறப்பானதாக இருந்தபோதும் அதுவும் கூட இலக்கணப்படியான அளவுகோலுக்கு பொருந்தவில்லை என்று கீழ்த்திசை அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். இறைத்தூதரின் காலத்தில் கபடவேடதாரிகளின் உள்ளுக் குள்ளேயே துரோகமான செயல்களாலும் யூதர்கள் மற்றும் சிலை வணக்கம் புரிபவர்கள் வெளியிலிருந்து விரோதமாக பகைமை பாராட்டி செயல்பட்டதாலும் இறைத்தூதரின் நகரமான மதீனா அமைதியான பிரதேசமாக குறிப்பிடத்தக்க அளவில் இருக்கவில்லை. இறைத்தூதரின் மறைவுக்குப் பின் முதல் கலீஃபாவான அபூபக்ர் முஸ்லிம்களின் தலைவராக நியமிக்கப்பட்ட போது பெரும்பாலான அரபுப் பழங்குடிகள்*

அதனை எதிர்த்துக் கலகம் புரிந்தனர். அவர்களை படைபலம் கொண்டு அடக்கி மீண்டும் இஸ்லாமிய அரசியல் அமைப்புக்குள் கொண்டு வர முடிந்தது.

பின்னாட்களில் கிட்டத்தட்ட அனைத்து காலகட்டங்களிலும் இலக்கணமான ஒரு சமூகத்தை கட்டமைப்பதற்குத் தடைகளாக சாதகமற்ற நிகழ்வுகள் மீண்டும் மீண்டும் தலைதூக்கின. இரண்டாம் கலீஃபாவான உமரின் காலத்தில் இஸ்லாத்தை அழிக்க ரகசிய குழு ஒன்று தீவிரமாக இயங்கி கலீபாவைக் கொலை செய்வதில் இறுதியாக வெற்றி கண்டது. அதன் பின்னர் எதிர்ப்பு வெளிப்படையாக அமைந்தது. அதேபோன்று மூன்றாவது கலீபாவும் பகிரங்கமாகக் கொல்லப்பட்டார். நான்காவது கலீபாவான அலியின் காலத்தில் உள்நாட்டுக் கலகம் தோன்றி ஆயிரக்கணக்கான விலைமதிப்பற்ற உயிரிழப்பு ஏற்பட்டு கலீபாவே உயிர்த்தியாகம் செய்ய நேர்ந்தது.

இவை போன்ற பலவற்றையும் கவனித்த சிந்தனையாளர்களும், தத்துவவாதிகளும் தொடர்ந்து நிகழும் துன்பகரமான சம்பவங் களைக் கொண்டு மனித வரலாற்றைப் பற்றி நம்பிக்கையற்ற கண்ணோட்டத்தையே எப்போதும் கொண்டுள்ளனர். அதாவது நிகழ்ந்த சம்பவங்கள் மூலம் இந்த உலகில் இலக்கணமான மனித சமூகம் ஒன்றைக் கட்டமைப்பது என்பது முடியவே முடியாது என்ற கருத்தை அவர்கள் கொள்கின்றனர்.

இத்தகைய வரலாறு மீதான நம்பிக்கையற்ற கண்ணோட்டத்திற்கான காரணம் வரலாற்றில் இல்லை, மாறாக அதனை நாம் தவறாக அணுகுவதில்தான் உள்ளது. மனிதர்களால் அமையப் பெறுவதால் வரலாற்றை நாம் அறிந்து ஆராயும் அளவுகோல் சரியானதல்ல. படைத்த இறைவனால் இடப்பட்ட முறையின் ஒளியில் மனித வரலாற்றை ஆராய்ந்து அறிவது மட்டுமே சரியான அளவுகோலாகும். ஆகவே இதனை சரியான வழியில் அறிந்து கொள்வது படைத்தவனின் படைப்புத் திட்டத்தை புரிந்து கொண்டு அதற்குள் வரலாற்றை ஆய்ந்தறிவதேயாகும்.

குர்ஆனை ஆராய்ந்ததில் மனிதச் சமூகத்தை சரியாகப் புரிந்து கொள்வது இலக்கணப்படியான ஒரு சமூகம் என்ற கருத்தில் அல்லாமல் மனிதச் சுதந்திரம் என்ற கருத்தில்தான் என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். மனிதனுக்கு இந்த வாழ்வில்

பேசவும் செயல்படவும் முழு சுதந்திரம் அளிக்கப்பட்டு இவ்வுலகில் இறைவனால் அவன் விடப்பட்டுள்ளது அவனைச் சோதிப்பதற்காகவே. இறைவனை மறுத்தொதுக்க, இறைத்தூதர்களைக் கொலை செய்ய, இறைவனின் உண்மைச் செய்தியை அளிப்பவர்களை எதிர்க்கும்படியான சுதந்திரமான வாழ்வு மனிதனுக்கு அளிக்கப்பட்டுள்ளது அவனை சோதிப்பதற்காகவே. இதனைப் போன்ற விவகாரங்களினால், இலக்கணப்படியான ஒரு சமூகம் அமைய மனிதனுக்கு அளிக்கப்பட்டுள்ள இந்த சுதந்திரம் அனைத்தும் திருப்பி எடுக்கப்பட வேண்டும். இறைவன் தனது படைப்புத் திட்டத்தின்படி எச்சூழ்நிலையிலும் மனித சுதந்திரத்தை பறிப்பதில்லை. மனிதனின் இந்தத் தனித்தன்மை வாய்ந்த வாழ்வின் இயல்பு குர்ஆனில் இப்படி விளக்கப்பட்டுள்ளது.

*நிச்சயமாக (நம்முடைய) பொறுப்பைச் சுமந்து செல்வீர்களா? என்று நாம் வானங்கள், பூமி, மலைகள் ஆகியவைகளிடத்தில் வினவினோம். அதற்கு அவை அதனைப் பற்றிப் பயந்து அதனை சுமந்து கொள்ளாது விலகிவிட்டன. அத்தகைய பொறுப்பைத்தான் மனிதன் சுமந்து கொண்டான். (ஆகவே) நிச்சயமாக அவன் அறியாமையால் தனக்குத்தானே தீங்கிழைத்துக் கொண்டான்.*

*(அத்தகைய) பொறுப்பை ஏற்றுக்கொண்டு அதற்கு மாறாக நடக்கும் நயவஞ்சக ஆண்களையும் பெண்களையும் இணை வைத்து வணங்கும் ஆண்களையும் பெண்களையும் அல்லாஹ் வேதனை செய்வான் (அந்தப் பொறுப்பை மதித்து நடக்கும் நம்பிக்கையாளர்களாகிய ஆண்களையும் பெண்களையும் (அவர்களுடைய) தவறிலிருந்து (அருளின் பக்கம்) அல்லாஹ் திருப்பி விடுவான் அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் கிருபை உடையவனாகவும் இருக்கின்றான்.” (33:72—73)*

*“உங்களில் மிகத்தூய்மையான செயலை செய்பவர்கள் யார் என்று சோதிப்பதற்காகவே அவன் மரணத்தையும் வாழ்க்கையையும் படைத்திருக்கின்றான். அவன் (அனைவரையும்) மிகைத்தவன் மன்னிப்பவன்.” (67:02)*

இந்த வசனத்தில் தேர்வு சுதந்திரம் என்பதை “பொறுப்பு’’ என்று இறைமறை கூறுகிறது. இதுவே மனிதனிடம் இறைவன் எதிர்ப்பார்ப்பது வானத்திற்கும், பூமிக்கும் அந்த தெரிவு

இல்லை. அவை விரும்பினாலும் அவற்றால் சுதந்திரமாக செயல்பட முடியாது. இறைவன் விதித்த இயற்கை விதிகளுக்கு அவை கட்டுப்பட்டேயாக வேண்டும். ஆனால் மனிதனுக்கு எந்த கட்டுப்பாடுகளும் இல்லை. அவை சொல்லாலும், செயலாலும் முழு விடுதலை பெற்றவன்.

இறைவனின் படைப்புத் திட்டத்தின்படி மிக முக்கியமானது எதுவெனில் உலகில் இலட்சிய சமூகத்தை கட்டமைப்பது அல்ல. மாறாக இலட்சிய மனிதனை உருவாக்குவதே என்று திருக்குர்ஆனின் வேறொரு வசனத்தில் கூறுகிறது.

இது போன்ற குர்ஆனின் மற்ற வசனங்களை நாம் கற்கும்போது, இறைவனின் படைப்புத் திட்டப்படி இவ்வுலகின் சரியான உண்மையான முக்கியத்துவம் என்பது இலக்கணப்படியான ஒரு சமூகத்தைக் கட்டமைப்பதல்ல, மாறாக இலக்கணப்படியான தனி மனிதர்களை உருவாக்குவது தான் என்பதை நாம் புரிந்து கொள்ளலாம்.

எனவே இலக்கணப்படியான மனிதச் சமுதாயம் இவ்வுலகில் அமையப் பெறாது. ஆனால், அது மரணத்திற்குப் பின்னரான மறுமை வாழ்வில்தான் அமையும். அந்த மறுமை நாளைய உலகம் தாருஸ் ஸலாம் (அமைதியின் / சாந்தியின் இல்லம்) என்று குர்ஆனில் குறிப்பிடப்படுகிறது. இவ்வுலகில் இலக்கணப்படியான ஒரு சமூகத்தைக் கட்டமைப்பதற்கு உண்மையான தடைகளாக இருப்பவை எங்கும் பரந்து நிலவும் கலக குணம் மற்றும் அகந்தை கொண்ட மக்களாலேயாகும். மறுமை நாளில் பாவச் செயல்கள் புரியும் அனைவரும் நற்செயல்கள் புரியும் மக்களிடமிருந்து விலக்கி வைக்கப்படுவார்கள். எனவே சுவர்க்கச் சமூகம் நன்னெறி மிகுந்த ஆன்மாக்களைக் கொண்டதாக இருக்கும். எனவே சுவர்க்கத்தில் மட்டுமே இலக்கணப்படியான ஒரு சமூகம் சாத்தியமாகும்.

நடுநிலையான தத்துவவாதிகளின் இலக்கண (முன்மாதிரி) சமூகத்தை இவ்வுலகில் அமைக்க எண்ணுவதில் பிழை உள்ளது. இறைவனின் படைப்புத் திட்டத்தின்படி அது மறுமை நாளிலேயே அமையும். இலக்கணப்படியான சமூகம் அமைவதற்கானத் தடையாக இருப்பது தவிர்க்கவே

*முடியாதிருக்கும் மனித சுதந்திரம்தான். மனிதனை இறைவன் சோதிப்பதற்காக அளித்துள்ள சுதந்திரம் பறிக்கப்படப் போவதில்லை. அப்படியாக இலக்கணப்படியான சமூகம் என்பது ஒரு நீண்ட நாளைய கனவாகவே இருக்கும்.*

*குர்ஆனின் கூற்றுப்படி உண்மை என்பது இவ்வுலகிற்கு அளிக்கப்பட்டு விட்டது. அதனை ஏற்பது அல்லது புறந்தள்ளுவது என்பது மனிதனிடம் உள்ளது.*

*“இறைவனால் அருளப்பட்ட (இவ்வேதமானது) முற்றிலும் உண்மையானது. விரும்பியவர் (இதனை) நம்பிக்கை கொள்ளலாம். விரும்பியவர் (இதனை) நிராகரித்து விடலாம் (அதனால்) நமக்கொன்றும் நஷ்டமில்லை.” (18:29)*

*அதனைப் போன்று குர்ஆனின் இன்னொரு வசனம்,*

*சரியான நேர்வழியைக் காட்டுவது இறைவனிடம் உள்ளது. சிலர் அதிலிருந்து விலகலாம். ஆனால் அவன் நாடினால் உங்கள் அனைவருக்கும் சரியான வழியைக் காட்டுவான்” (16:9). என்று உள்ளது*

*குர்ஆன் மேலும் கூறுகிறது.*

*உங்கள் இறைவன் எண்ணியிருந்தால் மனிதர்கள் அனைவரையும் ஒரே வகுப்பினராக ஆக்கியிருப்பான். (அவ்வாறு நாடவில்லை) அவர்கள் தங்களுக்குள் மாறுபட்டுக் கொண்டே இருப்பார்கள்*

*அவர்களில் உங்கள் இறைவன் அருள் புரிந்தவர்களைத் தவிர இதற்காகவே (மாறுபடும்) அவர்களை படைத்தும் இருக்கிறான் (பாவம் செய்த) ஜின்களைக் கொண்டும் மனிதர்களைக் கொண்டும் நிச்சயமாக நான் நரகத்தை நிரப்புவேன் என்ற உங்கள் இறைவனின் வாக்கு நிறைவேறியே தீரும்.” (11:118,119).*

*மனித வரலாற்றில் எல்லா வகையிலும் ஒரே மாதிரியான சமூகம் அமையவில்லை என்பதன் காரணம் மனிதனைப் படைத்த இறைவனால் மனிதனுக்கு அளிக்கப்பட்டுள்ள சுதந்திரம் என்பதால்தான். ஒரு சமூகத்தில் நன்னடத்தை உள்ள மனிதர்கள் இருப்பதைப் போலவே தீய நடத்தை உள்ளவர்களும் இருப்பார்கள். பிரச்சினைகளை உருவாக்கும் மதிப்பற்றவைகள்*

*ஒருபோதும் அற்றொழிவதில்லை. இதற்கு இறைத்தூதர்களால் உருவாக்கப்பட்ட சமூகங்களும் விதிவிலக்கல்ல. அதனால்தான் நல்ல மனிதர்கள் இவ்வுலகில் இருந்தபோதும், நல்ல சமூகம் அமையும் சாத்தியம் ஒருபோதும் நிகழ இயலாது.*

*இருந்தபோதும்,இது தீமையானதோ அல்லது குறைபாடோ கூட அல்ல. உண்மை என்னவென்றால், சமூகத்தில் பிரச்சினைகள் நேர்வதும், இணக்கமற்ற நிலை ஏற்படுவதும் படைப்புத் திட்டத்தைப் புரிந்துக் கொள்ள மிகவும் அவசியமானதாகும். ஏனெனில், நன்னெறியுடைய நல்ல மனிதர்கள் சாதகமான சூழ்நிலைகளை விட சாதகமற்ற சூழ்நிலைகளிலேயே உருவாகிறார்கள்.*

*கஷ்டத்திலும் மிகுந்த பிரயாசை கொண்டு சண்டையிடுவது போல போட்டியிடும் நிலையிலும் தான் மனித வாழ்வு படைக்கப்பட்டிருக்கிறது என்பதை குர்ஆனின் வாயிலாக நாம் அறிகிறோம்.*

*“மெய்யாகவே நாம் மனிதனைக் கஷ்டத்தில் (மூழ்கியவனாகவே) படைத்திருக்கிறோம்” (குர்ஆன் 90:04)*

*மனிதச் சமுதாயத்தை விளித்து குர்ஆன் இப்படிக் கூறுகிறது.*

*“(அதற்கு இறைவன் இதிலிருந்து) நீங்கள் வெளியேறி விடுங்கள் உங்களில் ஒருவர் மற்றவருக்கு எதிரியாகி விடுவீர்கள்” (குர்ஆன் 07:24)*

*இறுதித் தீர்ப்புநாள் வரும்வரை இவ்வுலகில் கஷ்டம், பெருந்துன்பம், எதிர்ப்பு மற்றும் விரோதம் ஆகியவைகளால் இடர்ப்படும் வாழ்க்கையை வாழ்வதைத் தவிர மனிதனுக்கு வேறு வழியில்லை.*

*மனிதனின் இந்த நிலை எதிர்பாராத விதமாக ஏற்பட்டதல்ல. இறைவனின் திட்டப்படியேதான் இவை அமைந்துள்ளன. சுவனத்தில் வசிக்கத் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காகவே இறைவன் இவ்வுலகைப் படைத்துள்ளான். அங்கு வாழக்கூடிய மதிப்பு வாய்ந்த மக்கள் சாதாரண சூழ்நிலையை விட அசாதாரணமான நெருக்கடி யான நிலைகளிலேயே உருவாகிறார்கள். ஆகவே மனிதர்கள் அத்தகையதொரு தேர்விற்கான விரும்பத்தக்கவர்களாக இருக்க*

*சாதகமற்ற சூழ்நிலைகளைத் தொடர்ந்து எதிர்கொண்டிருக்க வேண்டும்.*

*குர்ஆன் கூறுகிறது.*

*மனிதர்கள் “நாங்கள் நம்பிக்கை கொண்டோம்” என்று கூறினால் (மட்டும் போதுமானது அதனைப் பற்றி) அவர்கள் சோதிக்கப்படாமல் விட்டு விடப்படுவார்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றனரா?*

*இவர்களுக்கு முன்னிருந்தவர்களை எல்லாம் நிச்சயமாக நாம் சோதித்தே இருக்கிறோம். ஆகவே (நம்பிக்கை கொண்டோம் என்று கூறும்) இவர்களில் உண்மை சொல்பவர்கள் எவர்கள் என்பதை நிச்சயமாக அல்லாஹ் (சோதித்து) அறிந்து கொள்வான் (அவ்வாறே இதில்) பொய் சொல்பவர்கள் எவர்கள் என்பதையும் நிச்சயமாக அவன் (சோதித்து) அறிந்துகொள்வான் (29:1—3).*

*மேலும் அதேபோன்று குர்ஆன் கூறுகிறது.*

*(நம்பிக்கையாளர்களே) உங்களுக்கு முன் சென்றவர்களுக்கு ஏற்பட்டது போன்ற (கஷ்டமான) நிலைமை உங்களுக்கு வராமலே நீங்கள் சுவர்க்கத்தில் நுழைந்து விடலாமென்று நினைத்துக் கொண்டீர்களோ (உங்களைப் போல) நம்பிக்கை கொண்ட அவர்களையும் அவர்களுடைய தூதரையும் வாட்டும் வறுமையிலும் நோயிலும் பீடித்து (அவர்கள் வருந்தித் தங்களுடைய கஷ்டங்களை நீக்கி வைக்க) “அல்லாஹ்வுடைய உதவி எப்பொழுது (வரும்? எப்பொழுது வரும்?) என்று கேட்டதற்கு “அல்லாஹ்வுடைய உதவி நிச்சயமாக (இதோ) சமீபத்தில் இருக்கிறது என்று (நாம் ஆறுதல்) கூறும் வரையில் அவர்கள் ஆட்டி வைக்கப்பட்டார்கள் (2:214)*

*குர்ஆனின் இன்னொரு வசனம்*

*உங்களில் முனைப்போடு செயலாற்றுபவர்கள் யார் என்பதையும், மனஉறுதியோடு நிற்பவர்கள் யார் என்பதையும் அல்லாஹ் அறியாமலேயே நீங்கள் சுவனம் புகுந்து விடலாம் என்று எண்ணுகின்றீர்களா?*

*“(விசுவாசம் கொண்டோரே) உங்களில் இறைவனுக்காக கடுமையாக உழைப்பவர்கள் யார் என்பதை இறைவன்*

*பரிசோதித்து அறியாமலும் இன்னும் (துன்பங்களைப் பொறுமையுடன்) சகித்துக் கொள்பவர்கள் யார் என்பதை அவன் அறியாமலும் நீங்கள் சுவனத்தில் நுழைந்து விடலாமென்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்களா? (3:142).*

*முஸ்லிம்களை விளித்துக் குர்ஆன் இப்படிக் கூறுகிறது:*

*"நீங்கள் அவர்களுடன் போர் புரியுங்கள், உங்கள் கைகளைக் கொண்டே இறைவன் அவர்களுக்கு வேதனை கொடுத்து அவர்களை இழிவுபடுத்தி அவர்களை நீங்கள் வெற்றி பெற உங்களுக்கு உதவியும் புரிந்து நம்பிக்கை கொண்ட உள்ளங்களுக்கு திருப்தியும் அளிப்பான்" (9.14).*

*உண்மை என்னவென்றால் இந்த உலகில் இறைவனுக்கு விருப்பமானது இலக்கணப் படியான சமூகமல்ல, இலக்கணப்படியான மனிதனேயாவான். (தனி மனிதனேயாவான்) மேலும் நாம் குர்ஆனிலிருந்து கற்றறிந்து கொள்வது என்னவென்றால் அத்தகைய தனி மனிதன் சாதாரண அமைதியான நல்ல சூழ்நிலைகளில் அல்லாமல் கடுமையான நெருக்கடி மிகுந்த பெருந்துன்பமான சூழ்நிலை களிலேயே உருவாவான் என்பதுதான்.*

*"அந்நேரத்தில் நம்பிக்கையாளர்கள் பெரும் சோதனைக்கு உள்ளாகி மிக்க பலமாக அசைக்கப்பட்டனர்." (33:11)*

*கொள்கைகள், கருத்துகள் நிறைந்த வனத்தின் இடையில் தாங்கள் சிக்கிக் கொண்டிருப்பதாக உணர்பவர்கள், உண்மையைக் கண்டறியவும் பின் அதனைப் ஏற்றுக் கொண்டு பின்பற்றுபவர்களாகவும் இருக்க முடியுமாகையால் அத்தகைய மனிதர்களை இறைவன் சாதகமான கண்ணோட்டத்தில் பார்க்கிறான். கடுமையான பிரச்சினைகள் மற்றும் கஷ்டமான கொடிய சூழ்நிலைகளிலும் தங்கள் இறைநம்பிக்கை மீது லேசான தளர்வு கூட இல்லாதிருக்கும் மனிதர்களுக்கு இறைவன் தன் அங்கீகாரத்தை அளிக்கிறான். அம்மனிதர்களின் இதயங்கள் அனைத்து வகையான துன்பங்களால் தாக்குற்றபோதும், எதிர்மறையான எண்ணங்களால் கறைபடியாதவர்களாக இருந்திருப்பார்கள். அவர்கள் பெருநாசத்தால் அச்சுறுத்தலுக்காளானபோதும் தங்களது மனங்களை விட்டு விடாமல், அதனை எதிர்க்கொண்டு அறிவார்ந்த வளர்ச்சியை*

தங்களுக்கு ஏற்படுத்துவார்கள். அவர்களை வழிமாறச் செய்யும் பாதகமான சம்பவங்களை அனுபவித்தபோதும் தங்கள் நேர்வழியை அவர்கள் தவற விடாமல், இறைநம்பிக்கையில் வலுவாக இருப்பார்கள். தங்கள் இதயங்களில் ஆன்மீக உணர்வை எழுப்பி இறைவனுக்கு நெருக்கமாக ஆகக்கூடிய பெரும் உணர்வை அவர்கள் அனுபவிப்பார்கள்.

இலக்கணப்படியான உலகமான சுத்திகரிக்கப் பட்ட சுவனத்தில் வாழக்கூடிய தகுதியுள்ள மனிதனே இறைவனுக்கு மிகவும் விருப்பமானவன். அபூர்வத்திலும் அபூர்வமான அத்தகைய மனிதன், பிரபஞ்சத்தின் பெரியவை யாவற்றையும்விட பெரியவனாவான். அத்தகைய மனிதன் புதிய பிறப்பை எடுத்தவனாகிறான். அவன் பிறப்பது, அமைதியான சாந்தமான சூழ்நிலையில் அல்ல, மாறாக பெரும் துன்பமும் குழப்பமும் நிறைந்த சூழ்நிலையிலேயே அவன் பிறக்கிறான். மறுமை நாளுக்குப் பின்னரான நிரந்தர ஒளி மிகுந்த வாழ்வில் வாழும்படி அவன் இவ்வுலகில் இருள் நிறைந்து வாழ்கிறான். மறுமையில் பூக்கள் நிறைந்த சூழலில் வாழும்படி இவ்வுலக வாழ்வில் முட்கள் நிறைந்த பாதையில் அவன் பயணிக்கிறான். மறுமை வாழ்வில் ஆசிர்வதிக்கப்பட்டு ஆனந்தமான நிலையை பெறும்படி இவ்வுலகில் அவன் நஷ்டங்களை, சேதங்களை அனுபவிக்கிறான். சுவனத்தின் நிரந்தரமான பேரானந்தத்தில் திளைக்கும் வண்ணம் இவ்வுலகின் மகிழ்ச்சிகளிலிருந்தும் வசதிகளிலிருந்தும் விலக்கி வைக்கப்படுதலை அவன் பொறுமையாக ஏற்றுக் கொள்கிறான்.

அத்தகைய விலைமதிப்பற்ற ஆன்மா வெறும் சூன்யமாக இருக்க முடியாது. இலக்கணரீதியான சமூக அமைப்பிற்கு நெருக்கமாக இருந்தாலும் சமூகத்தின் சாதாரண சூழ்நிலையில் அதனால் வளர்ச்சி அடையவும் முடியாது. அத்தகைய ஆன்மா துரதிர்ஷ்டங்கள் நிறைந்த வனத்தினிடையிலிருந்து மட்டுமே மலர முடியும். இதைத் தவிர அது மலர்வதற்கு வேறு தளம் இல்லை.

மனிதனிடம் உயர் மாண்புகளும் ஆன்மீகப் பண்புகளும் உருவாக இறைவனால் அமைக்கப் பெற்றுள்ள பயிற்சிக்களமே சமூகத் தீமைகளும் அவற்றினால் உண்டாகும் இடர்ப்பாடுகளும் என்று தத்துவ அறிஞர்கள் கூறுகின்றனர். அதனால்தான்

மனித வரலாற்றின் ஒவ்வொரு காலகட்டத்திலும் அனைத்து வகையான சச்சரவுகளும் இணக்கமற்ற பேத மோதல்களும் ஏற்படுகின்றன. உண்மையான இறை நம்பிக்கையாளர்கள், நல்ல மனிதர்கள், குறிப்பாக இறைத்தூதர்கள் ஆகிய அனைவரும் எந்த வேறுபாடும் இல்லாமல் படுசிக்கலான நெருக்கடியான துன்பகரமான சூழ்நிலைகளில் வாழ்ந்திருக்கிறார்கள். இதனை விளக்கும் இறைத்தூதரின் மொழியொன்று உள்ளது : "மனிதர்களை இறைவன் நேசிக்கும்பொழுது அவர்களைச் சோதனையில் ஆழ்த்துகிறான்."

முஸ்லிமல்லாத சமூகத்தினரிடையே ஏதாவதொரு வழியில் சாதகமற்ற சூழ்நிலைகள் ஏற்படுவது அபூர்வமான ஒன்றல்ல. அவர்கள் முஸ்லிம் சமூகத்தின் ஓர் அங்கமாக எப்போதும் இருந்திருக்கிறார்கள். பண்டைய காலங்களில் இறைத்தூதர்கள் சிலை வணக்கம் புரிபவர்கள் மற்றும் நிராகரிப்பவர்களிடையே பிறந்து, தங்கள் சம காலத்தவர்களால் மிகுந்த துன்பத்திற்கு ஆளாகி இருக்கிறார்கள். இறைத்தூதர் மூஸா (மோசஸ்) இறைவேதத்தையுடைய யூதர்களுக்கு இறைத்தூதராக அனுப்பப்பட்டபோது அவர் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் அதே போன்று கொடுமைக்கு ஆளானார் என்பதை குர்ஆன் (33:69) மூலம் நாம் அறியலாம்.

பின்னாட்களில் கிலாஃபத்—எ—ராஷிதா என்றழைக்கப்பட்ட முறையான ஒரு தேசத்தை இறைத்தூதர் முஹம்மது (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) அமைத்தார். அது சரியாக வழி நடத்தப்பட்ட கலீஃபாக்கள் நால்வரால் தொடர்ந்து ஆளப்பட்டது. ஆனால் இஸ்லாத்தின் இலக்கணப்படியான இந்த காலகட்டத்தில் மோசமான பல்வேறு பிரச்சினைகளால் அந்த நாடு தொடர்ந்து துன்பமடைந்து கொண்டிருந்தது. முற்றிலும் சாந்தியும் சமாதானமும் நிலவிய சாதாரண நிலையில் எக்காலகட்டத்திலும் ஒரு முஸ்லிம் நாடு இருந்தது என சொல்லி விட முடியாது.

இது இஸ்லாமிய தேசம் என்பதன் குறைபாட்டால் நேர்ந்ததல்ல. மாறாக, மனிதர்களுக்கு நன்னெறியிலான நடத்தைகளை உருவாக்க இறைவனால் ஏற்படுத்தப்பட்ட 'பயிற்சிப் பாடங்களினால்' உருவானவையே அவை. முன்பே குறிப்பிட்டது போல மக்கள் இவ்வுலகில் அமைதியாக வாழ

இலக்கணப் பூர்வமான ஒரு சமூகத்தை உருவாக்குவதல்ல. இறைவனின் படைப்புத் திட்டத்தின் இப்பகுதி. இறைவனின் திட்டப்படி தனி மனிதர்களைப் பட்டைதீட்டி உருவாக்குவதே உண்மையான முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இது அமைதி மற்றும் சாந்தியான சூழ்நிலையை விட துன்பமும் குழப்பமும் நிறைந்த சூழ்நிலையிலேயே நிகழும்.

நடப்புலகில், தேசிய அல்லது வகுப்புவாரியான நிலையில் உயர் மாண்புகளுள்ள சமூகத்தைக் கட்டமைப்பதற்கான அறநெறிசார் மற்றும் வெளிப்படையான மூலாதாரங்களை நாம் பெற்றிருக்கிறோமா? ஆனாலும், இலக்கண ரீதியான சமூகத்தை உருவாக்காமல், சுவனத்தில் வாழத் தகுதியான இலக்கண ரீதியான தனி மனிதர்களை உருவாக்கும் இறைவனின் படைப்புத் திட்டத்தின் தேவையான தனி மனிதர்களுக்குள் இலக்கணப் பூர்வமான நடத்தைகளை, நெறிகளை கட்டமைக்கும் வழிமுறைகளை நாம் பெற்றிருக்கிறோம்.

இலக்கணப்படியான சமூகம் என்ற விதத்தில் இஸ்லாமிய வரலாறு இருள்படர்ந்த எதிர்மறையான பக்கங்களைக் கொண்டதாகவே தோன்றுகிறது. ஆனால் தனி மனித வளர்ச்சி என்ற வகையில் பார்த்தால் அதே இஸ்லாமிய வரலாறு மிகவும் ஒளி பொருந்திய நேர்மறையான பக்கங்களைக் கொண்டுள்ளது. இலக்கணப்படியான சமூகமோ அல்லது இலக்கணப்படியான தேசமோ நடைமுறைக்கு வராதிருந்திருக்கலாம். ஆனால் இஸ்லாமிய வரலாறு முழுவதையும் பார்த்தால் மாபெரும் அறநெறிப் பண்புகளுடன் ஆன்மீக முதிர்ச்சியடைந்த தனிப்பட்ட ஆளுமைகளுக்கு பஞ்சம் என்பதே இல்லை. இலக்கணப்படியான சமூகம் என்பதைக் காண்பிக்க வரலாற்றுக் குறிப்புகளில் உதாரணம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் வரலாற்றுப் பக்கங்கள் முழுவதும் இலக்கணப்படியான தனி மனிதர்களின் வார்த்தைகளும், சிந்தனைகளும் கண்கள் கூசும்படி நிறைந்து இறைந்து காணப்படுகின்றன.

# 2

# இஸ்லாத்தைக் கண்டடைதல்

‘இஸ்லாமும் மேற்கத்திய உலகமும்’ என்ற தலைப்பில் உரையாற்ற இங்கிலாந்தைச் சேர்ந்த இஸ்லாமிய அறிஞர் ஒருவர் இந்தியா வந்திருந்தார். கேள்வி நேரத்தின்போது ஒரு இந்திய முஸ்லிம், “இஸ்லாத்தைப் பற்றியும் மேற்குலகு பற்றியும் நிறைய தகவல்களை நீங்கள் கூறினீர்கள். சிறுபான்மையினராக முஸ்லிம்கள் உள்ள இந்தியா போன்ற நாடுகளில் முஸ்லிம்கள் என்ன செய்ய வேண்டும் என்று இப்பொழுது கூறுங்கள்” என்று கேட்டார். அந்த அறிஞர் சிறிது நேரம் அமைதியாக இருந்தபின், “இது உண்மையிலேயே கடினமான கேள்விதான், இஸ்லாத்தில் வலிமை நிலைக்கான ஒரு மாதிரி வடிவத்தை நாம் காணலாம். ஆனால் மிதமான தன்மைக்கான முன்மாதிரி என்பது இஸ்லாத்தில் இல்லை” என்று கூறினார். இது வெறுமனே சொல்லப்பட்ட ஒன்றல்ல. உண்மையில் கிட்டத்தட்ட முஸ்லிம் உலகம் முழுவதும் இன்று சாதாரணமாகக் காணப்படும் சிந்தனையை அது குறிப்பதாகும். இது இன்றைய முஸ்லிம்களின் மனநிலையை தெளிவாகக் காட்டுகிறது. அறிந்தோ அறியாமலோ அவர்கள் உலகில் தங்களது நிலை மற்றும் பாத்திரத்தைப் புரிந்து கொள்ளத் தங்களது வரலாற்றின் பொற்காலத்தை நோக்குகிறார்கள். வலிமையான முன்மாதிரியை அவர்கள் காணும்பொழுது உலகமயமான அரசியல் மேலாதிக்கத்திற்கானதாக இஸ்லாத்தை இயல்பாகவே அவர்கள் நினைக்கும்படி அவர்கள் மனநிலை இருக்கிறது. இந்த மனநிலைதான் அவர்கள் தங்களது

பொற்கால வரலாறு எனும் திரையை ஊடுருவி குர்ஆன் மற்றும் இறைத்தூதரின் மொழி மற்றும் வழிமுறை மூலம் வழிகாட்டும் தேடலைத் தடை செய்கிறது. அவர்கள் இதனைச் செய்தார்களேயானால் மென்மையானதன்மை உட்பட அனைத்து விதமான முன்மாதிரிகளையும் கண்டு கொள்வதில் வெற்றியடைவார்கள். மேலும் அவர்கள் அரசியல் ரீதியாக அல்லாமல், இஸ்லாத்தின் கொள்கைகளை அமைதியான இறைஅழைப்புப் பணி புரிவதில்தான் முஸ்லிம் சமுதாயம் அனைத்து இடங்களிலும், அனைத்து சூழ்நிலைகளிலும் பாடுபட வேண்டும் என்பதை கண்டுணர்வார்கள்.

இஸ்லாம் தன்னைப் பின்பற்றியவர்களுக்கு தாழ்ந்த, அடக்கமான, மென்மையான முன்மாதிரி எதையும் கொண்டிருக்கவில்லை என்ற எங்கும் இருக்கும் கண்ணோட்டத்திற்கு மாறாக, இறைத்தூதர் முஹம்மதைப் பற்றிய நேர்மையான எந்தச் சார்புமற்ற வரலாற்றைப் படித்தால் உண்மையை அறிந்து கொள்ளலாம். இஸ்லாமிய வரலாற்றின் எட்டாவது ஆண்டில் மக்காவைக் கைப்பற்றிய வரையிலான இறைத்தூதர் முஹம்மது (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) அவர்களின் இருபது ஆண்டு கால நடுநிலையான வரலாறு இன்று மென்மைத்தன்மை என்று குறிப்பிடப்படுவதைப் போல எவ்வளவு துல்லியமாக இருந்தது என்பதைக் கூறும். காலக்கணக்கின்படி இறைத்தூதுத்துவப் பணியின் முக்கால் பாகத்தில் இறைத்தூதுத்துவப்பணி அடக்கம், மென்மை ஆகியவற்றைக் கொண்டிருக்கும்பொழுது இந்தியா மற்றும் பிற நாடுகளிலுள்ள முஸ்லிம் சிறுபான்மையினருக்கு மென்மையான முன்மாதிரி இல்லை என்று எது கூற வைத்தது? உண்மை என்னவெனில் முஸ்லிம் வரலாற்றின் பிற்பகுதியில் அமைந்த அரசியல் பெருமை, இறைத்தூதரது வாழ்வின் மென்மைத்தன்மையை அவர்கள் கண்களிலிருந்து முற்றிலும் மறைத்து விட்டது.

குர்ஆன் மற்றும் இறைத்தூதரின் மொழி மற்றும் வழிமுறைகளிலிருந்து உள்ளுணர்வு ஊட்டப்படுவதிலிருந்து பிற்காலத்தைய அரசியல் பெருமைகளுக்கு மாறியது, துரதிர்ஷ்டவசமாக அசலான இஸ்லாமிய நெறிகள் அந்நியப்பட்டு போகும் அளவுக்கு நடப்புக்கால முஸ்லிம்களின் பார்வையை தெளிவற்றதாக்கி விட்டது. இஸ்லாம் என்பது

*வாழ்க்கை முழுமைக்கான விதிமுறைகளைக் கொண்டது என்றும், இறைத்தூதர் அனைத்து காலங்களுக்குமான முன்மாதிரி என்றும் அவர்கள் பெருமையுடன் சொல்லிக் கொள்கிறார்கள். ஆனாலும் வழிமாறிய அவர்களது சொந்த அணுகுமுறையால், வலிமையான முன்மாதிரி என்பதை விட அதிமுக்கியமான மென்மையான முன்மாதிரி என்பதை அவர்களால் கண்டுணர முடியவில்லை.*

*இது இறைத்தூதர் முன்பே கூறியதற்கு இணங்க அமைந்துள்ளது. இறைத்தூதர் முஹம்மது (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) கூறினார் :*

*“இஸ்லாம் முன் அறிமுகமற்ற புதிய ஒன்றாகப் பிறந்தது. மேலும் இறுதியாக அது மீண்டும் முன் அறிமுகமற்ற புதியதாகவே ஆகிவிடும், அறிமுகமற்ற அந்த புதியவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்” (முஸ்லிம்)*

*முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் அல்லாதோருக்குமே முழுக்க முழுக்க அறிமுகமற்றதாக இஸ்லாத்தின் அசலான வடிவம் மாறிவிடும் என்று கூறுவது மிகைப்படுத்தப்பட்டதல்ல. இஸ்லாத்தை மீண்டும் கண்டடைய, இன்றைய உலகில் இஸ்லாத்தை அறிமுகமில்லாத புதியதொன்றாக ஆக்கிய காரணிகள் எவை என்பதை முதலில் நாம் கண்டுபிடிக்க வேண்டும். இறைத்தூதரின் மொழியில் முன்பே அறிவிக்கப்பட்டுள்ள இஸ்லாம் அந்நியமாகிப்போகும் துன்பகரமான விவகாரத்திற்கான வரலாறு மற்றும் அரசியல் ரீதியான காரணங்களின் முழு ஆய்வை வருகின்ற பக்கங்களில் காணலாம்.*

## இஸ்லாம் மட்டும் ஏன்?

*மற்ற மதத்தைப் பின்பற்றுபவர்கள் தங்கள் மதக் கோட்பாடுகள் தவறாக புரிந்து கொள்ளப்பட்டிருக்கின்றன என்று குறை கூறுவதை நாம் அபூர்வமாக எப்பொழுதுதாவதுதான் கேள்விப்படுகிறோம். உதாரணமாக இந்துக்கள், புத்த மதத்தவர் மற்றும் கிறிஸ்தவர்கள் தங்களது மதம் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது என்று கூறுவதில்லை. அதற்கான ஒரு காரணம் அவர்கள் தங்கள் மதங்களை வகுப்புவாத அரசியலுடன் கலப்பதில்லை. மேலும் இன்றைய முஸ்லிம்கள்*

பெருமளவில் செய்வதைப் போல அவர்கள் பொதுவாக உலகியல் காரியங்களில் தங்கள் முன்னேற்றத்திற்காக மதத்தின் பெயரால் முயற்சிப்பதில்லை.

இஸ்லாமிய மார்க்கத்தை ஒருவர் அதன் புனித நூல்களின் மூலம் நேரடியாகக் கற்கும்பொழுது, இன்று இஸ்லாமாக இருப்பது அசலான இஸ்லாத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டு நிற்பதை அறிந்து திகைப்படைவார். மீண்டும் கண்டடைய வேண்டும் என்ற தேவை எழாததால் மற்ற மதங்கள் இருக்கும் நிலையிலேயே மனிதர்களுக்குத் தெரிகிறது. எனவே தவறாகப் புரிந்துகொள்ளும் பிரச்சினை என்பது இஸ்லாத்திற்கானதாகவே இருக்கிறது. இஸ்லாத்தின் அசலான வடிவில் அதனைக் கண்டடைய அதன் அசலான புனித நூல்களை ஆய்வு செய்வது மிகப்பெரும் தேவையாக உள்ளது. இஸ்லாத்தைப் பற்றிய தவறான புரிதல்களைத் தெளிவுபடுத்தி மாற்றிக் களைய நவீன காலத்தில் நிறைய நூல்கள் பதிப்பிக்கப்படுகின்றன. ஒரு நூலின் தலைப்பு இப்படி இருக்கிறது : “இஸ்லாம், மிகவும் தவறாக புரிந்துக் கொள்ளப்பட்ட மார்க்கம்”

ஆனால், இத்தகைய தலைப்புகள் உண்மையான சரியான விவகாரங்களுக்கானதாக இல்லை. இந்த நூல்கள் சகிப்புத்தன்மையற்ற வன்முறையான மார்க்கம் இஸ்லாம் என்று தவறாகப் புரிந்துக்கொள்ளப்பட்டதாக கூறி அந்தப் புரிதல்களை களைவதை பிரதானமாகக் கொண்டுள்ளன. ஆனால், சரியான கேள்வி என்னவாக இருக்க வேண்டுமென்றால் ஏன் அத்தகைய தவறான புரிதல் எப்போதும் இருந்து கொண்டே இருக்கிறது என்பதுதான். ஏதோ சில குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இது சொல்லப்படுவதல்ல. மாறாக, கிட்டத்தட்ட எல்லா நாடுகளிலும் இன்றைய முஸ்லிம்கள் மற்றவர்கள் மீது வன்முறையையும் சகிப்பற்றதன்மையையும் தொடர்ந்து காட்டி வருகிறார்கள் என்பதனால் தான். அவர்கள் இத்தகைய செயல்களை இஸ்லாமிய இயக்கங்கள் அல்லது ஜிஹாத் என்ற பெயரில் நிகழ்த்துகிறார்கள். தங்களது சொந்த வகுப்புவாத தேவைகளின் பெயரால் செய்து அவர்கள் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருப்பதால் வன்முறையிலான சகிப்புத்தன்மையற்ற மார்க்கம் இஸ்லாம் என்ற குற்றச்சாட்டினால் தவறான புரிதல் ஏற்படுத்துகிறது.

*ஆனால், முஸ்லிம்கள் இஸ்லாமிய வழியில் தங்களது செயல்முறைகளை அமைத்துக் கொண்டால் தவறான புரிதல் நிகழாமல் சரியான முறையான புரிந்து கொள்வது நிகழும்.*

*மேலும் நவீன காலத்தின் கற்றறிந்த சமூகம் மானுடவியல் கொள்கையால் தாக்கம் பெற்று மதத்தை வெளிப்படுத்தப்பட்ட உண்மை எனக் கொள்ளாமல் அதனை சமூகக் கருத்தாகவே கருதுகிறது. ஆகவே, அவர்களின் சிந்தனை வழிமுறைப்படி, முஸ்லிம்களின் அனைத்து செயல்களும் இஸ்லாத்தின் செயல்கள் எனக் கொள்கின்றனர். இஸ்லாத்தின் பெயரால் இத்தகைய செயல்களில் முஸ்லிம்கள் ஈடுபடுவதைக் காணும்பொழுது அவர்களின் சிந்தனை இன்னும் உறுதியாகிறது.*

*இவற்றினடிப்படையில் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் வேறுபடுத்திக் காட்ட வேண்டியது உண்மையான எதார்த்தமான பணியாக உள்ளது. இஸ்லாமும் முஸ்லிம்களும் ஒன்றாக இருக்க வேண்டியது இல்லை என்பது தெளிவாக்கப்பட வேண்டியதாக இருக்கிறது. அது இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் வேறுபடுத்தி ஒருவர் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. இஸ்லாம் என்பது ஒரு கொள்கை. அந்த கொள்கையை முழுமையாகக் கடைபிடிக்கும் ஒருவரே முஸ்லிம். அப்படி இல்லை என்றால் அவர் முஸ்லிமல்ல. முஸ்லிம்களை மதிப்பிடுவது இஸ்லாமிய கோட்பாடுகளின் வெளிச்சத்தில் செய்யப்பட வேண்டும். இஸ்லாத்தின் பெயரால் முஸ்லிம்கள் செய்யும் செயல்களிலிருந்து இஸ்லாத்தை மதிப்பிடக் கூடாது.*

**தூதுத்துவக் கண்ணோட்டம்**

*இறைத்தூதர் முஹம்மது (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) கூறியதாக உள்ள பதிவு : "எனது தலைமுறையிலான சமுதாயம் சிறந்தது, அதன் பின்னர் அடுத்த தலைமுறை அதன்பின் மூன்றாம் தலைமுறை". (முஸ்லிம் 8/550)*

*இறைத்தூதர் நவின்ற இந்த மொழியின் பொருள் முதல் தலைமுறையில் இஸ்லாமிய நல்லொழுக்கம் அதன் உச்சத்தில் இருக்கும், மேலும் இரண்டாம் மற்றும் மூன்றாம் தலைமுறைகளில் அந்த நல்லொழுக்கத்தில் சீரழிவு ஏற்படும். இஸ்லாமிய வரலாற்றின் இந்த நிலைகள் இறைத்தூதரின்*

தோழர்களின் காலகட்டம் மற்றும் இறைத்தூதரின் தோழர்களுடைய தோழர்களின் காலகட்டம் என்று அறியப்படுகிறது.

இதில் மர்மம் ஏதுமில்லை. ஒவ்வொரு குழுவுக்கும் பொருந்தும் இயற்கை நியதியான தரம் தாழ்தல் என்பது முதல் தலைமுறைக்குப் பின்னர் நிகழக் கூடியதே. மூன்றாவது தலைமுறையில் இஸ்லாத்தின் வேர்கள் பலவீனமடைந்து, நான்காவது தலைமுறையில் முதல் தலைமுறையின் நற்பண்புகள் குறிப்பிடத்தகுந்த அளவில் தளர்வடைந்து நீர்த்துப் போனது. இஸ்லாத்தின் உண்மைத் தன்மையை உள்ளார்ந்து உணர்ந்து கொண்ட தனி மனிதர்களின் கணிசமான எண்ணிக்கை வந்த காலம் வரை இந்தப் போக்கு சில நூற்றாண்டுகள் தொடர்ந்தது. ஆனால், ஆரம்பகால இஸ்லாத்தின் தன்மைகளை, பண்புகளை அறிந்துணர்ந்து கொள்ள சமூகத்தால் இயலாமலாகி விட்டது.

இதுதான் இறைத்தூதர் ‘அறிமுகமில்லாத புதியதாக’ இஸ்லாம் மாறும் என்று கூறியதன் பொருளாகும். பின்னாட்களில் இந்த வேறுபாடு குறிப்பிடத்தக்கதாக பெருமளவில் மாறி ஆரம்பகால இஸ்லாம் இன்றைய முஸ்லிம்களுக்கு அந்நியமானதாக அறிமுகமில்லாத புதியதாகத் தோன்றத் தொடங்கி விட்டது. இதற்கான சில அடிப்படைக் காரணங்கள் பின்வருவனவாகும்.

**வடிவம் மற்றும் ஆன்மா (இவ்விரண்டையும்) தனித்தனியாகப் பிரித்து விடுதல்**

இந்த வேறுபாட்டிற்கான முதல் காரணம் வடிவத்திலிருந்து அதன் உயிரை — ஆன்மாவை பிரித்தலில் உள்ளது. பிற்காலத்தைய தலைமுறைகளில் இஸ்லாமிய வடிவம் நிலைபெற்று அதன் உணர்வு — ஆன்மா தொலைந்து போனது. இது பழத்தின் தோல் பழச்சதையின் மீது ஒட்டாமல் இருப்பது போன்றதாகும்.

உதாரணமாக, முதல் கட்டத்தில் இறைநம்பிக்கை — ஈமான் என்பது இறைவனை உணர்தல் என்ற பொருளுடையதாயிருந்தது. ஆனால் பின்னாட்களில் இறை நம்பிக்கை (ஈமான்) என்பது இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கையை (கலிமாவை) உச்சரிப்பதாக மாறிப் போனது. ஆரம்பக் கட்டத்தில் இறை

வணக்கம் என்பது ஆன்மீக அர்ப்பணிப்பு (குஷுஃ) என்ற பொருளுடையதாக இருந்தது. ஆனால், பின்னாட்களில் அது சடங்குகளைக் கொண்ட ஒரு செயல்பாடாக மாறி விட்டது. ஆரம்ப காலங்களில் நன்னெறியுடனான நடத்தை (அக்லாக்) நிபந்தனைகளேதுமற்ற நன்னடத்தை என்றிருந்தது. ஆனால், பின்னாட்களில் அது மற்றவர்களின் நன்னடத்தை அல்லது தீய நடத்தையைச் சார்ந்து நல்லதையும் தீயதையும் காட்டுவதாக மாறிப் போனது.

இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் நம்பிக்கை கொள்ளக் கூடிய நிலை என்பது பொறுப்பு என்பதுடன் அடையாளம் காணப்பட்டது. ஆனால், பின்னாட்களில் அது பெரும் அங்கீகாரம் மற்றும் கௌரவம் ஆகியவற்றுடன் இணைந்து போனது. ஆரம்ப கட்டத்தில் இஸ்லாமியக் கொள்கை முக்கியத்துவமுடையதாக இருந்தது. பின்னாட்களில் இஸ்லாமியக் கொள்கையை இஸ்லாமிய வரலாறு இடம் மாற்றி முக்கியத்துவமுடையதாகியது. முதல் கட்டத்தில் இஸ்லாம் என்பது கடமை என்பதாக இருந்தது. இரண்டாம் கட்டத்தில் அது பெருமை என்பதாக மாறிப் போனது. முதல் கட்டத்தில் குர்ஆன் ஆழ்ந்து தியானித்துப் பயிலக் கூடியதாக இருந்தது. இரண்டாம் கட்டதிலோ அது வெறுமனே ஓதக் கூடிய ஒரு நூலாகி விட்டது.

முதல் கட்டத்தில் இறைத்தூதரின் வழிமுறையை பின்பற்றுவதற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. ஆனால் பின்னாட்களில் முஸ்லிம்கள் பிற நாடுகளின் மீது தங்கள் மேலாதிக்கத்தைச் செலுத்தலாம் என்ற வகையில் இறைத்தூதர் தேசிய அளவில் நாயகராகக் கொண்டாடப்பட்டார். முதல் கட்ட மக்கள் தங்களது சொந்தச் செயல்களின் அடிப்படையில் மட்டுமே சுவனம் புகலாம் என்ற சிந்தையுடன் இருந்தார்கள். ஆனால், பின்னாட்களில் சமுதாயத்துடன் வெறுமனே தொடர்பில் இருப்பதே சுவனம் புகுவதற்குப் போதுமானது என்று இருந்து விட்டார்கள்.

**மார்க்கத்தை வகுப்புவாத மயப்படுத்துதல்**

உண்மையான எதார்த்த இஸ்லாத்திலிருந்து பொதுமக்கள் அந்நியமாகிப் போனதற்கு இன்னும் ஒரு காரணம்,

கொள்கைப்படியான மார்க்கம் என்ற உயர்நிலையிலிருந்து இறைநம்பிக்கை கொண்டோர் வகுப்புவாத மார்க்கம் என்ற நிலைக்குத் தாழ்ந்தது ஆகும். பின்னர், இந்த வகுப்புவாதத் திட்டம் இஸ்லாம் மயமாக்கப்பட்டு, இஸ்லாமியக் கொள்கைகள் இருந்த இடத்தை வகுப்புவாத விருப்பத் தேவைகள் பிடித்துக் கொண்டன. நவீன காலங்களில் முஸ்லிம்கள் இதன் காரணத்தால் பலவிதமான பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள். அவை முஸ்லிம்களின் நிலங்கள் ஆக்ரமிக்கப்படுதல், அரசியல் அதிகாரத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படுதல், கலாச்சாரப் படையெடுப்பு, பொருளாதாரத்தின் பெயரால் சுரண்டல் போன்ற பல பிரச்சினைகளாகும். இதைப் போன்ற பல வகுப்புவாத பிரச்சினைகளால் இன்றைய முஸ்லிம்கள் தங்கள் எதிர்ப்பாளர்களின் கைகளில் துன்புறுகிறார்கள்.

அதிகாரத்தை அடைவதற்கான விளையாட்டிற்கு "இஸ்லாமிய அரசியல்'' என்று பெயரிடப்படுகிறது. இஸ்லாமிய ஜிஹாத் என்றழைக்கப்படும், இஸ்லாத்தின் பெயரால் செய்யப்படும் இந்த செயல்கள் இஸ்லாத்திற்கு முற்றிலும் மாற்றமான செயல்களுக்கான மிகச் சிறந்த உதாரணங்கள் ஆகும். உலகின் பல்வேறு பகுதிகளிலும் முஸ்லிம்கள் தங்களது சொந்த வகுப்பு நலன்களுக்காக சண்டையிடுவதை இஸ்லாமிய ஜிஹாத் என்று தவறாமல் கூறிக் கொள்கின்றனர். நவீன ஊடகங்களில் செய்தி சேகரித்து வழங்கும் வேகம் இத்தகைய வன்முறைகளால் நேரும் கெடுதலை ஆயிரம் மடங்கு அதிகரித்து விடுகிறது. சாதாரண செய்திகளை விட சூடான செய்திகள் அதிக லாபம், பலன் தருவனவாக இருப்பதால் முஸ்லிம் ஜிஹாத் என்பது ஊடகங்களின் மிக முக்கிய தீனியாக இருக்கிறது. இஸ்லாமும் வன்முறையும் ஒன்றே என்று கருதும் அளவுக்கு இஸ்லாத்தின் பெயரை இத்தகைய ஊடகச் செய்திகள் கெடுக்கின்றன.

ஜிஹாத் செயல்பாடு, அதாவது ஆயுதமேந்திப் போராடுவது என்பதன் மூலமே இஸ்லாத்தின் நோக்கத்தைத் தெரியப்படுத்தலாம் என்று முஸ்லிம்கள் நம்புமளவுக்கு விவகாரம் வளர்ந்து விட்டிருக்கிறது. இத்தகைய மனநிலையால் அமைதி வழிப்போராட்டம் என்பதன் முக்கியத்துவத்தை அவர்களால் புரிந்து கொள்ள இயலாமல் போகிறது. அமைதி மற்றும் சகிப்புத்தன்மை என்பவைகளின் அடிப்படையில் பேச முயலும் எவரும் தனிமைப்படுத்தப்பட்டு விடுகிறார்.

ஜிஹாத் என்ற பெயரில் சண்டையிடுபவர்களிடம் அமைதி வழிப் போராட்டத்தின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ள செய்யப்படும் எந்த முயற்சியும் அவர்களது "மதக் கடமை"யாக ஜிஹாத் செய்வதைத் தடுக்கும் சதிச் செயலாக கருதப்படுகிறது. இப்படியாக அமைதி நிறைந்த இஸ்லாத்தின்பால் முஸ்லிம்களை அழைப்பது கடினமான ஒன்றாக ஆகி விட்டது. அத்தகைய செயல்பாட்டில் ஒருவரை அவர் தம் சொந்த மார்க்கத்தினராலே தாழ்மைப்படுத்தி கீழ்மைப்படுத்தும் அபாயமும் இருக்கிறது. இதனால் அமைதி வழிக்கான அழைப்பு செவி கொடுக்கப்படாமலே அலட்சியப்படுத்தப்படுகிறது.

**புரிதலில் உள்ள திரைகள்**

அசலான இஸ்லாம் அந்நியமாவதன் காரணங்களில் ஒன்று, காலப்போக்கில் தான்தோன்றித்தனமாக குர்ஆன் மற்றும் இறைத்தூதரின் மொழி விளக்கங்கள் அசலான பிரதிகளின் மீது படிப்படியாக திரைகளை ஏற்படுத்திக் கொண்டிருப்பதுதான். அசலான இஸ்லாம் பார்வைக்கு முற்றிலும் புலனாகாத வகையில் ஆகும்படியான ஒரு நேரம் வந்தது. நிகழ்ந்த தவறு என்னவென்றால் மனிதர்களால் சுயமாக உருவாக்கப்பட்ட விளக்கங்கள் அசலான வெளிப்படுத்தப்பட்ட வழிகாட்டுதல்களில் தான்தோன்றித்தனமாக அளிக்கப்பட்ட விளக்கங்களையே மக்கள் உண்மையான இஸ்லாமாக எடுத்துக் கொண்டு விட்டனர்.

இஸ்லாத்தின் ஆரம்பக் கட்டத்தில் தேவையான வழிகாட்டு நெறிகளை குர்ஆன் மற்றும் இறைத்தூதரின் மொழி மற்றும் வழிமுறையிலிருந்து நேரடியாகப் பெற்றுக் கொண்டனர். எனவே, அசலான இஸ்லாத்துடனான அவர்கள் இணைந்த தொடர்பு எந்த பாதிப்புக்கும் ஆளாகாமல் அப்படியே இருந்தது. ஆனால், பின்னாட்களில் அளிக்கப்பட்ட விளக்கங்களும் தெளிவுரைகளும் அசலான போதனைகளை இருட்டடிப்புச் செய்து புலனாகாதவாறு ஆக்கி விட்டன. இஸ்லாத்தின் இயல்பான அழகு மறைந்து போய் விட்டது. குர்ஆனும் இறைத்தூதரின் மொழி மற்றும் செயல்முறைகளும் வழிகாட்டும் கருவிகளாக கொள்ளப்படுவதற்கு மாறாக இப்பொழுது அவை புனிதமான ஞாபகச் சின்னங்கள் போல ஆகிவிட்டன. இப்படியாக அசலான மூலப்பிரதிகளின்படி

*இல்லாமல் பிற்காலத்தில் அளிக்கப்பட்ட தெளிவுரைகள் மற்றும் விளக்கங்களின் அடிப்படையில் மார்க்கம் மாறி விட்டது.*

*பிற்காலத்தில் வந்த தலைமுறையினரால் செய்யப்பட்ட விளக்கங்களில் இத்தகைய களங்கம் எப்படி ஏற்பட்டது? இதற்கான பதில் என்னவென்றால், எழுத்துப் பிரதிகளில் மேலோட்டமான அறிவைப் பெறக்கூடிய மொழியறிவு மிக்க சிலரால் மூலப்பிரதிகளில் கூறப்பட்டவற்றை ஆழமாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. அப்படி ஆழமாகப் புரிந்து கொள்வதற்கு உணர்தல் (மஅரிஃபா) தேவையாய் இருக்கிறது. ஒருவர் மார்க்கத்தை உணர்வுப்பூர்வமாக உணர்ந்து கொள்ளும் நிலையைக் கண்டுகொண்டால், பிரதிகளில் கூறப்பட்டுள்ளவற்றின் ஆழமான பொருளைப் புரிந்து கொள்ளும் விவேகம் அவருக்கு இறைவனால் அளிக்கப்படும். ஆனால், சிறப்பு வெகுமதியான இந்த விவேகம் வழங்கப் பெறாதவர்கள் இஸ்லாத்தைப் புரிந்து கொள்ள தங்களது சொந்த அனுமானமல்லாது வேறொன்றையும் பெற்றிருக்க மாட்டார்கள்.*

*அவர்கள் மார்க்கத்தைத் தங்களது சொந்த மனோபாவம் கொண்டே விளக்கத் தொடங்குகிறார்கள். அதனால் அவர்கள் குர்ஆனையும் இறைத்தூதரின் கூற்று மற்றும் வழிமுறையையும் குறிப்பிட்டுக் கூறினாலும் அவர்களது விளக்கங்கள் மூல/அசல் நூல்களில் உள்ளவற்றை மிகக் குறைவாகவே கொண்டிருக்கின்றன. இதனால் மார்க்கத்தின் தரம் தாழ்ந்து விடுகிறது. இஸ்லாத்தைப் பின்பற்றுவது போலத் தோன்றினாலும் உண்மையான இஸ்லாத்திலிருந்து அவை வெகுதூரம் சென்று விடுகின்றன. இறைவன் அனுப்பிய மார்க்கத்தையும் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட விளக்கத்தையும் வேறுபடுத்திப் பார்ப்பதில் அவர்கள் தோல்வியடைகிறார்கள். இந்த நிலையில், அசலான இஸ்லாத்தின்பால் மக்களை அழைக்கும் ஒருவர் தனது சொந்த மக்களிடமிருந்தே அந்நியமாகிப் போகிறார். முஸ்லிம்களாய் இருப்பவர்களிடையே கூட அவர் அறிமுகமாகி பிரபலமாவதில் தோல்வியடைகிறார். ஆனபோதிலும், இறைவனுக்காக இவ்வுலகில் முக்கியத்துவத்தை இழப்பது அவருக்கு மறுமை நாளில் பெரும் வெகுமதியை வென்றெடுக்கும். இஸ்லாத்தின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுகையில் இஸ்லாத்தின்*

*அசலான வடிவத்தை மீட்டெடுக்கும் பணியில் அனைத்து விதமான அபாயகரமான செயல்களையும் புரிய அவர் தயாராக இருப்பார்.*

*அசலான இஸ்லாத்தில் இடைச் செருகலாக இப்படிச் சேர்க்கப்பட்டவைகளில் உண்டான பெரும் நஷ்டங்களில் ஒன்று, வலியுறுத்திக் கூறுவதில் மாற்றம் உண்டானதுதான். இஸ்லாத்தின் சில முக்கியமான போதனைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டன. உதாரணமாக, மனிதாபிமானம் மீது பெரும் அக்கறை கொள்வது, இறை அழைப்புப் பணி, பொறுமை போன்றவைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டன. இறைத்தூதர் முஹம்மதின் (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) தூதுத்துவம் முடிவுக்கு வந்து விட்ட போதிலும், இறைத்தூதரின் பணி இன்னும் முடிவுக்கு வரவில்லை என்பதால் முஸ்லிம் சமுதாயத்தின் மாபெரும் பணியாக இறைஅழைப்புப் பணி இருக்கிறது. மார்க்கக் கடமை என்ற விதத்தில் முஸ்லிம் சமுதாயத்தின் மீது அப்பணி தொடர்ந்து செய்து வர வேண்டியதாக இருக்கிறது. இக்கடமையை ஆற்றாமல் முஸ்லிம் சமுதாயத்தைச் சார்ந்தவர் என்று அறியப்படுவது மிகவும் சந்தேகத்திற்குரியது என்று சொல்லப்பட்டால் அது மிகையாகக் கூறப்பட்டதல்ல.*

**குர்ஆன் கூறுகிறது**

*“நீங்கள் இறைவனுக்கும் அவனுடைய தூதருக்கும் வழிப்ப(ட்)டு (உங்களுக்குள் ஒற்றுமையாயிரு)ங்கள் உங்களுக்குள் தர்க்கித்து கொள்ளாதீர்கள் அவ்வாறாயின் நீங்கள் தைரியத்தை இழந்து உங்கள் சக்தி (ஆற்றல்) போய்விடும் ஆகவே நீங்கள் (கஷ்டங்களைச் சகித்துக் கொண்டு) பொறுமையாக இருங்கள் நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான்.” (8:46);*

*“நிச்சயமாக பொறுமையாளர்களுக்கு அவர்களுடைய கூலி கணக்கின்றியே (அதிகமாக) கொடுக்கப்படும்.” (39:10)*

*ஆனால், பொறுமையாக இருத்தல் பற்றிய அறிவுறுத்தலை ஜிஹாத் (போர், சண்டை, யுத்தம் எனப்படும் கித்தால் என்ற பொருளில்) என்பது பின்னுக்குத் தள்ளி அதனிடத்தை பிடித்துக் கொண்டது பின்னாட்களில் அளிக்கப்பட்ட*

விளக்கங்களால் நிகழ்ந்து பிரபலமாகி விட்டது. இப்படியாக, விளக்கமளிக்கும் இத்தகைய நூல்களைப் பயிலும் ஒருவர், அறிந்தோ அறியாமலோ பொறுமை என்பதற்கு முக்கியத்துவம் முற்காலத்தில் அளிக்கப்பட்டதாகவும் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கும் தகுதியை அது தற்காலத்தில் இழந்து விட்டதாகவும் எண்ணிக் கொள்வார் பொறுமையைக் காட்டிலும் ஜிஹாத் (கித்தால் என்ற பொருளில்) மிகுந்த முக்கியத்துவம் உடையது என்று நினைப்பார்.

அதனைத் தொடர்ந்து, இறை அழைப்புப் பணி மற்றும் பொறுமை சார்ந்த கடமைகளுக்கு முஸ்லிம்களை ஒரு சீர்த்திருத்தவாதி அழைக்கும்போது, அத்தகைய அழைப்புகளுக்கு முஸ்லிம்கள் விரோதிகளாகி விடுகிறார்கள். ஏனென்றால், அவர்களுடைய சிந்தனைப் போக்கிற்கு அந்நியமானதாக அதனைக் காணும்படி அவர்கள் ஆகி விடுகிறார்கள்.

**வரலாற்றுப் பெருமை குறித்த பிடிவாதம்**

முஸ்லிம்களிடையே அசலான இஸ்லாம் அந்நியமாகிப் போனதன் பெரும் காரணங்களில் ஒன்று, பிற்காலத்தைய தலைமுறையினர் தங்கள் சிறப்பின் அடிப்படையாகக் குர்ஆனையும் இறைத்தூதரின் மொழி மற்றும் வழிமுறையைக் கொள்வதற்குப் பதிலாக இஸ்லாத்தின் பிறகாலத்தைய வரலாற்றைக் கொண்டனர். முஸ்லிம்கள் குர்ஆன் மற்றும் இறைத்தூதரின் வழிமுறையைக் காட்டிலும் தங்களது பொற்கால வரலாற்றை மிகவும் கவர்ச்சியானதாகக் கண்டனர். குர்ஆனும் இறைத்தூதர் வழிமுறைகளும் அவர்களுக்கு வெறும் சொற்கள் போன்று ஆகின. மாறாக, பெரு வெற்றிகளாலும் பேராதிக்கம் நிறைந்ததாகவும் இருந்த வரலாறு அவர்களுக்கு அளவிடமுடியாத பெருமையை அளித்தது. அவர்கள் உதட்டளவில் குர்ஆனை வாசித்துக் கொண்டிருந்தாலும் அவர்கள் இஸ்லாமிய வரலாற்றுப் பெருமைகளுக்குள் காணாமல் போய் விட்டனர். படிப்படியாக அவர்கள் குர்ஆன் மற்றும் இறைத்தூதரின் வழிமுறையோடு தங்களை இணைத்துக் கொள்வதற்கு மாறாக, அவர்கள் தங்களை இஸ்லாத்தின் பெருமைமிகு வரலாறோடு இணைத்துக் கொண்டனர். அவர்களுக்கு உள்ளுணர்வூட்டக் கூடிய மாபெரும் ஆதாரமாக அவர்களது பெருமைமிகு வரலாறு ஆகிவிட்டது.

உள்ளுணர்வூட்டக் கூடிய இந்த மூலாதார மாற்றம் பெரும் கேட்டை உருவாக்கியது. ஒருவரின் அறிவுப்பூர்வமான உள்ளுணர்வூட்டுபவையாக குர்ஆனும் இறைத்தூதரின் வழிமுறையும் இருந்தபோது அவர்கள் மனதில் மென்மைத்தன்மை மலர்ந்து திகழ்ந்தது. ஆனால், வரலாற்றுப் பெருமிதமே ஒருவருக்கு உள்ளுணர்வூட்டுவதாக ஆனபோது, பெருமையே அவர்களுக்குள் உருவானது.

இறைவன் விரும்பும் அறிவின் உண்மையான மூலாதாரமாகக் குர்ஆனும் இறைத்தூதரின் வழிமுறையும் கொள்ளப்பட்டால் இறைத்தூதரின் மொழியில் சொல்வதால் ஒட்டுமொத்த மனிதகுலமும் இறைநம்பிக்கையாளர்களைக் கொண்ட இறைவனின் குடும்பம் என்றாகி விடும். மனிதாபிமானமே அவர்களின் லட்சியமாகும்.

ஆனால் மனம் வரலாற்றின் பெருமையால் வடிவமைக்கப்படுமேயானால், முஸ்லிம்கள் தங்களை ஆட்சியாளர்களென்றும் மற்றவர்களை குடிமக்கள் என்றும் காண்பார்கள்.

அவர்கள் இஸ்லாத்தைக் குர்ஆன் மற்றும் இறைத்தூதரின் வழிமுறைகளிலிருந்து பெற்றுக் கொள்வார்களேயானால் இறைவனின் படைப்புகள் அத்தனையும் ஒரு புல் கூட அவர்களுக்கு இறைவனின் அடையாளமாகத் தெரியும்.

ஆனால் இஸ்லாத்தின் மூலாதாரம் வரலாறாக அவருக்குத் தெரிந்தால் அவர்களுடைய அரசர்களின் கோட்டைகளும் அரண்மனைகளும் அவர்களின் பெருமைக்கும் பெருமிதத்துக்கும் உரிய அடையாளாங்களாகி விடும்.

பிற்காலத்தைய முஸ்லிம்களிடையே மிகச் சரியாக இதுவே நிகழ்ந்தது. தற்காலத்தைய முஸ்லிம்களிடம் கிட்டத்தட்ட எல்லா செயல்பாடுகளும் இந்த உண்மைக்கான சாட்சியங்களாக விளங்குகின்றன. அவர்களின் தலைவர்களுடைய பேச்சுகள், எழுத்தாளர்களின் நூல்கள், கவிஞர்களின் கவிதைகள் ஆகிய அனைத்தும் அவர்களுடைய பெருமைமிகு வரலாற்றை மையப்படுத்தியே அமைந்துள்ளதாகத் தோன்றுகிறது.

அவர்களுடைய எழுத்தாளர்களும் தலைவர்களும் அவர்களுடைய சிந்தனைக்கு இறைமையின் பெருமையைப் பற்றிய செய்திகளை

*அளிப்பதற்கு மாறாக வரலாற்றுப் பெருமையை அளிக்கின்றனர். நவீன காலத்தில் முஸ்லிம்களின் வரலாற்றைக் கொண்டாடும் நூல்கள் ஏராளமாக எழுதப்பட்டு வருகின்றன. எல்லாம் வல்ல இறைவனைப் பற்றி ஒரு நூல் கூட உருவாகாதது இந்த காரணத்தினால் தான்.*

*இத்தகைய சூழ்நிலையில் ஒரு சீர்திருத்தவாதி எழுந்து குர்ஆன் மற்றும் இறைத்தூதரின் வழிமுறையிலான மார்க்கத்தின் பக்கம் முஸ்லிம்களை அழைத்தால், அதனை செவியுறுபவர்களுக்கு அது மிகவும் வினோதமாகப்படுகிறது. இந்த மனிதர் மென்மையான சாத்வீக நிலைக்கு அழைப்பதாகவும் ஆனால் அவர்கள் மார்க்கமோ வலிமையுடைய ஒரு நிலையில் அவர்களை இருத்துவதாகவும் அவர்கள் நினைக்கின்றனர். இந்த நிலையில் சீர்திருத்தவாதி ஒருவரின் குரல் மதிப்பற்றதாகவும், அந்நியமானதாகவும், ஏற்றுக்கொள்ள முடியாததாகவும் தாக்குதலுக்கு ஆளாகிறது.*

3

# அஹிம்சையும் இஸ்லாமும்

*“(நபியே) உங்களை உலகத்தாருக்கு ஓர் அருளாகவே அன்றி நாம் அனுப்பவில்லை” குர்ஆன் (21:107)*

*அஹிம்சை என்பதை செயலற்று இருப்பது அல்லது மந்தமாக இருப்பது என்பதுடன் ஒருபோதும் குழப்பிக் கொள்ளக் கூடாது. வன்முறையற்று சாத்வீகமாக இருப்பது என்பது செயல்படுதல் என்ற சொல்லின் முழு பொருளால் அர்த்தத்தால் ஆனது. சாத்வீக செயல்முறை என்பது மிகவும் சக்தி வாய்ந்ததும், வன்முறைச் செயல்பாட்டை விட பலன் அளிக்கக் கூடியது என்பதும் உண்மையாகும். சாத்வீகமான செயல்பாடு என்பது ஒரு எல்லைக்குட்பட்டதல்ல. இது எல்லா விவகாரங்களிலும் பின்பற்றலாம் எனும்படியான செயல்பாடாகும்.*

*தனிநபர்களோ, குழுக்களோ அல்லது சமுதாயங்களோ ஒரு பிரச்சினையை எதிர்கொள்ளும்போது, அதற்கு தீர்வு காண வன்முறையை நாடுவது என்பது ஒரு வழியாக இருக்கிறது. வன்முறை மற்றும் மோதல் போக்கைத் தவிர்த்து அமைதி வழியில் பிரச்சினைக்கு தீர்வைக் காண முயற்சிப்பது தான் சிறந்த வழியாகும். அமைதிவழி என்பது பல வடிவங்களை எடுக்கக் கூடியது. உண்மையில் சூழ்நிலைக்கு ஏற்றப்படி எந்த அமைதி வழிமுறையை தேர்ந்து எடுப்பதென்பதை நிர்ணயிப்பது பிரச்சினையின் தன்மையே ஆகும்.*

*“அவன் (உங்களில் இருந்து) விலகினாலோ பூமியில் விஷமம் செய்து (உங்கள்) விவசாயத்தையும் கால்நடைகளையும்*

*அழித்து விட முயற்சி செய்கின்றான். விஷமத்தை அல்லாஹ் விரும்புவதில்லை.” (02:205)*

*வன்முறையற்று சாத்வீகமாக இருக்க போதிக்கும் மார்க்கமாக இஸ்லாம் இருக்கிறது. இறைவன் வன்முறையை (ஃபஸாத்) விரும்புவதில்லை என்று குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. வன்முறை (ஃபஸாத்) என்றால் என்னவென்று குர்ஆனின் இரண்டாவது அத்தியாயத்தின் 205ஆவது வசனத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது..*

*ஃபஸாத் என்பதன் அடிப்படைப் பொருள் என்னவென்றால் சமூக அமைப்பைக் குலைத்து உயிர்கள் மற்றும் சொத்துகளுக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்துவதாகும்*

*வன்முறையற்ற சாத்வீகத்தை இறைவன் விரும்புகிறான் என்று நம்மால் நிச்சயமாகக் கூற முடியும். மனித சமுதாயத்தில் வன்முறை நிகழ்வதையும் அதன் விளைவாக உயிர்ச் சேதமும் பொருட் சேதமும் ஏற்படுவதையும் இறைவன் அருவருத்து வெறுக்கிறான்.*

*குர்ஆனின் பிற வசனங்கள் இதற்கு ஆதரவாக உள்ளன. உதாரணத்திற்கு இறைவனின் திருநாமங்களில் ஒன்றாக அமைதி — சாந்தி என்பது நமக்கு சொல்லப்பட்டுள்ளது. (59:23)*

*“அந்த அல்லாஹ்வைத் தவிர வணக்கத்துக்குரிய வேறொரு நாயனுமில்லை அவன் தான் மெய்யான அரசன் பரிசுத்தமானவன் சாந்தியும் சமாதானமும் அளிப்பவன் அபயம் அளிப்பவன் பாதுகாவலன் (அனைவரையும்) மிகைத்தவன் அடக்கி ஆளுபவன் பெருமைக்குரியவன் இவர்கள் கூறும் இணை துணைகளை விட்டு அல்லாஹ் மிகப் பரிசுத்தமானவன்.” (59:23)*

*இறைவனின் திருப்பொருத்தத்தை தேடுவோருக்கு இறைவன் “அமைதிக்கான வழிகளுக்கு” வழிகாட்டுவான் என்று குர்ஆனின் 05:16 வசனத்தில் இறைவன் உறுதி அளித்துள்ளான்.*

*“(உங்களில்) எவர்கள் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தைப் பின்பற்றுகின்றார்களோ அவர்களை அதன் மூலமாக அல்லாஹ் சமாதானத்திற்குரிய வழியில் செலுத்துகின்றான்.*

*அன்றி இருள்களில் இருந்தும் வெளியேற்றித் தன் அருளைக் கொண்டு ஒளியின் பக்கம் கொண்டு வருகின்றான். தவிர அவர்களை நேரான வழியில் செல்லும்படியும் செய்கின்றான்." (05:16)*

*"என்னுடைய சுவனபதியிலும் நீ நுழைந்து விடு (என்றும் கூறுவான்)." (89:30)*

*இறைவன் தேர்ந்தெடுத்துக் கொண்ட சமூகத்தின் இறுதி இலக்கான சொர்க்கம் என்பது "அமைதியின் இல்லம்" என்று குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளது. (89:30)*

*குர்ஆனின் ஒட்டுமொத்த தன்மை இந்தக் கொள்கைக்கு ஒத்ததாக இருக்கிறது. உதாரணமாக, பொறுமை என்பதற்கு குர்ஆன் மிகப் பெரிய முக்கியத்துவத்தை அளிக்கிறது. ஸப்ர் (பொறுமை) என்ற சொல் நவீன காலத்தில் வன்முறையற்ற சாத்வீகம் என்று புரிந்து கொள்ளப்படுவதன் முழுப் பொருளைக் கொண்டதாக இருக்கிறது.*

*"(நபியே) நீங்கள் கூறுங்கள் நம்பிக்கை கொண்ட (என்) அடியார்களே உங்கள் இறைவனுக்கு நீங்கள் பயந்து கொள்ளுங்கள் இம்மையில் நன்மை செய்தவர்களுக்கு (மறுமையில்) நன்மை தான் கிடைக்கும் அல்லாஹ்வுடைய பூமி மிக விசாலமானது நிச்சயமாக பொறுமையாளர்களுக்கு அவர்களுடைய கூலி கணக்கின்றியே (அதிகமாக) கொடுக்கப்படும்." (குர்ஆன் 39:10)*

*பொறுமை என்பதற்கு மற்ற எல்லா இஸ்லாமிய நன்னெறிகளைக் காட்டிலும் பெரும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. எந்த அளவுக்கு என்றால் பொறுமையாளர்களுக்கு அளவே இல்லாத வெகுமதி அளிக்கப்படும் என்று சிறப்பான உறுதிமொழி குர்ஆனில் அளிக்கப்பட்டுள்ளது. (39:10)*

*அமைதியான வழியில் எதிர்வினை புரிவதை பொறுமை குறிக்கிறது. பொறுமையற்ற தன்மையோ வன்முறையான முறையில் எதிர்வினை புரிவதைக் குறிக்கிறது. நவீன காலங்களில் வன்முறையற்ற சாத்வீகத்தை பொறுமை என்று புரிந்து கொள்வதைப் போல பொறுமை என்ற சொல்லின் அரபுப் பதமான 'ஸப்ர்' என்பது அதே பொருளில்*

*தொனிக்கிறது. பொறுமையான செயல்பாடு என்பது வன்முறையற்ற சாத்வீகச் செயல்பாடு என்பதை குர்ஆன் மிகவும் தெளிவாகத் தெரிவிக்கிறது. இறைத்தூதர் (அவர் மீது சாந்தியும் சமாதானமும் நிலவுவதாக) கூறியதாக அபுதாவூத் நூலில் பதியப்பட்டுள்ளது பின்வருமாறு :*

*“வன்முறைக்கு அருளாளதை இறைவன் மென்மைத் தன்மைக்கு அருள்கிறான்”*

*(அபுதாவூத் நபிமொழி தொகுப்பு 04:255)*

*இந்த நபிமொழியில் மென்மைத்தன்மைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள சொல்லான ‘ரிஃப்க்’ என்பது வன்முறை என்பதற்கான அரபுச் சொல்லான ‘உன்ஃப்’ என்பதற்கு எதிரான கருத்தாக்கமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. தற்காலத்தில் வன்முறை மற்றும் வன்முறையற்ற தன்மை என்பது எப்படி புரிந்து கொள்ளப்படுகிறதோ அப்படியே மேலே கண்ட அரபுச் சொற்கள் பொருளைத் தருகின்றன. இறைத்தூதரின் இந்த மொழி வன்முறையற்ற சாத்வீகமான வழிமுறையின் உயர்தன்மையை தெளிவாகக் காட்டுகிறது.*

*வன்முறைக்கு அளிக்காததை இறைவன் மென்மைத் தன்மைக்கு அளிக்கிறான் என்பது சாதாரண விஷயமல்ல. அது மிகவும் விரிவான ஆழமான பொருளை குறிப்புணர்த்துகின்றது. அது இயற்கையின் நிரந்தரமான விதியை சட்டத்தைக் கொண்டு விளக்குகிறது. இயற்கையின் நியதிப்படி அனைத்து தீயவைகளும் வன்முறையோடு தொடர்பு உடையவையாக உள்ளன. அதே சமயம் அனைத்து நல்லவைகளும் வன்முறையற்ற சாத்வீகத்துடன் தொடர்புடையவையாக உள்ளன.*

*வன்முறைச் செயல்பாடுகள் சமூகத்தில் வெறுப்பை விதைத்து வளரச் செய்கின்றன. அதே சமயம் வன்முறையற்ற சாத்வீகமான வழிமுறைகளோ நேசத்தை மலரச் செய்கின்றது. வன்முறைச் சூழலில் பகைமை பெருகுகிறது. அதே சமயம் வன்முறையற்ற சாத்வீகச் சூழலில் நட்புறவு மலர்ந்து மணம் பரப்புகிறது.*

*வன்முறைவழி எதிர்மறையான மதிப்பீடுகளுக்கு வழிவகுக்கிறது. அதே சமயம் வன்முறையற்ற சாத்வீகமான வழி நேர்மறையான மதிப்பீடுகளுக்கு வழிவகுக்கிறது. வன்முறைவழி மக்களை*

*பிரச்சினைகளில் சிக்க வைக்கிறது. அதே சமயம் வன்முறையற்ற சாத்வீகவழி மக்களை வாய்ப்புகளை பயன்படுத்தும்படி செய்கிறது. சுருக்கமாகக் கூற வேண்டுமென்றால் வன்முறை என்பது மரணிப்பது, வன்முறையற்ற சாத்வீகமோ வாழ்வது.*

*குர்ஆனிலும் இறைத்தூதரின் மொழிகளிலும் ஜிஹாத் என்பதற்கு பெரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஜிஹாத் என்றால் என்ன? ஜிஹாத் என்றால் போராடுவது, ஒருவரால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு போராடுவது. இந்த சொல் வன்முறைப் போராட்டத்திற்கு எதிராக வன்முறையற்ற சாத்வீக முறையில் போராடுவது என்பதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளதை பாராட்டியே ஆக வேண்டும். இதற்குத் தெளிவான சான்றுகளில் ஒன்று, குர்ஆனின் 25:52ஆவது வசனமாகும். அது கூறுகிறது :*

*“ஆகவே (நபியே) நீங்கள் இந்த நன்றி கெட்டவர்களுக்கு கட்டுப்படாதீர்கள். இந்தத் திருக்குர்ஆனை (ஆதாரமாக) கொண்டு நீங்கள் அவர்களிடத்தில் போராடுவீராக.” (25:52)*

*“இதனைக் (அதாவது குர்ஆனின் வசனங்களை) கொண்டு விடா முயற்சியுடன் ஜிஹாத் செய்யுங்கள்” 25:52*

*குர்ஆன் என்பது வாளோ அல்லது துப்பாக்கியோ அல்ல. அது கொள்கையைக் கொண்ட ஒரு நூலே. அப்படி என்றால் குர்ஆனைக் கொண்டு ஜிஹாத் செய்யுங்கள் என்பதன் பொருள் இஸ்லாத்தின் உயர்வான தத்துவங்கள் மூலம் மக்களின் மனங்களை வெல்லும் கொள்கைப் போராட்டம் புரிவதாகும்.*

*குர்ஆனின் இந்த வசனத்தின்படி அமைதியான செயல்பாடு அல்லது வன்முறையற்ற சாத்வீகமான செயல்பாடு என்பதன் இன்னொரு பெயரே ‘ஜிஹாத்’ என்பதே உண்மையாகும். ‘கித்தால்’ என்பது வன்முறை செயல்பாடாகும். ஜிஹாத் என்பதோ வன்முறையற்ற சாத்வீகச் செயல்பாடாகும்.*

**அமைதியான தொடக்கம்**

*குர்ஆன் வெளிப்படத் தொடங்கிய போது அதன் முதல் வெளிப்பாடு இந்தக் கட்டளையைக் கொண்டிருந்தது : ’ஓதுவீராக’ — (இஃக்ரா!)*

*“(நபியே) அனைத்தையும் படைத்த உங்களது இறைவனின் திருப்பெயரால் (எனது கட்டளைகள் அடங்கிய திருக்குர்ஆனை) நீங்கள் ஓதுவீராக.” (96:01)*

*இந்த வசனத்தை கவனமாக ஆராயும்பொழுது இஸ்லாமிய செயல்பாட்டின் தொடக்கத்தை நாம் அறிகிறோம். ஓர் இயக்கத்தை அமைதி வழியில் தொடங்கி தொடரும் நம்பிக்கையில் அது தொடங்குகிறது. மேலும் அது வன்முறை வழியால் பழுதுபடும் வாய்ப்புகளைக் கொண்ட நிலையில் தொடங்கவில்லை.*

*’இஃக்ரா (ஓதுவீராக)’ என்ற கட்டளை வெளிப்பட்டபோது, ஓர் இயக்கத்தைத் தொடங்குவதற்கு மக்கா நகரில் பல தொடக்கப் புள்ளிகள் இருந்தன. உதாரணத்திற்கு ஒன்று. காபா ஆலயத்தில் இருந்த 360 சிலைகளை நீக்கி அதனை தூய்மைப்படுத்தும் ஓர் இயக்கத்தை தொடங்கும் சாத்தியம் இருந்தது. ஆனால், அத்தகைய செயல்பாட்டில் இஸ்லாமிய இயக்கம் இறங்கி இருந்தால் நிச்சயமாக குறைஷியர்களின் வன்முறை ரீதியிலான எதிர்வினையை நேரிட வேண்டி இருந்திருக்கும். இன்னொரு வாய்ப்பு தார் அல்நத்வா என்ற மக்காவின் சட்டமன்றத்தில் ஒரு பதவியை பிடிக்க முயன்றிருக்கலாம் என்பது.*

*அந்த காலகட்டத்தில் கிட்டத்தட்ட முழு அரேபியாவும் ரோம் மற்றும் “சஸ்ஸானிட்” (அன்றைய பாரசீக) பேரரசுகளின் நேரடியான அல்லது மறைமுகமான ஆதிக்கத்தில் இருந்தது. இந்தப் பேரரசுகளின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறுவது கூட ஒரு தொடக்கமாக இருந்திருக்கலாம். இதுவும் கூட உடனடியாக குறைஷியர்களின் வன்முறை ரீதியிலான எதிர்வினையை நேரிட வேண்டி வந்திருக்கும்.*

*இந்த வாய்ப்புகளை எல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு பின்பற்றப்பட்ட வழி குர்ஆனை ஓதுதல் என்பதாக இருந்தது. இந்தச் செயல்பாடு அமைதி வழியிலாக இருக்கக் கூடியதாக இருந்தது. இத்தகைய செயல்பாட்டிற்கு வன்முறை ரீதியிலான எதிர்வினை வர முடியாது என்பதாக அமைதி வழிச் செயல்பாடு இருந்தது.*

*இறைத்தூதர் முஹம்மது (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) இந்தக் கொள்கையை தன் வாழ்நாள்*

*முழுவதும் கடைப்பிடித்தார். வன்முறை வழிகளுக்கு மாறாக வன்முறையற்ற சாத்வீக வழிமுறையைப் பின்பற்றுவதே அவரது கொள்கையாக இருந்தது. இறைத்தூதரின் மனைவியான ஆயிஷா பின்வரும் வார்த்தைகளில் இதனைக் கூறுகிறார் : "இரண்டு வழிகளில் ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டி வந்தால் அவர் எப்போதும் எளிதான வழியையே தேர்ந்தெடுப்பார்". (ஃபத்ஹுல் பாரி 06:654)*

1. *திருக்குர்ஆனின்படி மனிதனிடம் இயற்கையாகவே வெறுக்கத்தக்க இரண்டு விதமான தன்மைகள் உள்ளன. அதில் முதலாவது தான் என்கிற சுய உணர்ச்சி, மற்றது மனசாட்சி*

*வன்முறைப் பாதையைக் காட்டிலும் வன்முறையற்ற சாத்வீகமான வழிமுறையின் அனுகூலமான நன்மைகள் என்ன? அவற்றை சுருக்கமாகப் பின்வருமாறு கூறலாம் :*

*குர்ஆனில் கூறப்பட்டுள்ளபடி ஒவ்வொரு மனிதர்களுக்குள்ளும் ஒன்றுக்கொன்று முரணான இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. ஒன்று தான் என்ற சுயஉணர்ச்சி மற்றொன்று மனசாட்சி. முதலாவது 'நஃப்ஸ் அம்மாரா' என்றும் இரண்டாவது 'நஃப்ஸ் லவ்வாமா' என்றும் கூறப்படுகிறது. (குர்ஆன் 12:53; 75:02, 75:26)*

*"(குற்றம் செய்தவனை) நிந்திக்கும் அவனுடைய மனசாட்சியின் மீதும் நான் சத்தியம் செய்கின்றேன்." (75:02)*

*சமூக சமநிலையை உடைத்து குலைக்கும் தான் என்ற அகங்காரத்தை வன்முறை வழி தட்டி எழுப்பி விடும். ஆனாலோ, வன்முறையற்ற சாத்வீக செயல்பாடு மனசாட்சியைத் தட்டி எழுப்பும். இது எழுவதால் மக்கள் தங்களைத் தாங்களே கேள்வி எழுப்பி ஆய்வு செய்யவும், சுய மதிப்பிட்டைச் செய்து கொள்ளவும் செய்யும். குர்ஆனின் கூற்றுப்படி இதனால் ஏற்படும் அற்புதமான விளைவு*

*"நன்மையும் தீமையும் சமமாகி விடாது (ஆதலால் நபியே தீமையை) நீங்கள் மிக அழகியதைக் கொண்டு தடுத்துக் கொள்ளுங்கள். அவ்வாறாயின் உங்களுடைய கொடிய எதிரியை அதே சமயத்தில் உங்களுடைய உண்மையான மிக்க நெருங்கிய நண்பனைப் போல் காண்பீர்கள்" (41:34)*

*“எவர் உங்களுக்குப் பகைவராக இருந்தாரோ அவர் உங்களுக்கு உற்ற நண்பரை போல் ஆகி விடுவார்” குர்ஆன் (41:34)*

*2. வன்முறையற்ற சாத்வீக வழிமுறையைப் பின்பற்றும் போது கிடைக்கும் மிகப் பெரிய அனுகூலம் ஒருவரின் எந்த நேரமும் வீணாகாது. எந்தச் சூழ்நிலையில் எப்படிக் கிடைக்கும் வாய்ப்புகளும் ஹுதைபிய்யா ஒப்பந்தம் எட்டப்பட்ட போது பயன்படுத்திக் கொள்ளப்பட்டது போல அதன் முழு அளவில் பயன்படுத்திக் கொள்ளப்படும். இந்த ஒப்பந்தத்தினால் இறை நம்பிக்கையாளர்கள் தங்கள் நேரத்தைப் பயனற்ற ஆயுதம் ஏந்திய மோதலில் ஈடுபடுவதற்கு மாறாக அமைதியான ஆக்கப்பூர்வமான வழிகளில் பயன்படுத்திக் கொள்ளும்படி ஆனது.*

*வன்முறைச் செயல்பாட்டினால் விளையும் மோசமான விளைவுகளில் ஒன்று ஆயுதமேந்திய மோதல்களால் சமூக மரபுகளை உடைத்துச் சிதைப்பதாகும். மாறாக வன்முறையற்ற சாத்வீகச் செயல்பாடு தொடங்கப்பட்டு தொடர்ந்து செய்யப்பட்டால் மரபு ரீதியான எந்த நற்தன்மைகளுக்கும் எந்த பாதிப்பையும் அது ஏற்படுத்தாது என்பது அதிலிருந்து விளையும் பெரிய பலனாகும்.*

*ஒரு ராணுவப்புரட்சி என்பது தொடர் ராணுவப் புரட்சிகள் மற்றும் அதற்கு எதிரான ராணுவ புரட்சியின் சமிக்ஞையாகும். விரும்பத்தக்க உண்மையான புரட்சி என்பது படிப்படியான பலனளிக்கக் கூடிய மாற்றங்களை அனுமதிக்கும் புரட்சியாகும். மேலும் இவ்வகைப் புரட்சியை வன்முறையற்ற சாத்வீகமான வழிமுறையில் மட்டுமே அடைய முடியும்.*

**சாத்வீக முறை மூலம் வெற்றி**

*இஸ்லாத்தின் முதல் கட்ட அனைத்தும் பெரிய வெற்றிகள் அதே போல் தொடர்ந்த காலகட்டங்களில் ஈட்டப்பெற்ற வெற்றிகளும் வன்முறையற்ற சாத்வீகமான வழிமுறைகளில் ஈட்டப்பட்டவையே. கீழே கொடுக்கப்பட்டுள்ளவை அத்தகைய வெற்றிகளின் சில உதாரணங்கள் ஆகும்.*

1.

*இறைத்தூதுத்துவத்தின் 23 ஆண்டுகாலத்தில் முதல் 13 ஆண்டுகளை இறைத்தூதர் மக்காவிலேயே கழித்தார். இந்தக் காலகட்டத்தில் சாந்தமான வழிமுறை அல்லது வன்முறையற்ற சாத்வீகமான வழிமுறையையே இறைத்தூதர் முழுக்க முழுக்க பின்பற்றினார். சண்டையிலும் மோதலிலும் விடக்கூடிய பல பிரச்சினைகள் அப்போது மக்காவில் இருந்தன.*

*ஆனால், அத்தகைய அனைத்து பிரச்சினைகளையும் கடும் முயற்சி செய்து இறைத்தூதர் முஹம்மது (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) தனது தளத்தில் இருந்து கொண்டு இறைவனின் செய்தியை அமைதி வழியில் பரப்பிக் கொண்டு இருந்தார். இந்த அமைதி வழிச் செயல்பாடு இந்த காலகட்டத்தில் இறைஅழைப்புப் பணியை முழு வேகத்தில் செய்யும்படிச் செய்தது. இந்த 13 ஆண்டுகால இறைஅழைப்புப் பணியின் மிகப் பெரும் லாபங்களில் ஒன்று நன்னெறி மற்றும் ஒழுக்க மாண்புகளைக் கொண்ட அபுபக்கர், உமர், உத்மான் மற்றும் அலி போன்றவர்களை இஸ்லாத்திற்குள் கொண்டு வர முடிந்ததுதான்.*

2.

*மக்காவில் குறைஷித் தலைவர்கள் இறைத்தூதருக்கு எதிராக சண்டையிட எத்தனித்தனர். அப்போது கூட பதிலடி கொடுத்தல் மற்றும் எதிர்வினையாற்றல் என்பதைத் தேர்ந்தெடுக்காமல் இறைத்தூதர் செய்தது ரகசியமாக மக்காவில் இருந்து மதீனாவிற்குப் புலம் பெயர்ந்தது தான்.*

*புலம் பெயர்தல் என்பது, வன்முறையற்ற சாத்வீகமான செயல்பாட்டின் தெளிவான உதாரணமாக அதன் இயல்பிலேயே விளங்குகிறது. இந்த அமைதிவழி யுக்தி இறைத் தூதரையும் சுமார் இருநூறு எண்ணிக்கையைக் கொண்ட அவரைப் பின்பற்றியவர்களையும் மதீனாவில் இஸ்லாத்தின் சக்தி மிக்க மையத்தை உருவாக்க வைத்தது. அமைதியாகப் புலம் பெயர்வதைத் தவிர்த்து அவர்கள் மோதல் போக்கைக் கைக்கொண்டிருந்தார்களேயானால் இஸ்லாத்தின் வரலாறு அதன் தொடக்க நிலையிலேயே மிகக் குறுகிய காலத்திற்குள் மக்கா நகரிலேயே குழி தோண்டிப் புதைக்கப்பட்டிருக்கும்.*

**3.**

*புலப்பெயர்வுக்குப் பின் இறைத்தூதரின் எதிர்ப்பாளர்கள் அவருக்கு எதிராகப் போர் தொடுக்க ஒருதலைப்பட்சமாக முடிவெடுத்தார்கள். அதன் தொடர்ச்சியாக இரத்தம் தோய்ந்த பத்ர் மற்றும் உஹது போர் நிகழ்வுகள் நடந்தன. அதன் பின்னர் சுலஹ்—அல்—ஹுதைபிய்யா என்ற 10 ஆண்டுக்கான அமைதி ஒப்பந்தத்தை அவருடைய எதிர்ப்பாளர்களின் அனைத்து நிபந்தனைகளையும் ஏற்றுக் கொண்டு செய்து கொண்டார்கள். இது குர்ஆனில் 'தெளிவான வெற்றி' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் அமைதியான, ஆக்கப்பூர்வமான செயல்களுக்கு வழிகோலி இறுதியாக மக்காவையும் முழு அரேபியாவையும் வெற்றி கொள்ள வைத்தது.*

*"(நபியே! ஹுதைபியாவின் சமாதான உடன்படிக்கையின் மூலம்) நிச்சயமாக நாம் உங்களுக்கு (மிகப் பெரிய) தெளிவானதொரு வெற்றியைத் தந்தோம்'' (48:01)*

**4.**

*இறைபக்தி நிறைந்த கலீபாக்களின் ஆட்சியின் இறுதியில் பனு ஹாஷிம் கோத்திரத்தாருக்கும் பனு உமைய்யா கோத்திரத்தாருக்கும் இடையில் இரத்தப் பெருக்கெடுத்த ஒரு மோதல் நிகழ்ந்தது. இது இஸ்லாத்தின் முன்னேற்றத்தை பத்து ஆண்டுக்காலம் நிறுத்தி வைத்தது. இந்த முன்னேற்றத்தை மீண்டும் ஏற்படுத்தியது எதுவென்றால் ஹஸன் இப்னு அலி (மரணம் ஹிஜ்ரி 50) தானாகவே போரில் இருந்து பின்வாங்கிக் கொண்டதுதான். இது மறுக்கவே இயலாத வன்முறையற்ற செயல்பாடாகவே இருந்தது. ஹஸன் இப்னு அலியின் இந்த அமைதிச் செயல்பாடு மூடியிருந்த முன்னேற்றத்திற்கான கதவுகளை இஸ்லாத்திற்கு திறந்து விட்டது.*

**5.**

*அப்பாஸியக் கலீபாக்களின் கடைசி நாட்களில் மங்கோலியப் பழங்குடியினர் முஸ்லிம் உலகத்தைத்தாக்கினர். சமர்கண்ட் முதல் அலிப்போ வரையிலிருந்த ஒட்டுமொத்த முஸ்லிம் உலகையும் அவர்கள் அழித்தனர். இஸ்லாத்தின் வரலாறு தெளிவாக*

*ஸ்தம்பித்து நின்றது. அந்தக் கணத்தில் இறை அழைப்புப் பணி புரியும் வேகமான எண்ணம் முஸ்லிம்களிடையே பிறந்தது. அதன் விளைவாக மங்கோலியர்களில் பெரும்பான்மையினர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். நிகழ்ந்த இந்த அற்புதத்தை கீழ்த்திசை வரலாற்றாசிரியர் ஒருவர் இப்படிக் குறிப்பிடுகிறார் : "முஸ்லிம்களின் ஆயுதங்கள் தோற்ற இடத்தில் முஸ்லிம்களின் மார்க்கம் வென்றது"*

**6.**

*இறைபக்தி நிறைந்த கலீபாக்கள் காலத்திற்குப் பின் அரசாங்க அமைப்பில் அழுகல் தோன்றி, கலீபாக்களின் ஆட்சி என்பது அரசர்களின் ஆட்சி என்று மாறிய ஆண்டுகளில் இஸ்லாமிய வரலாறு இக்கட்டான ஒரு நிலைக்கு ஆளானது. அந்த நிலையில் ஆள்பவர்களுக்கும், ஆளப்படுவோருக்கும் இடையில் மோதலில் முடியும் பல காரணிகள் தோன்றின. ஆனால் இறைத்தூதரது வழிகாட்டுதலைப் பின்பற்றிய முஸ்லிம்கள் அரசியல் மோதலைத் தவிர்த்தனர்.*

*உமையாக்களின் ஆட்சி முதல் வரலாறு தொடங்கி பல நூற்றாண்டுகள் தொடர்ந்தது. இறைத்தூதரது தோழர்களின் தோழர்களான தாபியீன்கள், அவர்களின் சந்ததியினர், மரபு வழிச் செயல்பாட்டார்கள், நீதிபதிகள், மத(உலமா) குருக்கள், ஸூஃபி ஞானிகள் மற்றும் மாபெரும் மார்க்க அறிஞர்கள் ஆகிய அனைவரும் விவேகத்துடன் நேர்மையுடன் எச்சரிக்கையாக ஆட்சியாளர்களுடனான மோதலைத் தவிர்த்ததனால் இது சாத்தியமானது.*

*இந்தக் காலகட்டத்தில் தான் ஒருபக்கம் பல்வேறு நாடுகளில் அமைதிவழி இறை அழைப்புப் பணி நடந்து கொண்டிருக்க மறுபுறம் ஹதீஸ், பிக்ஹ் மற்றும் இஸ்லாமிய அறிவியல்கள் நீண்டகால போராட்டத்திற்குப் பின் நடைமுறைக்கு வந்தன. நமது நூலகங்களில் இடம் பெற்றுள்ள அனைத்து அபூர்வ நூல்களும் இஸ்லாத்தின் செவ்விலக்கியங்களும் இந்த அமைதிவழிச் செயல்பாட்டின் விளைவுகளேயாகும்.*

*எடுத்துக்காட்டாக, ஷரியத் சட்டங்களின் மூலாதாரங்களில் இறைத்தூதரது மொழி (ஹதீஸ்) என்பது குர்ஆனுக்கு அடுத்ததே ஆகும். இறைத்தூதரது மொழிகளும் வழிகளும்*

*அச்சடிக்கப்பட்ட நூல்கள் இன்று இருக்கின்றன. இந்த நூல்கள் மிகவும் அபூர்வமானவை. ஏனென்றால், இவை இல்லையென்றால் இன்று இஸ்லாம் முழுமையான ஒரு அமைப்பாக உருப்பெற்று இருப்பது சாத்தியமாகாமல் போயிருக்கும். உமையாக்கள் மற்றும் அப்பாஸிய கலீபாக்கள் காலத்தில் அரசியல் அமைப்பு சீர்கெடத் தொடங்கியபோது பல்லாயிரக் கணக்கான இறைத்தூதரது மொழிகளும் வழிகளும் எங்கிருந்தன?*

*இவை அனைத்தும் மார்க்க அறிஞர்களின் மனனத்தில் ஞாபகத்தில் இருந்தன. அது எவரிடமிருந்து எவருக்கு சங்கிலித் தொடர் போல வந்தது என்பது குறிப்பிடப்பட்டு இன்று நம்மிடம் இருக்கிறது. அவர்கள் வன்முறைப் போக்கை கைக்கொண்டு அடக்கி ஒடுக்கும் ஆட்சியாளர்களுடன் மோதி இருப்பார்களேயானால் அவர்கள் அனைவரும் கொன்று குவிக்கப்பட்டு, இறைத்தூதரது மொழிகள் மற்றும் வழிகளின் ஒட்டு மொத்தமும் நூல்களில் இடம் பெறுவதற்கு பதிலாக அவர்களுடனேயே புதையுண்டு போயிருக்கும். இது வன்முறையற்ற சாத்வீக முறை என்ற அற்புதத்தை கைக் கொண்டதால் அபூர்வமான இறைத்தூதரின் மொழி மற்றும் வழிமுறைகளின் சேகரம் உயிர்த்திருந்து நூல் வடிவமாகி நமது நூலகங்களில் இன்றும் நமக்கு கிடைக்கின்றன.*

**அரசியல் கலகம் : சட்டமீறல்**

*இறைபக்தி நிறைந்த கலீபாக்களின் ஆட்சிக்குப் பின்னர் ஆண்ட முஸ்லிம் அரசர்களின் ஆட்சி வெளிப்படையான தவறான கொள்கையைக் கடைப்பிடிப்பதாக இருந்தபோதும் முஸ்லிம் மதகுரு(உலமா)க்கள் அந்த ஊழல் நிறைந்த நபர்களுக்கு எதிரான கலகத்தை வழிநடத்தவில்லை. கிட்டத்தட்ட ஆயிரம் ஆண்டுகள் அவர்கள் இம்மாதிரியான விவகாரங்களில் ஒதுங்கி இருந்துகொண்டு அவர்களது செயல்பாட்டு முயற்சிகள் அனைத்தையும் அரசியல் அல்லாத துறைகளிலேயே செய்தார்கள். இது தானாக நிகழ்ந்த விபத்து அல்ல. அது ஷரியத் சட்டங்களுக்கு கீழ்ப்படிந்ததை காட்டுவதாகும்.*

*இறைத்தூதரின் மொழிகள் மற்றும் வழிகள் பற்றிய தொகுப்புகளில் ‘‘கிதாப் அல் ஃபிதன்’’ என்ற தலைப்பில்*

*அத்தியாங்கள் இருக்கின்றன என்பது நமக்கு தெரியும். இறைத்தூதர் முஹம்மது (அவர் மீது சாந்தியும் சமாதானமும் நிலவுவதாக) கூறினார்,*

*“பிற்காலங்களில் தவறான கொள்கைகளைக் கடைப்பிடிப்பது ஆட்சியாளர்களிடம் இருக்கும்; அவர்கள் கொடுங்கோலர்களாக, அநீதி இழைப்பவர்களாக இருப்பார்கள்; ஆனால் அவர்களுக்கு எதிராக முஸ்லிம்கள் வாளேந்தக் கூடாது; மாறாக அவர்கள் தங்கள் ஆடுகள் மற்றும் ஒட்டகங்களுடன் மலைப்பகுதிக்கு சென்று விட வேண்டும்”*

*“ஆடுகள், ஒட்டகங்கள்” என்று குறிப்பிடப்படுவது அரசியல் நிறுவனங்கள் ஊழல் மயமாகிவிட்ட போதும் அரசியல் அல்லாத வேறு துறைகளில் உள்ள வாய்ப்புகளை குறிப்பிட்டதாகும். அரசியல் தளத்தில் மோதலையும், சச்சரவுகளையும் தவிர்ப்பதன் மூலம் கிடைக்கும் மற்ற வாய்ப்புகளை முஸ்லிம்கள் பயன்படுத்த வேண்டும் என்பதே இறைத்தூதருடைய கட்டளையின் பொருளாகும். சுருக்கமாகக் கூற வேண்டுமென்றால் அரசியல் பிரச்சினைகளைத் தவிர்த்து விட்டு, கிடைக்கக் கூடிய அரசியல் அல்லாத மற்ற வாய்ப்புகளை பயன்படுத்த வேண்டும்.*

*இறைத்தூதர் முஹம்மது (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) அவர்களின் கட்டளை பிற்காலத்தைய முஸ்லிம் மதகுரு(உலமா)க்களை கொடுங்கோல் ஆட்சியாளர்களுக்கு எதிராக கலகம் புரிவது சட்டத்திற்குப் புறம்பானது என்று ஆலோசித்து முடிவெடுக்க வைத்தது.*

*நபிமொழிகளின் ஸஹீஹ் முஸ்லிம் (கிதாபுல் இமாரா) பதிவு நூலில் உள்ளதைப் பற்றி இமாம் அந்நவவி கருத்துரைக்கையில், “ஆட்சியாளர்களின் அதிகாரம் என்ற வகையில் ஆட்சியாளர்களுடன் நீங்கள் மோதலில் ஈடுபடக் கூடாது. அவர்கள் இஸ்லாமியக் கட்டளைகளுக்கு விரோதமாகப் போவதை நீங்கள் கண்டால் கூட உண்மையைத் தெளிவாக அவர்களுக்கு கொண்டு செல்ல விவேகமான வார்த்தைகளையும் அறிவுரைகளையுமே பயன்படுத்த வேண்டும். அவர்களை அதிகாரத்திலிருந்து தூக்கி எறிய அவர்களுக்கு எதிரான போர் அல்ல என்பது மதகுரு(உலமா)க்களின் ஒத்த கருத்துக்களின்படி*

*அது சட்டட்திற்குப் புறம்பானதாகும். ஆட்சியாளர்கள் கொடுங்கோலர்களாகவும்* zalim and fasiq *மிகுந்தவர்களாகவும் இருந்த போதும்.*

*சஹிஹ்ஹே முஸ்லிம் : 12:229 ஷரஹ் அந்நவவி*

*இஸ்லாத்தில் ஆக்ரமிப்பு போர் என்பது இல்லை, அது அனுமதித்து இருப்பது எல்லாம் தற்காப்பு யுத்தம் மட்டுமே. அதுவும் கூட வேறு வாய்ப்புகளே இல்லை என்ற நிலையில் தான்.*

*அரசியல் அமைப்புகளுக்கு எதிரான எந்த கலகத்தையும் இறைத்தூதர் தடை செய்துள்ளார். இந்த வகை எதிர்ப்புக் கலகம் செய்யப்படாததன் விளைவு எந்த இடைஞ்சலும் இல்லாமல் இஸ்லாத்தைப் பரப்புவதாக அமையும்.*

*தெளிவாகக் கூறப்பட்டுள்ள இறைத்தூதரின் இந்தக் கட்டளை அதி முக்கியத்துவம் வாய்ந்த யோசனைகளின் அடிப்படையில் அமைந்ததாகும். உண்மையில் இஸ்லாத்தின் ஆரம்ப கட்டத்தில் (அதே இறுதிக் கட்டத்திலும்) இறை அழைப்புப் பணியும், மறு சீரமைப்புப் பணிகளும் செய்ய வேண்டியவைகளாகும். இது நிகழாமல் இஸ்லாத்தின் வரலாறு என்பது முழுமையடையாது. முஸ்லிம் சமுதாயத்தின் இந்த மதகுரு(உலமா)க்கள் அரசியல் அமைப்புகளுக்கு எதிராக இருக்க முயன்றிருந்தால், இந்த ஆக்கப்பூர்வமான அனைத்து பணிகளும் செய்யப்படாமல் போயிருக்கும். அதனால்தான், இறைத்தூதர் முஹம்மது (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) அரசியல் அமைப்புகளுடனான எந்த மோதலையும் தெளிவாகத் தடை செய்திருந்தார். மோதலைத் தவிர்த்து அரசியல் அல்லாத மற்ற ஆக்கப்பூர்வமான வேலைகளுக்கு உத்தரவாதம் அளித்து அது எந்த இடையூறும் இன்றி தொடர்ந்து செய்யப்பட்டது.*

*ஒவ்வொரு சமூகத்திலும் எப்போதும் அரசியல் மற்றும் அரசியலற்ற இரண்டு அமைப்பு முறைகள் எப்போதும் இருக்கும். இந்த அரசியலற்ற அமைப்பு அரசியலற்ற பல்வேறு நிறுவனங்களால் அமையப்பெறும். இஸ்லாமிய திட்டத்தின்படி சமூக அளவில் அமையப் பெற்ற அரசியல் அல்லாத நிறுவனங்கள் சீர்கெட்டு போயிருந்தாலும் அல்லது மாறிக் கொண்டே இருந்தாலும் கூட இந்த தொடர் செயல்பாட்டு*

*முயற்சிகள் அரசியலற்ற முறையில் இஸ்லாத்தை நிலையாக நிறுவிக் கொண்டிருக்கும்.*

**இஸ்லாத்தில் போரைப் பற்றிய கட்டளை**

*திருக்குர்ஆனில் போர் செய்ய அனுமதிக்கப்பட்ட வசனங்கள் உள்ளன என்பது உண்மை.*

*குர்ஆனில் சில வசனங்கள் போரிடக் கூறும் (கித்தால்) கட்டளைகளாக உள்ளன.*

*"(நிராகரிப்பவர்களால்) அநியாயத்தில் சிக்கி போருக்கு நிர்ப்பந்திக்கப்பட்ட (நம்பிக்கை கொண்ட)வர்களுக்கு அவர்களை எதிர்த்து போர் புரிய அனுமதியளிக்கப்பட்டு விட்டது நிச்சயமாக அல்லாஹ் இவர்களுக்கு உதவி செய்யப் பேராற்றல் உடையவனாக இருக்கின்றான்." (22:39)*

*இந்தக் கட்டளை எந்தக் குறிப்பிட்ட சூழ்நிலைக்கு பொருத்தமானதாக இடப்பட்டன என்பதை குர்ஆனை நாம் நன்கு பயில்வதன் மூலம் அறியலாம்.*

1.

*குறித்துக் கொள்ள வேண்டிய முதல் அம்சம் என்னவென்றால் அடக்குமுறைக்கு எதிராகவோ அல்லது தற்காப்புக்காகவோ இறைநம்பிக்கையாளர்கள் போரிடுவது ஒட்டுமொத்தமாக தடைசெய்யப்படவில்லை என்பதாகும். ஆனால் சில நிபந்தனைகளுடன் அது அனுமதிக்கப்பட்டதே. குர்ஆனில் தெளிவாக நாம் கட்டளை இடப்பட்டுள்ளோம்.*

*"உங்களுடன் போர் புரிபவர்களோடு இறைவனுடைய பாதையில் நீங்களும் போரிடுங்கள், நீங்கள் வரம்பு மீறாதீர்கள், நிச்சயமாக இறைவன் வரம்பு மீறுபவர்களை நேசிக்க மாட்டான்" (02:190)*

2.

*தற்காப்புக்கான போர் மட்டுமே இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது. அது சிலரால் அடக்குமுறை செய்யப்படும் போது இறைநம்பிக்கையாளர்கள் தற்காப்புக்காக போரிடுவதாகும்.*

*தங்களுடைய சத்திய உடன்படிக்கைகளை முறித்து (நம்முடைய) தூதரை (ஊரை விட்டு) வெளியேற்றவும் விரும்பி முயற்சித்த மக்களுடன் நீங்கள் போர் புரிய வேண்டாமா? அவர்கள் தான் (இத்தகைய விஷமத்தை) உங்களிடம் முதலில் ஆரம்பித்தனர். அவர்களுக்கு நீங்கள் பயப்படுகிறீர்களா உண்மையாகவே நீங்கள் நம்பிக்கை கொண்டவர்களாயின் நீங்கள் பயப்பட தகுதியானவன் அல்லாஹ் (ஒருவன்) தான் 09:13*

அதற்கும் மேலாக, எதிர்குழுக்களால் தாக்குதல் நடத்தப்பட்டால் கூட இறைநம்பிக்கையாளர்கள் உடனடியாக திருப்பித் தாக்கக் கூடாது. அனைத்து முயற்சிகளும் செய்யப்பட வேண்டும். போரைத் தவிர்ப்பது என்பது இயலாமல் போகும்பட்சத்திலேயே வேறு வழியின்றி தற்காத்துக் கொள்ள போரை நாடலாம்.

**3.**

குர்ஆனில் கூறப்பட்டுள்ளபடி கண்டிப்பாக அதன் நோக்கத்தைப் பொறுத்து காலக்கெடுவுடன் கூடிய போர் முறை என்று ஒன்றுண்டு. அது (ஃபித்னா) குழப்பத்திற்கு முடிவு கட்டுவதற்கானதாகும்.

*“அன்றி (இஸ்லாமிற்கு எதிராக செய்யப்படும்) கலகம் (முற்றிலும்) நீங்கி அல்லாஹ்வுடைய மார்க்கம் உறுதியாக நிலைபெறும் வரையில் அவர்களை எதிர்த்து போர் புரியுங்கள். ஆனால் அவர்கள் (கலகம் செய்யாது) விலகிக் கொண்டால் (அவர்களுக்கு மன்னிப்பு உண்டு) அநியாயம் செய்பவர்களைத் தவிர (மற்றவர்கள் மீது) அறவே அத்துமீறக் கூடாது.” (02:193)*

*“குழப்பம் (ஃபித்னா) இல்லாது போகும் வரை அவர்களுக்கு எதிராக போரிடுங்கள்.” (02:193)*

*இந்த வசனத்தில் ஃபித்னா என்பது மதத் துன்புறுத்தல்கள் மிகத் தீவிரமான ஒரு நிலையை அடையும் கட்டாயப்படுத்தி நிர்ப்பந்தப்படுத்தும் ஒரு முறையை குறிப்பிடுகிறது. பண்டைய காலங்களில் இந்தக் கட்டாயப்படுத்தி நிர்ப்பந்தப்படுத்தும் முறை உலகம் முழுவதும் இருந்தது. இந்த எதேச்சாதிகாரம் ஆன்மீகம் மற்றும் பொருளியல் என்ற இரண்டிற்குமான முன்னேற்றக் கதவுகளை மூடி விட்டிருந்தது. மனிதர்களுக்கு*

இந்த ஆன்மீக பொருளியல் வளர்ச்சிக்கான கதவுகள் திறக்கப்படலாம் எனும்படி அந்தக் காலகட்டத்தில் இந்த கட்டாயப்படுத்தி நிர்ப்பந்திக்கும் முறையை உடைக்க இறை நம்பிக்கையாளர்களுக்கு இறைவன் கட்டளையிட்டுள்ளான்.

இறைத்தூதரது காலத்தில் இந்தப் பணி கைக்கொள்ளப்பட்டு அரேபியா என்ற அளவில் அதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. பின்னர் இறைநம்பிக்கையுள்ள கலீஃபாக்கள் ஆட்சிக்காலத்தில் இறைவனின் சிறப்பான உதவியுடன் ஸசானிட் மற்றும் பைசாண்டிய (அந்தக் கால ரோம மற்றும் பாரசீக) பேரரசுகள் அழித்தொழிக்கப்பட்டன. இதன் தொடர்ச்சியான விளைவாக அறிவுப்பூர்வ அடக்குமுறை சர்வதேச அளவில் சுதந்திரத்தால் இடமாற்றம் செய்யப்பட்டது.

புரட்சிகரமான இந்த நிகழ்வு பல நூற்றாண்டுகளாக நீடித்து வந்த கட்டாயப்படுத்திக் கொண்டு இருந்த அரச அமைப்பு மாற்றி சுதந்திரமான அமைப்பு அங்கு நிறுவப்பட்டது. இந்த இலக்கு முதல் நிலையில் சாத்தியமாகாமல் இருந்தது. ஆனால் தெய்வீகத் திட்டங்களின்படி, 7ஆம் நூற்றாண்டில் வரலாற்றுச் சாதனையை இஸ்லாம் செய்து காட்டியது.

அதே போல், இது மனித வரலாற்றில் நிலைத்த விளைவுகளை ஏற்படுத்தியது. உச்சநிலையில் இருந்த இது பலவீனம் அடைய ஆரம்பித்தது. 20ஆம் நூற்றாண்டில் ஒரே இடத்தில் குவித்து வைக்கப்பட்டு இருந்தவை பகிர்ந்து அளிக்கப்பட்டு அரசியல் அதிகாரம் நிர்வாகிகளிடம் கொஞ்சம் கொஞ் சமாகப் பிரிந்து போனது. அரசு நிறுவனங்களின் செல்வாக்கு மட்டுப்படுத்தப்பட்டது. சமூக அமைப்புகள் பொதுவாக சுயேட்சையான அமைப்புகளாக தன்னிச்சையாக செயல்படத் துவங்கின.

இந்த மாபெரும் மாறுதல், மனித வாழ்வின் போக்கை இஸ்லாம் விரும்பியவாறு மாற்றியது. இதனால் நம்பிக்கையாளர்களுக்கு அவர்கள் அரசியல் அதிகாரம் பெற்று இருக்கிறார்களா இல்லையா என்பது முக்கியத்துவம் இழந்த ஒன்றானது. அவர்களின் ஆக்கபூர்வமான இலக்கை அடைய எதுவும் இனி தடையில்லை. இது அரசர்களின் காலத்தில் இருந்து அமைப்புகள் / நிறுவனங்களின் காலத்துக்கு மாறி விட்டது.

ஆகவே நம்பிக்கையாளர்கள் பல்வேறு அமைப்புகளை நிறுவி, மறைமுகமாக அரசியலை தங்கள் செல்வாக்கிற்குள் கொண்டு வர வேண்டும். அதனால் சமூகத்துக்குள் ஊடுருவ முடியும், முன்பு அது அரசியல் மூலமாக மட்டுமே சாத்தியமாகக் கூடியதாக இருந்தது.

எடுத்துக்காட்டாக, புதிய தலைமுறையை பயிற்றுவித்தல், அறிவுபூர்வமான சூழலை உருவாக்கி அச்சு மற்றும் மின்னணு ஊடகத்தில் பிரச்சாரப் பணியை நூல்கள் மூலமாக கொண்டு செல்லுதல், ஆய்வு மையங்களை நிறுவி நவீன பிரச்சனைகளை எதிர்கொள்ளுதல், பள்ளிவாசல் மற்றும் பள்ளிக்கூடம் கட்டி மார்க்கத்தை காப்பாற்றுதல், தொழில்துறையை நிர்வகித்து பொருளாதார வளத்தைப் பெற்றுக் கொள்ளுதல், உலகளாவிய புரிதலை ஊடகம் மூலம் அடைதல், மார்க்கப் புரிதல், பண்பாட்டுத் தொடர்புகளை தொலைக்காட்சிகளில் வழங்குதல் போன்றவை.

இன்றைய நவீன உலகில் இதை உணர்ந்து கொண்ட நாடுகள் அரசியல் அதிகாரம் இன்றியே வளர்ச்சியை நோக்கி போய்க் கொண்டே இருக்கிறார்கள். அவர்களில் சிலர் கல்வித்துறையிலும், வேறு சிலர் தொழிற் துறையிலும், இன்னும் பலர் தொலைத்தொடர்பு மற்றும் பொருளாதாரம் என கைப்பற்றியுள்ளனர். அவற்றில் இறுதியாக வருவது (கம்ப்யூட்டர்) கணிணித் துறையாகும். இது மனிதனுக்கு பல்வேறு வாய்ப்புகளை அவனின் கை விரலில் மனித செயல்பாடுகளைக் கொண்டு சேர்த்தது. இது தேசம், உலகம் என விரிந்த தளங்களை கொண்டது.

திருக்குர்ஆன் கூறுவது போல், மார்க்கம் இறைவன் ஒருவனுக்கு மட்டும் என்றாகும் வரை என்பது இதைத் தான் குறிக்கும். அரசியல் அதிகாரம் என்பதன் பலன் ஒன்றும் பெரிதாக இல்லாத சூழலில் அதை அடைய நினைப்பது தேவையற்றது. அதனால் விரும்பத்தக்க எந்த பயனும் இல்லை. அரசியல் சார்பற்ற அமைப்புகளே போதுமான அளவுக்கு இந்த நோக்கத்துக்கு உதவியாக இருக்க முடியும்.

அந்த முயற்சிகள் மூலம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்திலேயே அரேபியாவில் முடிவுக்கு வந்தன. பின்பு

நேர்வழி சென்ற (கலீஃபா — நபிகளாரின் நேரடி சீடர்களின்) ஆட்சியின் போது ஈரானிய மற்றும் ரோம—கிரேக்கப் பேரரசுகள் தெய்வீக திட்டங்களின்படி அக்குவேறு ஆணி வேறு தனித்தனியாக சிதைவுற்றது. விளைவாக பன்னாட்டு அளவில் அறிவுலகின் மீது போடப்பட்டு இருந்த தடைகள் அனைத்தும் நீங்கி அறிவியல் யுகம் ஒன்று தோன்றியது.

ஸஹீஹ் அல்புகாரி எனும் இறைத்தூதரின் மொழி மற்றும் வழிமுறைத் தொகுப்பில் இதனைப் பற்றியப் பதிவுகள் உள்ளன. நான்காவது கலீஃபாவான அலி இப்னு அபிதாலிபிற்குப் பிறகு அப்துல்லாஹ் இப்னு ஜுபைருக்கும் உமையாக்களுக்கும் இடையில் அரசியல் மோதல் உருவானது. இறைத்தூதரின் முதுபெரும் தோழர்களில் ஒருவரான அப்துல்லா இப்னு உமர் போரிலிருந்து விலகி இருந்தார். மக்கள் அவரை அணுகி "கித்தால் — அல்ஃபித்னா" என்னும் இறைவசனத்தை மேற்கோள் காட்டி அவர் ஏன் போரிலிருந்து விலகி இருக்கிறார் என்று கேட்டார்கள். அதற்கு அப்துல்லா இப்னு உமர், "குர்ஆனில் கூறப்பட்டுள்ள ஃபித்னா உள்ளுக்குள்ளேயே நிகழும் அரசியல் சண்டையைக் குறிக்கவில்லை. மாறாக அது கட்டாயப்படுத்தி நிர்ப்பந்திக்கும் மத ஒடுக்குமுறையையே குறிக்கிறது. அது முன்பே ஒழிக்கப்பட்டு விட்டது" என்று கூறினார். (ஃபத்ஹுல் பாரி 08:60)

இவற்றிலிருந்து நாம் தெரிந்து கொள்வது ஃபித்னாவுக்கு எதிரான போர் என்பது குறிப்பிட்ட கால எல்லைக்குட்பட்டது. தற்காலிகமானது, குறிப்பிட்ட நோக்கம் நிறைவு செய்யப்படும் வரை செய்யக்கூடியது என்பதாகும்.

(குழப்பம்) ஃபித்னாவுக்கு எதிரான போர் குறித்த குர்ஆனின் கூற்றை மற்ற நோக்கங்களுக்கான போர் செயல்களுக்கு செல்லத்தக்கதாக்குவது என்பது மிக மிக முறையற்றதாகும். குர்ஆனின் அந்த வசனம் வெளிப்பட்ட காலத்திலிருந்த அதே நிலை மீண்டும் இருக்குமேயானால் இந்த வசனத்தை அந்த போர்களுக்குப் பயன்படுத்தலாம்.

இறைத்தூதர் முஹம்மது (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) அவர்களுடைய வரலாற்றை எழுதியவர்கள் போர்களின் (கஸ்வா) எண்ணிக்கையை எண்பதுக்கும்

*மேற்பட்டது என்று குறிப்பிடுகிறார்கள். இது எந்த மாதிரியான தோற்றத்தை உருவாக்குகிறது என்றால், இறைத்தூதர் முஹம்மது (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) தன்னுடைய 23 ஆண்டுகால தூதுத்துவ பணியில் ஆண்டுக்கு நான்கு போர்களில் ஈடுபட்டார் என்பதைத்தான். ஆனால், இது அடிப்படையற்ற ஒன்றாகும். உண்மை என்னவென்றால் இறைத்தூதர் முஹம்மது (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) தனது ஒட்டுமொத்த தூதுத்துவ வாழ்க்கையில் மூன்று தருணங்களில் மட்டுமே போரில் ஈடுபட்டார்கள். கஸ்வாத் என்று குறிப்பிடப்படும் மற்றெல்லா சம்பவங்களும் போரைத் தவிர்ப்பதற்கான உதாரணங்களேயாகும். அவை போரில் ஈடுபட்டவை அல்ல.*

*உதாரணமாக ஸீரத் எனப்படும் வாழ்க்கை வரலாற்று நூலில் “கஸ்வா அல்—அஹ்சாப்” என்ற அகழிச் சம்பவம் போர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் உண்மை என்னவென்றால் அரேபியா முழுவதும் இருந்த 12,000 வரை எண்ணிக்கையிலான பழங்குடியினர் போர் தொடுக்கும் முழுமையான நோக்கத்துடன் மதீனா நகரின் எல்லை வந்தடைந்தனர். ஆனால் இறைத்தூதரும் அவர்தம் தோழர்களும் இருசாராருக்கும் இடையில் ஆழமான அகழியை தோண்டினார். அப்படியாக போர் வெற்றிகரமாகத் தவிர்க்கப்பட்டது. கஸ்வா என்று அழைக்கப்படும் அத்தனை சம்பவங்களும் இதைப் போன்றவையே. இறைத்தூதரின் எதிர்ப்பாளர்கள் அவரைப் போரில் ஈடுபடவைக்கத் தொடர்ந்து மீண்டும் மீண்டும் முயன்று கொண்டிருந்தனர். ஆனால், இறைத்தூதரோ அப்படிப்பட்ட அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஏதாவது ஒரு உத்தியை பயன்படுத்தி போரைத் தவிர்த்து சூழ்நிலையை சாதாரணமாக்கினார்.*

*உண்மையில் முஸ்லிம்கள் போரில் ஈடுபட்டது மூன்றே முறைதான். அவை பத்ரு, உஹது மற்றும் ஹுனைன் போர்களாகும். ஆனால் சம்பவங்கள் நமக்குத் தெரிவிப்பது என்னவென்றால் இந்த மூன்று சந்தர்ப்பங்களிலும் போர் என்பது எவ்வளவு முயன்றும் தவிர்க்க இயலாததாக இருந்தது என்பதைத்தான். எனவே அடக்குமுறையாளார்களுக்கு எதிராக தற்காத்துக் கொள்ளும் பொருட்டு போரில் ஈடுபடும்படி இறைத்தூதர் நிர்ப்பந்திக்கப்பட்டார். இவற்றுக்கெல்லாம்*

மேலாக இந்தப் போர்கள் அரை நாள் அளவே நீடித்தன. ஒவ்வொன்றும் நண்பகலில் தொடங்கி சூரியன் மறைகையில் முடிந்தவையாகும். அதாவது இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் தம் வாழ்நாளில் போரில் ஈடுபட்டது மொத்தமாக ஒன்றரை நாட்களே என்று கூறுவதே சரியாக இருக்கும். அதாவது, இறைத்தூதர் தம் தூதுத்துவக் காலமான 23 ஆண்டுகளில் ஒன்றரை நாட்கள் தவிர மற்றெல்லா நேரங்களிலும் வன்முறையற்ற சாத்வீகமான கொள்கையையே பின்பற்றினார்.

வன்முறையற்ற சாத்வீகக் கொள்கையின் அடிப்படையிலான இஸ்லாமிய மார்க்கம் இருக்கும்பொழுது, இறைநம்பிக்கை கொண்டவர்கள் பகைமையைத் தொடங்குவது ஆரம்பித்து வைப்பது என்பது சட்டத்திற்குப் புறம்பானதாகும். தற்காப்புத் தாக்குதல் தவிர்க்க இயலாதது என்ற சந்தர்பத்தில் அல்லாமல் வேறு எந்தச் சூழ்நிலையிலும் வன்முறையை நாட குர்ஆன் அனுமதி அளிக்கவில்லை.

**நவீன காலமும் வன்முறையற்ற சாத்வீகமும்**

எனது பார்வையில் இஸ்லாம் இன்றைக்கு எதிர்கொள்ளும் மாபெரும் பிரச்சினை என்னவென்றால் முஸ்லிம்கள் இறைத்தூதரின் (சுன்னத்தான) வழிமுறை வன்முறையற்ற சாத்வீகம் என்பதை கிட்டத்தட்ட மொத்தமாக மறந்தே விட்டார்கள் என்பதுதான். பிற்காலத்தில் Ottoman உத்மானிய மற்றும் முகலாயப் பேரரசுகள் சிதைந்து போன பொழுதும் மற்றும் பாலஸ்தீனப் பிரச்சினை போன்றவற்றை இறைவிசுவாசிகள் எதிர்கொள்ள நேர்ந்தபோதும், உலகம் முழுக்க உள்ள முஸ்லிம்கள் எதிர்மறையான வினைகள் புரிவதற்கு பிரம்மாண்டமான அளவில் பலியாகி விட்டனர். அவர்கள் இஸ்லாத்தின் கொள்கை என்பது வன்முறையற்ற சாத்வீகமே தவிர வன்முறையல்ல என்பதை நினைவில் கொள்வதில் தோற்று விட்டார்கள். கிட்டத்தட்ட நூறு ஆண்டுகால இரத்த ஆறு ஓடும் போருக்குப் பின்னரும் முஸ்லிம்கள் நேர்மறையான எந்தப் பலனையும் பெறாதது இப்படி பாதை மாறிப் போனதன் விளைவே ஆகும். மாறாக அவர்களிடம் இருந்ததையும் அவர்கள் இழந்தார்கள்.

*இமாம் மாலிக்கின் கூற்றுப்படி இந்த (முஸ்லிம்) சமுதாயத்தின் பிற்கால சந்ததியினர் பிரச்சினைகளை ஆரம்பகால சந்ததியினர் தீர்த்துக் கொண்ட அதே (வன்முறையற்ற சாத்வீக) வழியிலேயே தீர்த்துக் கொள்ள முடிந்தவர்களாக இருப்பார்கள். அதே போன்று நவீன கால முஸ்லிம்களும் அதைப் போன்ற வன்முறையற்ற சாத்வீக வழியையே நாடவேண்டும். முன்பு வன்முறை வழிகளில் எப்படி நற்பலன் விளையவில்லையோ இன்றும் வன்முறை வழிகளில் நற்பலனை விளைவிக்க முடியாது.*

*நவீனகால முஸ்லிம்களின் விவகாரங்களின் நிலை ஹுதைபிய்யா ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட போது இருந்ததையே பிரதிபலிக்கிறது. இன்று மீண்டும் இஸ்லாத்திற்கு முன்பு (ஹாமியத் அல்ஜாஹிலிய்யா) இருந்த அரேபியாவில் இருந்ததைப் போன்ற தப்பெண்ணம் கொண்ட வெறுப்பு மற்றவர்களால் காட்டப்படுகிறது.*

*“அவனே தன்னுடைய தூதரை நேரான வழியை கொண்டும் சத்தியமான மார்க்கத்தை கொண்டும் அதை எல்லா மார்க்கங்களை விட மேலோங்க வைப்பதற்காக அனுப்பி வைத்தான் இதற்கு அல்லாஹ்வே போதுமான சாட்சியாவான்.” (48:28)*

*இது பெரிய அளவிலானதாக இருக்கிறது. இஸ்லாத்தின் முதல் நிலையில் அத்தகைய தப்பெண்ணத்திலான வெறுப்புக்குப் பதிலாக முஸ்லிம்கள் விடாமுயற்சியுடன் அத்தகையது போன்ற வெறுப்பைத் தவிர்த்து தீர்வைக் கொடுத்தார்கள். இறைபக்திக்கான மொழி (கலிமா அத்தக்வாவில்) உறுதியாக இருந்து இறைவனின் உதவிக்கு பாத்திரமானவர்களாக ஆனார்கள். மேலும் அவர்களுக்குத் தெளிவான வெற்றியும் அளிக்கப்பட்டது.*

*“நிராகரித்தவர்கள் தங்களுடைய உள்ளங்களில் (உங்களை வேருடன் அழித்து விட வேண்டுமென்ற) மூடத்தனமான வைராக்கியத்தை நிலை நிறுத்திக்கொண்ட சம்பவத்தை நினைத்துப் பாருங்கள். அச்சமயம் அல்லாஹ் தன்னுடைய தூதர் மீதும் நம்பிக்கை கொண்டவர்கள் மீதும் தன்னுடைய ஆறுதலையும் உறுதியையும் இறக்கி வைத்து பரிசுத்த*

*வாக்கியத்தின் மீது அவர்களை உறுதிப்படுத்தினான். அவர்கள் அதற்கு தகுதியுடையவர்களாகவும் அதனை அடைய வேண்டியவர்களாகவும் இருந்தார்கள் அல்லாஹ் அனைத்தையும் நன்கறிந்தவனாக இருக்கின்றான்." (48:26)*

*"ஹுதைபிய்யா" அமைதி ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட சமயத்தில் அரேபியாவின் தலைமைத்துவத்தைக் கொண்ட குறைஷிர்கள், போர் தொடுக்கத் தயாரானார்கள். காபா ஆலயம் அவர்கள் வசமிருந்தது. இறைத்தூதரையும் அவர்தம் தோழர்களையும் அவர்களுடைய சொந்த ஊரை விட்டு குறைஷியர்கள் வெளியேற்றினார்கள். குறைஷியர்கள் முஸ்லிம்களின் வீடுகளையும் சொத்துக்களையும் எடுத்துக் கொண்டார்கள். இஸ்லாத்திற்கு எதிரான பிரச்சாரத்தைச் செய்வதற்கு மிகுந்த முயற்சியை மேற்கொண்டார்கள். அவர்கள் அதற்கான எந்த முயற்சியையும் விட்டு விடவில்லை.*

*விவகாரங்கள் இப்படி இருந்த நிலையில் இறைவிசுவாசிகளுக்கு இரண்டு வாய்ப்புகளே இருந்தன. ஒன்று கொடுங்கோன்மைக்கு எதிரான போரை தங்கள் உரிமைகளைக் காத்துக் கொள்வதற்காக நேரடியாக போர் தொடுப்பது. அத்தகைய தீர்மானித்தின் வினை நிச்சயமாக உயிரிழப்பும் பொருளிழப்பும் என்பதாகவே இருந்திருக்கும்.*

*இரண்டாவது வாய்ப்பு உடனடியான இழப்புகள், அரசியல், பொருள் ஆகியவற்றின் இழப்புகள் ஆகியவை ஏற்படும் என்பதனால் பொறுமையாக இருப்பது. மேலும் நஷ்டமடைவதற்குப் பதிலாக என்னென்ன வாய்ப்புகள் கிடைக்கின்றனவோ அவற்றைப் பயன்படுத்துதல், இறைத்தூதர் முஹம்மதும் (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) அவருடைய தோழர்களும் இந்த இரண்டாவது வாய்ப்பையே தேர்ந்தெடுத்தனர். இதன் விளைவு என்னவாக இருந்தது என்றால் சில ஆண்டுகளுக்குள்ளாகவே ஒட்டுமொத்த அரேபியாவும் புரட்சிக்கு ஆளானது.*

*இந்த நிலையே நவீன காலங்களிலும் பரவலாக எங்கும் காணப்படுகிறது. அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் முஸ்லிம்கள் மற்ற நாடுகளின் கைகளால் பெரும் நஷ்டத்தை அடைந்திருந்தாலும், இன்னும்கூட*

*எண்ணற்ற வாய்ப்புகள் பெருமளவில் இருக்கின்றன. அவை விவேகத்துடன் பயன்படுத்தப்படுமேயானால் இஸ்லாத்தின் வரலாறை நம்மால் மிகப் பிரம்மாண்டமான வகையில் மாற்றி எழுத முடியும்.*

**மார்க்கப் பிரகடனம்**

*நவீன காலம் பிரச்சினைகளைக் கொண்டு இஸ்லாத்தை அச்சுறுத்துவதாக முஸ்லிம்கள் நினைக்கின்றனர். ஆனால், உண்மையில் நடப்பிலுள்ள நிலைமைக்கு இது முற்றிலும் மாறானது. விவசாயிகளுக்கு மழைக்காலம் எப்படியோ அப்படியே முஸ்லிம்களுக்கு நவீனகாலம் இருக்கிறது என்பதே உண்மை. ஆனால் முஸ்லிம்கள் இதனைத் தெரிந்துக் கொள்ளவும் புரிந்துக் கொள்ளவும் இல்லை என்பதைப் அறிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள். ஆகவேதான் நிகழக் கூடிய சாத்தியம் உள்ள இதனை சாத்தியமாக மாற்றுவதில் அவர்கள் தோல்வியடைந்த நிலையில் இருக்கிறார்கள்.*

*குர்ஆனில் கூறப்பட்டுள்ள இஸ்ஹாருத்தீன் என்பது தற்காலிகமான ஒன்றை குறிப்பதல்ல. உண்மையில் அது இஸ்லாத்தின் நிரந்தரமான கொள்கை வளர்ச்சியைக் குறிப்பதாகும். அதன் பொருள் என்னவென்றால் உலகிலுள்ள அனைத்து கொள்கைகளிலும் இஸ்லாத்தின் உன்னத உயர்நிலை என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்படியான ஒரு புரட்சியை உருவாக்குவதாகும். இதற்கான நிகழக் கூடிய சாத்தியத்தை இறைவன் முன்பே நடப்புக்கு கொண்டு வந்து விட்டான். இறைநம்பிக்கையாளர்கள் செய்ய வேண்டியது அதனை தட்டி எழுப்பி உண்மையாக மாற்ற வேண்டியது மட்டுந்தான்.*

*இறைத்தூதர் மற்றும் அவர்தம் தோழர்களால் 7ஆம் நூற்றாண்டில் கொண்டு வரப்பட்ட புரட்சியின் நோக்கம் இஸ்ஹாருத்—தீன் என்று குர்ஆனில் கூறப்பட்டுள்ளது.*

*“இவர்கள் தங்கள் வாய்களைக் கொண்டே (ஊதி) அல்லாஹ்வுடைய பிரகாசத்தை அணைத்து விட விரும்புகின்றனர். எனினும், இந்நிராகரிப்பவர்கள் வெறுத்த போதிலும் அல்லாஹ் தனது பிரகாசத்தை முழுமைப்படுத்தி வைக்காமல் இருக்கப் போவதில்லை.*

*அவன் தான் தன்னுடைய தூதரை நேரான வழியைக் கொண்டும் சத்திய மார்க்கத்தை கொண்டும் அனுப்பி வைத்தான். இணைவைத்து வணங்குபவர்கள் (அதனை) வெறுத்த போதிலும் (உலகிலுள்ள) எல்லா மார்க்கங்களையும் அந்த சத்திய மார்க்க(மான இஸ்லா)ம் வென்று விடும்படி அவன் செய்தான்." (09:32—33)*

*இஸ்ஹார்* Izhar *என்ற அரபு மொழிச் சொல்லுக்கு உன்னத உயர்வு, வளர்ச்சியுறுதல், எல்லாவற்றையும் விட உயர்வாக்குதல் என்ற பொருள் உண்டு. இங்கு குறிப்பிடப்படும் இஸ்ஹாருத்தீன் என்பது அறிவுப்பூர்வமாக கொள்கைப்பூர்வமாக எல்லாவற்றையும் விட உயர்வாகுதல் என்பதைக் குறிக்கிறதே தவிர அரசியல் மேலாதிக்கத்தை அல்ல. இதற்கு பொருள் என்னவென்றால் அறிவுப்பூர்வமான கொள்கைப்பூர்வமான வகையில் இறைவனின் மார்க்கம் மற்றெல்லா கொள்கைகள் மற்றும் மார்க்கங்களை விட உன்னத உயர்நிலையை என்றென்றைக்கும் கொள்ளும் என்பதாகும்.*

*இறைவனின் மார்க்கத்திற்கு கொள்கைப்பூர்வமான உன்னத உயர்நிலையை அறிவிப்பது என்பது சாதாரண விஷயமல்ல. அது வரலாற்றை புதிதாக எழுதுவது போன்ற பெரும் பணியாகும். இறைவனின் மார்க்கம் கொள்கைப்பூர்வமாக உன்னத உயர்நிலையில்தான் உள்ளது என்றாலும் தவறான மற்றும் தவறாக வழிநடத்தப்பட்ட கருத்துக்களால் அது எல்லோரும் அறியாத பூடகமான ஒன்றாக ஆகி விட்டது. பண்டைய காலங்களில் மக்கள் கடுமையான மூட நம்பிக்கை எண்ணங்களின் ஆதிக்கத்தில் இருந்ததுதான் இதற்கான காரணம். அவர்களது கலைகள் மற்றும் பொதுவான கல்வி என்பவை எல்லாம் மூட நம்பிக்கைகள் மற்றும் சிலை வணக்க முறைகள் ஆகியவற்றால் விலங்கிடப்பட்டிருந்தன. இறையுண்மைக்கான ஒரே வாகனமான உண்மையான மார்க்கத்தின் மீது திரையிடும்படி இது செய்து விட்டது.*

*இந்த சாதகமற்ற செயற்கையான விவகாரங்களை மாற்றியமைக்கும் வண்ணம் இறுதித் இறைத்தூதர் மூலம் ஓர் அறிவுப்பூர்வ புரட்சியைக் கொண்டுவர இறைவன் விரும்பினான். அமையப்பெற்ற கல்வி நிலையின்படியே மனித அறிவியலறிவுகள் உண்மையான மார்க்கத்திற்கு அதாவது*

ஓரிறைக் கொள்கை மார்க்கம் மக்களுக்கான மார்க்கம் என்று அமையலாம் எனும்படி ஆதரவாகியுள்ளன.

இந்த வசனத்தில் உள்ள இஸ்ஹாருத்தீன் என்பதன் பொருள் இறைத்தூதர் மற்றும் அவர்தம் தோழர்களால் கொண்டு வரப்பட்ட புரட்சியான அதே இறைத்திட்டம்தான். இந்தப் புரட்சி மனித வரலாற்றில் ஒரு புதிய செயல்முறையை அமைத்துள்ளது. இதன் நோக்கம் மனிதன் தன் அறிவுகொண்டு முடிவெடுப்பதை மூடி மறைத்திருக்க அனைத்து மூடத்திரைகளை அகற்றுவதும் ஓரிறைக் கொள்கையை மனித குலத்திற்கு தெளிவாகத் தெரியும்படி இயற்கையில் மறைந்துள்ள அறிவியல் நிரூபணங்களை அளிப்பதுமாகும். நவீனகாலங்களில் இந்தப் புரட்சி அதன் உச்சநிலையை அடைந்துள்ளது.

இந்த இஸ்ஹாருத்தீன் என்பதற்கு இரண்டு முக்கிய குறிக்கோள்கள் உள்ளன.

o ஒன்று உண்மையான மார்க்கத்திற்கான இறை அழைப்புப் பணியைச் செய்யும், செய்ய முடியும் என்பதற்கான சாதகமான சூழ்நிலை உருவாகும்படி மத ஒடுக்குமுறைகளுக்கு ஒரு முடிவைக் கட்டுவது. பண்டைய காலங்களில் இந்த இறை அழைப்புபணிப் பணி மிகவும் பாதகமான சூழ்நிலைகளிலேயே செய்ய முடிந்ததாக இருந்தது.

o இரண்டாவது நோக்கம் மற்றெல்லா மதங்களும் வலுவான வாதங்களை அடிப்படையாகக் கொண்டிருப்பதில் குறையுள்ளவையாக உள்ளன என்பதைக் காண்பிக்கும்படி இறைவனின் உண்மையான மார்க்கத்திற்கு ஆதரவான அனைத்து வாதங்களையும் முன்வைப்பதாகும். இந்த இரண்டு பெரும்பணிகளும் நிகழ்காலங்களில் பெருமளவில் செய்யப்பட்டு வருகின்றன. அதனைப் பற்றிய சுருக்கமான விபரம் இங்கே தரப்படுகிறது.

பண்டைக் காலங்களில் உலகம் முழுவதும் மன்னராட்சி முறையே இருந்தது. மன்னராட்சி முறை போன்ற தனி மனித முறை பலப்பிரயோகத்தினால் மட்டுமே அமைக்கக் கூடியது. அதனால்தான் மன்னர்களால் கட்டாயப்படுத்தி நிர்ப்பந்திக்கும் நிர்வாக முறை அமைக்கப்பட்டது. அவர்கள்

*தங்கள் குடிமக்களிடையே இருந்த அறிவுப்பூர்வமான அல்லது மதப்பூர்வமான எந்த அடையாளத்தையும் தவிர்த்துவிடாமல் அழித்தார்கள். இந்த நிலை புதிய மதக் கொள்கைகள் பரப்பப்படுவதற்கோ நிரந்தரமான பெருந்தடையாக இருந்தது. இறுதியாக கட்டாயப்படுத்தி நிர்ப்பந்திக்கும் இந்த அரசியல் அமைப்பு முறை இறைத்தூதர் மற்றும் அவர்தம் தோழர்களால் ஒழிக்கப்பட்டது.*

*அடக்குமுறை அமைப்புகளை ஒழித்ததும், மக்களின் மனங்களை மூடநம்பிக்கைகளிலிருந்து விடுவித்ததும் சுதந்திரமும் ஜனநாயகமும் கொண்ட புதியதொரு யுகத்திற்கு வழிகோலியது. மனித வரலாற்றில் இந்த புரட்சியின் விலை ஒரு செயற்பாட்டை நிகழ்ந்து கொண்டே இருக்கும்படி செய்தது. பிறகாலங்களில் மனித சிந்தனைகளில் இருந்த இந்தப் புரட்சிக்கு மேற்கத்திய நாடுகள் பெருமளவில் உதவி புரிந்துள்ளன. ஒப்பில்லாத இன்றைய அறிவியல் சாதனைகளில் இந்தச் செயல்முறை உயர்நிலையை அடைந்துள்ளது. இதன் தொடர் விளைவாக அடக்குமுறை சூழலில் மிகவும் மோசமாக தடையை சந்தித்த உண்மைக்கான இறை அழைப்புப்பணியை சுதந்திரமான சூழலில் செய்வது சாத்தியமாக்கியுள்ளது.*

*மூடநம்பிக்கைகளின் மதம் என்பதற்கு இன்னொரு பெயர் சிலை வணக்க முறையாகும். பண்டைய காலத்தில் சிலை வணக்க முறை (ஷிர்க்) மனித மனங்களை ஆக்ரமித்து அறிவியல் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் இயலாததாக்கி இருந்தது. இந்த மூடநம்பிக்கை முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க இறைத்தூதரும் அவர்தம் தோழர்களும் பெரும் தியாகங்களை புரிந்துள்ளனர். இப்படியாக அறிவியல் யுகத்தின் தொடக்கங்கள் அமைந்தன. அதனால் உருவாக்கப்பட்ட மாற்றங்கள் பல நூற்றாண்டுகளாக வரலாற்றில் செல்வாக்கை செலுத்தியுள்ளன.*

*உண்மையில் இஸ்லாமியப் புரட்சியின் பக்கவிளைவான அறிவியல் புரட்சி நமக்கு நவீன தகவல் தொடர்பு வசதிகளை அளித்துள்ளது. இந்தப் புதுயுகத்தின் வரவு மனித வரலாற்றில் முதன்முறையாக இஸ்லாத்தை சர்வதேச அளவில் பரப்பும் சாத்தியத்தை அளித்துள்ளது. இறைத்தூதரின் ஒரு மொழி இப்படி இருக்கிறது. “ஒரு காலம் வர இருக்கிறது, அப்போது*

*இறைவனின் சொற்கள் உலகம் முழுவதிலுமுள்ள அனைத்து இல்லங்களிலும் நுழையும்" (முஸ்னத் அஹ்மத்) நவீன யுகத்தின் தகவல் தொடர்பு வசதியையே இந்த முன்னறிவிப்பு மறைமுகமாக அறிவிக்கிறது.*

*நவீன அறிவியல் புரட்சியின் ஒரு விளைவு நம்மை இஸ்லாமிய நம்பிக்கைகளுக்கு ஆதரவான பல புதிய வாதங்களை முன்வைக்கும்படி செய்திருக்கிறது. இந்தப் புரட்சிக்கு முன்னர் இஸ்லாமிய இறைஅழைப்புப் பணியில் ஈடுபடுவோர் இஸ்லாத்தின் உண்மைக்கு ஆதரவாக மரபு ரீதியான வாதங்களையே நாட முடியும் என்றிருந்தது. ஆனால் இன்று இஸ்லாமிய உண்மைகளை மனித அறிவின் உயர் நிலைகளில் வைத்துக் கூற முடியும் என்பதையும் அதன் நம்பகத்தன்மையை துல்லியமான நியாயமான தர்க்கங்களின் மூலம் நிறுவ முடியும் என்பதையும் சாத்தியமாக்கி இருக்கிறது.*

*பண்டைய காலங்களில் மதக் கல்வி என்பது புனிதமானது என்றும் மறுக்கக் கூடாதது என்ற வகையிலும் மட்டுமே செய்ய முடிந்ததாக இருந்தது. அதனால்தான் நன்கு நிறுவப்பட்ட மற்றும் நிறுவப்படாத மதங்களை ஒன்றிலிருந்து மற்றொன்றை கல்வியியல்பூர்வமாக பிரிக்க முடியவில்லை. நவீன காலத்தில் அறிவியல் புரட்சியின் செல்வாக்கு கொண்டு மதங்களைப் பற்றிய ஆய்வை மற்ற எந்த ஒன்றையும் எப்படி அறிவியற்பூர்வமாக ஆய்வு செய்ய முடியுமோ அதைப் போலவே மதங்களைப் பற்றிய ஆய்வையும் சரியாகவும் பகுத்தும் செய்ய முடியும்.*

*இத்தகைய பகுத்தாய்வு சுத்தமான கல்விப்பூர்வமாக, வரலாற்றுத் தரங்களின் படியான ஒரே ஒரு மதமாக இஸ்லாத்தை நிருபித்துள்ளது. மற்ற அனைத்து மதங்களும் வரலாற்றுப்பூர்வமான இந்த நம்பகத்தன்மையில் குறையுள்ளவையாகவே இருக்கின்றன. இந்த அறிவுப்பூர்வமான புரட்சிக்குப் பின்னர் மனித அறிவு என்பதன் அடிப்படையில் இஸ்லாத்தின் உண்மையை மற்ற மதங்களுக்கு முன்னால் நிறுவுவது சாத்தியமாகியுள்ளது.இஸ்லாம் மட்டுமே இறைவனின் மதம் என்று நம்பக் கூடியது என்பதை வாதங்களின் மூலம் நிறுவ முடியும்.*

*நமது காலகட்டத்தின் இந்த நவீன வளர்ச்சிக்கு இஸ்லாத்தை எதிர்ப்பேயல்லாத வெற்றி என்ற இடத்திற்குக் கொண்டு*

*சென்றுள்ளது. இந்த தருணத்தில் முஸ்லிம்கள் செய்ய வேண்டியது என்னவென்றால் மற்ற நாடுகளுக்கு எதிரான அனைத்து வன்முறை செயல்பாடுகளையும் ஒரு தலைப்பட்சமாக கைவிட வேண்டும். அது இறைஅழைப்புப் பணி புரிபவருக்கு அதனைப் பெற வேண்டியவருக்கும் இடையில் சாதாரண உறவு நிலை உருவாக அனுமதிக்கப்பட்டதாக இருக்கும். அப்போது மட்டுமே இஸ்லாத்தின் செய்தியை அனைவருக்கும் அளிக்க முடியும். இப்போது அறிவியல் புரட்சியின் தோற்றத்தால் இஸ்லாத்திற்கும் இஸ்லாம் அல்லாததற்கும் இடையில் உண்மையான பலன்தரக்கூடிய உரையாடலைத் தொடங்குவது சாத்தியமாகியுள்ளது. இதன் விளைவு நிச்சயமாக இஸ்லாத்திற்குச் சாதகமாகவே இருக்கும்.*

**நடப்புக் காலத்தில் இஸ்லாம்**

*வன்முறையற்ற சாத்வீகத்தை போதிக்கும் இஸ்லாம் நடப்பு காலத்திற்கேற்ப பொருத்துமானதுதானா, புதிய சூழ்நிலைகளில் அது உன்னத உயர்நிலை அடையுமா என்ற கேள்வி எழுகிறது.*

*இதற்கான பதில் முழுக்க முழுக்க நேர்மறையானதே. உண்மை என்னவென்றால் இஸ்லாம் அமைதி நிறைந்த மார்க்கமாக இருப்பது அது என்றென்றைக்குமான நிரந்தர மார்க்கம் என்பதைக் காண்பிப்பதாக உள்ளது. அது வன்முறையிலான மார்க்கமாக இருக்குமேயானால் அது நிரந்தரமான மார்க்கமாக இருக்க முடியாது. நவீன காலத்தில் சமகால சிந்தனைகள் வன்முறைப் பாதையை முற்றாக நிராகரித்துள்ளன. இப்போது பொருட்படுத்தத் தக்கதும் ஏற்றுக் கொள்ளத்தக்கதும் வன்முறையற்ற சாத்வீகம் மற்றும் அமைதி என்பதை அடிப்படையாகக் கொண்ட போதனைகளே.*

*உதாரணமாக, நவீன சிந்தனை கம்யூனிசத்தை நிராகரித்து விட்டது. அதற்கான முக்கிய பெரும் காரணங்களில் ஒன்று கம்யூனிசம் வன்முறையின் மூலமே நிலைபெற்று இருக்க முடியும் என்பது. மேலும் எத்தகைய சூழ்நிலையிலும் நவீன மனங்கள் வன்முறையை ஏற்பதில்லை. நாஜிஸமும், ஃபாசிஸமும் கூட இதைப் போன்ற காரணங்களாலேயே நிராகரிக்கப்பட்டன. ஆகவே நவீன மனிதன் மதப்பூர்வமானதோ அது அல்லாத வேறு எவ்வகையிலோ தீவிரவாதத்தை ஏற்றுக் கொள்வதில்லை.*

ஏனென்றால், தீவிரவாதம் மனிதனை இறுதியாக வன்முறைக்கே இட்டுச் செல்லும்.

ஆனால், இஸ்லாம் இயற்கை மதமாகும். அது வன்முறை என்பதை தொடக்கத்தில் இருந்தே அனுமதிக்கப்படாதது என்பதைக் கொள்கையாகக் கொண்டிருக்கிறது. இஸ்லாம் அதன் முதல் நாளிலிருந்தே அமைதியை தூக்கி பிடித்துள்ளதே தவிர வன்முறையை அல்ல.

கடந்த காலங்களில் மனிதத்துவத்தை வளர்ப்பதில் இஸ்லாம் பெரும் பங்கை ஆற்றியுள்ளது. அதன் விளைவாக மனித வரலாறு வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் என்ற புதிய காலத்திற்குள் நுழைந்தது. மனித வரலாற்றை மீண்டும் ஒருமுறை முன்னேற்றத்தின் புதிய காலகட்டத்திற்குள் கொண்டு செல்லும்படி ஆக்கப்பூர்வமான பெரிய பங்கை இஸ்லாம் ஆற்ற வேண்டிய தருணம் இப்போது வந்து விட்டது.

அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி என்று அழைக்கப்படுபவை இயற்கையின் சில பெரிய ரகசியங்களைக் கண்டுபிடித்ததன் விளைவால் ஏற்பட்டவையாகும். ஆனால், இயற்கையும் அதன் மர்மங்களும் எப்போது நம்முடனேயே இருந்தபோதும் அதனைக் கண்டுபிடிக்க இத்தனை காலதாமதம் ஏற்பட்டது ஏன்? கடந்த சில நூறு ஆண்டுகளில் எட்டப்பட்டுள்ள அறிவியல் முன்னேற்றம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் ஏன் எட்டப்படவில்லை?

காரணம் என்னவென்றால் பண்டைய காலத்தில் மதமும் அறிவியலும் (இறை அறிவும் மனித அறிவும்) ஒன்றுடன் ஒன்று இணைந்தவையாக இருந்தன. மத ஒடுக்குமுறை என்பது அறிவியல் வளர்ச்சிக்கு தாண்ட முடியாத ஒரு பெரும் தடையாக ஆனது. மதத்தை கொண்ட மனிதர்களுக்கு அறிவியல் சிந்தனை என்பது வெறுக்கப்பட்ட ஒன்றாக இருந்தது.

இஸ்லாம் செய்தது என்னவென்றால் மதத்தை (பகுத்தறிவுள்ள நம்பிக்கைகளைக் கொண்டதாக மாற்றி) அறிவியல் ஆய்வு மற்றும் தேடல்களிலிருந்து பிரித்ததுதான். உதாரணத்திற்கு சூரியன் மற்றும் சந்திரனின் கிரகணங்கள் மனிதர்களின் முடிவுடன் இணைக்கப்பட்டிருந்தன. இறைத்தூதர் முஹம்மது (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக)

*மனிதர்களின் மீது கிரகணங்கள் செய்வதற்கு ஏதுமில்லை என்றும் அவை வானியல் நிகழ்வுகளே அல்லாது மனித குலத்தின் விதிகளுக்கான சம்பவங்கள் அல்ல என்றும் அறிவித்தார்.*

*(ஃபத்ஹுல் பாரி 02:611)*

*பேரீத்த மரங்களில் மகரந்த சேர்க்கை பற்றியதொரு சம்பவமும் இது தொடர்பாக இறைத்தூதரின் மொழிகளில் பதியப்பட்டுள்ளது. இஸ்லாம் மார்க்கத்தின் தூதர் உலகியல் காரியங்களைப் பற்றிக் கூறுகையில்,*

*"இந்த விஷயங்களை நீங்களே நன்றாக அறிவீர்கள் என்பதால், உங்களது அனுபவங்களின்படியே நீங்கள் செயல்படுங்கள்"*

*(சஹீஹ் முஸ்லிம் அந்நவவி 15/117) என்று குறிப்பிட்டுள்ளார்*

*இதன் பொருள், மதத்தையும் அறிவியலையும் பிரிப்பதாகும். இப்படியாக அறிவியல் ஆராய்ச்சி என்பது அது செயல்படுவதற்கான சுதந்திரமான ஒரு சூழ்நிலையை பெற்றுக் கொண்டது. மனித வரலாற்றில் முதல்முறையாக அறிவியல் (மனித அறிவு) மதத்தலையீடு இல்லாமல் சுதந்திரமாக வளரமுடியும் என்றானது. அது படிப்படியாக வளர்ந்து நவீன யுகத்திலுள்ள நிலைக்கு வந்துள்ளது.*

*ஆனால், இன்று, மீண்டும் மனிதன் பேராபத்தை எதிர்நோக்கியுள்ளான். அதாவது, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறைகளில் அசாதாரணமான வளர்ச்சியை மனிதன் அடைந்து விட்ட போதிலும் மனிதர்கள் கண்ணுக்கெட்டிய வரையில் தீர்வே தென்படாத பல்வேறுவிதமான பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள். இந்தப் பிரச்சினைகள் எல்லாம் சுதந்திரத்தின் எல்லை எது என்பதை அறியாததால் நேர்ந்தவையாகும்.*

*நவீனகால மனிதன் உயர்ந்த நன்மை என்பதாக சுதந்திரத்தை விரும்புகிறான். ஆனால், அந்தக் குறிக்கோளை அவன் அடைந்து விட்டாலோ சுதந்திரத்துக்கான நியாயமான எல்லைகளை அமைத்துக் கொள்ள முடியாதவனாகிறான். விளைவாக கட்டுப்பாடற்ற சுதந்திரம், அராஜகம், குழப்பம் மற்றும் சட்டதிட்டங்களுக்குட்படாத நிலைக்கு இறங்கி விடுகிறது.*

நவீன காலத்தில் மேற்கத்திய சமூகத்தில் தோன்றும் பல பிரச்சினைகளுக்கான உண்மையான காரணம் இதுவேயாகும். இப்போது மனிதனுக்கு அவனது சுதந்திரத்துக்கான எல்லைகளை நிர்ணயிக்கும் விரும்பத்தக்க சுதந்திரம் மற்றும் விரும்பத்தகாத சுதந்திரம் என்பனவற்றுக்கு இடையில் ஒரு கோட்டை உருவாக்கும் கொள்கை தேவைப்படுகிறது. அத்தகைய கொள்கையை அவனுக்கு அளிக்கக் கூடியதாக இஸ்லாம் மட்டுமே உள்ளது.

ஏற்றுக் கொள்வதற்குத் தயாராகக் காத்துக் கொண்டிருக்கும் மனிதனுக்கு இந்தக் கொள்கையை முன்வைக்க வேண்டிய நேரமாக இப்போதைய நேரம் உள்ளது. கம்யூனிசக் கொள்கை (1991)வீழ்ச்சியடைந்த பிறகு உலகம் கொள்கை வெற்றிடத்தை எதிர்கொண்டுள்ளது. இந்த வெற்றிடத்தைப் பூர்த்தி செய்ய இஸ்லாத்தால் மட்டுமே முடியும். நடப்புலகில் வளர்ச்சியடைந்த நாடுகள் என்பவை பொருளாதாரம் அல்லது ராணுவ வலிமை என்பதிலேயே தான் வல்லரசாக ஆகியுள்ளன. ஆனால், கொள்கைப்பூர்வமான வல்லரசு என்ற இடம் காலியாகவே உள்ளது. மேலும், அது எல்லாவிதமான சாத்தியக்கூறுகளுடன் இஸ்லாத்திற்கு உரியதாகவே உள்ளது.

இஸ்லாத்திற்கு சாதகமாக காத்துக் கொண்டிருக்கும் பெரும் சாத்தியக்கூற்றை உண்மையாக மாற்றுவதற்கு ஒரேயொரு தடை மட்டுமே உள்ளது. அது நவீன காலங்களில் முஸ்லிம் இயக்கங்கள் மீண்டும் மீண்டும் வன்முறையில் ஈடுபடுவதுதான். இத்தகைய செயல்பாடுகள் இஸ்லாத்தை “வன்முறை மார்க்கம்'' என்ற வேடத்தில் உலகின் முன் வைக்கிறது. இதன் காரணமாகவே நவீன காலத்து மனிதன் இஸ்லாத்திலிருந்து தூர விலகுகிறான். இஸ்லாத்தை அவன் கருத்தூன்றி படிக்கத் தவறுகிறான். இந்தத் தடையை நீக்கி, இஸ்லாத்தை வன்முறையற்ற சாத்வீக மார்க்கம் அல்லது அமைதியான சமூக அமைப்பு முறை என்று உலகின் முன் வைக்க முடிந்தால் மனித குலம் மீண்டும் அதனை ஏற்றுக் கொண்டு தனது இயல்பின் எதிரொலி என இஸ்லாத்தை உணரும்.

நவீன மனிதனுக்கு அமைதியின் அடிப்படையிலான புதிய மார்க்கம் அல்லது அமைப்பு தேவைப்படுகிறது. அது மூடநம்பிக்கைகள் அற்றதாக இருக்க வேண்டும். ஆழ்மன

கேள்விகளுக்கு அது விடைகளை அளிக்க வேண்டும். அதனுடைய கொள்கைகள் அறிவியல் உண்மைகளுடன் முரண்படக் கூடாது. அதற்கு வெற்றிகரமான வரலாறு ஆதரவாக இருக்க வேண்டும்.

இன்றைக்கு ஏற்றுக் கொள்ள நேர்மறையாக கோரக் கூடிய மார்க்கம் இஸ்லாம் மட்டுமாகவே உள்ளது. ஏனென்றால் மேலே கண்ட அத்தனை நிபந்தனைகளையும் பூர்த்தி செய்யக் கூடியதாக இஸ்லாம் மட்டுமே உள்ளது. இன்று தனிப்பட்ட முறையில் இஸ்லாத்தை அறிந்து கொண்ட ஆண்களும் பெண்களும் இஸ்லாத்தின் இந்த தனித்தன்மையான தகுதிகளை ஒப்புக் கொள்கிறார்கள். சிலர் கொள்கைகளை ஏற்றுக் கொள்கிறார்கள். சிலர் இன்னும் மேலே சென்று இஸ்லாத்தை நடைமுறைப்படுத்தும் வண்ணம் ஏற்றுக் கொள்கிறார்கள்.

### தாவா செயல்பாடு – இறை அழைப்புப்பணி அழைப்புச் செயல்பாடுகளின் ஊடான உண்மை ஜிஹாத்

இஸ்லாமிய செயல்பாட்டின் முறை வன்முறையற்ற சாத்வீகம் என்பதன் அடிப்படையிலானது. அதனுடைய இலக்கு என்ற வகையில் பார்த்தால் அது இறைஅழைப்புப்பணி என்பதன் அடிப்படையிலானது. உண்மையில் இறைஅழைப்புப்பணி என்பதன் இன்னொரு பெயர் இஸ்லாத்தைப் பரப்புவதற்காக அமைதியாகப் போராடுவது என்பதாகும். இஸ்லாமிய செயல்பாடு என்பதை இறைஅழைப்புப்பணி என்று அழைப்பது சரியாக இருக்கும்.

இறைஅழைப்புப்பணி என்பது எளிதானதல்ல. அது அதிமுக்கியமான காரணி என்ற தகுதியை உடையது. இது முழுமையாக செயல்படுமேயானால் மற்ற நோக்கங்கள் தாமாகவே நிறைவேறும். இது தொடர்பாக குர்ஆனிலிருந்து சில குறிப்புகள் இதோ.

1.

இறை அழைப்புப்பணியின் மூலமாக இறை நம்பிக்கையாளர்கள் அவர்களுடைய எதிர்ப்பாளர்களின் இடையூறுகளுக்கு தொல்லைகளுக்கு எதிரான இறைவனின் பாதுகாப்பைப் பெறுவார்கள்.

*“(நம்முடைய) தூதரே உங்கள் இறைவனிடம் இருந்து உங்களுக்கு அருளப்பட்டதை (யாதொரு குறைவுமின்றி அவர்களுக்கு) அறிவித்து விடுங்கள் நீங்கள் அவ்வாறு செய்யாவிடில் அவனுடைய தூதை நீங்கள் நிறைவேற்றியவராக மாட்டீர்கள் (இதில் எவருக்கும் அஞ்சாதீர்கள்) மனிதர்(களின் தீங்கு)களில் இருந்து அல்லாஹ் உங்களை காப்பாற்றிக் கொள்வான் நிச்சயமாக அல்லாஹ் நிராகரிக்கும் மக்களை நேரான வழியில் செலுத்த மாட்டான்.” (05:46)*

**2.**

*“இறைஅழைப்புப்பணி மூலமாக கடுமையான விரோதி கூட நெருங்கிய நண்பரைப் போல் ஆகி விடுவார்.” (41:34)*

*“நன்மையும் தீமையும் சமமாகி விடாது (ஆதலால் நபியே தீமையை) நீங்கள் மிக அழகியதைக் கொண்டு தடுத்து கொள்ளுங்கள் அவ்வாறாயின் உங்களுடைய கொடிய எதிரியை அதே சமயத்தில் உங்களுடைய உண்மையான மிக்க நெருங்கிய நண்பனைப் போல் காண்பீர்கள்.” (41:34)*

**3.**

*இஸ்லாத்தின் கொள்கை உயர்வை, உன்னதத்தை இறை அழைப்புப் பணி நிரூபிக்கிறது.*

*“அத்தகைய தன்மையுள்ள அல்லாஹ்தான் உங்களது உண்மையான இறைவன் (இந்த) உண்மைக்குப் பின்னர் (நீங்கள்) அவனுக்கு அடிபணியாது இருப்பது) வழிக்கேட்டைத் தவிர வேறில்லை (இவ்வுண்மையை விட்டு நீங்கள் எங்கு திருப்பப்படுகிறீர்கள் (என்றும் நபியே நீங்கள் கேளுங்கள்).” (10:32)*

**4.**

*இறைஅழைப்புப்பணி மூலமாக சமுதாயத்திற்குள் ஒரு நேர்மறையான மனோபாவம் உருவாகிறது. இது “நம்பிக்கையான நேர்மையான உபதேசம்” என்று குர்ஆனில் கூறப்பட்டுள்ளது.*

*“(அன்றி) என் இறைவனின் தூதையே நான் உங்களுக்கு எடுத்துரைக்கின்றேன் அன்றி நிச்சயமாக நான் உங்களுக்கு நம்பிக்கைக்குரிய உபதேசியாகவும் இருக்கின்றேன்.” (07:68)*

**5.**

*இறைஅழைப்புப்பணி மனிதர்களால் செய்யப்படுகிறது, ஆனால் அதற்கான உதவிகள் இறைவனால் அளிக்கப்படுகின்றன. இது விவசாயியால் விதைக்கப்படுவதும் அதற்கான மழைநீரை இறைவன் அளிப்பது போலுமாகும். நவீன காலங்களில் மனிதனுக்கு சாதகமான அனைத்தும் அளிக்கப்படுள்ளன. இப்போது இறைநம்பிக்கையாளர்களின் கடமை என்னவென்றால் தங்களது ஒட்டுமொத்த சக்தியையும் இறைஅழைப்புப் பணியிலேயே செலவிட வேண்டும். இந்த செயலிலிருந்து அனைத்து சிறந்த விளைவுகளும் தொடர்ந்து நிகழும்.*

*இறைத்தூதர் முஹம்மது (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) அவர்களும் அவருடன் ஏறத்தாழ இருநூறு தோழர்களும் மக்காவில் வாழ்வது இயலாது என்றச் சூழல் தலைவர்களால் உருவாக்கப்பட்ட பொழுது, மக்கா நகரை விட்டு வெளியேறினார்கள். அந்த நகரவாசிகள் அவரை கொல்லக்கூட தீர்மானித்தார்கள். ஆனால், மதினாவை அடைந்தபின் இறைத்தூதரின் முதல் பேச்சில் எந்த மனக்கசப்பும் இல்லை; குறைஷியர்களுக்கு எதிரான வன்முறையோ அல்லது பழிவாங்கும்படியானதோ இல்லை.*

*அங்கு அவர்கள் அடைந்தவுடன் மதீனா மற்றும் மதீனாவைச் சுற்றி இருந்த கோத்திரத்தார்களுடன் அமைதி உடன்படிக்கை செய்து கொள்வதற்கே முன்னுரிமை அளிக்கப்பட்டது. உதாரணத்திற்கு பனு குஸைஸ் போன்ற கோத்திரத்தாருடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையைக் கூறலாம். அந்த உடன்படிக்கையின்படி அவர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக சண்டையிடக் கூடாது. அதேபோல் முஸ்லிம்களும் அவர்களுக்கு எதிராக சண்டையிடக் கூடாது. இத்தகைய உடன்பாடுகளை அரேபியாவில் இருந்த பெரும்பாலான கோத்திரத்தார் உடன்பாடு செய்து கொண்டனர்.*

*ஆனால் அடக்கியொடுக்கும் செயல்களை குறைஷியர்கள் நிறுத்திக் கொள்ளவில்லை. அவர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக குறிப்பிட்ட ராணுவத்தாக்குதல்களில் கூட ஈடுபட்டனர். இறுதியாக ஹிஜ்ரி ஆறாம் ஆண்டில் குறைஷியர்கள் விதித்த*

அத்தனை நிபந்தனைகளையும் இறைத்தூதர் ஏற்றுக் கொண்டு “ஹுதைபிய்யா'' என்ற இடத்தில் அமைதி உடன்படிக்கை செய்து கொண்டார்கள்.

**அமைதியும் நீதியும்**

முஸ்லிம்களுக்கான ஒரு பெரிய பிரச்சினை என்னவென்றால் அமைதிஎன்பதுநீதியைநிச்சயமாகஉறுதிப்படுத்தித்தருவதில்லை என்பதுதான். இதுதான் முஸ்லிம்களை வன்முறையை நாடச் செய்து, இறைஅழைப்புப்பணி புரிவதற்கான வாய்ப்புகளை ஒதுக்கித் தள்ளச் செய்கிறது. நவீன காலத்தில் முஸ்லிம்கள் அவர்களுக்கு நீதியைத் தரும் அமைதியை விரும்புகின்றனர். ஆனால் இயற்கை நியதிப்படி இந்த வகையான அமைதியை எப்போதும் அடைய முடியாது. அதனால்தான் உலகம் முழுவதிலும் உள்ள முஸ்லிம்கள் மனரீதியாகவும் உடல் ரீதியாகவும் நிம்மதி இல்லாமல் இருக்கின்றனர். மனதில் துயரம் அடைவதால் அவர்கள் தங்களது சிந்தனைகளிலும் செயல்களிலும் வன்முறையாளர்களாக மாறி விடுகிறார்கள்.

உண்மை என்னவென்றால், அமைதி என்பது தானாகவே நீதியை உருவாக்கி விடுவதில்லை. அமைதி என்பது நீதியை அடைவதற்கான வாய்ப்புகளை திறக்கிறது என்பதே உண்மை. ஹுதைபிய்யா உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட போது, இறைத்தூதர் முஹம்மது (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) நீதியைப் பெறவில்லை.

இறைத்தூதர் இந்த அமைதியை நீதியைப் பெறுவதற்காக செய்து கொள்ளவில்லை. மாறாக வாய்ப்புகளைப் பெறுவதற்காகவே செய்து கொண்டார். இறைத்தூதர் இந்த வாய்ப்புகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டார். ஆகவே வெறும் ஐந்து ஆண்டுகளுக்குள்ளாகவே இறைத்தூதர் நீதியை மட்டும் உறுதிப்படுத்திக் கொள்ளவில்லை. இஸ்லாத்தை மிகவும் உறுதியாக காலூன்றும்படி செய்தார்.

நடப்புக்கால முஸ்லிம்கள் இந்த ரகசியத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். அப்போது மட்டுமே முதலில் அமைதியைக் கண்டடைவதும் அவர்களது இறுதி இலக்கான நீதியைப் பெறுவதும் அவர்களுக்கு சாத்தியப்படும்.

*1997ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் 36 வயது நிரம்பிய ஐரோப்பியரான லியோன் ஸிப்போ ஹேயஸ் என்பவரை நான் சந்தித்தேன். அவர் நியுஸிலாந்து நாட்டின் கிறிஸ்ட் சர்ச் என்ற நகரில் பிறந்தவர். இஸ்லாத்தைக் கற்றுணர்ந்த பிறகு அவர் இஸ்லாமிய மார்க்கத்தை ஏற்றுக் கொண்டிருந்தார். அவருடைய இஸ்லாமிய பெயர் கலீலுர் ரஹ்மான். முஸ்லிம் நாடுகளின் வழியாக தரை மார்க்கமாக அவர் ஹஜ் புனிதப் பயணத்தை செய்யப் போகிறார்.*

*என்னுடன் பேசிக் கொண்டிருந்த போது அவர் நவீன காலத்தில் முஸ்லிம்கள் பல இடங்களில் இரத்தம் வெள்ளமென ஓடும் போர்களில் ஈடுபடுகிறார்கள், சில இடங்களில் மற்றவர்களுடனும் வேறு சில இடங்களில் அவர்களுக்குள்ளேயும் என்றார். இது அவரை (மற்றவர்களைப் போலவே) இஸ்லாம் என்பது வன்முறை மார்க்கம் என்று முடிவு செய்யும்படி செய்து விட்டது. பின்னாட்களில் அவர் குர்ஆனை அதன் மொழிப்பெயர்ப்புகளின் உதவி கொண்டு கற்றிருக்கிறார். குர்ஆனின் வசனமான,*

*(இதன் காரணமாகவே) "எவனொருவன் மற்றொரு ஆத்மாவை கொலைக்குப் பதிலாகவோ அல்லது பூமியில் குழப்பத்தைத் தடை செய்வதற்காகவோ அன்றி (அநியாயமாக) கொலை செய்கின்றானோ அவன் மனிதர்கள் அனைவரையுமே கொலை செய்தவன் போலாவான். அன்றி, எவன் ஒரு ஆத்மாவை வாழ வைக்கின்றானோ அவன் மனிதர்கள் அனைவரையும் வாழ வைத்தவன் போலாவான்." (05:32)*

*என்பதை வாசித்ததும் அவர் தான் மிகவும் மனம் நெகிழ்ந்து விட்டதாகவும் அது குர்ஆனில்தான் இருக்கிறதா என்பதை நம்ப முடியவில்லை என்பது போலவும் ஆகி விட்டதாகவும் கூறினார்.*

*இந்தச் சம்பவம் முஸ்லிம் அல்லாதவர்கள் இஸ்லாத்தைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கான மாபெரும் சான்றாக விளங்குகிறது. இன்றைய முஸ்லிம்களின் செயல்பாடுகளைப் பார்க்கும்பொழுது, இஸ்லாம் அமைதி மார்க்கம் என்பதை நம்புவது மக்களுக்கு கடினமானதாக இருக்கிறது. ஆனால், முஸ்லிம்கள் வன்முறைச் செயல்களைக் கைவிட்டால், இஸ்லாத்தை அதன் அசலான வடிவில் மக்கள்*

அறிந்து கொள்ளும் வாய்ப்புகளை ஏற்படுத்தி விட்டால் இஸ்லாம் அமைதி மார்க்கம் என்பதை இதற்கு முன் ஒரு போதும் எண்ணியதில்லை என்று ஏராளமானவர்கள் உணர்வார்கள். அப்படி உணர்ந்தவர்கள் இத்தனை காலமாக தங்கள் ஆன்மா தேடிக் கொண்டிருந்த சரியான மார்க்கம் இஸ்லாம் தான் என்று அதனிடம் விரைந்து வருவார்கள்.

### முஸ்லிம்களின் நிலைமாற்ற இடப்பெயர்ச்சி

நவீன காலத்தின் பொது நீரோட்டத்தோடு முஸ்லிம்களால் சேர்ந்து கொள்ள முடியாமல் இருக்கிறது என்பது மறக்க முடியாத உண்மையாக உள்ளது. எல்லா இடங்களிலும் அனைத்து துறைகளிலும் மூலைக்கு விரட்டப்பட்டது போல அவர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். உலகம் முழுவதும் முஸ்லிம்கள் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பது சந்தேகத்திற்கு இடமில்லாமல் மிகவும் தீவிரமான இக்கட்டான பிரச்சினைதான்.

என்னைப் பொறுத்தவரையில் இதற்கான மிகப் பெரிய காரணம் முஸ்லிம்களின் வன்முறை மனோபாவம் தான். முஸ்லிம்கள் அவர்களின் சிந்தனைக்கு எதிரான எந்த ஒன்றுக்காகவும் மிக எளிதாக வன்முறையில் ஈடுபடும்படி இன்று தூண்டப்படுகிறார்கள். வன்முறைச் செயல்களில் எல்லா முஸ்லிம்களும் ஈடுபடுவதில்லை என்பது உண்மையே. ஆனால் எல்லா முஸ்லிம்களும் வன்முறையாளர்கள் என்றே எண்ணப்படுகிறார்கள். இது ஏனென்றால் வன்முறையில் ஈடுபடாத பெரும்பான்மை முஸ்லிம்கள் வன்முறையில் ஈடுபடுபவர்களை வெளியேற்றுவதும் இல்லை; அவர்களுக்கு எதிராக கண்டனக் குரலைக் கூட எழுப்புவதில்லை என்பது உண்மையாக இருப்பதால்தான். நிலைமை இதுவென்றால், இஸ்லாமிய ஷரியத் சட்டப்படி வன்முறையில் ஈடுபட்டவர்கள் எப்படி அதற்கு நேரடியாக பொறுப்பாளிகளோ அதேபோல் வன்முறையில் ஈடுபடாத முஸ்லிம்களும் மறைமுகமாக பொறுப்பாளிகளே.

இன்று முஸ்லிம்களின் வன்முறை அணுகுமுறைக்கு உண்மையிலேயே முஸ்லிம் மதத் தலைவர்களும்,

மதச்சார்பற்ற தலைவர்களுமே பொறுப்பு. நவீன காலத்தில் முஸ்லிம்கள் தோல்வியை அடைய நேர்ந்தால் கிட்டத்தட்ட அனைத்து முஸ்லிம் தலைவர்களும், மதச்சார்பற்றவர்களும் அதேபோல் அறிவுஜீவிகளும் ஒரே அணியாக நின்று "கித்தால்" என்ற பொருளிலில் "ஜிஹாத்" உணர்ச்சியை தட்டி எழுப்பி விடுகிறார்கள். ஒட்டுமொத்த முஸ்லிம் உலகமும் "ஜிஹாதே" எங்கள் பாதை என்றும் எங்களது பிரச்சினைகள் அனைத்திற்கும் "ஜிஹாத்" மட்டுமே தீர்வு என்ற கோஷத்தை எதிரொலிக்கிறார்கள்.

முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு பெரும் எண்ணிக்கையிலான பெரிய மற்றும் சிறிய இயக்கங்கள் வன்முறையில் ஈடுபடுவதை ஒட்டுமொத்த உலகமும் கண்டது. நீங்கள் பாலஸ்தீனத்திற்குச் சென்றால் மூத்தவர்களால் சொல்லிக் கொடுக்கப்பட்டது என்பதில் எந்த சந்தேகமும் இல்லாத பின்வரும் பாடல்வரியை இளைஞர்கள் பாடிக் கொண்டிருப்பதைக் கேட்கலாம்.

"நாம் போரிடுவோம், நாம் போரிடுவோம்
வெற்றிக்கான பாதையாக போர் இருப்பதால்"

உலகம் முழுவதும் முஸ்லிம்களிடம் வன்முறை மனோபாவம் இருப்பதற்கான ஒட்டுமொத்த காரணம் நவீன காலங்களில் நமது அறிவுஜீவிகள், இயக்கங்களின் தலைவர்கள் ஆகியோரது வன்முறை அணுகுமுறையே ஆகும். உருவாக்கப்பட்டுள்ள இத்தகைய மனோபாவத்தால் ஏதாவது ஒரு எழுத்தாளர், இஸ்லாத்திற்கு எதிராக ஒரு புத்தகத்தை எழுதி விட்டால் அந்த எழுத்தாளரைக் கொல்வதற்கு முஸ்லிம்கள் தயாராகி விடுகின்றனர். முஸ்லிம்களுக்கு எதிரான கோஷங்களுடன் ஓர் ஊர்வலம் சென்றாலோ, உமர் ஃபாரூக் கூறியதைப் போல அத்தகைய சூழ்நிலையில் மௌனமாக இருப்பதன் மூலம் அந்தத் தீமையை அழிப்பதே சிறந்த வழி என்று கூறியதற்கு மாறாக ஊர்வலத்தினர் மீது முஸ்லிம்கள் கல்லெறிகிறார்கள். எந்த நாட்டுடனும் பிராந்தியப் பிரச்சினைகளோ, பொருளாதாரப் பிரச்சினைகளோ ஏற்பட்டால் அதனைத் தீர்க்க அமைதி வழியை நாடாமல் ஆயுதங்களைத் தூக்குகிறார்கள்.

எங்கெங்கிலும் முஸ்லிம்கள் தங்கள் அண்டைப் பகுதியில் வாழ்பவர்களிடம் இருந்து அந்நியப்படுத்தப்படுவதற்கு

முஸ்லிம்களின் வன்முறை மனோபாவமே பொறுப்பாகும். சர்வதேச சகோதரத்துவம் என்பதை இனிமேலும் வளர்த்தெடுக்க முடியாது என்பதை முஸ்லிம்களின் இந்த நடத்தை தெளிவாகக் காட்டுகிறது. ஒவ்வொரு இடத்திலும் அவர்கள் வெறுப்புடனும் பயத்துடனும் பார்க்கப்படுகிறார்கள். 'நாய்கள் ஜாக்கிரதை' என்று எழுதப்படுவதற்கு மாறாக' 'முஸ்லிம்கள் ஜாக்கிரதை' என்று சுவர்களில் எழுதப்பட்டுள்ளதைக் கூட ஒருவர் பார்க்க முடியும். சுவற்றில் அப்படி எழுதப்படவில்லை என்றால் நிச்சயமாக மக்களின் மனதிலும் இதயத்திலும் எழுதப்பட்டிருக்கும். இந்தப் பிரித்து வைக்கும் நிலை நவீன காலத்தில் முஸ்லிம்களை பிந்தங்கியவர்களாக ஆக்கி வைத்திருக்கிறது. அமெரிக்கா போன்ற முன்னேறிய நாடுகளில் கூட குடியேறியுள்ள மற்ற குழுக்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் பிந்தங்கிய சமூகமாகவே முஸ்லிம் சமூகம் உள்ளது.

முஸ்லிம்களின் இந்த சோகமான நிலையை நிவர்த்தி செய்ய, முஸ்லிம்களிடம் உள்ள இஸ்லாத்தைப் பற்றிய வன்முறையான புரிதல் என்பது சரியல்ல, உண்மையல்ல என்பதைப் புரிய உதவி செய்து அவர்களை வன்முறையற்ற சாத்வீகமான இஸ்லாத்திற்கு மீட்டுக் கொண்டு வருவதே ஒரே வழியாகும்.

முஸ்லிம்களை இஸ்லாத்தின் வன்முறையற்ற சாத்வீகமான பாதைக்குக் கொண்டு வந்தவுடன், அவர்களால் மற்ற சமுதாயத்தினருடன் சமமான பங்காளிகளாக முடியும். அவர்கள் சர்வதேச மைய நீரோட்டத்தில் கலப்பார்கள். அதன் தொடர்ச்சியாக அனைத்து செயல்பாடுகளிலும் அனைத்து நிறுவனங்களிலும் அவர்கள் பங்கு பெற முடியும். அவர்களைப் பார்த்து மக்கள் பயப்படுவதற்கு பதிலாக ஒவ்வொரு தளத்திலும் மக்கள் அவர்களை வரவேற்பார்கள். சர்வதேச சகோதரத்துவத்தின் பாகமாக அவர்கள் ஆவார்கள். அவர்களது பிரச்சினைகள் நியாயமான முறையில் பார்க்கப்படும், பரீசிலிக்கப்படும். அவர்களுடைய சம பாங்காளித்துவம் என்பது சமூகம் தொடங்கி கல்வி வரையிலான அனைத்து துறைகளிலும் நிச்சயமான ஒன்றாக இருக்கும்.

அமைதியான வகையில் கலந்து செயல்படுவது முஸ்லிம்களும் முஸ்லிம் அல்லாதவர்களும் பெருமளவில் கலந்து செயல்படும்போது அதன் விளைவாக இஸ்லாத்தைப்

*பற்றி முறைப்படியான மற்றும் சாதாரண வகையிலான கலந்துரையாடல்கள் தொடங்கும். நவீன காலத்தில் முஸ்லிம்களின் வன்முறை மற்றும் தீவிரவாத மனோபாவத்தால் இஸ்லாத்திற்கும் இஸ்லாம் அல்லாத பிற மார்க்கங்களுக்கும் இடையிலான கருத்தூன்றிய கலந்துரையாடல் என்பது கிட்டத்தட்ட ஒரு முடிவுக்கே வந்து விட்டது.*

*இப்போது முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் இடையில் அமைதியான கலந்து செயல்படுவது சாதாரண சூழ்நிலையில் நடக்கும்பொழுது, கருத்தூன்றிய கலந்துரையாடல் தானாகவே நிகழும். இஸ்லாத்திற்கும் இஸ்லாம் அல்லாத மார்க்கங்களுக்கும் இடையில் தொடங்கும் கருத்தூன்றிய கலந்துரையாடலின் தொடக்கம் சந்தேகமில்லாமல் இறை அழைப்புப் பணி என்ற கண்ணோட்டத்தில் மாபெரும் வெற்றியாகும்.*

*இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் செய்து கொள்ளப்பட்ட ஹுதைபிய்யா உடன்படிக்கையை 'தெளிவான வெற்றி' என்று குர்ஆன் விவரிக்கிறது.*

*"(நபியே) ஹுதைபியாவின் சமாதான உடன்படிக்கையின் மூலம் நிச்சயமாக நாம் உங்களுக்கு (மிகப் பெரிய) தெளிவானதொரு வெற்றியை தந்தோம்." (48:01)*

*ஓரிறைக் கொள்கைக்காரர்களுக்கும் இறைவனுக்கு இணை வைப்போருக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் விளைவான அமைதிச் சூழ்நிலையில் மார்க்க ரீதியாக இரு சாராருக்கும் இடையில் கலந்துரையாடல் நிகழ வாய்ப்பு அமைவதையே 'தெளிவான வெற்றி' என்பது குறிக்கிறது.*

*நவீன காலத்தில் முஸ்லிம்கள் வன்முறைப் பாதையைக் கைவிட்டு வன்முறையற்ற சாத்வீகப் பாதையை முழுமையாகத் தேர்ந்தெடுத்தால் ஹுதைபிய்யாவில் இறைத்தூதர் செய்ததைப் புதுப்பித்துக் கொள்ளும் நபிவழிச் செயலாக (சுன்னத்) அது அமையும். இஸ்லாத்தின் முதற் காலகட்டத்தில் நிகழ்ந்த ஹுதைபிய்யா சம்பவத்திற்குப் பிறகு இஸ்லாமும் முஸ்லிம்களும் அடைந்த பலன்களையும் அனுகூலங்களையும் முஸ்லிம்கள் பெறத் தொடங்குவார்கள்.*

# 4

# இஸ்லாமிய அடிப்படைவாதம்

இஸ்லாமிய அடிப்படைவாதம் என்பது சமீபகாலமாகக் கேள்விப்படும் ஒரு கருத்தாகும். அதனை நாம் ஆராயும் பொழுது அந்த இஸ்லாமிய அடிப்படைவாதம் என்ற சொல் இஸ்லாமிய புனித நூல்களில் காணப்படாததாகவும் இஸ்லாமிய அடிப்படைவாதிகள் என்று எந்த முஸ்லிம் குழுவும் கூறிக் கொண்டதாகவும் இல்லை. அது அமெரிக்கர்கள் அமெரிக்கர் அல்லாதவரை 'அங்கிள் சாம்' என்று ஏளனமாக அழைப்பதைக் போன்ற சொல்லாகும். அமெரிக்கர்கள் அந்த சொல்லுடன் தங்களை அடையாளப்படுத்திக் கொள்வதில்லை.

இந்தச் சொல் முஸ்லிமல்லாதவர்களால் முஸ்லிம் களுக்கு அளிக்கப்பட்டதாக இருந்தபோதும் இஸ்லாமிய அடிப்படைவாதம் என்று கூறப்படும் தத்துவம் உண்மையானதாகவே இருக்கிறது.இன்றைய உலகில் கணிசமான முஸ்லிம்களின் சிந்தனையும் செயல்களும் அடிப்படைவாதம் என்ற பொருளில் சேர்ந்ததாகவே இருக்கிறது.

அதனாலேயே ஒரு பெயரிலோ அல்லது வேறொரு பெயரிலோ உலகம் முழுக்க வேகமாகச் செயல்படும் இயக்கங்களினால் உருவான இவை பற்றியும் இந்த சிந்தனை குறித்து அதன் கொள்கை மற்றும் செயல்பாடுகளை விரிவாக ஆய்வு செய்து மதிப்பிட வேண்டியது கட்டாயத் தேவையாக இருக்கிறது.

முதலில் அடிப்படைவாதம் என்பதன் பொதுவான பொருள் என்னவென்று பார்ப்போம். அடிப்படைவாதிகளைப் போல்

*தீவிரவாதச்செயல்களில் ஈடுபடுவோர் தங்களைத்தீவிரவாதிகள் என்று அழைப்பதை விரும்புவில்லை என்றபோதிலும், இதனை 'இஸ்லாமிய அடிப்படைவாதம்; என்று அழைப்பதையே தனிப்பட்ட முறையில் நான் விரும்புவேன்.*

*இருந்தபோதும், இஸ்லாமியத் தீவிரவாதம் என்பதைக் குறித்து குர்ஆன் என்ன கூறுகிறது என்பது முக்கியமானதாகும். அது கூறுகிறது :*

*இவை அல்லாஹ்வின் வரம்புகளாகும். எவர்கள் (இவ்விஷயங்களில்) அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படிந்து நடக்கின்றார்களோ அவர்களை அல்லாஹ் சுவனபதிகளில் சேர்க்கின்றான். அதில் நீரருவிகள் தொடர்ந்து ஓடிக் கொண்டு இருக்கும். அதிலேயே அவர்கள் (என்றென்றும்) தங்கி விடுவார்கள். இதுதான் மகத்தான பெரும் வெற்றியாகும்.*

*எவன் (இவ்விஷயங்களில்) அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் மாறு செய்து அவன் ஏற்படுத்திய வரம்புகளைக் கடக்கின்றானோ அவனை நரகத்தில் புகுத்தி விடுவான். அதிலேயே அவன் (என்றென்றும்) தங்கி விடுவான். இழிவுபடுத்தும் வேதனையும் அவனுக்கு உண்டு." (04:13—14)*

*இஸ்லாமிய அடிப்படைவாதம் என்று இன்று அழைக்கப்படுகின்ற ஒன்று தான், திருக்குர்ஆன் சுட்டிக்காட்டும் வரம்பு மீறுதல் என்பதை விளங்கி கொள்ள வேண்டும்.*

*"உங்கள் மார்க்கத்தில் வரம்பு மீறாதீர்கள்" திருக்குர்ஆன் தந்துள்ள நவீனமான வரம்புமீறல்களில் ஒன்று 'இஸ்லாமிய அடிப்படைவாதம்' என்று இப்போது அழைக்கப்படுகிறது.*

*"ஆம், நாங்கள் அடிப்படைவாதிகள் தான். அடிப்படைவாதிகளாயிருப்பதில் என்ன தவறு இருக்கிறது?" என்று சில முஸ்லிம்கள் கேட்கின்றனர். அவர்கள் இஸ்லாத்தின் அடிப்படை போதனைகளையே 'அடிப்படைவாதம்' என்று எடுத்துக் கொள்கின்றனர். அதாவது இது இஸ்லாமிய அடிப்படை போதனைகளை பின்பற்றக் கோருவதை செயல்படுத்துவதாகும். எனவே எவரும் இதற்கு ஏன் மறுப்புத் தெரிவிக்க வேண்டும்.*

இங்குதான் தவறிருக்கிறது. அதாவது அடிப்படைவாதம் என்பதை அதே பொருளில் ஒருவர் எடுத்துக் கொண்டால் இஸ்லாமிய புனித நூல்களில் காணப்படும் அடிப்படையான போதனைகளாகவே அது இருக்கும். ஒரு தனி நபர் தான் புரிந்து கொண்டபடியான போதனைகளே அடிப்படையான போதனைகள் அல்லது இஸ்லாத்தின் அடிப்படை என்று கூறிக் கொண்டு அவைகளை அடைய வன்முறை இயக்கத்தை நடத்துவது இதற்குப் பொருளாக இருக்க முடியாது. துரதிர்ஷ்டவசமாக இந்த அடிப்படைவாதிகள் இதைத்தான் செய்கிறார்கள்.

இஸ்லாத்தின் அடிப்படை போதனைகள்தான் என்ன? இஸ்லாத்தில் முதன்மையானது ஓரிறைக் கொள்கையே. கீழைத் தேசிய சிந்தனையாளர் ஒருவரின் கூற்றுப்படி, "இஸ்லாத்தின் முக்கியக் குவிமையம் இறைவனாகும்" அதாவது ஓரிறைவன் உண்டென நம்பி ஒருவரின் அன்பு மற்றும் அச்சத்தை அவன் மீதே வைப்பது. மேலும் அவனையே வணங்குவது மற்ற மனிதர்களுடன் நீதமாக நடந்து கொள்வது, தீமைக்குப் பகரமாக நன்மையை செய்வது, இப்படி பல.

இஸ்லாம் மார்க்கத்தில் நபிமொழியின்படி எண்ணங்களாலேயே செயல்கள் தீர்மானிக்கப்படுகின்றன. அதனால்தான் மனிதர்கள் அதிகமதிகமான அளவில் தூய்மைப்படுத்தப்பட வேண்டும் என்பதற்கு இஸ்லாம் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது. நபிகள் நாயகத்தின் (அவர் மீது சாந்தியும சமாதானமும் உண்டாவதாக) ஒரு நபிமொழி இப்படி இருக்கிறது :

'கவனியுங்கள், மனித உடலில் தசைகளாலான ஒரு பகுதி உள்ளது, அது சுத்தம் செய்யப்பட்டால் நன்முறையில் இருக்கும். எனவே ஒட்டுமொத்த உடலும் நன்றாக இருக்கும். அப்பகுதி கெடுமேயானால் மொத்த உடலும் கெட்டுவிடும். கவனியுங்கள், அந்த தசைத் துண்டு இதயமாகும்' (புகாரி, முஸ்லிம்)

உடலின் இந்த அடையாளம் மூலம், இஸ்லாமிய சீர்திருத்தத்தின் உதாரணம் விளக்கப்பட்டுள்ளது. மனித இதயத்தின் சீர்திருத்தம் மூலம் ஒட்டுமொத்த சீர்திருத்தம் செய்யப்படுகிறது. அது போலவே ஒரு மனிதனின் சிந்தனையும் எண்ணங்களும் மனிதனின் முழு இருத்தலில் நல்லதாகத் தூய்மையானதாக

*இருக்குமேயானால் அவர் இஸ்லாமிய அளவுகோலின் விருப்பமான நற்குணங்களுடன் இருப்பார்.*

**அடிப்படைவாதம் என்றால் என்ன?**

*அடிப்படைவாதம் என்பது ஒரு நம்பிக்கையின் அடிப்படைக் கொள்கைகளை கண்டிப்பாக பின்பற்றுவதை வலியுறுத்திக் கூறுவதாகும். இந்த வார்த்தை பத்தொன்பதாம் நூற்றாண்டில் அமெரிக்காவில் இருந்த குறிப்பிட்ட ஒரு கிறிஸ்துவ கொள்கைக்காரரர்களைக் குறிக்க முதலில் பயன்படுத்தப்பட்டது. அவர்கள் 1909 — 1915 இடையில் 'அடிப்படைகள் : உண்மையின் சாட்சியங்கள்' என்ற தலைப்பில் சிறு வெளியீடுகளை பதிப்பித்தனர். இந்த வெளியீடுகளில் கிறிஸ்தவ மதத்தின் அடிப்படையான அசலான முழுமையான கொள்கைகள் என்று அவர்கள் நம்பியவற்றை அச்சிட்டிருந்தனர். இந்த கொள்கைகளின் கரு பைபிளின் ஒவ்வொரு வார்த்தையின் மொழியிலான கர்ஜனையாக இருந்தது. 1920களில் இதன் மீதான விவாதங்களில் இதனை ஆதரித்தவர்கள் அடிப்படைவாதிகள் என்றழைக்கப்பட்டனர்.*

*20ஆம் நூற்றாண்டின் கடைசி கால் பகுதியில் இஸ்லாமிய மறுமலர்ச்சி 'அடிப்படைவாதம்' என்ற சொல் கொண்டு அழைக்கப்படலாயிற்று. இருந்தாலும் கிறிஸ்தவர்களுக்குப் பயன்படுத்தப்பட்ட அதே தொனியில் இந்த வார்த்தை முஸ்லிம்களுக்குப் பயன்படுத்தப்படவில்லை. இதனைக் குறித்து அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தன. இருந்தபோதும், அவ்விஷயத்திற்குள் விரிவாகப் போகாமல் நான் கூற விரும்புவது, இஸ்லாமிய அடிப்படைவாதம் என்ற சொல் இரண்டு வகையான இயக்கங்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. ஒன்று மார்க்கத்தின் அதி அசலான அடிப்படைகளுக்குத் திரும்பக் கோருவதாகும். உதாரணமாக, 14ஆம் நூற்றாண்டில் இப்னு தைமியாவால் கூறப்பட்ட கருத்துக்களை எடுத்துக் கொள்ளுதல். மற்றொன்று அரசியல் புரட்சியை ஏற்படுத்த எழுச்சி பெற்ற முஸ்லிம் சகோதரத்துவ (இக்வானுல் முஸ்லிமுன்) அமைப்பாகும். முதலாவதாக கூறப்பட்டது. ஸலஃபி மற்றும் வஹ்ஹாபிய இயக்கங்களை வழிநடத்த முன்தள்ளும் சக்தியாகவும், அவற்றின் குறிக்கோளுமாக இன்றும் இருக்கிறது.*

மார்க்க விஷயங்களில் இடைச் செருகலாகவும், புதிதாக சேர்க்கப்பட்டவைகளுமாக இருந்தவற்றிற்கு ஒரு முற்றுப்புள்ளியை வைத்து நபிவழிமுறை மற்றும் இஸ்லாமிய ஷரியத்தின் அசலான வடிவத்தை அவை இருந்த இடத்தில் வைப்பதான இப்னு தைமிய்யாவின் செயல்பாடே முதலாவதாக கூறப்பட்ட அடிப்படைவாதத்தின் குறிக்கோளாகும்.

இரண்டாவதாகக் கூறப்பட்டவர்களின் குறிக்கோள் இஸ்லாமியம் அல்லாத அரசியல் அமைப்பை இஸ்லாமியமான அரசியல் அமைப்பை ஏற்படுத்தி மாற்றுவதாகும். இரண்டு அடிப்படைவாதமுமே ஒன்றுக்கொன்று முற்றும் முரணானவையாகும். இவற்றின் போராட்டம் மார்க்கத்தில் புதினமானவை சேர்க்கப்பட்டதற்கு எதிரானதாக நம்பிக்கை மற்றும் வணக்க வழிபாடு என்ற வகையில் ஒரு எல்லைக்கு உட்பட்டதானது.

இவ்வகையான இயக்கங்களுடன் வன்முறை இணைவது தேவையற்றதாக இருந்தது. இன்னும் சொல்லப்போனால் இவற்றின் நோக்கமும் அக்கறையும் முஸ்லிம்களுக்குள் சீர்திருத்தத்தை ஏற்படுத்துவதாகவே இருந்தது. அப்படியான செயல்பாடுகளில் முஸ்லிம் அல்லாதோரிடம் மோதல்கள் நேரும் சாத்தியமில்லாதிருந்தது. மற்றொரு வகையான அடிப்படைவாதத்தைப் பொருத்தவரை அதன் தொடக்க செயல்பாடுகளே அரசாட்சி புரிபவர்களுக்கு அவர்கள் முஸ்லிம்களாயிருந்தாலும் அல்லது முஸ்லிம் அல்லாதவர்களாயிருந்தாலும் அவர்களுக்கு எதிரானதாகவே இருந்தது. அதன் இயல்பிலேயே வன்முறையைப் பயன்படுத்துவது இருந்தது.

இங்குதான் 'ஜிஹாத்' என்ற தத்துவம் திரிந்து அரசியல் சாயமேறியது. திருக்குர்ஆனின் எந்த இடத்திலும் ஜிஹாத் என்ற சொல் போர்புரிவது என்ற பொருளில் பயன்படுத்தப்படவே இல்லை என்பதை அடித்துச் சொல்லியாக வேண்டியிருக்கிறது. திருக்குர்ஆன் அமைதியையும் சகிப்புத்தன்மையையுமே முழுக்க முழுக்க கொண்டதாக இருக்கிறது. அதன் இயல்பான பண்பு கருணையே அல்லாமல் போரல்ல.

## இஸ்லாம் மற்றும் ஜிஹாத்

*திருக்குர்ஆனின் ஆரம்பமே*

*அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் 01:01*

*இந்த வசனம் திருக்குர்ஆன் முழுக்க 114 முறைக்கும் குறையாமல் இடம்பெற்றுள்ளது.*

*'அமைதி' என்பது இறைவனின் திருநாமங்களில் ஒன்றாக உள்ளது.*

*(நபியே!) உங்களை உலகத்தாருக்கு ஓர் அருளாகவேயன்றி நாம் அனுப்பவில்லை (21:107)*

*ஜிஹாத் என்ற சொல் தாக்குதல் தொடுப்பது என்ற பொருளில் திருக்குர்ஆனில் எங்குமே பயன்படுத்தப்படவில்லை. அது கடும் உழைப்பு என்ற பொருளில்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. திருக்குர்ஆன் மீண்டும் மீண்டும் அதிகமதிமாக செய்யச் சொல்வது பொறுமையாக இருத்தலைத்தான்.இருந்தபோதிலும் இன்று 'முஸ்லிம் போராளிகள்' பொருத்தமற்ற சூழல்களில் 'இறைவன் மிகப் பெரியவன்' என்பதை 'போர் மிகப் பெரியது' என்று சமானப்படுத்தி விட்டனர்.*

*நிகழ்ந்து வரும் மோதல்களில் இஸ்லாமிய கொள்கைகள் மற்றும் முஸ்லிம்களின் செயல்பாடுகள் இரண்டிற்கும் இடையில் ஏன் இத்தனை முரண்பாடு என்று நாம் கேட்டே ஆக வேண்டும். வரலாற்று அவசரத்திற்காக குறைந்தது ஒரே ஒரு அடிப்படை காரணத்தைக் கண்டாக வேண்டும்.*

*நினைவில் இல்லாத காலங்களில் இருந்து வரலாற்றில் ராணுவ தளபதிகளுக்குப் பெரும் முக்கியத்துவமும் கௌரவமும் அளிக்கப்பட்டு வருகிறது. அத்தகைய மனிதர்கள் அமைதிக் காலங்களில் கூட சிலை வடிவம் பெறுவதும் மக்களுக்கான முன்மாதிரிகளாக ஆவதும் சர்வதேச சம்பவங்களாக உள்ளன. நாயகன் என்ற கௌரவத்தை ராணுவரீதியாகப் பெறுவது என்பது இஸ்லாமிய வரலாற்றின் பிற்பகுதியில் போருக்கு அதிக அழுத்தம் அளிக்கப்பட்டதன் உள்ளூறை காரணமாக விளங்குகிறது. போர்க்கள நாயகர்களுக்கு முஸ்லிம் சமுதாயம்*

தானாக அளித்த கௌரவம் மற்றும் முக்கியத்துவத்தினால் இஸ்லாமிய வரலாற்றை தொகுத்தவர்களின் நூலை வாசிப்பவர்கள் இஸ்லாமிய வரலாறு தொடர்ச்சியான போர்கள் மற்றும் வெற்றிகள் என்பதைக் கொண்டதாகவே வாசிக்க நேருகிறது.

இந்த ஆரம்பகால வரலாற்றுக் குறிப்புகளினால் அதனைத் தொடர்ந்து எழுதப்பட்டவைகளும் ராணுவச் செயல்பாடுகளுக்கே முக்கியத்துவம் கொடுத்து எழுதப்பட்டன. இறைத்தூதர் முஹம்மது (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) போரில் ஈடுபட்டிருந்தும் அதுவும் ஒன்றரை நாளுக்கு மேல் அவை நடக்கவில்லை என்றபோதும் அவருடைய வாழ்க்கை வரலாற்று நூல் ‘மகாஸி’ அதாவது ‘இறைத்தூதர் புரிந்த போர்கள்’ என்று அழைக்கப்படுகின்றது. அவர் அடக்குமுறையாளர்களால் நெருக்கப்பட்ட நிலையில் வேறு எந்த வழியுமின்றி தற்காப்புக்காகவே புரிந்த போர்களாகும் அவை. ஆனால் வரலாற்று ஆசிரியர்கள் உண்மைகளை புறந்தள்ளி ஒதுக்கி விட்டு இறைத்தூதரின் முழு வாழ்க்கையுமே போரும் மோதல்களும் நிறைந்தவை என்பது போல எழுதி விட்டனர்.

இறைத்தூதர் முஹம்மது (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) அரேபிய சமூகத்தில் ராணுவ மோதல்கள் நிறைந்திருந்த காலகட்டத்தில் பிறந்தார் என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். ஆனால் இறைத்தூதர் எப்போதும் மோதல் போக்கை தவிர்த்தே வந்தார். உதாரணமாக அகழ்ப் போரில் அகழிகளைத் தோண்டச் செய்து அவர் போரைத் தவிர்த்தார்.

ஹுதைபிய்யா உடன்படிக்கை பிரபலமான ஒன்று. அதில் இறைத்தூதர் எதிரிகளின் அத்தனை நிபந்தனைகளையும் மறுக்காமல் அப்படியே ஏற்றுப் போரைத் தவிர்த்தார். அவர் மக்காவை வெற்றி கொண்ட போது எதிரிகள் போரிடாமல் சரண் அடையும்படி பத்தாயிரம் போர் வீரர்களுடன் உள் நுழைந்தார்.

இப்படியாக, இறைத்தூதர் அனைத்து சந்தர்ப்பங்களிலும் தனது குறிக்கோளை போர் போன்ற வழிகளில் அல்லாமல் அமைதி வழியிலேயே அடைந்தார். ஆகவே அவரது வாழ்க்கைச்

*சம்பவங்கள் அனைத்தும் 'போர்கள்' என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ளது முழுக்க முழுக்க மனசாட்சியற்றதாகும். அவரது வாழ்க்கையைக் குறித்து தெரிவிக்கும் எந்த பதிவுகளும் அவர் போர் புரிவது என்பதை எவ்வாறெல்லாம் மிகுந்த பிரயாசைப்பட்டு தவிர்த்தார் என்பதைப் பதிவு செய்யவே இல்லை.*

*14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வரலாற்றாசிரியரான இப்னு கல்தூன் என்பவர் தான் வரலாறு மற்றும் சமூகவியலை ஆய்வு செய்யவும் எழுதவுமான விதிகளை உருவாக்கினார். அவர் அரசர்கள் மற்றும் தளபதிகள் ஆகியோரைப் பற்றிய வரலாறு எழுதப்பட்டுக் கொண்டிருந்ததை சாதாரண மனிதர்களை மையமாக வைத்து எழுதும் மாற்றத்தை புரட்சிகரமாக முயன்றார். ஆனால் போர் நாயகர்களை வரலாற்றின் முதன்மையானவர்களாக ஆக்கப்பட்டிருந்த தனால் வரலாற்று ஆசிரியர் கூட்டம் பழைய வழியையே பின்பற்றி வரலாறுகளை எழுதியது. போர் நாயகர்களை மக்கள் பெரிதாகக் கொண்டாடினர். அதனால் போர்க்கள சம்பவங்களுக்கு வரலாற்றில் பெரும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது இயற்கையே. மற்றெல்லா சம்பவங்களும் ஒன்று பின்தள்ளப்பட்டன அல்லது முழுக்க புறக்கணிக்கப்பட்டன.*

**கொள்கைகள் மீது வெறுப்பு தத்துவார்த்த வெறுப்பு**

*வெறுப்பு என்பதே குற்றம். கொள்கைகளின் அடிப்படையில் வெறுப்பு என்பது பெருங்குற்றம். இஸ்லாமிய அடிப்படைவாதம் என்று சொல்லப்படுவது அதன் விளைவுகளின் அடிப்படையில் பார்த்தால் மனித குலத்திற்கு எதிரான பெரிய குற்றமாகவே இருக்கிறது. எதனையும் நீக்கிவிட முடியும். ஆனால் ஒரு புனித கொள்கையினால் உருவாக்கப்படும் வெறுப்பு என்பதை நீக்கவே முடியாது. வெறுப்பு வன்முறையை உருவாக்குகிறது. கொள்கைகளின் அடிப்படையிலான வெறுப்பு என்பது எல்லையற்ற வன்முறையை உருவாக்கும் எந்தவித குற்றம்புரிந்த வருத்தத்தையோ அல்லது பச்சாதாப உணர்வோ இல்லாமல் அதனால் ஒட்டுமொத்த மனித குலத்தையும் அழிக்க முடியும். ஆக, தானே தன்னை அமைத்துக் கொண்ட இஸ்லாமிய அடிப்படைவாதம் இஸ்லாமிய கொள்கைக்கு எதிரானதாக மாறுகிறது.*

*அன்பை அடிப்படையாகக் கொண்ட ஒரு இயக்கம் உண்டு. அதன் குறிக்கோள் மனிதர்களுள் சீர்திருத்தத்தை ஏற்படுத்துவதாகும். அத்தகைய இயக்கம் அன்பு சார்ந்தவற்றையும் சக மனிதர்கள் மீது நல்லெண்ண உணர்ச்சிகளையும் எழுப்பும். அதனை பின்பற்றுபவர்கள் தாங்கள் தங்கள் சக மனிதர்களின் நலனுக்காகவே கண்டறிந்த உண்மையை அமைதியான முறையில் பரப்ப பாடுபடுவார்கள். அத்தகைய இயக்கம் சமூகத்திற்கு எந்த கேட்டையும் விளைவிக்காமல் மக்கள் வாழ்வின் அனைத்துத் தளங்களிலும் விளைவிக்காமல் மேம்பாடு மற்றும் நன்னெறிகளை ஊட்டும் சக்தியாகும்.*

*இன்னொரு இயக்கம் உண்டு. அது வெறுப்பின் அடிப்படையிலானது. அதனைப் பின்பற்றுபவர்கள் அவர்களையொத்த கருத்தில்லாதவர்களைத் தங்களின் எதிரிகளாகக் கருதுவார்கள். அவர்களை பூமியிலிருந்தே துடைத்தெறிய வேண்டும் என்ற தீவிரமான எண்ணத்தை அவர்கள் கொண்டிருப்பார்கள். தங்களது வெற்றிக்கு இந்த 'எதிரிகள்' தடை எனவும், ஆகவே அவர்களை ஒட்டுமொத்தமாக அழிக்க வேண்டியது அவசியமானதென்றும் அவர்கள் எண்ணுவார்கள். அப்போது மட்டும்தான் தாங்கள் தேர்ந்து கொண்ட அமைப்பை உருவாக்க முடியும் என்றும் எண்ணுவார்கள். இஸ்லாமிய அடிப்படைவாதம் என்றழைக்கப்படுவதில் இரண்டாவது வகை அத்தகையதே.*

*எதிர்மறைச் சிந்தனையின் விளைவாக அவர்கள் மனித குலத்தை அவர்களுடைய எதிரிகளாகவும் நண்பர்களாகவும் இரண்டாகப் பிரித்து விடுகின்றனர். இந்தப் பிரிவினையை ஏற்படுத்திய பின்பு தங்கள் 'எதிரிகள்' மீதான வெறுப்பை மிகக் கடுமையானதாக ஆகும்படி செய்கிறார்கள். அன்பின் அடிப்படையிலான இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் நல்லதை நாடி மக்களின் நலனுக்காக இயங்குகையில் வெறுப்பை அடிப்படையாகக் கொண்ட இயக்கத்தவர்களோ தீமையை நாடி விரோதத்தை விளைவிக்கிறார்கள். இந்த எதிர்மறை எண்ணங்களினால் இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் செயல்பாடுகள் நாசகரமான திசையில் செல்கின்றன.*

*விஷயத்தை இன்னும் மோசமாக்கும் வகையில் முஸ்லிம் அடிப்படைவாதிகளின் வெறுப்பு அவர்களது*

*கொள்கையிலிருந்து பிரிக்க இயலாததாகி விடுகிறது. மற்றவர்கள் தவறான கொள்கையை உடையவர்கள் என்று அவர்கள் கருதுவதால் அவர்களை வெறுக்கிறார்கள். கொள்கையின் மீதான வெறுப்பு என்பது மிகவும் தீவிரமான பைத்தியக்காரத்தனம் நிறைந்தது என்பதை அனைத்து விதமான அனுபவங்களும் காட்டுகின்றன. மற்றொரு விதத்தில் தனிப்பட்ட விரோதம் என்பது தற்காலிகமான காரணங்களால் தோன்றி சாதாரண சம்பவங்களால் மறைந்து போகாது இருப்பது அபூர்வமானது. ஆனால், கொள்கை வெறுப்பு என்பது மறைவதற்கு மிகவும் குறைவான வாய்ப்பே உள்ளது. மேலும் அதனுடைய இலக்கு எதிரிகளை இல்லாதொழிப்பதே. அதனை அது அடையும் வரை அது மரிப்பதில்லை. இதன் காரணமாகத்தான் கொள்கை வெறுப்பு என்பது வன்முறையாக மாற தாமதிப்பதேயில்லை. அமைதிவழிச் செயல்பாட்டில் பலனில்லை என்றவுடன் பாதையில் உள்ள அனைத்து எதிரிகளும் அழிந்து போகும்படி ஆயுதங்கள் ஏந்தப்படுகின்றன.*

**இஸ்லாத்தின் பெயரால் தீவிரவாதம்**

*நடப்புக்காலத்தில் வெறுப்பினால் செய்யப்படும் செயல்கள் மற்றும் வன்முறைகள் ஆகியவை இஸ்லாத்தின் பெயரால் நிகழ்வதற்கு இஸ்லாமிய அடிப்படைவாதிகளே பொறுப்பு. அவர்களின் செயல்பாட்டை நியாயப்படுத்துவதை பிரபல கவிஞர் இக்பாலின் இரு கவிதை வரிகளைக் கொண்டு கூறலாம்.*

*“தவறானவற்றின் ஒவ்வொரு நரம்புக்கும் முஸ்லிம் அறுவை சிகிச்சை கத்தியாவான்” (ஷிக்வா ஜவாபே ஷிக்வா)*

*திருக்குர்ஆனில் வேறு விதமாக சொல்லப் படுவதைப் பார்ப்போம்.*

*அவர்களை நோக்கி பூமியில் குழப்பம் விளைவித்துக் கொண்டு அலையாதீர்கள் என்று கூறினால், அதற்கவர்கள் நாங்கள் சமாதானத்தை உண்டாக்குபவர்கள் (விஷமிகள் அல்லர்) எனக் கூறுகிறார்கள் 02:11*

*இஸ்லாத்தின் குறிக்கோள் இலக்கணப்படியான இஸ்லாமிய சமூகத்தையும் நாட்டையும் நிறுவுவதாகும் என்று அவர்கள்*

*கூறுகிறார்கள். அரசியல் பலமின்றி அது சாத்தியமில்லை என்பதை அவர்கள் கண்டுகொண்டதால் அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு எதிராக சண்டையிடுகிறார்கள்.*

*20ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் இந்த குறிக்கோளுடன் பெருமளவில் வன்முறை இயக்கங்கள் தோன்றின. அவர்களது இலக்கு ஒன்று முஸ்லிமல்லாத அல்லது மதச்சார்பற்ற முஸ்லிம் ஆட்சியாளர்கள் ஆவார்கள். ஆனால் உயிர், சொத்துக்கள் மூலாதாரங்களின் அழிவைத் தவிர வேறெந்த நேர்மறையான விளைவுவை ஏற்படுத்தியது. அவர்களுடைய செயல்பாட்டை இஸ்லாம் அங்கீகரிக்கவில்லை என்பதன் நிரூபணமாக இருக்கிறது. இதனை திருக்குர்ஆன் தெளிவாக இப்படிக்கூறுகிறது :*

*அவன் (உங்களில் இருந்து) விலகினாலோ, பூமியில் விஷமம் செய்து (உங்கள்) விவசாயத்தையும் கால்நடைகளையும் அழித்து விட முயற்சி செய்கின்றான் விஷமத்தை அல்லாஹ் விரும்புவதில்லை (02:205)*

*நீங்கள் அல்லாஹ்வுடைய பாதையில் (தாராளமாக) செலவு செய்யுங்கள் தவிர (போர் சமயத்தில் செலவு செய்யாது) உங்களை நீங்களே ஆபத்திற்குள்ளாக்கிக் கொள்ளாதீர்கள் அன்றி (பிறருக்கு உதவியும்) நன்மையும் செய்யுங்கள் நிச்சயமாக அல்லாஹ் (பிறருக்கு) நன்மை செய்பவர்களை நேசிக்கின்றான் (02:195)*

*இலக்கணப்படியான வாழ்வியலும், முழுக்க முழுக்க ஒழுங்கிருப்பதும் இஸ்லாத்தின் மிகவும் விரும்பத்தக்க நற்குணங்களும் தான். ஆனால் இஸ்லாத்தின் நேரடி இலக்கு நாடல்ல, சமூகமல்ல, தனி மனிதனே.*

*இஸ்லாமிய இயக்கத்தின் பரந்துபட்ட குறிக்கோள் ஒவ்வொரு தனிமனிதனையும் இலக்கணப்படியான மனிதனாக உருவாக்கப் பாடுபடுவதேயாகும். ஒவ்வொரு தனிமனிதனும் திருக்குர்ஆன் கூறியுள்ளபடியும் இறைத்தூதர் முஹம்மது (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) அவர்கள் காட்டியபடியான உன்னதமான நற்குணங்களைக் கொண்ட உதாரணமாக இருக்க வேண்டும் என்பது வலியுறுத்தப்பட வேண்டும். இறைத்தூதரைப் பற்றி திருக்குர்ஆன்,*

*“நிச்சயமாக நீங்கள் மகத்தான நற்குணமுடையவராகவே இருக்கின்றீர்கள்” (68:04)*

*என்று கூறியதைப் போல ஒவ்வொருவரும் விளங்க வேண்டும். இலக்கணப்படியான நாடு, சமூகம் என்பது இஸ்லாத்தின் நேரடி இலக்கல்ல.*

*சமூகமும், நாடும் தனித்தனியானவை அல்ல. அவை கொண்டுள்ள தனி மனிதர்களைக் கொண்டு ஒன்றை ஒன்று சார்ந்தவையே. இறைத்தூதர் கூறினார் :*

*மிஷ்காத்துல் மஸாபீஹ், 11/1097 “நீங்கள் எப்படியோ, அப்படியே உங்கள் ஆட்சியாளர்களும்“*

*இலக்கணப்படியான ஒரு நாடு என்பதே இஸ்லாத்தின் இலக்காக இருந்திருக்குமேயானால் அதனைப் பற்றிய கட்டளைகள் திருக்குர்ஆனிலும் இறைத்தூதரின் மொழிகளிலும் நிச்சயம் இருந்திருக்கும்.*

*எடுத்துக்காட்டாக, திருக்குர்ஆன் வசனம் ஒன்று இப்படி இருந்திருக்கும்.*

*“ஓ முஸ்லிம்களே! நீங்கள் இலக்கணப்படியான நாடொன்றை உண்டாக்குவீர்களாக!”*

*ஆனால், அப்படிப்பட்ட ஒரு வசனமோ அல்லது ஒரு இறைத்தூதரின் மொழியோ கூட இல்லை. ஆனால் இதற்கான மேற்கோள்களாக இதனை கூறுபவர்கள் கூறுவன எல்லாம், வெறும் அனுமானமாக மட்டுமே இருக்கிறது. ஆனால், இஸ்லாமிய சட்டத்தின்படி அடிப்படையான இஸ்லாமியக் கட்டளை என்று வரும்போது அனுமானத்தின் அடிப்படையிலான வாதம் மதிப்பற்றதாகும். அனுமானத்தின் அடிப்படையிலான வாதங்கள் மிகச் சாதாரணமான விஷயங்களுக்கு மட்டுமே அல்லாது அடிப்படையானவற்றுக்கு அல்ல.*

*இதனையொட்டி இன்னொன்றும் உள்ளது. இலக்கணப்படியான ஒரு நாடு என்பது இஸ்லாத்தின் குறிக்கோள் என்று கூறுபவர்கள் இஸ்லாத்தின் தொடக்க காலத்திலிருந்து அப்படிப்பட்ட நாடு அமைக்கப்பட்டதா அல்லது அந்த*

இலக்கணப்படியான காலத்தில் அது அடையக் கூடியதாக இருந்ததா என்பதை கற்றறிந்து கொள்ள வேண்டும். இஸ்லாத்தின் முதல் காலகட்டம் இலக்கணப்படியான சமூகத்தையும், நாட்டையும் கொண்டிருந்தது என்று கூறுபவர்கள் தவறுக்கு தீனியாகி விட்டார்கள் என்றே கூற வேண்டும். அவர்கள் இலக்கணப்படியான நாடு மற்றும் சமூகத்திற்கு இலக்கணப்படியாக வாழ்ந்த தனி மனிதர்களைக் கொண்டு மதிப்பிடுகிறார்கள். உண்மை என்னவெனில் இலக்கணப்படியான சமூகம் மற்றும் நாடு என்பதும் இலக்கணப்படியான தனி மனிதர்கள் என்பதும் ஒன்றுக்கொன்று முற்றிலும் வேறானவை.

ஒவ்வொரு இஸ்லாமிய காலகட்டத்திலும் எண்ணற்ற இலக்கணப்படியான தனி மனிதர்களை நம்மால் காண முடிகிறது என்பது தள்ள முடியாதது. அது இன்றைக்கும் கூட உண்மையாகவே இருக்கிறது. ஆனால் இலக்கணப்படியான நாடு என்பது எவ்வகையிலும் இஸ்லாத்தின் இலக்கல்ல. அப்படிப்பட்ட நாடும் ஒருபோதும் இருந்ததில்லை. உதாரணமாக, ஒரு நாட்டை அமைப்பதற்கு முதலும் தலையாயதும் அந்நாட்டிற்கான தலைமையே.

ஆனால் தலைமைப் பொறுப்புக்கு நபரை நியமிப்பதற்கான பரிந்துரைக்கப்பட்ட எந்த நியதிகளும் இல்லை. இறைத் தூதருக்குப் பின் சரியாக வழிநடத்தப்பட்ட நான்கு பிரதிநிதி(கலீஃபாக்)கள் தலைமை ஏற்றார்கள். ஆனால், ஒவ்வொருவரும் வேறுவேறு விதமான முறைகளில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். காரணம் தேர்ந்தெடுப்பதற்கான பரிந்துரைக்கப்பட்ட எந்த முறையும் இருந்திருக்கவில்லை. பிரதிநிதி(கலீஃபா)களை நியமிப்பதில் மரபேதும் ஏன் இருந்திருக்க முடியவில்லை என்பதையும் இது விளக்குகிறது.

இதற்குப் பொருள் இஸ்லாத்தில் அல்லது இஸ்லாமியக் கொள்கைகளில் ஏதோ குறையுள்ளது என்பதல்ல. இஸ்லாம் என்பது மனிதன் உருவாக்கியதல்ல. இறைவன் அருளிய மார்க்கம் என்பதன் நிருபணமாக இது திகழ்கிறது. இயற்கையோடு இயைந்த இஸ்லாம் தன்னை இறைவனால் உருவாக்கப்பட்டது என்றே கூறிக் கொள்கிறது.

*“(நபியே) இப்ராஹிமுடைய நேரான மார்க்கத்தை நோக்கி நீங்கள் உங்களுடைய முகத்தை உறுதியான ஓர்மைப்பாட்டுடன்” (30:30)*

*“இந்த குர்ஆனை அவர்கள் ஆழ்ந்து கவனிக்க வேண்டாமா? இது அல்லாஹ் அல்லாதவரிடம் இருந்து வந்து இருந்தால் இதில் பல (தவறுகளையும்) முரண்பாடுகளை(யும்) அவர்கள் காண்பார்கள்” (04:82)*

இஸ்லாம் மார்க்கத்தின் நோக்கம் இலக்கணப்படியான தனி நபர்களை உருவாக்குவதேயன்றி இலக்கணப்படியான நாட்டையோ சமூகத்தையோ உருவாக்குவதல்ல என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும்.

உண்மையில் இந்த உலகில் மனிதன் படைக்கப்பட்டதன் முக்கிய நோக்கமே அவனை சோதனைக்கு உட்படுத்துவதுதான். திருக்குர்ஆனின் கூற்றுப்படி இந்த உலகம் ஒரு சோதனைக்களமே. மரணத்திற்குப் பின்னரான மறுமை வாழ்வே இவ்வுலக சோதனைகளுக்கான விளைவுகளைத் தருவதாகும்.

*“நிச்சயமாக (நம்முடைய) பொறுப்பைச் சுமந்து கொள்வீர்களா? என்று நாம் வானங்கள் பூமி மலைகள் ஆகியவைகளிடத்தில் வினவினோம். அதற்கு அவை அதனை பற்றி பயந்து அதனைச் சுமந்து கொள்ளாது விலகி விட்டன. அத்தகைய பொறுப்பை தான் மனிதன் சுமந்து கொண்டான் (ஆகவே) நிச்சயமாக அவன் அறியாமையால் தனக்குத் தானே தீங்கிழைத்துக் கொண்டான்.” (33:12)*

*“(நபியே) உங்கள் இறைவனால் அருளப்பட்ட (இவ்வேதமான)து முற்றிலும் உண்மையானது விரும்பியவாறு (இதை) நம்பிக்கை கொள்ளலாம் விரும்பியவர் (இதை) நிராகரித்து விடலாம் (அதனால்) நமக்கொன்றும் நஷ்டமில்லை. (ஆனால் இதை நிராகரிக்கும்) அநியாயக்காரர்களுக்கு நிச்சயமாக நாம் நரகத்தை தான் தயார்படுத்தி உள்ளோம் அந்நகரத்தின் ஜுவாலைகள் அவர்களைச் சூழ்ந்து கொள்ளும் அவர்கள் (தண்ணீர் கேட்டு) அபயமிட்டால் காய்ந்து உருகிய செம்பைக் போலுள்ள நீரே அவர்களுக்கு கொடுக்கப்படும் (அவர் அதனை குடிப்பதற்கு முன்னதாவே) அது அவர்களுடைய முகத்தை சுட்டு கருக்கி*

*விடும் அன்றி அது மிக்க (அருவருப்பான) கெட்ட குடியாகும் அவர்கள் இளைப்பாறும் இடம் மிக கெட்டது. (18:29)*

அதாவது மனிதனுக்கு தன்னை இறைவனிடம் அர்ப்பணித்துக் கொள்ளவும் அல்லது வரம்பு மீறவுமான முழு சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது.

இறைவனின் படைப்புத்திட்டத்தின்படி சுதந்திரம் அல்லது தன்னிச்சை என்பது ஒவ்வொரு மனிதனின் பிறப்புரிமையாகும். அவன் அதனை தவறாகப் பயன்படுத்தியபோதிலும் அவனிடமிருந்து அது பறிக்கப்பட்டது. அப்படி பறிப்பது இறைவனின் படைப்புத் திட்டத்தில் இல்லாததாகும். ஓர் இலக்கணப்படியான நாட்டையோ அல்லது சமூகத்தையோ உருவாக்குவதற்கான என்றுமிருக்கும் பெருந்தன்மை இந்தச் சுதந்திரம்தான் என்பது ஒப்புக் கொள்ளப்பட வேண்டும். சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தும் குறைந்த எண்ணிக்கையிலான மனிதர்கள் கூட ஒட்டுமொத்த சமூகத்தையே தொந்தரவு செய்ய முடியும். அதனால்தான் இயற்கையுடன் இயைந்த இஸ்லாத்தின் குறிக்கோள் தனி மனிதனை சீர்படுத்துவதாக இருக்கிறது.

மாறாக, ஓர் இலக்கணப்படியான நாட்டையோ அல்லது சமூகத்தையோ உருவாக்கும் பணி முஸ்லிம்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்குமேயானால் அது இயலவே இயலாததான இயற்கைக்கு மாற்றமானதாக இருந்திருக்கும். ஆகவே இஸ்லாம் நடைமுறைப்படுத்த சாத்தியமானதாகும். அந்தச் சாத்தியப்படுதல் இயற்கையுடன் எந்த மோதலில் ஈடுபடாததுமான இலக்கை முஸ்லிம்களுக்கு வழங்கியுள்ளது. இஸ்லாத்தின் இந்த விவேகத்தை மனதில் கொள்ளாததன் விளைவே முஸ்லிம் அடிப்படைவாத குழுக்களின் செயல்பாடான வன்முறையாகிறது.

உங்களது நோக்கம் தனிமனிதச் சீர்திருத்தம் என்றானால் அதனை அடைய நீங்கள் எந்த வன்முறைச் செயல்களையும் நாட வேண்டியதில்லை. தனி மனிதச் சீர்திருத்தத்தைத் தொடக்கம் முதல் இறுதி வரை அமைதியான வழிமுறையிலேயே அமைதியான வகையிலேயே செய்ய முடியும். ஒரு நாட்டின் அமைப்பு முறையை மாற்றும் போராட்டமோ போரிலும்

வன்முறையிலும் கொண்டு போய் விடக் கூடிய நாச வேலையாகும்.

அமைதி வழியில் மக்களை சீர்திருத்துவதுதான் நன்கறிந்த உதாரணம் சூஃபிகள் என்னும் இறைஞானிகளால் நிகழ்த்தப்பட்ட இயக்கங்களாகும். அதில் நோக்கம் என்பது நாடல்ல, தனி மனிதனே. அவர்களது பணி மக்களின் இதயங்களிலும் மனங்களிலும் ஆன்மிகச் சீர்திருத்தத்தை ஏற்படுத்தி அதனால் புதிதாகவும் சீர்திருத்தப்பட்டும் மக்கள் தங்கள் வாழ்க்கையை நடத்தினார்கள். விவேகமான இந்தக் கொள்கையை கைக்கொண்டதற்கு நன்றி. சூஃபிகள் வன்முறையை நாடவில்லை. நம் காலத்தைய இன்னொரு உதாரணம் தப்லீக் ஜமாஅத் முறையாகும். அது தனி மனித சீர்திருத்தம் என்பதில் பெரிய அளவில் அமைதியாக வேலை செய்து வருகிறது.

தனிமனித சீர்திருத்தம் என்பதை விட ஒரு நாட்டை இஸ்லாமிய மயமாக்க இஸ்லாமிய அடிப்படைவாதிகள் நோக்கமாகக் கொள்வதால், அவர்களது முதல் செயல்பாடே ஆட்சியாளர்களுக்கு எதிரான வன்முறை என்பதாக இருக்கிறது. இவ்வகையில் அவர்களது இயக்கம் முதல் நாளிலிருந்தே வன்முறைப் பாதையைத் தேர்ந்தெடுப்பதாக இருக்கிறது. பின்னர் அனைத்து வகையான தீமைகளும் வன்முறையின் விளைவாக உண்டாகும். பரஸ்பர வெறுப்பு, அமைதிக்கு பங்கமேற்படுவது, விலை மதிப்பற்ற வளங்கள் வீணாதல் போன்ற பலவும் நிகழும்.

அமைதியான போராட்டத்திற்குப் பெயர் இஸ்லாம் என்பதும் இஸ்லாமிய அடிப்படைவாதம் என்று சொல்லப்படுவது அதற்கு எதிரானது என்று கூறுவது சரியானதும் முறையானதுமாகும். இஸ்லாமிய போதனைகளிலிருந்து முற்றிலும் தூரமாக விலகி நிற்கும் வன்முறை என்பது இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் நேரடி விளைவு என்பது கிடைக்கின்ற தகவல்களின்படி தெளிவாகிறது.

## இஸ்லாமிய அடிப்படை கொள்கைகள்

'அடிப்படைவாதம்' என்ற சொல்லை நாம் சரியான கண்ணோட்டத்தில் பார்த்தால் இஸ்லாத்தின் அடிப்படைக்

*கொள்கைகள் என்ன பொருளைக் கொண்டிருக்கின்றன என்பது நமக்கு தெளிவாகிவிடும். இதனை தெளிவாக விளக்கும் இறைத்தூதர் மொழி ஒன்றுள்ளது.*

*1. இறைத்தூதர் முஹம்மது (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) அவர்கள் இறைவனின் தூதராக இருக்கிறார் (கலிமா) என்று ஏற்றல்.*

*2. தினசரி ஐவேளை தொழுவது.*

*3. ஏழைவரி எனப்படும் ஈகையைத் (ஜக்காத்) தருவது*

*4. ரமளான் மாதத்தில் நோன்பு நோற்பது.*

*5. வசதி வாய்ப்புள்ளவர்கள் மக்காவுக்குப் புனிதப் பயணம் (ஹஜ்) செல்வது*

*எனவே இந்த ஐந்து கொள்கைகளே அல்லது தூண்களே இஸ்லாமாகும். மற்ற போதனைகள் எல்லாம் இந்த ஐந்து கொள்கைகளைப் பற்றிய விரிவான விளக்கங்கள் ஆகும். இவையல்லாதுவேறெந்தஒன்றையும்இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகளாக்குவதும் தவறாக வழிநடத்தப்படடுவதும் ஏற்றுக் கொள்ள இயலாததாகும்.*

*மேலும் இவற்றை ஆய்வு செய்யும் பொழுது, இந்த ஐந்து கொள்கைகளும் அவற்றுக்கான சக்தி மற்றும் அமைப்புடன் இருப்பதையும், இஸ்லாத்தின் உண்மையான சாரம் என்பது புறத்தில் இல்லை. ஆனால் அதன் உள்ளுறை ஆற்றலிலேயே இருக்கிறது என்பது முக்கியமானது என்பதையும் நாம் அறியலாம். அதனால்தான் இறைத்தூதரின் ஒரு மொழி.*

*‘நம்முடைய செயல்கள் அனைத்தும் எண்ணங்களால் தீர்மானிக்கப்படுபவை’ என்று கூறுகிறது. (சஹீஹ் புகாரி)*

*இந்தக் கொள்கைகளில் முதன்மையாக உள்ள (ஈமான்) என்ற இறைநம்பிக்கை கொள்வதை எடுத்துக் கொள்வோம். அது அதிலுள்ள வார்த்தைகளைக் கூறுவதன் மூலம் ஒருவரின் நம்பிக்கையைத் தெரிவிப்பது. ஆனால், வெறுமனே வார்த்தைகளால் உச்சரிப்பதொன்றே போதுமானதல்ல. உச்சரிக்கும் நபர் அதனை உள்ளுணர்ந்து உளப்பூர்வமாக*

*அவற்றின் உண்மையான பொருளில் அவற்றைக் கூற வேண்டும். திருக்குர்ஆன் கூறுகிறது.*

*"(நபியே) நாட்டுப்புற அரபிகளில் பலர் தாங்களும் நம்பிக்கையாளர்கள் எனக் கூறுகின்றனர். (அவர்களை நோக்கி) கூறுங்கள் "நீங்கள் உங்களை நம்பிக்கையாளர்கள் எனக் கூறாதீர்கள் ஏனென்றால் நம்பிக்கை உங்களுடைய உள்ளங்களில் நுழையவே இல்லை ஆயினும் (வெளிப்படையாக) வழிபடுபவர்கள் என்று (உங்களை) நீங்கள் கூறிக் கொள்ளுங்கள் எனினும் மெய்யாகவே நீங்கள் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் வழிபட்டு நடப்பீர்களாயின் உங்களுடைய நன்மைகளில் எதையும் அவன் உங்களுக்குக் குறைத்து விட மாட்டான் நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் கிருபையுடையவனாகவும் இருக்கின்றான்." (49:14)*

*இறைவனுக்கு உண்மையாக இறைநம்பிக்கை (ஈமான்) கொள்வது என்பது ஒரு தனிமனிதனை இறைவன் பற்றி உணர்ந்த நிலைக்குக் கொண்டுவருவதாக அம்மனிதனின் உள்மனதில் ஆழ்ந்து உணர்ந்து இது கூறப்பட்டிருக்க வேண்டும் என்பதை இது குறிக்கிறது. உணர்ந்த கோட்பாடே உண்மையான மதிப்புடையது. அதன் அமைப்பை அல்லது செயல்முறையை அப்படியே கைக்கொள்வதல்ல இறைவணக்கம். மாறாக அவற்றை அவற்றின் முழுமையான பொருளுணர்ந்து அந்த உணர்வுடன் புரிதலாகும். அதனால் தான் திருக்குர்ஆன் கூறுகிறது :*

*நம்பிக்கையாளர்கள் நிச்சயம் வெற்றி அடைந்து விட்டனர், அவர்கள் எத்தகையவர்கள் என்றால் மிக்க உள்ளச்சத்தோடு தொழுவார்கள், அவர்கள் வீணான காரியங்களில் இருந்து விலகி இருப்பார்கள் 23:03*

*ஆகவே இறைவணக்கம் புரியும் முறைகளைச் செய்துக் கொண்டே உள்ளுணர்ந்து அதனுடன் இரண்டறக் கலந்து விட வேண்டும்.*

*இஸ்லாத்தின் மூன்றாவது தூண் ஏழைவரி எனப்படும் ஜகாத். அதாவது ஒருவர் தனது வருமானத்திலிருந்து குறிப்பிட்ட தொகையை தேவையுள்ளவர்களுக்கு வழங்க வேண்டும் என்பது. இதுவும் ஒரு செயல்முறைதான். ஆனால்*

திருக்குர்ஆனின் கூற்றுப்படி ஜகாத் எனப்படும் ஏழைவரியை அளித்தலில் உள்ளுறைந்துள்ள உணர்வு இறையச்சம் ஆகும்.

“எவர்கள் தங்களுக்கு சாத்தியமான வரையில் தானம் கொடுப்பதுடன் அவர்களுடைய உள்ளங்கள் நிச்சயமாக தங்கள் இறைவனிடம் செல்வோம் என்று பயந்து கொண்டு இருக்கின்றனவோ அவர்களும் ஆவர்.” *(23:60)*

என்று இறைநம்பிக்கையாளர்கள் யார் என்பதனை திருக்குர்ஆன் கூறுகிறது.

இஸ்லாத்தின் நான்காவது தூணான மெக்காவுக்குப் புனிதப் பயணம் (ஹஜ்) மேற்கொள்வது சில சடங்குகளுடன் கூடி முறைப்படுத்தப்பட்டது என்பது நமக்குத் தெரியும்.

ஆனால், வெறுமனே மெக்காவுக்குச் செல்வதும் சடங்குகளைச் செய்வதும் ஹஜ் அல்ல. ஒவ்வொரு கிரியையிலும் அதனதன் ஒழுங்குடனும் கட்டுப்பாடுகளுடனும் யாத்திரை புரிவதும் பக்தியை வெளிப்படுத்துவதாகவும் அந்தக் கிரியைகள் இருக்க வேண்டும். அது அப்போதும் அதற்குப் பின்னரும் சரியான நெறிமுறையிலான வாழ்க்கையை யாத்திரை செய்பவர் பின்பற்றும்படி இருக்க வேண்டும். இதிலும் உள்ளார்ந்த உணர்வே முக்கியமானதாக இருக்கிறது.

இஸ்லாத்தின் ஐந்தாவது தூணான ரமலான் மாதத்தில் நோன்பு நோற்பது என்பது வெறுமனே பசித்து தாகித்திருப்பதல்ல. ஆனால் இறைவனிடம் பக்தி மற்றும் நன்றி கொண்டு ‘தான்’ என்பதைப் புறந்தள்ளிவிட்டு அதனை புரிய வேண்டும். திருக்குர்ஆன் கூறுகிறது.

“நம்பிக்கையாளர்களே! உங்களுக்கு முன்னுள்ளவர்கள் மீது கடமையாக்கப்பட்டு இருந்தது போல் உங்கள் மீதும் நோன்பு நோற்பது கடமையாக்கப்பட்டுள்ளது (அதனால்) நீங்கள் இறையச்சம் உடையவராகலாம்“. *(02:183)*

அதாவது நோன்பு நோற்பதின் சாரம் பக்தியை உருவாக்குவதாகும். இறைத்தூதர் முஹம்மது (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) அவர்களின் மொழிப்படி இறையச்சம் இல்லாமல் நோன்பு நோற்பது என்பது வெறுமனே பசியுடன் பட்டிணி இருப்பதும் தாகித்திருப்பதும்

*ஆகும். அப்படிப்பட்ட நோன்பு மார்க்கத்தின் அடிப்படையில் உண்மையான நோன்பாகாது.*

*(மிஷ்காத் அல் மசாபீஹ்)*

*இஸ்லாத்தின் இந்த ஐந்து அடிப்படைகளும் இறைத்தூதர் முஹம்மது (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) அவர்களாலேயெ தெளிவாக்கப்பட்டு விட்டன. இவற்றுக்கும் மேலாக விரும்பத்தக்கது என்னவென்றால் அவற்றின் வெளி அமைப்பில் மட்டுமல்லாது அவற்றின் உள்ளுறைந்துள்ள உணர்வின் பொருளின்படியும் புரியவேண்டியதாகும்.இப்போது இந்த ஐந்து கொள்கைகளையும் எடுத்துக்கொண்டு நன்கு ஆழ்ந்து யோசித்தார்களானால் அவர்களின் செயல்பாடுகள் முழுக்க அமைதி வழியிலானதாகவே ஆகிவிடும்.*

*இப்படி ஆழ்ந்து யோசித்தால் எந்த நிலையிலும் வன்முறையையோ அல்லது அடக்குமுறையையோ கைக்கொள்ளலாம் என்னும் நிலைக்கு போக வேண்டி வராது.*

*இந்தக் கொள்கைகளை கடைப்பிடிப்பதலிருந்து வரவேண்டிய அனைத்து செயல்களுக்கானதான உள்ளார்ந்த உணர்வு என்பது அறிவுறுத்தல், ஆலோசித்தல் மற்றும் காரண காரியங்களோடு கூடிய சரியான விவாதங்கள் ஆகியவற்றின் மூலமே அடையக்கூடியது. இதனை அடைய அமைதியான வழியில் உழைக்க வேண்டும் என்பதைவிட வேறு சிறந்த வழி ஏதுமில்லை.*

## இஸ்லாமும் அரசியலும்

*அரசியலுடன் இஸ்லாம் என்பதை மதிப்பிடும் முன்பு சிக்கலான ஒரு அம்சத்தை கவனத்தில் கொள்ள வேண்டும். அது என்னவென்றால் அரசியல் என்பது இஸ்லாத்துடன் தொடர்புடையதே தவிர இஸ்லாத்தின் உண்மையானதொரு பகுதியல்ல. தொடர்பு கொள்ளுதல் என்பது குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் மட்டும் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளுதலாகும். உண்மையான மற்றும் தொடர்பான என்ற இந்த இரண்டு அம்சங்களுக்கிடையிலான வேறுபாடு என்பது எல்லா நேரங்களிலும் எல்லா சூழ்நிலைகளிலும்*

பொருத்தமானதா என்பது கணக்கிலெடுத்துக் கொள்ளப்பட வேண்டிய முக்கியமானதாக இருக்கிறது. அத்தகைய சூழ்நிலைகள் நிலவாத பொழுது தொடர்பான அம்சங்கள் பொருத்தமற்றவையாகி அவை விரும்பத்தகாதவை ஆகின்றன. உண்மைக்கும், தொடர்பு என்பதற்குமான வேறுபாடு ஹஜ் பயணம் மேற்கொள்வது பற்றிய திருக்குர்ஆனின் கட்டளைகளில் காணப்படுகிறது.

"அதில் தெளிவான அத்தாட்சிகளும் இருக்கின்றன. இப்ராஹிம் (தொழுகைக்காக) நின்ற இடமும் இருக்கின்றது. எவர் அதில் நுழைகின்றாரோ அவர் (பாதுகாப்பு பெற்று) அச்சமற்றவராகி விடுகின்றார். ஆகவே எவர்கள் அங்கு பிரயாணம் செல்ல சக்தி உடையவர்களாக இருக்கின்றார்களோ அத்தகைய மனிதர்கள் மீது அல்லாஹ்வுக்காக (அங்கு சென்று) அந்த ஆலயத்தை ஹஜ் செய்வது கடமையாகும் எவரேனும் (இதை) நிராகரித்தால் (அதனால் அல்லாஹ்வுக்கு ஒன்றும் குறைந்து விடுவதில்லை, ஏனென்றால்) நிச்சயமாக அல்லாஹ் உலகத்தாரின் தேவையற்றவனாக இருக்கின்றான்." (03:97)

இந்தத் திருக்குர்ஆன் கட்டளையில் அமைந்துள்ள வார்த்தைகள் புனிதப்பயணம் (ஹஜ்) என்பது இறைநம்பிக்கையாளர்கள் அனைவருக்குமான கட்டாயக் கடமை என்ற பொருளில் இல்லை. அது பயணம் புரிவதற்கான வசதி, செல்வம், வழிகள் மற்று நல்ல உடல் ஆரோக்கியம் உள்ளவர்களுக்கு மட்டுமே கட்டாயக் கடமையாகும்.

வசதி வாய்ப்புகள் இல்லாதவர்கள் கூட பயணத்திற்கானவற்றை தயார் செய்ய மாபெரும் சக்தி படைத்த மனிதர் போல பெருமுயற்சியை செய்தாக வேண்டும் என்ற இந்த கட்டளை கூறவில்லை. இந்தக் கட்டளை வசதி வாய்ப்பு உள்ளவர்கள் புனிதப்பயணம் (ஹஜ்) செய்தாக வேண்டும் என்றே கூறுகிறது. அப்படி இயலாதவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படுவதோடல்லாமல் அப்படிப் பயணம் மேற்கொள்ளாமல் இருந்ததற்கு நிச்சயம் பதில் சொல்லியாக வேண்டும் என்றும் கூறவில்லை.

இது அரசியலுக்கும் பொருந்தும். அதாவது வன்முறை ஏதுமின்றி அமைதியான வழிமுறையில் இஸ்லாமிய

*அரசியல் அமைப்பை நிறுவக் கூடிய நிலையில் முஸ்லிம்கள் இருந்தால் அதனைச் சரியாக செய்வதற்கு அவர்களை ஷரியத் சட்டம் கோரும். ஆனால், அந்த நிலையும் வாய்ப்பு இல்லாதவர்களுக்கு இஸ்லாமிய அரசியல் அமைப்பை நிறுவ வேண்டும் என்பதில்லை. அல்லது அப்படியான வாய்ப்புகளை உருவாக்குவதற்கான திட்டமிட்ட செயல்பாடுகளில் அவர்கள் இறங்கவும் வேண்டியதில்லை.*

*அதனால்தான் பின்வருவதுபோன்றகட்டளையைதிருக்குர்ஆன் எங்கும் கூறவில்லை. "ஓ முஸ்லிம்களே! இஸ்லாமிய அரசியல் அமைப்பை நிறுவுங்கள்"*

*மாறாக, அரசாங்கம் மற்றும் அரசியல் ஆகியவை 'தொடர்புடையவையே தவிர இஸ்லாத்தின் ஒரு அங்கமல்ல என்பதை நிரூபிக்கும் வண்ணம் திருக்குர்ஆன் தெளிவான செய்திகளைத் தெரிவிக்கிறது.*

*"(மனிதர்களே) உங்களில் எவரேனும் மெய்யாகவே நம்பிக்கை கொண்டு நற்செயல்களையும் செய்து வந்தால் அவர்களுக்கு முன்னர் சென்றவர்களை(ப் பூமிக்கு) அதிபதிகளாக்கியது போன்றே இவர்களையும் நிச்சயமாக பூமிக்கு அதிபதியாக்கி வைப்பதாகவும் அவன் விரும்பிய மார்க்கத்தில் இவர்களை உறுதியாக்கி வைப்பதாகவும் அமைதியையும் பாதுகாப்பையும் கொண்டு இவர்களுடைய பயத்தை மாற்றி விடுவதாகவும் நிச்சயமாக அல்லாஹ் வாக்களித்து இருக்கின்றான் (அன்றி) அவன் தன்னையே வணங்குபடியாகவும் யாதொன்றையும் இணையாக்கக் கூடாது என்றும் அவன் கட்டளைஇட்டு இருக்கின்றான் இதன் பின்னர் எவரேனும் நிராகரிப்பவர்களாகி விட்டால் நிச்சயமாக அவர்கள் பெரும் பாவிகள்தாம்." (24:55)*

*திருக்குர்ஆனின் மேற்கண்ட இந்த வசனத்தின்படி அதிகாரம் என்பது இறைவனின் வெகுமதியே என்பதும், அது மனித முயற்சிகளால் வென்றெடுக்கப்பட வேண்டிய இலக்கு என்பதற்கு மிகவும் அந்நியமானதென்பதும் மிக மிகத் தெளிவானதாக உள்ளது. அதாவது, அரசியல் அதிகாரத்தை அடைய இயக்கங்களை நடத்துவது என்பது இஸ்லாமிய வழிமுறையல்ல. மாறாக மக்களிடம் இஸ்லாமிய ரீதியிலான குணநலன்சார் பண்புகளையும், உண்மையான இஸ்லாமிய*

*உணர்வையும் ஊட்ட இஸ்லாமிய ரீதியில் போராடுவதே குறிக்கோளாகும். அதன் பின்னர் எந்த ஒரு சமூகத்திலும் பெருமளவு எண்ணிக்கையிலான மக்கள் உண்மையான இறை உணர்வைப் பெற்றார்கள் என்றால் அரசியல் அதிகாரத்தை அளிக்க தகுதியானவர்கள் என்று இறைவன் கருதினால் அப்படி ஆகும் ஒரு நேரம் வரலாம்.*

*அதைப் போன்றே இறை நம்பிக்கையாளர்களின் பலன்களென திருக்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது.*

*"இவர்கள் எத்தகையவர்கள் என்றால், நாம் அவர்களுக்கு பூமியில் வசதியளித்தால் தொழுகையை கடைப்பிடித்துத் தொழுவார்கள் ஏழை வரி (ஜக்காத்) கொடுப்பார்கள் நன்மையானவைகளை ஏவி பாவமானவைகளை தடை செய்வார்கள் எல்லா காரியங்களின் முடிவும் அல்லாஹ்விடமே இருக்கிறது." (22:41)*

*பின்வரும் திருக்குர்ஆனின் வசனத்தில் இறைத்தூதருக்கு இறைவன் அருளிய கட்டளையிலிருந்து அரசியல் அதிகாரம் என்பது முழுக்கவும் இறைவனின் கைகளில் தான் இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம்.*

*"(நபியே பிரார்த்தித்து) நீங்கள் கூறுங்கள் எங்கள் அல்லாஹ்வே எல்லா தேசங்களுக்கும் அதிபதியே நீ விரும்பியவர்களுக்கு ஆட்சியை கொடுக்கின்றாய் நீ விரும்பியவர்களை ஆட்சியை விட்டு நீக்கி விடுகின்றாய் நீ விரும்பியவர்களை கண்ணியப்படுத்துகிறாய் நீ விரும்பியவர்களை இழிவுபடுத்துகின்றாய் நன்மைகள் அனைத்தும் உன் கையில் இருக்கின்றன நிச்சயமாக நீ அனைத்தின் மீதும் பேராற்றல் உடையவன்." (03:26)*

*அதனால்தான் அரசியல் அதிகாரம் என்பது நம்பிக்கையாளர்கள் தங்களது முயற்சிகளை செய்யும் இலக்காக இல்லை. முதலும் இறுதியுமான கடமையாக எந்த ஒருவருக்கும் விலக்கு இல்லாமல் அனைத்து இறைநம்பிக்கையாளர்களுக்கும் எந்த அளவு முடியுமோ அந்த அளவு தங்களது தனிப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதே கட்டாயமானதாக உள்ளது.*

*பின்னர் சூழ்நிலைகள் உதவுகிற வகையில் சாதகமாக இருக்குமேயானால் மேலே கூறப்பட்டுள்ள இறை வசனப்படி*

முழுக்க முழுக்க இறைவனின் அருளால் அவர்கள் அரசியல் அதிகாரத்தையும்,நீதிநெறி சார்ந்த அறத்தின் அடிப்படையிலான நிர்வாகத்தையும் அவர்கள் பெறுவார்கள்.

இஸ்லாமிய நாடு என்பதை உருவாக்கும் பொறுப்பு தனி நபர்களைச் சார்ந்ததல்ல, மாறாக அவர்கள் இருக்கும் சமூகத்தைச் சார்ந்தது என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். இஸ்லாம் மார்க்கத்தில் தனி நபர்கள் முழுக்க முழுக்க தங்களின் விருப்பத்தின்படி செய்ய வேண்டியதான நோன்பு நோற்றல் போன்ற தனி மனிதர்களுக்கான கடமைகள் இருப்பதற்கான மார்க்க கட்டளைகள் உள்ளன. ஆனால் இஸ்லாமிய ரீதியிலான அரசியல் அமைப்பு என்பதை நிறுவுவது முழுச் சமூகத்தின் விருப்பத்தைச் சார்ந்ததாகும். ஒரு முஸ்லிம் சமூகம் இஸ்லாமிய அரசை அமைக்க முழு விருப்பம் கொண்டு ஏற்றால் மட்டுமே, ஒரு இஸ்லாமிய அரசியல் அமைப்பை அதன் அனைத்து சமூக விதிகளின்படி அமைக்க முடியும்.

**அடிப்படைவாதத்தின் சவால்கள்**

இன்றைய காலகட்டத்தின் முஸ்லிம்கள் என்பதைப் பொறுத்தவரை ஊடகங்களில் மிகவும் பெரிதாக பேசப்படும் செய்தி முஸ்லிம் அடிப்படைவாதமாகும். முஸ்லிம் அடிப்படைவாதத்தை நடத்தும் எல்லை தாண்டிய கண்மூடித்தனமான நம்பிக்கையை விட நாசகரமானது ஏதுமில்லை என்பதை அனுபவங்கள் காட்டுகின்றன. இருந்தாலும் அமைதியையும் கருணையையும் கொண்ட மார்க்கமான இஸ்லாமிய மார்க்கத்தின் நற்பெயருக்கு மரண அடி கொடுக்கும் இஸ்லாத்தின் பெயரால் நடத்தப்படும் இந்த அடிப்படைவாத செயல்பாடுகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுவதே இல்லை.

இவ்வகையான தீவிரவாதத்தை வரலாற்று கண்ணோட்டத்தில் வைத்து பார்ப்போம். நவீன மேற்கத்திய பண்பாடு தோன்றிய பொழுது, உலகின் பெரும்பகுதி முஸ்லிம்களின் ஆதிக்கத்தில் இருந்தது. (Ottoman Empire) உதுமானிய பேரரசு மேற்கிலும், கீழ்த்திசை பகுதியின் எல்லை வரை முகலாய பேரரசும் முஸ்லிம் சமுதாயத்தின் பெருமிதத்தின் அடையாளங்களாக விளங்கின. இந்தப் பேரரசுகள் மேற்கத்திய பேரரசுகளுடன்

நேரடியாக மோதலில் ஈடுபட்டதால், நாட்பட நாட்பட முஸ்லிம் பேரரசுகள் அழிந்தே போயின. அவர்களது ஆயிரம் ஆண்டுகால அரசியல் மேலாதிக்கத்தை இந்த அழிவுகள் முடிவுக்குக் கொண்டு வந்தன.

மக்கள் பொதுவாக எல்லாவற்றையுமே மேலோட்டமாக பார்ப்பவர்களாததால் முஸ்லிம்களின் பேரரசுகள் வீழ்ந்தபின் மேற்கத்திய பண்பாடு முஸ்லிம்களை ஒடுக்கி விட்டது என்று நம்பினர்.

இருந்தபோதும், உண்மை என்னவென்றால் முஸ்லிம் பேரரசுகள் எறும்புகளால் அரிக்கப்பட்ட மரத்துண்டுகளைப் போல உள்ளுக்குள்ளேயே சீரழிந்து போயிருந்தன. தாமாகவே, சுயமாகவே வீழ்ச்சியடைவதற்கான நிலையில் அவர்கள் இருந்தனர். இந்த வீழ்ச்சிக்கு மேற்கத்திய அரசுகளின் ராணுவ வல்லமையே காரணம் என்பதற்கு அவர்கள் வீழ்ச்சியுறும் தருவாயில் இணைந்து நிகழ்ந்த அதிர்ஷ்டவசமான சம்பவங்களே காரணம்.

இது அப்படியே இருந்து விட்டுப் போகட்டும். இதன் முக்கியமான தாக்கம் மேற்கத்திய நாடுகள் மீது முஸ்லிம் உலகம் வெறுப்படைந்ததாகும். ஆரம்ப காலத்தில் இந்த வெறுப்பு பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சு நாடுகளின் மீது இருந்தது. பின்னர் இரண்டாம் உலகப் போரின் போது தலைமை தாங்கியதால் அந்த வெறுப்பு அமெரிக்கா மீதும் ஏற்பட்டது.

வன்முறைக்குள் மிக வேகமாக நுழைந்த இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் தற்போதைய தீவிரத்தன்மையை ஆய்வு செய்யவும் அதனைக் கண்டறியவும் நான் விரும்புகிறேன். இந்த வகையான வன்முறை அமைப்புக்குள் அவர்கள் நுழைந்ததன் முதன்மையான காரணம் ஒருவிதமான தோல்வி மனப்பான்மையால் ஏற்பட்டதாகும். துரதிர்ஷ்டவசமாக இந்தத் தோல்வி மனப்பான்மை அவர்கள் தங்களது பேரரசு வீழ்ச்சியடைந்ததால் வளர்ந்திருக்கிறது.

தோல்வியடைந்த ஒருவர் அல்லது சுற்றிலும் முற்றுகை இடப்பட்ட ஒருவர் எதிர்மறையான செயல்களை செய்வது தவிர்க்க இயலாததாகி விடும். இந்த மனநிலை உள்ளவர்கள் தாங்கள் ஒடுக்கப்பட்டதாக நினைத்துக் கொள்வார்கள்.

*அவர்களுக்கு எதிராக இருப்பவர்களை ஒடுக்குபவர்களாக அவர்கள் நினைத்துக் கொள்வார்கள். இவ்வகையிலான மனநிலையில் உள்ளவர்கள் தங்களது செயல்களால் மனித குலத்துக்கும் தாங்கள் சார்ந்த மதத்திற்கு எத்தனை நாசத்தை விளைவித்தாலும் அத்தகைய செயல்களிலேயே ஈடுபட விரும்புவார்கள்.*

*இந்த எதிர்மறையான மனநிலையின் விளைவாக உருவான மோசமான நிலை என்னவென்றால் 20ஆம் நூற்றாண்டின் முதல் பாதியில் சில முஸ்லிம் தலைவர்கள் தோன்றி, தாங்களே இஸ்லாத்திற்கு புதிய விளக்கத்தை அளித்துக் கொண்டனர். இஸ்லாம் என்பதே தேசத்தின் முழுமையான அரசியல் முறை என்றும், உலகம் முழுக்கவும் இஸ்லாமிய அரசை நிறுவும் பணி இறைவனால் முஸ்லிம்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பது அவர்களது விளக்கமாகும். இவ்வகையான செயற்பாட்டில் இருந்த நன்கறியப்பட்ட நபர்கள்.*

*எகிப்திய சகோதரத்துவ கட்சியின் செய்யத் குதுப்*

*ஈரானிய இஸ்லாமிய கட்சியின் ஆயத்துல்லா குமைனி*

*பாகிஸ்தானிய ஜமாஅத்தே இஸ்லாமியின் அபுல் அஃலா மௌதூதி ஆகியோர் ஆவர்.*

*மிகத்தவறான அபாயகரமான விளக்கத்தைக்கொண்டுள்ளதற்கு மாறாக இத்தகைய அரசியல் பார்வை முஸ்லிம்களிடையே வேகமாகப் பரவியது. முஸ்லிம்கள் தங்களின் தோல்வியடைந்த மனநிலையால் இந்த அரசியல் பார்வையில் எதிர்மறையான பொருத்தமற்ற, ஒவ்வாத எதையும் காணவில்லை. முஸ்லிம்களின் கடந்த கால வரலாற்றின் நிகழ்வுகளால் அவர்களிடம் இருந்த மனநிலை இந்த பொருத்தமற்ற விளக்கத்தோடு ஒத்துப் போயிற்று. அப்படியாக அவர்களின் எதிர்மறையான மனநிலையின் காரணமாக தவறான விளக்கங்கள் அவர்களிடம் எடுபட்டன. இது இஸ்லாத்தின் மீதான அபிமானத்தால் நேர்ந்ததல்ல. இதனால் முளைத்த செயல்களுக்கு கம்யூனிசத்தின் வளர்ச்சியை ஒடுக்க நினைத்த அமெரிக்கா நிதியுதவி செய்தது.*

*1991க்கு முன்பு சோவியத் யூனியன் பெரும் சக்தியாக விளங்கியபொழுது, அமெரிக்காவுக்கு சிம்ம சொப்பமாக விளங்கியது. முஸ்லிம் அடிப்படைவாதிகள் கம்யூனிசம் என்பது இஸ்லாத்திற்கு எதிரானது என்று அதற்கு எதிராக எழுதியும் பேசியும் வந்ததால் முஸ்லிம் அடிப்படைவாதிகளை கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக பயன்படுத்த அமெரிக்கா ரகசியமாகத் திட்டமிட்டு வியூகங்களை கைக்கொண்டது. அடிப்படைவாதிகளுக்கு அமெரிக்கா அனைத்து விதமான உதவிகளையும் செய்தது. சோவியத் யூனியனுக்கு எதிராக பயன்படுத்த அமெரிக்கா ஆயுதங்களை அளித்தது.*

*சோவியத் யூனியனின் இலக்கியங்கள் அரசியல் தத்துவங்கள் ஆகியவற்றை அழிக்கவும் உதவி செய்தது. ஆனால் 'என் எதிரியின் எதிரி எனக்கு நண்பன்' என்ற சூத்திரம் எதிர்விளைவாக ஒரு எதிரியை இன்னொருவனுக்கு எதிரியாக்கி விட்டது. இத்தகைய மறைமுகப் போர் தற்காலிகமான விளைவுகளையே தந்தது.*

*தீவிர அடிப்படைவாதத்தால் பின்னாட்களில் தாக்கமுற்றவர்கள் அவர்களுக்கு எதிரான வன்முறையாக இதனைக் கொண்டார்கள். எனவே துப்பாக்கிக்குத் துப்பாக்கி என்னும் கொள்கையை அவர்கள் தேர்ந்தெடுத்தனர். ஆனால், தொடர்ந்த நிகழ்வுகள் இந்த கொள்கையை முழுத் தவறென்று நிருபித்தன. காரணம் என்னவென்றால் நேரடிப் போராட்டத்தை நிகழ்த்துவதால் ஏற்பட்டதல்லாமல், தவறான கொள்கையின் தவறுகளையும், தோல்விகளையும் இது வெளிக்காட்டியதாலேயே இந்த தோல்வி நேர்ந்தது. நீங்கள் ஆயுதங்களை கொண்டு வெல்லலாம். ஆனால் ஒரு கொள்கையை தோல்வியுறச் செய்வதென்பது மற்றொரு எதிர்கொள்கையால்தான் சாத்தியம் என்பது இன்றியமையாத ஒரு நிபந்தனையாகும். அது இல்லாமல் எதனையும் அடைய முடியாது.*

*தற்கொலைக்குச் சமமானது என்று நிருபிக்கப்பட்டாலும் கூட கண்மூடித்தனமான சிந்தனையால் அதன் உறுப்பினர்கள் நாச வேலைகளில் ஈடுபடுவதை நிறுத்துவதில்லை என்பதால் முஸ்லிம் அடிப்படைவாதம் என்பது அமைதிக்கு அச்சுறுத்தல் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. நாம் இப்பொழுது செய்ய வேண்டியதெல்லாம் அனைத்து விதமான*

*முனைகளிலும் ஊடகங்களைப் பயன்படுத்தி இஸ்லாத்தைப் பற்றிய அடிப்படைவாதிகளின் விளக்கங்களுக்கு குர்ஆனிலோ அல்லது இறைத்தூதர் முஹம்மது (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) அவர்களின் சொல்லிலோ செயல்களிலோ எந்த ஆதாரமும் இல்லை என்பதை மக்கள் அனைவரும் புரிந்து கொள்ளும்படி செய்வதுதான்.*

*இந்த தவறான விளக்கங்களுக்கு எதிராக நல்லதையே நாடும், சகோதரத்துவத்தைப் போற்றும், அமைதியின் அடிப்படையிலான இஸ்லாம் மார்க்கத்தின் உயர் மாண்புகள் அனைவருக்கும் தெரிவிக்கப்பட வேண்டும். இஸ்லாத்தின் சரியான விளக்கம் மக்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டால் தவறாகவழி நடத்தப்பட்ட பெரும்பாலானவர்கள் வெறுப்பு மற்றும் வன்முறைப் பாதையை கைவிட்டு விட்டு 'அமைதியின் இல்லம்' என இறைவன் நம்மை விளிக்கும்படியான இல்லத்திற்கு — இஸ்லாத்திற்கு திரும்புவார்கள்.*

*இந்த வன்முறைச் செயல்களில் ஒரு சிறிய குழுவினரே ஈடுபட்டுள்ளனர் என்பது உண்மை. ஆனால் இஸ்லாத்தின் தவறான விளக்கத்தால் ஊசலாட்ட மனம் பெற்றுள்ள பெரும்பாலானவர்களின் ஆதரவு இந்த சிறு குழுவுக்கு இருக்கிறது. கலீல் ஜிப்ரான் கூறுகிறார்:*

*"முழு மரத்தின் மௌனமான சம்மதம் இல்லாமல் ஒரு இலை கூட உதிராது" என்று பெரும்பான்மையினர் தங்களது மறைமுக ஆதரவை பின்வாங்கிக் கொண்டு இஸ்லாமிய தீவிரவாதத்தை கண்டித்தார்கள் என்றால் இந்த சிறிய குழுக்களுக்கு இருக்கும் தைரியம் அற்றுப் போகும். அது முதல் படியாக இருக்கும். பின்னர் இந்த நேரடியான அடிப்படைவாதக் குழுக்கள் வன்முறைப் பாதையை ஒட்டுமொத்தமாக கைவிட்டு விடுவார்கள். நிச்சயம் கைவிடும் காலமொன்று வரும்.*

# 5

# இஸ்லாமிய ஷரிஆ சட்டங்களும் அதன் பயன்பாடும்

*அழைப்புப் பணிக்கான சில கட்டுரைகளை இணையத்தில் வாசித்துக் கொண்டிருந்தபோது, ஒரு வாசகரின் கடுமையான எதிர்வினை மின்னஞ்சல் மூலம் வந்திருந்தது. கட்டுரையில் சொல்லப்பட்ட கருத்திற்கு மிகவும் கடினமான முறையில் தன் மறுப்பை அவர் தெரிவித்திருந்தார். கட்டுரையின் சில பகுதிகளை அவர் சுட்டிக் காட்டி கட்டுரையாசிரியரின் கருத்து குர்ஆனின் கருத்துக்கு முற்றிலும் முரண்படுவதாக கூறி பின்வருவதை எழுதியிருந்தார்.*

*“மௌலானா வஹீதுத்தின் கான் கூறுகிறார் : முஸ்லிம்களுக்கு எதிராக மற்ற நாடுகள் கொடுமைகளைச் செய்யும் போது சகிப்புத்தன்மை மற்றும் பொறுமையுடன் இறைஅழைப்புப் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று. ஆனால் குர்ஆனிலோ இதற்கு முற்றிலும் முரண்பட்ட விதத்தில் எல்லாம் வல்ல இறைவன் கூறுகிறான்*

*“இறைவனின் மார்க்கம் முழுமையாக நிலைபெறும் வரையில் (மக்காவாசியாகிய நிராகரிக்கும்) இவர்களுடன் போர் புரியுங்கள்” (08:39)*

*இப்போது கூறுங்கள் நாம் பின்பற்ற வேண்டியது இறைவனையா அல்லது மௌலானா வஹீதுத்தின் கானையா?*

இது வெறுமனே குறை கூறுவது என்பது மட்டுமாகவே தோன்றுகிறது. முழுமையான குர்ஆன் இந்த நபரின் கையில்

இப்போது இருப்பதைப் போல மக்காவாசிகளின் கையில் இருந்திருக்குமேயானால் மேலே சாட்டப்படும் குற்றச்சாட்டு சரியாக இருந்திருக்கும்.

இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் முஸ்லிம்களுக்கு எதிரான மக்கா நகரவாசிகள் முஸ்லிம்களுக்கு கொடுமைகள் பல செய்தபோது, சில இறை நம்பிக்கையாளர்கள் அநீதிக்கு எதிராக பதிலடி கொடுக்க இறைத்தூதரிடம் அனுமதி கேட்டனர்.

ஆனால் இறைத்தூதர் அவர்களிடம் பொறுமையைக் கடைப்பிடிக்குமாறு கூறி,

“நான் இறைவனின் செய்தியை பரப்பும் இறை அழைப்புப் பணி செய்யும்படியே கட்டளை இடப்பட்டுள்ளேன். போர் புரிய எனக்கு அனுமதி வழங்கப்படவில்லை” என்று கூறினார் என்பது இஸ்லாமிய வரலாற்றில் இறைத்தூதர் மொழியாக பதிவாகியுள்ளது.

பைண்ட் செய்யப்பட்ட முழுமையான குர்ஆன் அந்த காலகட்டத்தில் இருந்திருந்தால் எவரேனும் ஒருவர் எழுந்து நின்று இப்படி கூறி இருக்கலாம்.

“கவனியுங்கள், நம் எதிரிகளுக்கு எதிராக போர்புரியக் கூறுகையில், முஹம்மது (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) பொறுமை காக்கும்படி கூறுகிறார்”

ஆனால் அப்படிப்பட்ட எதுவும் மக்காவில் நிகழவில்லை. ஏனென்றால் இன்று முழு குர்ஆனையும் மக்கள் பெற்றிருப்பது போல அன்றைய மக்கள் முழு குர்ஆனையும் பெற்றிருக்கவில்லை.

முன்பு கூறப்பட்டது போல மறுப்பு கூறுபவர்கள் தவறு செய்கிறார்கள் என்பதை இதன் மூலம் அறிந்து கொள்ளலாம். குர்ஆனின் வசனங்களை அவை சொல்லப்பட்ட விதத்திலிருந்து மாற்றி புரிந்து கொள்வதிலேயே உண்மையான தவறு இருக்கிறது. இன்றைய காலகட்டத்தில் இறைஅழைப்புப் பணியைச் செய்யும் நிலையில் இருக்கும் முஸ்லிம்கள் தங்களது இறை அழைப்புப் பணியை பொறுமையுடன் செய்ய வேண்டி இருக்கையில் தற்காத்துக் கொள்ள வேண்டிய நிலைக்கான குர்ஆனின் சில வசனங்களை தவறாகப் புரிந்துகொண்டு

*இருக்கிறார்கள். மதீனாவின் சூழ்நிலைக்கேற்ற வசனங்களைக் குறிப்பிடாமல் அதற்கு மாறான மக்கா சூழ்நிலையில் தங்களை இருத்திக் கொண்டு வசனங்களை குறிப்பிடுகிறார்கள்.*

*இவ்வகையில் குர்ஆனிய வசனங்களைத் தவறாகப் பயன்படுத்துவதற்கு அவர்கள் பலியாகி விடுகின்றனர். மதீனா நகரில் இருந்த சூழ்நிலைக்கு பொருத்தமான வசனங்களை மக்கா நகரில் இருந்த சூழ்நிலையில் வைத்துப் பார்க்கின்றனர்.*

*இன்றைய நவீன உலகில் முஸ்லிம்கள் எதிர்கொள்வதாகச் சொல்லப்படும் அனைத்து பிரச்சினைகளையும், நெருக்கடிகளையும் இஸ்லாத்தின் தூதரும் அவர்தம் தோழர்களும் மக்கா நகரில் அனுபவித்தார்கள் என்பதை வரலாறு கூறுகிறது. இருந்தபோதும் இறைத்தூதர் தம் தோழர்களிடம் பொறுமையைக் கடைப்பிடித்து, எதிர்ப்பதை தவிர்த்து இருக்கும்படி கூறியபோது, ஏன் பொறுமைக் காக்க வேண்டும் என்று எவரும் எழுந்து நின்று கேள்வி கேட்கவில்லை. ஏனெனில், போரிடக் கூறும் குர்ஆனிய வசனங்கள் கிடைக்கும்படி முழுக் குர்ஆனும் அப்போது அருளப்பட்டிருக்கவில்லை.*

*இன்று நம்மிடம் இருப்பது போல முழு நூலாக குர்ஆன் ஒரேயடியாக வெளிப்படுத்தப்படவில்லை என்பது உண்மையாகும். குர்ஆன் பல்வேறு சந்தர்ப்பங்களில் 23 ஆண்டுகாலம் பகுதி பகுதியாக அருளப்பட்டதாகும். அத்தகைய கட்டளைகள் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மட்டுமே இறைத்தூதருக்கு அருளப்பட்டன.*

*உதாரணமாக, ஆரம்ப நிலையில் இறை அழைப்புப் பணியைப் பொறுமையைக் கைக்கொண்டு செய்யும்படி இறைத்தூதர் கட்டளை இடப்பட்டார். (74:02—07)*

*பின்னர் நிலைமையின் தன்மைக்கேற்ப புலம் பெயரும் கட்டளை வெளியானது. (16:41)*

*தொடர்ந்து நிலைமை இன்னும் மாற்றமடையவே போரிடும்படி கட்டளை வெளியானது. (02:190)*

*இது எதைக் காட்டுகிறது என்றால், திருக்குர்ஆன் அருளப்பட்ட ஆரம்ப நாட்கள் இஸ்லாம் வடிவம் எடுக்க துவங்கிய காலகட்டமாகும். அதனால், வரலாற்று நிகழ்வுகளின் போக்கிற்கு ஏற்ப அதைப் புரிந்து கொள்வதில் மக்களுக்கு எந்த ஒரு கஷ்டமும் ஏற்படவில்லை. ஆனால் அண்ணல் நபிகளாரின் மறைவுக்குப் பிறகு 23 ஆண்டுகளில் வேத வசனங்கள் அருளப்படுவது நின்று போன பின்னர் அது ஒரு நூலாக தொகுக்கப்பட்டது. அதுதான் பிற்கால தலைமுறையான நம்மிடம் இன்றுள்ள திருக்குர்ஆனாகும்.*

*இஸ்லாத்தின் ஆரம்ப நிலையில் குர்ஆன் வெளிப்படுத்தப்பட்டபோது வெளிப்பாடுகள் சம்பவங்களுடன் ஒத்துப் போவதாக இருந்தது. இதன் காரணமாக கட்டளைகள் வெளிப்பட்ட உடனேயே தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைப் புரிந்து கொள்வது மக்களுக்குக் கடினமானதாக இல்லை. ஆனால் அதன் பின்னர், பல்வேறு சந்தர்ப்பங்களில் சூழ்நிலைக்கேற்ப குர்ஆனின் வசனங்கள் 23 ஆண்டுக் காலம் தொடர்ந்து வந்து கொண்டே இருந்து ஒரு நூலாக தொகுக்கப்பட்டது. இந்த முழு நூல்தான் இன்றைய நாள் வரையில் முஸ்லிம்களின் கைகளில் இருக்கிறது.*

*இயற்கை விதிப்படி சூழ்நிலைகள் மாறிக் கொண்டே இருக்கின்றன. நமது கைகளில் தவழும் புனித நூலான திருக்குர்ஆன் பல்வேறுபட்ட நேரங்களில் வெளியான இறைவெளிப்பாடுகள் என்பதையும் அவை ஒன்றாக குர்ஆன் என்ற புனித நூலாக இருக்கிறது என்பதையும் மனதிற் கொள்ள வேண்டும். அதிலுள்ள வசனங்கள், பல்வேறு கட்டளைகள் மற்றும் அனைத்து சூழ்நிலைகளுக்கான அறிவுறுத்தல்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. அவை அனைத்தும் ஒரே நூலாகியுள்ளது. அப்படி என்றால் பின்வரும் முஸ்லிம் தலைமுறை குர்ஆனிலிருந்து எப்படி வழிகாட்டுதலை பெற முடியும்?*

*இதற்கான பதில் என்னவென்றால் குர்ஆனின் வசனங்களை கற்றறிவது என்பது எந்தச் சூழ்நிலையால், காரணங்களால் வெளிப்படுத்தப்பட்டது என்ற தெளிவுடன் செய்யப்பட வேண்டும். அதாவது எல்லாவற்றிற்கும் முன்னதாக வழிகாட்டுதலை தேடுபவர்கள் சூழ்நிலையில் நிலவும்*

விவகாரங்களின் தன்மையை நன்கு நிர்ணயம் செய்து கொள்ள வேண்டும். பின்னர் இஸ்லாத்தின் ஆரம்பத்தில் இருந்த அதே சூழ்நிலையில் வெளிப்பட்ட இறைவசனம் அல்லது இறைவசனங்களைக் கண்டுபிடிக்க உழைக்க வேண்டும். பொருத்தமான அறிவுரைகள் கண்டுபிடிக்கப்பட்ட பின் நடப்புச் சூழலுக்கு அவை பயன்படுத்தப்பட வேண்டும். அதாவது இஸ்லாத்தின் ஆரம்ப நிலையில் உடனடியாக வெளியான இறைவசனத்தின் நோக்கம், கடந்த கால மற்றும் நிகழ்காலச் சூழ்நிலைகளுக்கு இடையில் உள்ள ஒற்றுமைகள் அறிந்து இப்போது எப்படி செயல்படும் என்பதன்படி பயன்படுத்துவதாகும்.

இதனைச் சரியாகப் புரிந்து கொள்ள இறைதூதருடைய இறைத்தூதுத்துவ காலத்தின் நான்கு நிலைகளை ஒருவர் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும்.

a) மக்கா கால வாழ்வின் முதல் பாகம்

b) மக்கா கால வாழ்வின் இரண்டாம் பாகம்

c) மதீனா கால வாழ்வின் முதல் பாகம்

d) மதீனா கால வாழ்வின் இரண்டாம் பாகம்

மனித வரலாறு முழுவதும் இந்த நான்கு காலங்களும் மீண்டும் மீண்டும் வந்து கொண்டே இருக்கின்றன. குர்ஆனை நன்கு கருத்தூன்றி ஆழமாகப் பயிலும்போது நடப்புலக வாழ்விற்கு இணையான சூழ்நிலைகளை எளிதாகக் கண்டுபிடிக்க முடியும். வரலாற்றின் பிந்தைய காலகட்டங்களில் குர்ஆனிலிருந்து வழிகாட்டுதலைப் பெறுவதென்பது மிகவும் அவசியமானதாகும்.

முன்பே குறிப்பிட்டது போல, இன்று நமக்கு குர்ஆன் முழுமையாகத் தொகுக்கப்பட்ட நிலையில் கிடைப்பதைப் போல இறைத்தூதரின் காலத்தில் (மக்களுக்கு) கிடைக்கவில்லை. அது பகுதி பகுதியாகத் தவணை முறைகளில் வெளிப்படுத்தப்பட்டது. அந்த நேரங்களில் சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான அதாவது, அந்தந்த சூழ்நிலைக்கு ஏற்றவாறு இறைநம்பிக்கையாளர்களுக்கு அவசியமான கட்டளைகள் வெளிப்படுத்தப்பட்டன. அதனால் தாங்கள் புரிய

வேண்டிய பணியில் இறைநம்பிக்கையாளர்களுக்கு எந்தப் பிரச்சினைகளும் எழவில்லை. எனவே அவர்கள் எந்தவிதச் கேள்வியும் எழுப்பாமல் தங்களது பணியை செய்வதில் தங்களை அர்ப்பணிப்புடன் ஈடு படுத்திக் கொண்டார்கள்.

எடுத்துக்காட்டாக, இறைஅழைப்புப் பணி மீது முழு கவனம் தேவைப்பட்ட சூழ்நிலையில் இவ்வசனம் அருளப்பட்டது :

“மறுமை நாளில் தங்கள் பாவச்சுமையை இவர்கள் சுமப்பதுடன் அறிவின்றி இவர்கள் வழிக்கெடுத்த மற்றவர்களின் பாவச்சுமையையும் இவர்களே சுமப்பார்கள் (இவ்வாறு இருவரின் பாவச்சுமையை) இவர்களே சுமப்பது மிக கெட்டதில்லையா. விவேகத்துடனும், அழகிய அறிவுரையுடனும் உம் இறைவனின் பாதையின் பக்கம் அழைப்பீராக! அவர்களுடன் அழகிய முறையில் விவாதம் புரிவீராக! (16:125)

உங்களுடைய அனைத்து மனிதர்களையும் விவேகத்துடனும், மென்மையான உற்சாகத்துடனும் உங்களைப் படைத்தவன் பாதையில் நடத்துங்கள்

ஆகவே இறைத்தூதரைப் பின்பற்றிய அனைவரும் இறை அழைப்புப் பணியை ஓரம்சத் திட்டமாகக் கொண்டு அதில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டார்கள். அதேபோன்று பொறுமையும் சகித்துக் கொள்ளும் மனத்திண்மையும் தேவைப் பட்ட சந்தர்ப்பங்களில் இந்த இறைவசனம் வெளியானது.

(இறைத்தூதரே நம்முடைய) தூதர்களில் உள்ள உறுதிமிக்கவர்கள் (கஷ்டங்களை) பொறுத்துக் கொண்டிருந்தபடியே நீரும் பொறுமையாக இருப்பீராக (46:35)

எனவே இறைநம்பிக்கை கொண்டோர் முழுமையான அர்ப்பணிப்புடனும் சிரத்தையுடனும் பொறுமையான மனோபாவத்தைக் கைக்கொண்டார்கள். அதேபோன்று, எதிரிகளால் அடக்குமுறைத் தாக்குதல் தொடுக்கப்பட்ட போது, தற்காத்துக் கொள்ளுதல் என்னும் தேவை எழுந்தபோது இந்த இறைவசனம் வெளியானது.

“உங்களுக்கு எதிராக போர் புரிந்தவர் மீது இறைவனுக்காக போர் புரியுங்கள் நீங்கள் வரம்பும் மீறாதீர்கள் நிச்சயமாக

*வரம்பு மீறுபவர்களை இறைவன் நேசிக்க மாட்டான்.” (02:190)*

*இந்த இறைக்கட்டளை கிடைக்கப் பெற்றவுடன் அனைத்து இறைநம்பிக்கையாளர்களும் முழுமனதுடன் போரில் ஈடுபட்டனர்.*

*இவ்வகையிலான இயக்கமும் செயல்பாடுமே 23 ஆண்டு தூதுத்துவ காலத்தில் தொடர்ந்தன. சந்தர்ப்பச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு ஒவ்வொரு முறையும் குர்ஆனின் பகுதி வெளியானது. அப்போதைய சூழ்நிலையின் தேவைக்குப் பொருத்தமாக வந்த குறிப்பிட்ட கட்டளை மீதே முழு கவனத்தையும் இந்த முதல் கட்ட இறைநம்பிக்கையாளர்கள் செலுத்தினர்.*

*பல்வேறுபட்ட கட்டளைகள் இருக்கையில் அவற்றில் எதனைப் பின்பற்றுவது என்று முடிவு செய்ய வேண்டிய தேவை அவர்களுக்கு இருக்கவில்லை. ஆனால், காலங்கள் செல்லச் செல்ல விவகாரங்கள் மாறின. இப்போது பல்வேறு கட்டங்களில் வெளியான குர்ஆனின் பகுதிகள் ஒன்று சேர்க்கப்பட்டு ஒரே நூலாக இருக்கின்றது. அதாவது, கட்டளைகளும் அவை வந்த சூழல்களும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப்பட்டு விட்டன.*

*இதன் பின்னர் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் அவற்றுக்குப் பொருத்தமான இறைக் கட்டளை — அறிவுறுத்தல் எது என்பதை ஆழமான ஆராய்ச்சி மற்றும் பயிற்சியில் ஈடுபட்டு உழைத்துக் கண்டுணர வேண்டிய பொறுப்பு முஸ்லிம்களுடையதாகி விட்டது. அப்படியாக பொருத்தமாக குர்ஆனின் வசனத்தைக் கண்டுணர அவர்கள் பிறழாத அர்ப்பணிப்பு மற்றும் பக்தியுடனான வழியை பின்பற்ற வேண்டும்*

*“இன்னும் (மனிதர்களே) குர்ஆன் ஓதப்பட்டால் அதனை நீங்கள் செவி தாழ்த்திக் கேளுங்கள்; வாய் பொத்தியும் (அமைதியாக) இருங்கள்” (07:204) என்று இறைநம்பிக்கையாளர்கள் உணர்வூட்டப்பட்டார்கள்.*

*அதாவது, இறைத்தூதருக்கு அருளி வெளிப்படுத்தப்பட்ட குர்ஆனின் வசனங்கள் மீது முழு கவனத்தையும் குவித்து, பின் அதன் கட்டளைகளை முழு மனதுடன் செயல்படுத்த வேண்டும்.*

*“பயத்தையோ (பொது மக்கள்) பாதுகாப்பையோ பற்றிய யாதொரு செய்தி அவர்களுக்கு எட்டினால் (உடனே) அதனை (வெளியில்) கூற ஆரம்பித்து விடுகின்றனர். (அவ்வாறு செய்யாது) அதனை (இறைவனுடைய) தூதரிடமும் அவர்களுடைய அதிகாரிகளிடமும் (மட்டும்) தெரிவித்தால் அதிலிருந்து ஊகிக்க கூடிய அவர்கள் உண்மையை நன்கறிந்து (தக்க நடவடிக்கைகள எடுத்துக்) கொள்வார்கள் (நம்பிக்கையாளர்களே!) இறைவனுடைய அருளும் அவனுடைய கிருபையும் உங்கள் மீது இல்லையென்றால் (உங்களில்) சிலரைத் தவிர நீங்கள் அனைவரும் ஷைத்தானையே பின்பற்றி இருப்பீர்கள்.” (04:83)*

பின்னாளில் அனுமானம் செய்தல் மற்றும் இறைத்தூதரின் மொழியில் கூறப்பட்ட பாடுபடுதல் ஆகியவற்றின் மீது முஸ்லிம்கள் மிகுந்த பொறுப்புடனிருந்தார்களா என்று கேள்வி கேட்கப்படும். அதாவது, அந்த நேரத்தின் விவகாரத்திற்குத் தொடர்பான இறைக்கட்டளையை மேலதிக நேர்மையுடனும், உண்மையுடனும் இறைவன் மீது அச்சம் கொண்டு தேர்ந்தெடுத்தார்களா அந்தக் கட்டளையைச் செயல்படுத்த எந்த விருப்பமின்மையையும் காண்பிக்காமல் பாடுபட்டார்களா என்பது குறித்தானதாகும் அக்கேள்வி.

அதாவது, இஸ்லாத்தின் முதல் கட்டத்தில் இறை அழைப்புப் பணி தேவைப்பட்டபோது அதற்கான கட்டளை வெளிப்படுத்தப்பட்டது; பொறுமை தேவைப்பட்டபோது பொறுமையை கைக்கொள்வதற்கான கட்டளை வெளிப்படுத்தப்பட்டது. போர் அவசியமான சமயத்தில் போர் புரிவதற்கான கட்டளை வெளிப்பட்டது.

ஆகவே இறைக்கட்டளைகளை புரிந்து கொள்வதிலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் மக்கள் எந்தக் குழப்பத்தையும் எதிர்கொள்ளவில்லை. ஆனால், பின்னாட்களில் பொறுமையைக் கைக்கொள்வது, இறை அழைப்புப் பணி மற்றும் போர் ஆகிய அனைத்தையும் பற்றிய கட்டளைகளை ஒன்றாக ஒரே நூலில் கண்டார்கள். தங்களது குறிப்பிட்ட சூழ்நிலைகளுக்கு பல்வேறுபட்ட கட்டளைகளில் எது பொருத்தமானது என்பதை முஸ்லிம்கள் தாங்களாகவே கண்டறிய வேண்டும். இன்னும் சொல்ல வேண்டுமென்றால் முந்தைய கால சூழ்நிலைகளும் அவற்றுக்கான கட்டளைகளும்

ஒன்றுக்கொன்று நேர்பொருத்தமாக அமைந்திருந்தன. ஆனால் இப்போது ஒரே ஒரு கட்டளையே தேவைப்படும் விவகாரத்தின் முன் பல கட்டளைகள் இருக்கின்றன.

முன்பே கூறியுள்ளபடி, இப்போது நம்மிடம் உள்ள குர்ஆன், வெளிப்படுத்தப்பட்ட நிகழ் நிரலில்லை. அதாவது, குர்ஆனைத் தொகுத்தபோது வசனங்கள் வெளிப்பட்ட ஆண்டு, தேதி, நேர முறை பின்பற்றப்படவில்லை.

வெளிப்படுத்தப்பட்ட குர்ஆனின் வசனங்களை இப்படி, ஆண்டு, மாத, தேதி, நேர முறையில் தொகுக்காதது இறை நம்பிக்கை கொண்டவர்களைச் சோதிப்பதற்காகவேதான். குறிப்பிட்ட சூழ்நிலைக்கு எந்த இறைக்கட்டளை பொருத்தமானது, விரும்பத்தக்கது என்பதைக் கண்டுபிடிக்க காரண காரியங்களை கண்டறியும் தங்கள் அறிவை முஸ்லிம்கள் பயன்படுத்த வேண்டும். இது இஸ்லாத்தின் முதல் கட்டத்தில் இருந்த மக்களுக்கு அளிக்கப்பட்டது போன்ற சோதனையாகும். முதல் கட்ட இறைநம்பிக்கையாளர்கள் இறையுண்மையைக் கூறுவதாகக் கூறிக்கொண்ட பலரிடையே உண்மையாகவே உள்ளவரைக் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது.

அதனைப் போன்றே பிற்கால முஸ்லிம்களுக்கு எந்தச் சூழ்நிலைக்கு எந்த இறைக்கட்டளையைப் பின்பற்றுவது என்பதைக் கண்டறிவது அமைந்துள்ளது. இறைத்தூதரின் வருகை அவர்களின் காலத்தில் இருந்தவர்களுக்கு உண்மையான இறைவழிகாட்டியை அறிந்து கொள்வதற்கான சோதனையாக இருந்தது. அதே போல குர்ஆனின் வெளிப்படுத்தப்பட்ட வசனங்கள் நிகழ் நிரலில்லாதது, இன்றைய மக்களுக்கு அவர்களால் சரியான கட்டளைகளைத் தேர்ந்தெடுக்கும் சோதனையாக உள்ளது. பிற்காலத்தைய முஸ்லிம்கள் முதற்கட்ட முஸ்லிம்கள் கடந்து வந்த சோதனையைப் போன்ற சோதனையைக் கடக்க வேண்டியுள்ளது.

இறைத்தூதரும் அவரது காலத்தைய இறைநம்பிக்கையாளர்களும் அவரது தூதுத்துவத்தின் ஆரம்பகட்டத்தில் மக்காவில் வசித்தனர். அந்தச் சமயத்தில் மக்கா நகரில் சிலை வழிபாடு செய்பவர்களின் தலைவர்கள் ஆதிக்கம் கொண்டிருந்தார்கள். இறைத்தூதரையும் பிற முஸ்லிம்களையும் குற்றஞ்சாட்டி கொடுமை புரிவதை அவர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

*அத்தகைய சூழ்நிலையில் என்னவிதமான எதிர்வினையை இறை நம்பிக்கையாளர்கள் நாட வேண்டும் என்பது அப்போதைய கேள்வியாக இருந்தது. அந்தச் சூழ்நிலையில் இறைவனின் இந்த அறிவுறுத்தலால் அவர்கள் வழி நடத்தப்பட்டார்கள்.*

*(நிராகரிப்பவர்களே!) நீங்கள் இழைக்கும் துன்பங்களைச் சகித்துக் கொண்டு உறுதியாக இருப்போம். ஆகவே நம்புபவர்கள் அனைவரும் இறைவனையே நம்புங்கள் (14:12).*

*அதாவது தங்கள் எதிரிகளால் இழைக்கப்படும் கொடுமைகள் மற்றும் அநீதி ஆகியவற்றை கருத்திற் கொள்ளாமல் பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையை அவர்கள் கைக்கொள்ள வேண்டும்.*

*இப்படியாக, சமயத்துக்கேற்றபடி காட்டப்பட்ட வழிகாட்டுதலால் எவ்விதமான சூழ்நிலையில் தாங்கள் இருந்தாலும் என்ன கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று இறைநம்பிக்கையாளர்கள் கற்றுக் கொண்டனர். எதிரிகள் அநீதியிழைப்பவர்கள் என்ற குற்றத்தை கொண்டிருந்த போதிலும் கூட ஒரு தலைப்பட்சமாக பொறுமையான மனநிலையை கைக்கொள்ள வேண்டும் என்பதை அவர்கள் முழுமையாக புரிந்து கொண்டார்கள்.*

*அதன் பின்னர், இறைத்தூதரும் அவர்தம் தோழர்களும் தங்கள் சொந்த ஊரை விட்டு மதீனாவுக்கு புலம் பெயரும் நேரம் வந்தது. சூழ்நிலைகள் மாறின. புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்ப இறை கட்டளைகளும் கூட மாறின. துன்பத்திற்கு ஆளாக்கப்படும் நிலையிலும் பொறுமையை கைக்கொள்ளும்படி ஆரம்ப வழிகாட்டுதல் இருந்தது. இப்போது துன்பமிழைக்கப்படுவதை எதிர்கொள்ளும் வழி மாறியது. இந்தச் சூழ்நிலையில் வெளியான குர்ஆனின் கட்டளை இப்படி இருந்தது.*

*“(நிராகரிப்பவர்களால்) அநியாயத்தில் சிக்கி போருக்கு நிர்ப்பந்திக்கப்பட்ட (நம்பிக்கை கொண்ட)வர்களுக்கு அவர்களை எதிர்த்துப் போர் புரிய அனுமதி அளிக்கப்பட்டு விட்டது நிச்சயமாக இறைவன் இவர்களுக்கு உதவி செய்ய பேராற்றல் உடையவனாக இருக்கின்றான்.” (22:39)*

*கொடுமை இழைப்படுவதற்கு எதிராக தற்காப்புப் போர் தேவையான சமயம் எது என்பதை இது காட்டுகிறது. ஆனால்*

வேறு சமயங்களில் பொறுமையைக் கைக்கொள்வதல்லாது வேறெதையும் செய்வது விரும்பத்தகாதது. எந்த நேரத்தில் பொறுமையையும் சகிப்புத் தன்மையையும் கைக்கொள்வது, எந்தச் சமயத்தில் தற்காப்புக்காக போர் புரிவது என்பதை எப்படி கண்டுபிடிப்பது என்ற கேள்வி இப்போது எழுகிறது.

முதற்கட்ட இறைநம்பிக்கையாளர்கள் இந்தக் கேள்விகளுக்கு எந்த முடிவையும் அவர்களாக எடுக்க வேண்டியிருக்கவில்லை. அந்தந்த சூழ்நிலைகளுக்கான கட்டளைகள் இறைவனால் வெளிப்படுத்தப்பட்டன. ஆனால் பிற்காலத்தைய முஸ்லிம்களுக்கு இந்த நிலை தொடரவில்லை. அவர்களுக்கு அந்தந்த சூழ்நிலைகளுக்கான கேள்விகள் இருக்கின்றன. ஆனால், அவர்களே அவற்றுக்கான பதில்களை கண்டறிய வேண்டும்.

இங்கேதான் பிற்காலத்தைய இறை நம்பிக்கை யாளர்களுக்கான சோதனை இருக்கிறது. இறைத்தூதரின் காலத்தில் இறைத்தூதர் என்பவரைக் கண்டறிய வேண்டிய சோதனை இருந்தது. பிற்காலத்தைய முஸ்லிம்களுக்கான சோதனை இறைத்தூதரின் கட்டளையைச் சரியாகக் கண்டுகொள்வதில் உள்ளது. இரண்டு வகையான கட்டளைகளையும் ஒரே அத்தியாயத்தில் குர்ஆன் கொண்டுள்ளது. சூழ்நிலைக்கு ஏற்ற கட்டளை எது என்பதையும் எந்தக் கட்டளையை தவிர்க்க வேண்டும் என்பதையும் ஆழமாக, நன்கு கருத்தார்ந்து எந்த பாரபட்சமும் இன்றி கண்டுபிடிக்க வேண்டிய பொறுப்பு இப்போது இறைநம்பிக்கையாளர்களுடையதாக உள்ளது. பொருத்தமான கட்டளை இறைவெளிப்பாடுகளின் மூலம் முன்பு அறியப்பட்டது. ஆனால் இப்போதோ இஜ்திஹாத் — பகுத்தாய்ந்து அறிதல் என்பதன் மூலம் நிர்ணயிக்கப்படுவதாக உள்ளது.

இதனை இன்னொரு கோணத்தில் பார்ப்போம். இறைத்தூதரும் அவர்தம் தோழர்களும் மக்கா நகரில் வாழ்ந்தபோது அங்கு சிலை வணக்கம் புரிபவர்களும் இருந்தனர். இறைத்தூதர் மதீனாவுக்குப் புலம் பெயர்ந்து மதீனாவை வெல்லும் வரை சிலை வணக்கத்தில் ஈடுபடுவோர் மக்காவிலேயே வாழ்ந்து வந்தனர்.

*ஆனால் அவர்களைக் கையாளும் விதத்தில் இரண்டாம் கட்டத்தில் மாற்றமேற்பட்டது. முதல் கட்டத்தில் அளிக்கப்பட்ட இறைக் கட்டளை அவர்களை எச்சரிக்கும் விதமாக மட்டுமே இருந்தது என்பதை வரலாறு காட்டுகிறது.*

*"எழுங்கள் எச்சரியுங்கள், விவேகத்துடன் அவர்களுடைய இறைவனின் பாதையை பின்பற்றும்படி அவர்களிடம் கூறுங்கள்"*

*இந்த இறைக்கட்டளைப்படி இறைத்தூதரும் அவர்தம் தோழர்களும் மக்கா நகர மக்களை அணுகி, இறை அழைப்புப் பணிக்கான குர்ஆனின் வசனங்களை அவர்களிடம் ஓதிக் காட்டுவார்கள். கூடியுள்ளவர்களைப் பார்த்து இப்படிக் கூறுவதை அவர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர்.*

*"ஓரிறைவனைத் தவிர வேறில்லை என்று கூறுங்கள். மேலும் நீங்கள் வெற்றி பெற்றவர்களாவீர்கள்"*

*ஆனால், புலப்பெயர்வுக்குப் பின்னும் மக்கா நகரைக் கைப்பற்றிய பின்னும் நிலைமைகள் மாறின. இப்போது குர்ஆனின் ஒன்பதாவது அத்தியாயமான 'மன்னிப்பு' வெளியானது.*

*"(நம்பிக்கையாளர்களே) இணைவைத்து வணங்குபவர்களில் எவரிடம் நீங்கள் உடன்படிக்கை செய்து கொண்டிருந்தீர்களோ அவர்களிடமிருந்து இறைவனும் அவன் தூதரும் விலகிக் கொண்டனர்." (09:01)*

*இந்த அத்தியாயம் வெளியான பின், ஹஜ் புனிதப் பயணத்திற்கான நேரம் வந்ததும், இறைத்தூதர் இறைவனின் இந்த அறிவிப்பைக் கூற மக்காவுக்கு தனது தோழர்களைக் கொண்ட தூதுக் குழு ஒன்றை அனுப்பினார்.*

*இறைப்பணி அல்லது இறைச்செய்தியை சிலை வணக்கம் புரிபவர்களிடம் கொண்டு சேர்க்க வேண்டியிருந்தபோது இறை அழைப்புப் பணி சம்பந்தமான வசனங்கள் வெளியாயின என்பதை இந்த உதாரணம் மூலம் அறியலாம். எதனை எப்பொழுது செய்யலாம் என்பதை இறைவசனங்கள் சுட்டிக்காட்டின.*

ஆனால், பிற்காலத்தைய முஸ்லிம்களின் நிலை வேறு. இரண்டு விதமான கட்டளைகளையும் கொண்ட முழு நூலாக அது நம்மிடம் உள்ளது. ஆகவே முஸ்லிம்களே பகுப்பாய்ந்து எந்த இறைக்கட்டளை எந்தச் சூழ்நிலைக்குப் பொருத்தமானது என்பதைக் கண்டறிய வேண்டும்.

பிற்காலத்தைய முஸ்லிம்களுக்கான சோதனையாக இது அமைந்துள்ளது. சூழ்நிலைக்கேற்ற இறைக் கட்டளைகளைக் கண்டறியும் அவர்களது திறமையில்தான் அவர்களின் வெற்றி இருக்கிறது. அதனைக் கண்டறிய இயலாமல் போவதில் அவர்களது தோல்வி இருக்கிறது. உதாரணமாக, அவர்களது சாதாரண விவகாரங்களில் பொறுமையையும் அமைதியையும் கொள்ள வேண்டியிருந்தும் அவர்கள் குர்ஆனின் போர் பற்றிய வசனங்களைக் கூறி மற்ற நாடுகளின் மீது போர் தொடுக்கிறார்கள். இது அவர்கள் இந்தச் சோதனையில் தோல்வி அடைந்ததைக் காட்டுகிறது.

இந்தத் தோல்வி மிகவும் மோசமானதாகும். இது இறைத்தூதர் காலத்தில் வாழ்ந்தவர்கள் இறைத்தூதரை அடையாளம் காண்பதில் கண்ட தோல்வி போன்றதாகும். இந்தத் தோல்வியின் விளைவு மிகவும் மோசமானதாகும். அதே வேளையில் இதில் வெற்றி காண்பது மாபெரும் பயனுள்ளதாகும்

**வழிகாட்டுதல் மற்றும் அறியாமையின் ரகசியங்கள்**

“இதனைக் கொண்டு அநேகரை அவன் வழிதவறச் செய்கிறான், இன்னும் இதனைக் கொண்டு அநேகரை நேர்வழி பெறச் செய்கிறான்” (02:26) என்று குர்ஆன் கூறுகிறது.

குர்ஆன் என்பது எந்தச் சந்தேகமுமின்றி இறைவனிடமிருந்து வந்த சத்தியமாகும். அப்படியெனில் சிலர் ஏன் இதிலிருந்து வழிகாட்டுதலைப் பெறுகின்றனர்? ஏன் சிலர் வழிகேடடைகின்றனர்? இதற்கான முதன்மையான காரணம் குறிப்பிட்டுக் கூறுவதில் உள்ள வேறுபாட்டில் உள்ளது. குர்ஆன் சரியான குறிக்கோளுடன் கூடிய அமைப்பில் பயிலப்படுமேயானால் அதனைப் பயில்பவர் வழிகாட்டுதலைப் பெறுவார். மாறாக அதன் குறிக்கோள் மாறுமேயானால் மக்கள் வழிகேடு அடைவதற்கு குர்ஆன் காரணமாகும்.

*குர்ஆனின் பல பகுதிகளை வெளிப்பட்ட காரணங்களின்படி மரபு ரீதியாக, பயிலப்பட்ட ஒளியில் பயில்வதுதான் சரியான கோணத்தில் பயில்வதாகும். அதாவது, வசனங்களின் பின்புலத்தைப் புரிந்து கொண்டு பயில்வதாகும். குர்ஆனின் எந்த வசனம் அல்லது வசனங்கள் குறிப்பிட்ட எந்தச் சூழ்நிலைகளில் வெளியாயின என்பதைக் கூறும். ஹதீஸ் (இறைத்தூதர் மொழி) மற்றும் தஃப்ஸீர் நூல்களில் எண்ணற்ற மரபுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த மரபுகள் ஆரம்பச் செய்தியை புரிந்து கொள்வதற்கு உதவிகரமாக இருப்பது மட்டுமல்லாமல், முன்னர் ஏற்பட்ட சூழ்நிலைகளைப் போன்று பிற்காலத்தில் வரப் போகின்ற சூழ்நிலைகளில் இறைவசனங்களை எப்படிப் பயன்படுத்தலாம் என்பதற்கும் வழிகாட்டுகின்றன.*

*இறைவெளிப்பாட்டு காரணங்களின் அடிப்படையில் மரபு ரீதியாகக் குர்ஆனைப் பயில்வது என்பது குர்ஆன் சாதாரண இயல்புடையது என்று சொல்வதாகாது. இறைக் கட்டளையின் தொடக்க இயல்பை முறையாகப் புரிந்து கொண்டு அதன் பெரும் பயன்பாட்டை கண்டுணரவுமே அப்படி பயில்வது இருக்கிறது. இறைக் கட்டளைகளைப் பிற்காலங்களில் சரியாகப் பயன்படுத்துவதற்காகவும் அப்படி பயில வேண்டி இருக்கிறது.*

*குர்ஆனின் கட்டளைகளில் பெரும்பாலானவை சுருக்கமானவையாக உள்ளன. உதாரணமாக,*

*நம்பிக்கையாளர்களே! யாதொரு விஷமி உங்களிடம் யாதொரு செய்தியைக் கொண்டு வந்தால் (அதன் உண்மையை அறியும் பொருட்டு அதனைத்) தீர்க்க விசாரணை செய்துக் கொள்ளுங்கள் (இல்லையெனில் அவனுடைய சொல்லை நம்பி) அறியாமையால் யாதொரு மக்களுக்கு நீங்கள் தீங்கிழைத்து விட்டுப் பின்னர், நீங்கள் செய்தவைகளைப் பற்றி நீங்களே துக்கித்து கவலைப்படும்படியும் நேர்ந்து விடும்." (49:06)*

*மரபுரீதியான பதிவுகள் குறிப்பிட்டதொரு சம்பவத்தைத் தொடர்ந்து இந்த வசனம் வெளிப்படுத்தப்பட்டதாகக் கூறுகின்றன. ஆனால் குர்ஆனின் வசனத்தில் அந்தச் சம்பவமோ அல்லது அதில் சம்பந்தப்பட்டவர்களோ கூறப்படவேயில்லை.*

*எனவே, அந்த வசனம் தரும் சரியான செய்தியைப் புரிந்து கொள்ள வெளிப்பாட்டிற்குக் காரணமான குறிப்பிட்ட சம்பவத்தின் விவரங்களின்படி குர்ஆனை கற்பது மிகவும் முக்கியமானதாகும்.*

*இப்படியாக மரபுரீதியான பதிவுகள் தெளிவாகப் பதிவு செய்துள்ள சம்பவத்தின் பின்புலத்தில் இந்தக் குர்ஆன் வசனங்களைக் கற்பது சரியானபடி நம்மால் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். ஒரு கட்டளையின் அசலான சந்தர்ப்ப பொருள் புரிந்து கொள்ளப்பட்டால் பின்னாட்களில் நடைபெறும் அதனைப் போன்ற சம்பவங்களில் எப்படி இறை வசனத்தை பயன்படுத்தலாம் என்பதைப் புரிந்து கொள்ள பெரு வாய்ப்பாக அமையும்.*

*முன்பு கூறப்பட்ட வசனம் குர்ஆன் என்பது மக்களுக்கான வழிகாட்டி என்பதையும், மக்களை வழிதடுமாறச் செய்யக் கூடியது என்பதையும் கூறுகிறது. இப்படி வழிதவறக் கூடியவர்கள் யார்? அவர்கள்தாம் குர்ஆனை அதன் முறையான அமைப்பில் பயிலாதவர்கள். அதாவது வெளிப்பாடுகளுடைய காரணங்களின் ஒளியில் பயிலாமல் குர்ஆனை தங்கள் விருப்பப்படியும் சலன சித்தப்படியும் பயில்வதாகும்.*

*இறைவசன வெளிப்பாடுகளின் காரணங்களையும் கொண்டு நாம் குர்ஆனை பயில்வோமானால் இஸ்லாத்தின் நோக்கம் அதன் எதிரிகளை அழிப்பதல்ல என்பதையும் நமது இறை அழைப்புப் பணியால் அவர்களும் இஸ்லாத்திற்குள் வருவதற்கு உதவுவதும் என்ற உண்மை நமக்கு புரிய வரும்.*

*இதனைக் குறித்து குர்ஆனின் இந்த வசனங்கள் நமக்குத் தெளிவைத் தருகின்றன.*

*“எவர் இறைவனின் பக்கம் (மக்களை) அழைத்து (த் தானும்) நற்செயல்களைச் செய்து “நிச்சயமாக நான் இறைவனுக்கு முற்றிலும் வழிபட்டவர்களில் ஒருவன்” என்றும் கூறுகின்றாரோ அவரை விட அழகான வார்த்தை கூறுபவர் யார்? நன்மையும் தீமையும் சமமாகி விடாது (ஆதலால் நபியே தீமையை) நீங்கள் மிக அழகியதைக் கொண்டு தடுத்துக் கொள்ளுங்கள் அவ்வாறாயின் உங்களுடைய கொடிய எதிரியை அதே சமயத்தில் உங்களுடைய உண்மையான மிக்க நெருங்கிய*

*நண்பனைப் போல் காண்பீர்கள் பொறுமை உடையவர்களைத் தவிர மற்றெவரும் இதனை அடைய மாட்டார்கள் அன்றி பெரும் பாக்கியமுடையவர்களை தவிர மற்றெவரும் இதனை அடைய மாட்டார்கள் (நபியே) ஷைத்தானுடைய யாதொரு ஊசலாட்டம் (தீய காரியங்களைச் செய்யும்படி) உங்களைத் தூண்டும் சமயத்தில் (உங்களை அதிலிருந்து) பாதுகாத்துக் கொள்ளும்படி இறைவனிடத்தில் நீங்கள் கோருவீராக நிச்சயமாக அவன் (அனைத்தையும்) செவியுறுபவனும் நன்கறிபவனாகவும் இருக்கின்றான் (ஆதலால் அவன் உங்களை பாதுகாத்துக் கொள்வான்)." (41:33—36)*

*எனவே இறைவெளிப்பாடுகள் வெளியானதன் பின்புலத்தை அறிந்து கொள்வது குர்ஆனிலிருந்து வழிகாட்டுதலைப் பெறுவதற்கு மிக முக்கியமானதாகும். மரபு ரீதியான பதிவுகளின் உதவியில்லாமல் குர்ஆனின் வசனங்களைப் பயில்வதால் ஒவ்வொரு வசனமும் தன்னிஷ்டப்படியான சுயேச்சையான கட்டளைகளைத் தருவது போலாகும். ஆனால், குர்ஆனை மரபு வழியான பதிவுகளின் உதவியுடன் பயில்வது அந்தந்த வசனங்களின் சிறப்பான பயன்பாட்டை நாம் சரியாக அறிந்து கொள்ள உதவும். இறைத்தூதரின் வாழ்வில் எப்பொழுதெல்லாம் நெருக்கடியான கடினமான சூழ்நிலை எழுகிறதோ அப்பொழுதெல்லாம் அதன் தொடர்பாக ஓர் இறை வெளிப்பாடு வெளியாகும்.*

*அத்தகைய விவகாரங்களில் குர்ஆனின் எந்த வசனத்தையும் தனித்து சுயேச்சையான பொருளில் எடுத்துக் கொண்டு பிற்காலத்தைய சூழ்நிலைகளில் பயன்படுத்துவது சரியாகாது. எனவே குர்ஆனின் வசனங்களை அவை வெளியான பின்புலத்தின் துணை கொண்டு பயில்வது முக்கியமானதாகும். பின்புலத்தை அறிந்து கொண்ட பிறகு, பின்னாளில் எழும் அதனைப் போன்ற சூழ்நிலைகளில் அதனை நம்மால் பயன்படுத்த .முடியும். இதன்படி குர்ஆனின் வசனங்களை முறையான வழிகாட்டியாகக் கொள்ளலாம். அதற்கு மாறாக குர்ஆனைப் பயில்வது வரம்பு மீறுதலின் மூலச் செயல்பாடாகும்.*

*சுருக்கமாக, குர்ஆன் என்பது பல்வேறுபட்ட கட்டளைகளைக் கொண்ட திரட்டு நூலாகும். எடுத்துக்காட்டாக, குர்ஆன் ஓரிடத்தில்,*

*"ஆகவே உங்களுக்கு ஏவப்பட்டதை(த் தயக்கமின்றி) நீங்கள் அவர்களுக்கு விவரித்து அறிவித்து விடுங்கள் மேலும் இணை வைத்து வணங்கும் இவர்களை புறக்கணித்து விடுங்கள்" (15:94) என்று கூறுகிறது.*

வேறொரு இடத்தில் கீழ்காணும் கட்டளை வருகிறது

*"(நம்பிக்கையாளர்களே) உங்களில் (உண்மையாகவே மனம் விரும்பி) போர் புரிந்தவர்கள் யாரென்பதையும் இறைவனையும் அவனுடைய தூதரையும் நம்பிக்கையாளர்களையும் தவிர (மற்றெவரையும் தங்களுடைய) அந்தரங்க நண்பர்களாக (உங்களில்) எவரும் எடுத்துக் கொள்ளவில்லை என்பதையும் இறைவன் உங்களைச் சோதித்து அறிவிக்காமல் நீங்கள் விட்டு விடப்படுவீர்கள் என்று எண்ணிக் கொண்டீர்களா? இறைவன் நீங்கள் செய்பவற்றை நன்கறிந்தவனாகவே இருக்கிறான்." (09:16)*

*"அவர்கள் உங்களுக்கு எதிராகப் போரிட்டதால் சிலை வணக்கம் புரிவோருக்கு எதிராக போரிடுங்கள்." (09:16)*

*இந்த இரண்டு வசனங்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை போல தோன்றுகின்றன. எனவே, இன்றைக்கு குர்ஆனை வாசிப்பவர் எந்தக் கட்டளையைப் பின்பற்ற வேண்டும் என்ற கேள்வி எழுகிறது.*

*இந்தஇறைவசனங்கள்வெளியானபின்புலம்அதற்காகபதிலைத் தருகிறது. குர்ஆனின் அனைத்து கட்டளைகளும் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் வெளிப்படுத்தப்பட்டன. பின்புலம் பற்றிய மரபு ரீதியான பதிவுகள் எந்தச் சூழ்நிலையில் எந்த வசனம் அருளப்பட்டதுஎன்பதைநமக்குத்தெரிவிக்கின்றன.இவ்வாறாக, குர்ஆனின் வசனங்களை நாம் பயிலும் பொழுது, குர்ஆனின் அந்தக் கட்டளைகள் முதலில் எங்கு பயன்படுத்தப்பட்டன என்பதை நாம் அறியலாம். முதலில் பயன்படுத்தப்பட்டது முறையாகப் புரிந்து கொள்ளப்படுமேயானல் அதனை மீண்டும் பயன்படுத்துவதற்கான மிகச் சரியான அறிவு கிடைக்கும். முதலில் பயன்படுத்தப்பட்டது சரியாகப் புரிந்து கொள்ளப்படுவது மீண்டும் பயன்படுத்தப்படுவதற்கான முழுமையான திருத்தத்தை அளிக்கிறது.*

*இப்பொழுது நாம் செய்ய வேண்டியது என்னவென்றால் குர்ஆன் ரீதியான தீர்வு தேவைப்படும் சூழ்நிலையை நாம் எதிர் கொண்டால், குர்ஆன் வசனங்கள் அருளப்பட்டதன் பின்புலங்களின் மரபு ரீதியான பதிவுகளை நாம் கட்டாயமாகத் தெளிவாக கற்றுணர வேண்டும். அத்தகைய சூழ்நிலைகளை இறைத்தூதரின் தோழர்கள் எதிர்கொண்ட போது (அவர்களுக்கான கட்டளைகளாக அளிக்கப்பட்ட) குர்ஆனின் எந்த வசனங்கள் பொருந்தும் என்பதை நம்மால் கண்டறிய முடியும். ஒரே மாதிரியான இரண்டு சூழ்நிலைகளில் நாம் எதிர்கொள்ளும் சூழ்நிலைக்கு வழிகாட்டியாக எந்த வசனம் அல்லது வசனங்கள் இருக்கும் என்பதை அறிந்து கொள்ள முடியும். அதாவது முதலில் பயன்படுத்தப்பட்டதன் ஒளியில் நாம் இரண்டாவதாகப் பயன்படுத்துவதை நிச்சயமாக நிர்ணயிக்க வேண்டும்.*

# 6

# இஸ்லாமியச் செயல்பாடு

*இறைத்தூதர் முஹம்மதை (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) விளித்து குர்ஆன் கூறுகிறது :*

*“(நபியே) நம்முடைய தூதர்களிலுள்ள வீரர்கள் (கஷ்டங்களைச்) சகித்துக் கொண்டிருந்தபடியே நீங்களும் சகித்துக் கொண்டு பொறுமையாக இருங்கள். அவர்களுக்கு (வேதனையை) நீங்கள் அவசரப்பட வேண்டாம். அவர்களுக்கு வாக்களிக்கப்பட்டதை அவர்கள் காணும் நாளில் (இப்புவியில்) ஒரு பகலில் ஒரு நாழிகையே தவிர (அதிகமாக)த் தங்கி இருக்கவில்லை என்று அவர்கள் எண்ணுவார்கள் (இதனை) அவர்களுக்கு (நீங்கள்) அறிவிக்க வேண்டும் ஆகவே பாவம் செய்த மக்களைத் தவிர (மற்றெவரும்) அழிக்கப்படுவார்களா? (இல்லவே இல்லை)” (46:35)*

அதாவது, பாதகமான சூழ்நிலைகளில் அடக்கமாகவும் எதிர்மறையான செயல்பாடுகளைத் தவிர்த்தும் இருத்தலே இஸ்லாமிய செயல்பாட்டின் அடிப்படைக் கொள்கைகளாக இருக்கின்றன. இதன் பொருள் என்னவென்றால் சாதகமற்ற சூழ்நிலைகளில் எந்த விதத்திலும் உணர்ச்சி வசப்பட்டு செயல்படாமல் பதிலடி கொடுப்பது என்ற வழியைத் தவிர்த்து உண்மையான எதார்த்த நிலையின் அடிப்படையில் செயல்களைத் திட்டமிட வேண்டும் என்பதாகும்.

இந்தக் கொள்கையை நேர்மறைச் செயல்பாடு என்று சுருக்கமாக அழைக்கலாம். அதாவது, இருந்து கொண்டிருக்கிற

*பாதகமான நிலையில் தலையிடாமல் கிடைக்கக் கூடிய நல்ல வாய்ப்புகளை கண்டுபிடிப்பதாகும். இருக்கும் நிலையை சவால் விடுவது போல் செயல்களை ஒருவர் செய்யத் துவங்குவது எதிர்மறையான செயலின் தொடக்கப் புள்ளியாகி விடும். மற்றொரு வகையில் நிலைமையை அப்படியே வைத்துக் கொண்டு கிடைக்கக் கூடிய வாய்ப்புகளைக் கண்டறிந்து செயல்படுவது நேர்மறைச் செயல்பாடாகும். இத்தகைய செயல்பாட்டு முறையை இறைத்தூதர் முஹம்மதின் (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) வாழ்க்கை வரலாற்றின் ஒளியிலிருந்து திட்டமிட்டுக் கொள்ளலாம்.*

**1. மத விவகாரங்களில் நேர்மறைச் செயல்பாடு**

*இறைத்தூதர் முஹம்மது (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) தனது முதல் தூதுத்துவ அழைப்பை கி.பி.610ஆம் ஆண்டில் மக்காவில் பெற்றார். இந்த நகரம் சிலை வணக்கம் புரிபவர்களின் ஆதிக்கத்தில் இருந்தது. அவர்கள் அரேபியப் பழங்குடிகளின் 360 சிலைகளை காபாவில் வைத்திருந்தனர். எனவே இந்தப் பழங்குடிகள் அனைவரின் வழிபாட்டுத்தலமாக காபா ஆனது. ஓரிறைக் கொள்கை என்பதன் உண்மையான பொருளில் ஓரிறைவனை வணங்கக்கூடிய இறைத்தூதரின் நம்பிக்கைகளுக்கு முற்றிலும் எதிரானதாக காபாவில் இந்த சிலைகள் இருந்தன. அப்படி இருந்தும் மக்காவில் நிலவி வந்தச் சூழலுக்கு எந்த பாதகத்தையும் உருவாக்க முயற்சிக்காமல் கிடைத்த வாய்ப்புகளில் எல்லாம் இறைவனின் செய்தியைப் பரப்பும் பணியில் இறைத்தூதர் ஈடுபட்டார்.*

*அக்காலத்தில் காபா என்பது மக்கா நகரவாசிகள் ஒன்று சேர்ந்து சந்திக்கும் இடமாக இருந்தது. கிட்டத்தட்ட அனைத்து நாட்களிலும் சந்திப்புகள் நிகழ்ந்தன. இந்தச் சந்திப்புகளை இறை அழைப்புப்பணிக்கு இறைத்தூதர் பயன்படுத்திக் கொண்டார். அவர் காபா ஆலயத்திற்கு வந்ததும் சிலைகள் சம்பந்தமாக எந்த செயலிலும் ஈடுபடாமல் குர்ஆனின் வசனங்களை அங்கே குழுமி இருந்தவர்களிடம் ஓதிக் காட்டுவார். இது விவேகமான செயலாக இருந்தது. குர்ஆனின் வசனங்களால் ஆழ்ந்த தாக்கத்திற்காளான பலர் இஸ்லாத்தைத் தழுவினர். மேலும் இது மக்காவின் அமைதிக்குப் பங்கம் விளைவிக்காமல் செய்யப்பட்டது. இது இறைத்தூதரின் இறைப்பணி முயற்சிகளுக்கு பெரும் ஊக்கத்தை அளித்தது.*

**2. சமூக விவகாரங்களில் நேர்மறைச் செயல்பாடு**

*மக்காவில் “தார் அந்நத்வா” என்றொரு பொதுக் கூடம் அரசியல் மையமாக இருந்தது. அந்த இடம் சிலை வணக்கம் புரிபவர்களின் ஆதிக்கத்தில் இருந்தது. இறைத்தூதர் முஹம்மதுக்கான (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) எதிர்ப்பு வலுத்ததும், இறைத்தூதர் அவர் குடும்பம் மற்றும் அவரைப் பின்பற்றியவர்களை எதிலும் சேர்க்காமல் விலக்கி வைப்பது என்று ஒரு மனதாகத் தீர்மானிக்கப்பட்டது. இந்த விலக்கி வைத்தல் இறைத்தூதரின் அழைப்புப் பணியில் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாததால் அவரது எதிரிகளால் அவரைக் கொல்வதற்கான அறிவிப்பும் அதே “தார் அந்நத்வா”வில் செய்யப்பட்டது.*

*இதனைக் கேள்விப்பட்ட இறைத்தூதர், சூழ்நிலை மிகவும் தீவிரமானதாக இருந்தபோதிலும் தார்—அந்நத்வாவில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை ரத்து செய்யவோ அல்லது தனது ஆதரவாளர்களைக் கொண்டு எதிர்ப்பியக்கம் செய்யவோ இல்லை. மாறாக, மக்காவிலிருந்து 300 மைல் தொலைவிலுள்ள மதீனா நகரை நோக்கிச் செல்ல இறைத்தூதர் தீர்மானித்தார். மதீனா நகரை அடைந்த பின்பும் கூட எதிரிகளுக்கு எதிரான எந்த நடவடிக்கையையும் செய்வதற்கு நேரம் ஒதுக்காமல் தனது முழு கவனத்தையும் இறை அழைப்புப் பணிக்கே அவர் அளித்தார். இது நேர்மறைச் செயல்பாட்டுக்கான இன்னொரு உதாரணமாகும். இப்படியாக, நிலவி வந்தச் சூழலுக்கு எதிராக எந்த எதிர்ப்புச் செயலிலும் ஈடுபடாமல் தனது அமைதி வழிச் செயல்பாட்டுக்கான பெரியதொரு தளத்தை அவர் தேர்ந்தெடுத்தார்.*

**3. அரசியல் விவகாரங்களில் நேர்மறைச் செயல்பாடு**

*தனது பதின்மூன்று ஆண்டுகால தூதுத்துவச் செயல்பாட்டின் பின் இறைத்தூதர் மதீனவை அடைந்த போது மதீனாவில் முஸ்லிம்கள், சிலை வணக்கம் புரிபவர்கள் மற்றும் யூதர்கள் என்று மூன்று பிரிவினர் இருந்தனர். இந்த சமூக அமைப்பை ஏற்றுக் கொண்டு பன்மைத் தன்மையின் அடிப்படையிலான சமூக அமைப்பை இறைத்தூதர் நிர்மாணித்தார். மதீனா நகரம் என்ற அமைப்பு உருவாகி அதன் தலைவராக இறைத்தூதர் இருந்தார். இந்த அமைப்பிற்குள் மற்ற சமூகக்*

குழுக்களுக்கு தாங்கள் விரும்பியபடி வாழவும் தங்களது மத மற்றும் கலாச்சாரப் படி தங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளவும் உரிமைகள் வழங்கப்பட்டன.

இந்த அமைப்பு நிலவும் அமைப்பை அப்படியே ஏற்றுக் கொள்வதற்கான இன்னொரு உதாரணமாகும். அதாவது முன்பே நிலவும் சூழலை ஏற்றுக் கொண்டு இறைத்தூதர் தனது அமைதியான இறை அழைப்புப் பணியைத் தொடங்கினார். விளைவு அதி அற்புதமாக இருந்தது. முதல் நிலையில் பன்மைக் கலாச்சாரச் சமூகமாக இருந்தது. இரண்டாம் நிலையில் ஒரே கலாச்சாரம் கொண்ட சமூகமாக மாறியது.

### 4 கௌரவம் சார்ந்தவற்றில் நேர்மறைச் செயல்பாடு

இறைத்தூதர் தனது சொந்த நகரான மக்காவை விட்டு மதீனா சென்ற பிறகும் கூட, மக்கா நகரில் இருந்த அவரது எதிரிகள் தங்கள் பகைமையை விடாமல் அவருக்கு எதிராக ஆயுதத் தாக்குதலை மேற்கொள்ள முடிவு செய்தனர். பல சிறிய கைகலப்புகளுக்கும் மேலாக பத்ர், உஹத் என்ற இடங்களில் இரண்டு பெரும் போர்கள் நிகழ்ந்தன. இறை அழைப்புப் பணியை நடத்துவதற்கான அமைதிச் சூழலை இந்தப் போர்கள் பாதித்தன. ஆகவே மக்கா நகரத்தவருடன் இறைத்தூதர் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு அவர்கள் விதித்த அத்தனை நிபந்தனைகளையும் ஏற்றுக் கொண்டு ‘ஹுதைபிய்யா’ உடன்படிக்கை எனப்படும் பத்தாண்டுகால போர் நிறுத்த உடன்படிக்கையைச் செய்து கொண்டார். இதுவும் கூட நிலவும் அதே நிலையை ஏற்கும் நேர்மறைச் செயல்பாட்டின் உதாரணமாகும். அந்த உடன்படிக்கையின்படி மக்கா நகரத்தவரின் கோரிக்கைகளை இறைத்தூதர் அப்படியே ஏற்றுக் கொண்டார். அவர்களது நிலையை அப்படியே ஏற்றுக் கொண்டதால் அந்த சூழ்நிலை அளித்த அனைத்து வாய்ப்புகளையும் இறைத்தூதர் பயன்படுத்தி இறை அழைப்புப் பணியில் ஈடுபட்டார். “வெளிப்படையான வெற்றி” என்று குர்ஆன் கூறும் வெற்றியை இது அளித்தது.

“மக்காவின் சமீபமாக அவர்கள் மீது உங்களுக்கு வெற்றியைக் கொடுத்ததன் பின்னர், அவர்களுடைய கைகளை உங்களை விட்டும் அவனே தடுத்துக் கொண்டான். (அவ்வாறே)

*உங்களுடைய கைகளையும் அவர்களை விட்டு தடுத்துக் கொண்டான். ஏனென்றால் அல்லாஹ் நீங்கள் செய்தவைகளை உற்று நோக்கியவனாகவே இருந்தான் 48:24 என்று கூறுகிறது*

*"(நபியே ஹுதைபிய்யாவின் சமாதான உடன்படிக்கையின் மூலம்) நிச்சயமாக நாம் உங்களுக்கு (மிகப்பெரிய) தெளிவானதொரு வெற்றியை தந்தோம்." (48:01)*

**5. பதவி – பொறுப்பு போன்றவற்றில் நேர்மறைச் செயல்பாடு**

*தனது வாழ்வின் முக்கியமான பகுதி முழுவதும் முஹம்மது (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) இறைவனின் தூதராகவும் தேசத்தலைவராகவும் இருந்தார். அவரது மரணத்திற்குப் பின் அவரது பொறுப்பிற்கு — இடத்திற்கு யாரைத் தேர்ந்தெடுப்பது என்ற கேள்வி எழுந்தது. இந்தப் பிரச்சினை இறைத்தூதர் அளித்த வழிகாட்டுதலின்படி தீர்க்கப்பட்டது. அது இப்படி இருந்தது : "நாட்டின் தலைமைப் பதவிக்கு குறைஷியர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்"*

*இது வழக்கமில்லாத கட்டளை என்பது வெளிப்படையானது. ஏனெனில் இஸ்லாமிய போதனைப்படி அனைவரும் சமம். எவருமே எவருக்கும் மேலானவர் அல்ல. அந்த வகையில் தலைமைப் பதவிக்கு குறைஷியரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பது பாரபட்சமானதே. ஆனால் பாரபட்சம் என்பதை விட அது எதார்த்தமான உண்மையாக இருந்தது. நிலவும் சூழலுக்கேற்ப நேர்மறைச் செயல்பாட்டுக்கான இன்னுமொரு உதாரணமாகும் இது. உண்மையில், பல நூற்றாண்டு காலமாகப் பாரம்பரிய வழக்கப்படி அரேபியாவின் தலைவர்களாக குரைஷியர்களே இருந்து வந்தனர். இந்த நிலையில் உடனடி மாற்றம் கொண்டு வருவது என்பது அடக்க முடியாத தீர்க்க முடியாத பிரச்சினைகளை உருவாக்கும். எனவேதான் நடப்பில் இருக்கும் அரசியல் முறையை அப்படியே ஏற்றுக் கொள்ளும்படி இறைத்தூதர் முஸ்லிம்களுக்கு அறிவுரை வழங்கினார். இந்த விவேகமான கொள்கையின் காரணமாக அரபு ஒற்றுமை காக்கப்பட்டு இறைத்தூதரின் மரணத்திற்குப் பிறகு கூட இஸ்லாமிய அழைப்புப் பணி எந்த வகையிலும் இடையூறுகள் ஏதுமின்றி தொடர்ந்தது.*

## 6. நாட்டு விவகாரங்களில் நேர்மறைச் செயல்பாடு

*இறைத்தூதர் முஹம்மது (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) அவர்களின் மரணத்திற்குப் பின்னரும் கூட இஸ்லாத்தின் ஆரம்ப நிலையில் நேர்மறைச் செயல்பாட்டு முறை தொடர்ந்தது. அப்பாஸிய கலீஃபாக்களின் காலம் முழுவதும் உமையாக்களின் இறுதிப் பாதிகாலம் வரை இந்த நேர்மறைக் கொள்கை அறிஞர்களால் பின்பற்றப்பட்டது. மிகச் சிறந்த உதாரணமாகும். இந்தக் காலகட்டத்தில் அரசியல் அமைப்பு இழிவாகி களங்கமாகி விட்டது. இருந்தபோதும் அந்த நேரத்தில் இருந்த அனைத்து மார்க்க அறிஞர்களும் அதிகாரத்தில் இருந்தவர்களுடன் எந்த மோதலிலும் ஈடுபடாமல் தவிர்த்தனர். அப்படி முஸ்லிம் ஆட்சியாளர்களுக்குள் போர் நிகழ்ந்து விடாமல் முஸ்லிம் அறிஞர்கள் தடுத்துக் காத்தனர். அதிகாரத்தில் இருந்தவர்களுடன் மோதலைத் தேர்ந்தெடுத்தவர்கள் அகற்றப்பட்டனர்.*

*அரசியல் அமைப்பில் இஸ்லாமிய அறிஞர்கள் தலையிடாமல் இருந்தது. இஸ்லாமிய நூலகம் என்ற பெரும் பொக்கிஷத்தை உருவாக்கும் சுதந்திரத்தை அளித்தது. இந்த கால கட்டத்தில்தான் ஒட்டுமொத்த முதல் தரமான சிறந்த இஸ்லாமிய இலக்கியங்கள் உருவாக்கப்பட்டது என்பது வரலாற்று உண்மையாகும். அரபு மொழி வளர்ச்சி, அதன் இலக்கண முறை, அதன் அழகான எழுத்து முறைகள், குர்ஆனின் அதிநுட்ப உரைகள், இறைத்தூதரின் மொழிகளைத் தொகுக்கும்பணி, ஃபிக்ஹ் எனப்படும் மதச் சமூக சட்டங்கள், வேத சாஸ்திர இலக்கியத் தயாரிப்பு போன்ற அனைத்தும் இந்தக் காலகட்டத்தில் முன்னேற்றம் கண்டன.*

*இஸ்லாமிய அறிஞர்கள் ஊழல்படிந்த அரசியல் அமைப்புக்கு எதிராக எழுந்திருந்தார்கள் என்றால் அற்புதமான இந்த இலக்கியங்கள் வந்திருக்க முடியாது. இஸ்லாத்தின் இரண்டாம் மூலாதாரம் எனக் கொள்ளப்படும் இறைத்தூதரின் மொழிகள் வருங்கால சந்ததியினருக்கு பாதுகாப்பாகக் கொண்டு சொல்லப்பட்டிருக்காது. பதிப்பு யுகம் அது வரை தோன்றியிருக்கவில்லை. இஸ்லாமிய ஆன்மீக பொக்கிஷங்கள் அனைத்தும் உயிரோடு வாழ்ந்து கொண்டிருந்த அறிஞர்களின் மனதிலேயே சேகரமாயிருந்தன, ஆட்சியாளர்களுடன் இந்த*

*அறிஞர்கள் மோதலில் ஈடுபட்டு இருந்திருப்பார்களேயானால் இஸ்லாமியச் சிந்தனைகள் மற்றும் செயல்முறைகளின் அனைத்து பொக்கிஷங்களும் அவர்களுடன் சேர்ந்து புதையுண்டு போயிருக்கும். சமூக விவகாரங்களில் நேர்மறைச் செயல்பாடு என்பது மாற்ற முடியாத இஸ்லாமியக் கொள்கையாகும். இந்தக் கொள்கையை தேர்ந்தெடுத்ததால் தான் இறைத்தூதரும் அவர் தம் தோழர்களும் மனித நாகரிகத்தின் அனைத்து மதச்சார்பான, மதச்சார்பற்ற தளங்களிலும் புதிய யுகத்தை ஏற்படுத்திய இஸ்லாத்தின் பெரிய வரலாற்றை உருவாக்கினார்கள்.*

**பொறுமையின் எல்லையற்ற வாய்ப்புகள்**

*இறைத்தூதர் முஹம்மது (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) தனது ஏகத்துவ கொள்கைக்கான பணியைத் துவங்கியபோது பண்டைய மக்காவில் பழைய நிலையே நிலவி வந்தது. நகரின் தலைமைப் பொறுப்பு குறைஷியர்கள் வசம் இருந்தது. அவர்களுடைய நம்பிக்கையின்படி அவர்கள் சிலை வணக்க முறையை ஏற்படுத்தியிருந்தனர். இறைத்தூதர் முஹம்மது (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) எப்படித்தான் பணியைத் துவங்குவார் என்பது கேள்விக்குரியதாக இருந்தது. குறைஷியர்களின் அதிகாரத்தில் நிலவிய சூழலை ஒழித்தாலே இறைத்தூதரின் பணிபுரியும் பாதை துலக்கமாகும் என்பது போலத் தோன்றியது. அந்த நிலைமையில் அடிப்படையான குறிப்பிட்ட வழிகாட்டுதல் இறைத்தூதருக்கு வெளியானது. இறைவன் குர்ஆனில் அறிவிக்கிறான் :*

*“நிச்சயமாக கடினத்துடன் இலகுவானது இருக்கிறது; ஒவ்வொரு கடினத்துடனும் நிச்சயமாக இலகுவானது இருக்கிறது.” (94:05—06)*

*மக்காவில் நிலவி வரும் சூழல் பெரும் தடையாக இருப்பது போலத் தோன்றினாலும் இயற்கை விதிப்படி அவருடைய குறிக்கோளுக்கான முன்னேற்ற வாய்ப்புகள் இருந்தன. ஆகவே நிலவும் சூழ்நிலையை முதல் கட்டத்திலேயே மாற்ற எந்த முயற்சியும் செய்யப்படக் கூடாது. நிலவும் சூழ்நிலைக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படுத்தாமல் மற்ற தளங்களில் கிடைக்கும்*

வாய்ப்புகளை இஸ்லாமிய சேவைக்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது.

நமது இலக்குகளை அடைய இஸ்லாம் நமக்கு பரிந்துரைக்கும் முறைக்கான முன்மாதிரியை இறைத்தூதரின் வாழ்விலிருந்து பெறுகிறோம். இதனை சுருக்கமாகக் கூற வேண்டுமென்றால் பொறுமை என்பதன் அடிப்படையிலான முறை என்று கூறலாம். அதாவது, நிலவும் சூழ்நிலையில் இணக்கமாக இருந்துகொண்டு சாத்தியமான வழியில் ஒருவர் தனது போராட்டத்தைப் புரிய வேண்டும். இவ்வகையில் இதனை நிலவும் சூழலில் நேர்மறைச் செயல்பாடு என்று கூறலாம்.

### 1. தடைக் கற்களை படிக்கல்லாக மாற்றிக் காட்டுதல்

இறைத்தூதர் முஹம்மது (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) தனது இறைச்சேவையை மக்காவில் தொடங்கிய போது மிகப் புனிதமான பள்ளியில் நூற்றுக்கணக்கான சிலைகள் வைக்கப்பட்டிருந்தன. ஓரிறைக் கொள்கைக்கான மையமாக கட்டப்பட்ட காபா பல தெய்வ வணக்க முறைக்கான இடமாக கண்முன்னே மாறி நின்றது. அந்த நேரத்தில் இறைத்தூதர் முஹம்மது (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) பின்பற்றிய முறை நிலவும் சூழ்நிலைக்கேற்ப நேர்மறைச் செயல்பாடு என்பதற்கான முழு உதாரணத்தை அளிக்கிறது.

இறைத்தூதர் செய்தது என்னவென்றால் சிலைகள் மற்றும் சிலை வணக்க முறைகளில் எந்தத் தலையீடும் செய்யாமலிருந்ததுதான். அவர் அவற்றை அப்படியே விட்டு விட்டு ஓரிறைக் கொள்கைக்கான அழைப்புப் பணியைக் காபா ஆலயத்திற்கு வருபவர்களிடம் தினசரி செய்யத் தொடங்கினார். ஒவ்வொரு நாளும் வரும் பெருங்கூட்டம் இறைத்தூதருக்கும் கிடைத்தது. குர்ஆனிலிருந்து வசனங்களை அவர்களிடம் அவர் வாசிக்கத் தொடங்கினார். இவ்வகையில் இஸ்லாம் நாடு முழுவதும் படிப்படியாக பரவத் தொடங்கியது.

### 2. எதிர்ப்பதைத் தவிர்ப்பது நிலவும் சூழ்நிலையை படிப்படியாக மாற்றும்

இறைத்தூதர் என்ற தகுதியைப் பெற்ற பின் மக்கா நகரில் இறைத்தூதர் பதின்மூன்று ஆண்டுகாலம் வாழ்ந்தார். இந்த

*காலகட்டத்தில் சிலர் இஸ்லாத்தை ஏற்றனர். ஆனால் பெரும்பாலானோர் தொடர்ந்து இஸ்லாத்தை எதிர்த்து வந்தனர்.*

*அந்த நேரத்தில் தார் அந்நத்வா என்ற பொதுக்கூடம் அரசியல் மையமாக இருந்தது. மக்கா நகரத்தலைவர்கள் இந்த இடத்தில் சந்தித்து இறைத்தூதர் முஹம்மது (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) அவர்களை விலக்கி வைக்க ஒரு மனதாகத் தீர்மானித்தார்கள். அதன் மூலம் அவரது செயல்பாட்டைத் தடை செய்ய இயலாமல் போனபோது அவரைக் கொலை செய்யத் தீர்மானித்தனர். அந்த நேரத்தில் தனக்கு எதிராக இருந்த அந்த தார் அந் நத்வாவைக் கைப்பற்ற இறைத்தூதர் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. மக்கா நகரத் தலைவர்களுக்கு எதிராக எந்த பகை நடவடிக்கையையும் கூட இறைத்தூதர் தொடங்க வில்லை. அழிக்கும்படியான எந்த சண்டையும் இடவில்லை. அவர் நிலவரத்தை உள்ளது உள்ளபடியே எடுத்துக் கொண்டு மதீனாவுக்குச் சென்றார். மதீனா அவரது செயல்களின் மையமாக ஆனது. தொலைநோக்கு மற்றும் உயர்வான இந்தச் செயல்பாடு அசாதாரணமான விளைவுகளைத் உருவாக்கியதை வரலாறு நமக்குக் கூறுகிறது.*

### 3. உள்நாட்டின் இணக்கமான சூழல் புற விரிவாக்கத்தை விளைவிக்கும்

*அந்தக் காலத்தில் மதீனா நகரில் மூன்று மதக் குழுக்கள் இருந்தன. அவை முஸ்லிம்கள், யூதர்கள் மற்றும் சிலை வணக்கம் புரிவோர் ஆகும். இங்கும் கூட இறைத்தூதர் நிலவும் சூழ்நிலையில் எதிர்த்துப் போராடவில்லை. மாறாக, ‘ஸஹீஃபா அல் மதீனா’ என்ற திட்டத்தை — ஏற்பாட்டை அவர் செய்ததாக இஸ்லாமிய வரலாறு கூறுகிறது. நவீன காலத்தில் தலையிடாக் கொள்கை என்று கூறப்படும் அதே கொள்கையை அந்தச் சூழ்நிலையில் அவர் பின்பற்றினார். ஒவ்வொரு மதத்திற்கும் அதன் வணக்க முறை மற்றும் கலாச்சார விவகாரங்களில் முழு சுதந்திரம் உண்டு என்றும் பரஸ்பர மரியாதை என்ற கொள்கையின் அடிப்படையில் மதீனா செயல்படும் என்றும் அவர் அறிவித்தார்.*

*தொடர்ந்து தேவையில்லாத மோதல் போக்கில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாமல் தனது இறை அழைப்புப் பணிக்கான வாய்ப்புகளை இறைத்தூதர் கண்டு கொண்டார். அவர் தனது சொந்த நகரை விட்டுச் சென்று விட்ட போதும் கூட மக்கா நகரத்தார் அவரை விடுவதாக இல்லை. அவருக்கு எதிரான செயல்பாடுகளை அவர்கள் தொடர்ந்து செய்து கொண்டே இருந்தனர். அதன் விளைவாக பல சிறிய, பெரிய போர்கள் நிகழ்ந்தன.*

*இறைத்தூதர் மீண்டும் நிலவும் சூழ்நிலையில் தலையிடாமல் இருக்கும் கொள்கையைக் கைக்கொண்டார். அரேபியாவில் நீடித்த நிலவரத்தை மீண்டும் அப்படியே ஏற்றுக் கொண்டு மக்கா நகரத்தாரின் நிலையை ஏற்றுக் கொண்டு அவர்களுடன் ஹுதைபிய்யா என்னும் அமைதி உடன்படிக்கையைச் செய்து கொண்டார். அந்த உடன்படிக்கையில் மக்கா நகரத்தாரின் மேல் நிலையை ஏற்றுக் கொண்டு பத்தாண்டு காலம் போர் இல்லை என்ற நிபந்தனையை ஏற்படுத்தினார். நிலவும் சூழ்நிலைக்கேற்ற நேர்மறைச் செயல்பாடு என்பதற்கு ஹுதைபிய்யா உடன்படிக்கை மிகச் சிறந்த உதாரணமாகும்.*

*இந்த சூழ்நிலையின் வாய்ப்புகளை பயன்படுத்திக் கொண்டு அவர் அமைதியான வழியில் இறை அழைப்புப் பணியைச் செய்தார். அது குர்ஆன் குறிப்பிடும் 'தெளிவான வெற்றி' என்பதற்கான வாயிலைத் திறந்தது*

*"(நபியே) நம்முடைய தூதர்களிலுள்ள வீரர்கள் (கஷ்டங்களைச்) சகித்துக் கொண்டிருந்தபடியே நீங்களும் சகித்துக் கொண்டு பொறுமையாக இருங்கள் அவர்களுக்கு (வேதனையை) நீங்கள் அவசரப்பட வேண்டாம் அவர்களுக்கு வாக்களிக்கப்பட்டதை அவர்கள் காணும் நாளில் (இப்புவியில்) ஒரு பகலில் ஒரு நாழிகையே தவிர (அதிகமாக) தங்கியிருக்கவில்லை என்று எண்ணுவார்கள் (இதனை) அவர்களுக்கு (நீங்கள்) அறிவிக்க வேண்டும் ஆகவே பாவம் செய்த மக்களை தவிர (மற்றெவரும்) அழிக்கப்படுவார்களா (இல்லவே இல்லை)." (46:35)*

*இந்த இறைவசனத்தின்படி ஒரு சூழ்நிலையில் இரண்டு வகைகளில் திட்டங்களைச் செயல்படுத்தலாம். அவை பொறுமை மற்றும் பொறுமையின்மை என்பனவாகும்.*

*கடைசியாக சொல்லப்பட்டது உணர்ச்சிவசப் பட்டு செய்யப்படுவது. அதே வேளையில் முன்னதாக சொல்லப்பட்டதோ கருத்தூன்றி பொறுப்பாகச் செயல்படுத்துவதாகும். பொறுமையற்ற மனிதன் தொடக்க நிலையிலேயே மோதல் போக்கைக் கைக்கொண்டு முற்றுப் பெறாத போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபடுகிறான். மாறாக பொறுமையான முறையை கைக்கொள்ளும் மனிதன் நிலவும் சூழ்நிலைக்கேற்ப மோதுவதைத் தவிர்த்து வரும் எவ்வகையான வாய்ப்பையும் முழுதாகப் பயன்படுத்துகிறான். சமூகத்தில் எந்தப் புதிய பிரச்சினையையும் உருவாக்காமல் நிச்சயமான வெற்றிக்கு இந்த வழிமுறை இட்டுச் செல்லும்.*

*சுருங்கக் கூற வேண்டுமென்றால் தங்கள் விவகாரங்களில் தனி நபரோ அல்லது குழுவோ பொறுமையை நிலையான கொள்கையாகக் கொண்டால் அவர்களுக்கு எல்லையற்ற வாய்ப்புகள் இருக்கின்றன. அனைத்து பெரிய வெற்றிகளின் ரகசியம் இதிலேயே அடங்கியுள்ளது. இவ்வகைச் செயல்பாடு நமது அனைத்து திறமைகளையும் சக்தியையும் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளுக்கு முழுக்க முழுக்க அளிக்கச் செய்கிறது. சுய அழிப்புச் செயல்பாடுகள், நாசகரமான செயல்கள் என்பனவற்றில் ஈடுபட்டால் கிடைக்கும் பலன் வீணாவதை விட இவ்வகைச் செயல்பாடு நமது அனைத்துத் திறமைகளையும் சக்தியையும் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளுக்கு முழுக்க முழுக்க அளிக்கும்படி செய்கிறது.*

*மேலும், இஸ்லாத்துக்காக பணியாற்ற விரும்பினால், முஸ்லிம்களை மேலோங்கச் செய்ய நாடினால், பொறுமையை கடைப் பிடித்து, உள்ள கள நிலவர நிலையை நீடிக்க விடுவதை உறுதியாகப் பின்பற்ற வேண்டி இருக்கும். முதலில், முன்பு சொன்னதே இங்கும் பரிந்துரைக்கப்படுகிறது. இரண்டாவது இஸ்லாம் கூட இந்த முறையை பயன்படுத்தியே எதிர்ப்பில்லா வெற்றியை அடைந்திருக்கிறது. இதன் விளைவு இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் உருவான இலக்கணப்படி முஸ்லிம் சமூகம் உருவானது.*

# 7

## பாதுகாத்தல், மறுசீரமைத்தல், அழைப்புப்பணி

*எல்லாம் வல்ல இறைவன் இறைத்தூதர் முஹம்மது (அ.மீ.சா.ச.உ)*

*அவர்களை விளித்து அறிவிக்கிறான் :*

*“நாம் உம்மை அகிலத்தாருக்கு ஓர் அருளாக, அருட்கொடையாகவேயன்றி அனுப்பவில்லை.” (21:107)*

*இதைப் போலவே குர்ஆன் கூறுகிறது :*

*“உலகத்தார் யாவரையும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காக — பிரித்தறிதலை — தன் அடியார் மீது இறக்கியவன் பாக்கியமுடையவன்” (25:01)*

*“(நபியே) நாம் உங்களை (இவ்வுலகத்தில் உள்ள) எல்லா மனிதர்களுக்குமே நற்செய்தி கூறுபவராகவும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவும் அனுப்பி வைத்திருக்கின்றோம் எனினும் மனிதரில் பெரும்பாலானவர்கள் (இதனை) அறிந்து கொள்ளவில்லை.” (34:28)*

*குர்ஆனின் இந்த வசனங்கள் அனைத்தும் இறைத்தூதர் முஹம்மது (அ.மீ.சா.ச.உ) அவர்கள் அனைத்து மனிதர்களுக்கும் நிகழ்கால சந்ததியினர் மற்றும் எதிர்கால சந்ததியினருக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகக்கூறுகிறது. அனைத்து மனிதர்களுக்கும் இறைவழியை, புனிதமான வழியை அளிக்கும்படி எல்லாம் வல்ல இறைவனால் அவர் நியமிக்கப்பட்டார். மேலும் இந்தப் புனித செயல்பாடு அனைத்து சந்ததியினருக்கும் உலகின் இறுதி நாள் வரை தொடர்ந்து கொண்டே இருக்கும். இறைத்தூதர்*

தனது வாழ்நாளில் தனது கடமையை நேரடியாக நிறைவு செய்தார். அவரது மரணத்திற்குப் பின்னால் இந்த அரும்பணி அவரை பின்பற்றுபவர்களால் தொடரப்பட வேண்டியதாக இருக்கிறது. பின்னர் வந்த சந்ததியினர் இந்தப் பணியை மூன்று தலைப்புகளில் பிரித்து செய்யலாம். அவை

a பாதுகாக்கும் செயல்முறை

b நடப்புநிலைக்கு மேம்படுத்துதல்

c இறையழைப்புப் பணிபுரிதல் ஆகியவையாகும்

முதல் செயல்முறை என்பது இறைத்தூதரால் கொண்டு வரப்பட்ட நூலை அதன் அசல் தன்மையிலேயே தலைமுறைக்குப் பின் தலைமுறை என்று தொடர்ந்து வைத்திருப்பதாகும். மனிதர்களின் இடைச் செருகலோ அல்லது அதன் எந்த பகுதியும் அழிக்கப்படுவதோ கூடவே கூடாது.

முஹம்மது நபியின் மரணத்திற்கு பிறகு இந்த முதல் திட்டம் அவரின் பிரதிநிதியாக ஆட்சி செய்த அபூபக்ர் காலத்தில் நடந்தது. அப்பொழுது ஆயிரக்கணக்கான நபித் தோழர்கள் முழு திருக்குர்ஆனையும் கற்று மனனம் செய்து இருந்தனர். அந்த வகையில் மனித மனதில் அது பாதுகாப்பாக இருந்தது.

குர்ஆனை அப்படியே பாதுகாக்கும் செயல்பாட்டில் முதல்படி இறைத்தூதர் மரணித்த பின் முதல் கலீஃபாவான அபூபக்ர் சித்தீக்கின் காலத்தில் மேற்கொள்ளப்பட்டது.

அந்த நேரத்தில் இறைத்தூதரின் தோழர்கள் பல்லாயிரக் கணக்கானோர் திருக்குர்ஆன் முழுவதையும் மனனம் செய்திருந்தார்கள். அப்படி மனித மனதில் முழுமையாக அது பாதுகாக்கப்பட்டது.

ஆனால் குர்ஆனின் எழுத்து வடிவம் என்று பார்க்கும்பொழுது, பல்வேறுபட்ட எழுத்து முறைகளில் அது பகுதிபகுதியாகவே இருந்தது. எனவே, முதல் கலீபாக்கள் இறைத்தூதரின் தோழர்களிலிருந்த அறிஞர்களைக் கொண்டு குர்ஆனை ஒரே நூலாகத் தொகுக்கும் பணியில் ஈடுபட்டனர். மனனம் செய்தவர்களைக் கொண்டும் எழுதப் பட்டது சரிபார்க்கப்படும்

*இரண்டு வித செயல்களும் செய்யப்பட்டன.அவ்வாறாக நிலையான பிரதியாக இருக்கும் வகையில் முதல் கலீபாவால் குர்ஆன் முழு நூலாக தொகுக்கப்பட்டது. அது அதிகாரபூர்வ பிரதியாக அல்லது செம்பதிப்பாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன்பின்னர் வந்த அனைத்துப் பிரதிகளும் அந்த மூல நூலின் பிரதிகளாகவே இருந்தன.*

*குர்ஆன் மனனம் மற்றும் எழுத்து வடிவம் என்னும் இரண்டு வகையில் தலைமுறை தலைமுறையாக அச்சுப் பதிப்பு முறை வரும்வரை மனித தவறுகளுக்குச் சாத்தியமே இல்லாத வகையில் பாதுகாக்கப்பட்டது.*

**நபிமொழித் தொகுப்பாளர்களின் பெரும்கொடை**

**(நபிகளாரின் மரபுச் செய்தி அறிஞர்கள்)**

*மேலும், முதல் சில தலைமுறையைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையிலான இஸ்லாத்தின் சிறந்த அறிஞர்கள் அதிகாரப்பூர்வமான ஒப்பிடவே இயலாத ஹதீஸ், சீரா மற்றும் மகாஜி என்ற வரலாற்று தகவல் பதிவுகளைத் தொகுத்தனர். ஆச்சரியப்படத்தக்க சிறிய கால அளவில் அவர்கள் இறைத்தூதர் கூறிய அனைத்து மொழிகள், அவரது ஒவ்வொரு செயல்முறைகள், அவர் அங்கீகரித்தவை, மறுத்தவை ஆகிய அனைத்தையும் இறைத்தூதரின் தோழர்கள் பற்றிய காலக்குறிப்புகளுடன் கூடிய மிகப்பெரிய அமைப்பு ரீதியான இலக்கியம் ஒன்றை திரட்டினார்கள். குர்ஆனுக்கு அடுத்து முழு அளவில் மிகச் சரியான இரண்டாம் ஆதாரமாக இவை விளங்குகின்றன. ஆதாரப்பூர்வமான இறைத்தூதரின் மொழிகள் மற்றும் செயல்கள் ஆகியவை குர்ஆனுடன் இணைந்து இஸ்லாமியக் கோட்பாடாக விளங்குகிறது. இவ்வகையில் இஸ்லாத்தின் அசலான கோட்பாட்டு வடிவம் மிகவும் முழுமையாக நிரந்தரமாக இறுதித்தீர்ப்பு நாள் வரும் வரை எவரும் எந்த நேரத்திலும் இஸ்லாமிய போதனைகள் இறைவனிடமிருந்து எப்படி வெளிப்படுத்தப்பட்டன என்பதையும் இறைத்தூதர் மற்றும் அவர்தம் தோழர்களால் அவை எப்படி விளக்கப்பட்டன, நடைமுறைப்படுத்தப்பட்டன என்பதையும் நிச்சயமாகக் கூறும்படி பாதுகாக்கப்பட்டன.*

**மார்க்க நிறுவனங்கள்**

*இறைத்தூதருடைய தோழர்களின் காலம் முதல் ஆட்சி செய்தவர்களாலும், ஆளப்பட்டவர்களாலும், நிகழ்காலத்தில் வாழும் பெரும்பான்மையான முஸ்லிம்களாலும் இஸ்லாத்தின் கோட்பாடுகள் மற்றும் போதனைகளும் அதேபோல் செய்முறை அறிவும் தத்தம் சந்ததியினருக்கு அளிக்கப்படுவதில் பெரும் ஆர்வமும் கவனமும் மேற்கொள்ளப்படுகிறது. இறைத்தூதரை முன்மாதிரியாகக் கொண்டு தினசரி வாழ்க்கையில் இஸ்லாத்தை செயல்முறைக்குக் கொண்டு வருவதற்கு பல்வேறு நிறுவனங்கள் உருவாயின. மரபார்ந்த முறையின் மார்க்கக் கல்வி நிறுவனங்கள், மத்ரஸா என்றும் ஆன்மிகப் பயிற்சி மையங்கள் தக்கியா என்றும் அழைக்கப்படுகின்றன. பண்டைய காலம் முதல் நவீனமான இன்றைய காலம் வரை அத்தகைய கல்வி நிறுவனங்கள் முஸ்லிம் உலகில் பல்கிப் பெருகியுள்ளன. நவீன காலத்தில் இன்னும் அதிக அளவில் துடிப்புடனும் வலுவாகவும் அவை இயங்கி வருகின்றன. இந்த நிறுவனங்கள் தங்களது அடிப்படைக் குறிக்கோள்களில் ஒன்றான இஸ்லாத்தின் செயல்முறை அமைப்பை பாதுகாத்து அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு செல்வதில் வெற்றி அடைந்துள்ளன என்பது சந்தேகத்திற்கு இடமில்லாதது. இந்த நூற்றாண்டில் மற்ற மார்க்க அமைப்புகளும் இயக்கங்களும் தங்கள் நோக்கத்தில் வெற்றி கண்டுள்ளன. தப்லீக் இயக்கத்தை இதற்கான ஓர் உதாரணமாகக் கூறலாம்.*

**நடப்பு நிலைக்கு சரிசெய்து கொள்ளுதல்**

*பழைய விதிகளை புதிய சூழலுக்கு ஏற்ப பொருள் கொள்ள வேண்டும். ஆக, வெறும் கையால் தொட்டு தடவிக் கொண்டால் போதுமானது என்பது இதில் இருந்து புரிந்து கொள்வது நல்லது.*

*இது தொடர்பான இரண்டாவது அம்சம் நடப்பு நிலைக்கு சரி செய்து கொள்வது. இறைத்தூதரால் கையளிக்கப்பட்ட மார்க்கம் அளிக்கப்பட்டது போலவே உள்ளது. இருந்த போதும் மனிதச் சமூக நிலை மாறக் கூடியது என்பதால் அதற்கேற்ப மீள்கட்டமைப்பு அவசியமாகிறது. உதாரணமாக, தொழுகைக்காக சுத்திகரிப்பு முறையில் கால்களைக் கழுவுவதற்குப் பதில் தோல் காலுறைகளை ஈரமான*

கைகளால் தடவி சுத்தம் செய்து கொள்ளலாம் என்று ஷரியத் சட்டம் கூறுகிறது. இப்போது செயற்கை இழைகளால் உருவாக்கப்படும் காலுறைகள் பயன்பாட்டுக்கு வந்து விட்ட நிலையில் ஈரக்கைகளைக் கொண்டு துடைப்பது சட்டப்பூர்வமாக சரியா இல்லையா என்ற கேள்வி எழுகிறது. இந்தப் புதிய சூழ்நிலைக்குப் பழைய விதியை பொருத்திப் பார்க்க வேண்டியது அவசியமாகிறது. இஜ்திஹாதை செய்த பின்னர் இத்தகைய காலுறைகளை ஈரக்கைகளைக் கொண்டு தடவி சுத்தம் கொள்வது அனுமதிக்கப்படுகிறது.

அனைத்து காலங்களிலும் புனிதக் கட்டளைகளை மறு செயலாக்கம் செய்வது அவசியமானதாக இருக்கிறது. இது நவீன காலத்தில் பெருமளவில் மேற்கொள்ளப்படுகிறது. பண்டைக் காலத்தில் விவகாரங்களைத் தீர்க்க போர் புரிவதே வழியாக இருந்தது. ஆனால் புதிதாக வந்துள்ள பேரபாயத்தை விளைவிக்கக் கூடிய ஆயுதங்களால் இன்று நேர்மறையான நற்பலன்களேதுமில்லை. இப்போது சாத்தியமாகும் ஆற்றல் என்பது அமைதி வழியில் மட்டுமே உள்ளது. இத்தகைய நிலைகளில் போர் என்பது பற்றிய இஸ்லாமியக் கட்டளைகளுக்கு மறு அணுகுமுறை தேவைப்படுகிறது. ஒட்டுமொத்த அதிகாரத்தையும் கொண்டிருந்த மன்னர் ஆட்சிமுறையிலான காலம் போயே போய் விட்டது. இன்றிருப்பது ஜனநாயகக் காலம். அதன் வேறு பெயர் அதிகாரப் பகிர்வு அரசியலாகும்.

ஒவ்வொரு காலகட்டத்தின் மாறிய சூழ்நிலைகள் இஸ்லாம் புதிய அவசர நிலைகளை எதிர்கொள்ளும்படி விதிமுறைகளைக் கைக்கொள்வதற்கான முயற்சிகளை செய்ய வேண்டியதாக உள்ளது. இவ்வழியில் தான் இஸ்லாமிய ஷரீயத் சட்டம் நடப்பு நிலைக்கு சரிப்படுத்திக் கொள்ளும் வரை தொடர்ந்து செய்ய வேண்டி இருக்கிறது. எந்தச் சமுதாயமும் செய்து கொள்ளத் தேவையான படைப்பாக்கச் சிந்தனை என்ற செயல்முறை (இஜ்திஹாத்) மூலமாக இதனை செய்ய வேண்டியுள்ளது. மக்களுக்கு இருக்கும் விமர்சனம் செய்யும் உரிமை உட்பட கருத்துச் சுதந்திரத்தில் தான் படைப்பாக்க சிந்தனைக்கான முக்கியத் தகுதி இருக்கிறது. அதனால்தான் ஒவ்வொருவருக்கும் இஸ்லாம் சுதந்திரத்தை அளித்துள்ளது. ஒவ்வொருவரும் ஒவ்வொன்றும் வெளிப்படையான விமர்சனத்திற்குள்ளாகும்

*போதுதான் படைப்பாக்கம் வளரும். படைப்பாக்கத் திறன் உள்ள மனங்கள் மட்டுமே உயர்நிலையில் இஜ்திஹாத்தை செய்ய இயலும். அத்தகைய வெளிப்படையான அறிவுப்பூர்வச் சூழல் இல்லாத இடத்தில் அறிவார்ந்த செயல்பாடு என்பது நின்று போகும். அது நடப்பு நிலைக்கு சரிப்படுத்திக் கொள்வது என்பதையும் நிறுத்தி விடும்.*

**ஷரியத் சட்டங்களின் மீள்பயன்பாடு**

*திருக்குர்ஆனின்படி, மார்க்கம் (தீன்) மற்றும் (சட்டங்கள்) ஷரிஆ என இஸ்லாம் இரண்டு பிரிவுகளைக் கொண்டது. மார்க்கம் (தீன்) என்பது முழுமையானது, அடிப்படையானது, எந்த ஒரு சிறு மாறுதலும் தேவைப்படாத, என்றும் மாறா தன்மை கொண்டது. எல்லா சூழல்களிலும் ஒரு நம்பிக்கையாளர் தொடர்ந்து கடைப்பிடித்து வர வேண்டியது. அதாவது ஓர் இறைவன், அவனை மட்டுமே வணங்குதல் என்பது. இரண்டாம் வகையான சட்டங்கள் (ஷரிஆ) காலத்துக்கு ஏற்றபடியும், இடத்துக்குத் தகுந்தவாறும் மாறக்கூடியது*

*குர்ஆனின்படி இஸ்லாத்தில் இரண்டு பாகங்கள் உள்ளன. ஒன்று மார்க்கம், மற்றொன்று (ஷரியத்) சட்டம். மார்க்கம் என்பது அடிப்படையான, முழுமையான, எந்த சிறு மாற்றத்திற்கும் ஆளாகாமல் எப்போதும் ஒரே மாதிரி இருக்கக் கூடியதாகும். இறை நம்பிக்கையாளர்கள் ஓரிறையில் நம்பிக்கை கொண்டு அவனை மட்டுமே வணங்க வேண்டும் என்பது கட்டாயக் கடமையாகும். ஷரியத் என்பதோ கால தேசச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாறலாம் எனும்படியானது.*

**மார்க்கம் (தீன்) என்பதைத் திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது.**

*“(நம்பிக்கையாளர்களே) நூஹ்வுக்கு எதனை அவன் உபதேசித்தானோ அதனையே உங்களுக்கும் அவன் மார்க்கமாக்கி இருக்கின்றான் ஆகவே (இறைத்தூதரே) நாம் உங்களுக்கு அறிவிப்பதும் இப்ராஹீம், மூஸா, ஈசா முதலியவர்களுக்கு நாம் உபதேசித்ததும் (என்னவென்றால்) நீங்கள் ஒருமித்து ஓரிறைக் கொள்கையுடைய (உண்மையான) மார்க்கத்தை நிலை நிறுத்துங்கள் அதில் (பல் பிரிவுகளாகப்) பிரிவினை செய்து கொள்ளாதீர்கள் என்பதேயாகும்.” (42:13)*

ஆனால் அதே வேளையில் வேறுபட்ட இறைத்தூதர்களுக்கு அளிக்கப்பட்ட ஷரியத் சட்டங்கள் எப்போதும் ஒன்றானவை அல்ல என்று குர்ஆனின் இன்னொரு வசனம் கூறுகிறது.

“உங்களில் ஒவ்வொருவ(குப்பா)ருக்கும் ஒவ்வொரு மார்க்கத்தையும் வழியையும் நாமே ஏற்படுத்தினோம். இறைவன் விரும்பியிருந்தால் உங்கள் அனைவரையும் ஒரே (மார்க்கத்தை பின்பற்றும்) வகுப்பாக ஆக்கியிருக்க முடியும் எனினும் உங்களுக்கு கொடுக்கப்பட்டவைகளில் (நீங்கள் எவ்வாறு நடந்து கொள்கிறீர்கள் என்று) உங்களை சோதிப்பதற்காகவே (இவ்வாறு செய்திருக்கின்றான்) ஆகவே (இவைகளில்) மேலான வழியின் பக்கம் விரைந்து செல்லுங்கள் அல்லாஹ்வின் பக்கம் தான் நீங்கள் அனைவரும் செல்ல வேண்டியிருக்கின்றது நீங்கள் எதில் (அபிப்பிராய பேதப்பட்டு) தர்க்கித்துக் கொண்டிருந்தீர்களோ அதனை அவன் உங்களுக்கு நன்கறிவித்து விடுவான்.” 05:48

இஸ்லாத்தின் கட்டளைகளின் அமைப்பு அல்லது ஷரியத் மற்றும் மின்ஹாஜ் எனப்படும் இறைத்தூதர்களுக்கான முறைகள் முழுமையாக ஒன்றே அல்ல, சில பகுதிகள் வேறுபட்டவை. இத்தகைய வேறுபாடுகள் இறைத்தூதர்களின் தனிப்பட்ட வேறுபாடுகள் அல்ல என்பதையும் அந்த வேறுபட்ட சூழ்நிலைகளால் ஏற்பட்டவை என்பதையும் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். அந்தந்த காலகட்டங்கள் வேறுபட்ட சூழ்நிலைகளைக் கணக்கிலெடுத்துக் கொண்டு ஷரியத் மற்றும் மின்ஹாஜ் என்ற பெயரில் அவர்கள் கட்டளைகளை பிறப்பித்தார்கள். இந்த வேறுபாடுகள் இறைத்தூதர்களின் தனிப்பட்டவையோடு சம்பந்தப்பட்டதல்ல. மாறாக நடப்பு நிலைக்கேற்ப விவேகங்களேயாகும். அதனால்தான் ஷரியத் என்ற கொள்கை இன்றும் மதிப்புடையதாக விளங்குகிறது.

சூழ்நிலைகளுக்கு ஏற்ப பகுதியான அல்லது தற்காலிகமான மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்வது ஷரியத்திலும், மின்ஹாஜிலும் அப்போதைக்கப்போது மேற்கொள்ளப்பட்டன. கடந்த காலங்களில் இந்த மாற்றங்கள் இறைத்தூதர்களால் செய்யப்பட்டன. இன்று மாற்றங்கள் இஜ்திஹாத் மூலம் இஸ்லாமிய அறிஞர்களால் நடப்புக்கு கொண்டு வரப்படுகின்றன.

*இது ஷரியத்தில் மாற்றம் கொண்டு வருவது போன்றதல்ல. ஆனால் இது மாறிய சூழ்நிலைகளுக்கேற்ப ஷரியத்தில் ஏற்பாடுகளைச் செய்து கொள்ளும் மீள் பயன்பாடு மட்டுமேயாகும். இது முன்பே நடைமுறையில் இருந்தது போலத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு எதிர்காலத்திலும் செய்து கொள்ளப்படும். தொடர்ந்து சரிப்படுத்தி கொள்ளும் இந்தச் செயல்பாடு இஸ்லாத்தை நிரந்தரமாகச் சரிப்படுத்திக் கொள்ள வைக்கும்.*

## **"தாவா" இறை அழைப்புப் பணி செயல்பாடு**

*இறைத்தூதரின் சேவையின் தொடர்ச்சியான இறை அழைப்புப் பணியே (தாவா) மூன்றாவது தேவையாகும். அதாவது, இறைத்தூதரின் செய்தியை அனைத்து மக்களுக்கும் அனைத்து காலங்களிலும் கூறுவது.*

*இந்த இறை அழைப்புப் பணி மனிதர்களால் செய்யப்பட்டாலும் உண்மையில் இறைவனின் செயலே. அதனால்தான் குர்ஆன் இதனை எல்லாம் வல்ல இறைவனுக்கு உதவுதல் (03:52) கூறுவது*

*"அவர்களில் பலர் (தம்மை) நிராகரிப்பதை ஈஸா உணர்ந்த போது (அவர்களை நோக்கி) அல்லாஹ்வுக்காக எனக்கு உதவி செய்பவர் யார் எனக் கேட்டார் (அதற்கு) அவருடைய தோழர்கள் நாங்கள் அல்லாஹ்வுக்காக (உங்களுக்கு) உதவி செய்கிறோம் மெய்யாகவே அல்லாஹ்வை நாங்கள் நம்பிக்கை கொள்கின்றோம் (ஆதலால்) நிச்சயமாக நாங்கள் முற்றிலும் அவனுக்கு வழிப்பட்டோம் என்பதாக நீங்கள் சாட்சி கூறுங்கள் எனக் கூறினார்கள்." (03:52)*

*"(அன்றி) என் இறைவனின் தூதையே நான் உங்களுக்கு எடுத்துரைக்கின்றேன் அன்றி நிச்சயமாக நான் உங்களுக்கு நம்பிக்கைக்குரிய உபதேசியாகவும் இருக்கின்றேன்." (07:68)*

*"குர்ஆனின் கூற்றுப்படி, இறை அழைப்புப் பணி என்பது ஒருவரை உண்மையாளராகவும் அனைவர் நலன் நாடுவதில் மிகவும் சிரத்தை உள்ளவராகவும் குறிப்பிடுகிறது." (07:68)*

*சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில் இறைவனுடனான தொடர்பில் முழுக்க உண்மையாக இருப்பதும் சக மனிதர்*

*அனைவர் மீதும் முழுக்க நன்மை விளைய விருப்பம் கொள்வதுமாகும். இந்தத் தகுதியை அடைந்தாலே இறை அழைப்புப் பணியை முறையாகச் செய்ய முடியும். இறை அழைப்புப்பணிக்கு மிகவும் தேவையான ஒன்று பொறுமையாகும். இந்தச் சீரிய குணம் ஆரம்பகால இறை அழைப்பாளர்களின் குணமாக இருந்தது.*

*“நாங்கள் அல்லாஹ்வை நம்பாதிருக்க எங்களுக்கென்ன (தடை நேர்ந்தது?) நிச்சயமாக அவன்தான் எங்களுக்கு நேரான வழியை அறிவித்தான் (நிராகரிப்பவர்களே) நீங்கள் எங்களுக்கு இழைக்கும் துன்பங்களைச் சகித்துக் கொண்டு உறுதியாக இருப்போம் ஆகவே நம்புபவர்கள் அனைவரும் அல்லாஹ்வையே நம்பவும் என்றும் கூறினார்கள்.” (14:12)*

*“(நிராகரிப்பாளர்களே) நீங்கள் எங்களுக்கு இழைக்கும் துன்பங்களைச் சகித்துக் கொண்டு உறுதியாக இருப்போம்.” (14:12)*

*மேலே உள்ள குர்ஆனின் வசனம் இறைப்பணி அழைப்பாளரின் குணம் பற்றிக் கூறுகிறது. அழைப்பாளர் அழைப்பு விடுக்கப்படுபவருடன் தன்னியல்பாக பொறுமையாக இருக்க வேண்டும். அழைப்பு விடுக்கப்படுபவரால் எப்படித் தூண்டப்பட்டாலும் அழைப்பாளர் பொறுமையான முறையிலேயே செயல்பட வேண்டும். இதுவும் அதி முக்கியமான தேவையாகும். அழைப்பு விடுக்கப்பட்டவரால் அழைப்பாளர் தூண்டப்பட்டால் இருவருக்கும் இடையிலான சூழ்நிலை பாதிப்படைந்து இறை அழைப்புப்பணி முழுவதுமே கெட்டழிந்து போகும். இறை அழைப்புப் பணியைச் செய்வதற்குச் சாதகமான ஏதுவான சூழ்நிலை மிகவும் அவசியமாகும்.*

*இறை அழைப்புப்பணியின் மிக முக்கியமான அம்சம் இறைச் செய்தியைத் தொடர்ந்து எல்லா காலகட்டங்களிலும் அனைத்து மக்களுக்கும் கூறுவதுதான். சமூகத்தின் அனைத்து மட்டங்களிலிருந்தும் மக்கள் இஸ்லாத்திற்கு வருவார்கள். இது இறைநம்பிக்கையாளருக்குப் புதிய இரத்தத்தைச் செலுத்துவது போலத்தான். இவ்வழியாக முஸ்லிம் சமூகம் அழிவதிலிருந்து தன்னை காத்துக் கொள்ளும். எல்லா நேரங்களிலும் முஸ்லிம்*

*சமூகம் தன்னை மீண்டும் சுறுசுறுப்பூட்டி ஊக்கப்படுத்திக் கொள்ளும். இன்னொரு வகையில் இஸ்லாத்தின் உண்மையான கொள்கைகள் இறை அழைப்புப்பணி மூலம் உலகம் முழுவதும் பரவினால் அதன் எழுத்துப் பூர்வமான, கோட்பாட்டுப் பூர்வமான மற்றும் செயல்முறைப் பூர்வமான அனைத்தும் உறுதியாகி புதிதாக தூண்டப்பட்ட அறிவுநிறைந்த மனங்கள் மற்றும் ஞானம் பெற்றவர்களிடமிருந்து இஸ்லாம் கூடுதலான பலன்களைப் பெறும். இந்த அம்சம் இஸ்லாத்தின் போதனைகளை நடப்பு காலத்திற்கேற்ப வரக்கூடிய தலைமுறைகள் அனைத்திற்கும் செய்து கொள்ளும்.*

# 8

# இஸ்லாத்தின் புரட்சிகரமான பாத்திரம்

*மனிதர்களின் அறியாமையால் இயற்கை வழிபாடு என்கிற தீமை மனித சமூகத்தில் உண்டானது. சாதாரண படைப்புகளுக்கு தெய்வீகத் தன்மையை மனிதன் வழங்கினான். அவற்றைக் கடவுளாகக் கருதி உலகில் வணங்கி வந்தான். அறிவார்ந்த நெறியில் இருந்து விலகியதால் சிலை வழிபாடு மனித பண்பாடாக மாறியது. ஆயிரக்கணக்கான இறைத்தூதர்கள், சீர்திருத்தவாதிகள் கடுமையாக முயற்சித்தும் பெரிய மாற்றம் எதையும் நடைமுறையில் கொண்டு வர முடியவில்லை. தூதர்களை நிராகரித்த மறுப்பாளர்கள் மீது இறைத் தண்டனை இறங்கிய போதிலும் சிலை வழிபாடு சமூகத்தில் இருந்து துடைத்தெறிய முடியவில்லை. அதனால் இறைவன் தானே நேரடியாக தலையிட வேண்டி வந்தது. முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் பிறப்பு இறைவனின் நேரடி தலையீடு உள்ளதான ஒரு பிரகடனமாகியது. ஓர் அமெரிக்கக் கலைக்களஞ்சியம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிறப்பைக் குறித்து எழுதும் போது "மனித வரலாற்றின் போக்கை மாற்றியது" என மிகச் சரியாக பதிவு செய்து இருக்கிறது.*

*பிரெஞ்சு வரலாற்றாசிரியர் ஹென்றி பியர்ன்னெ "இஸ்லாம் உலகத்தின் முகத்தை மாற்றி அமைத்தது, மரபான வரலாறு தூக்கி எறியப்பட்டது" என எழுதுகிறார்.*

*திருக்குர்ஆன் இந்த நேரடி தலையீட்டை இவ்வாறு கூறுகிறது:*

*"அவனே தன்னுடைய தூதரை நேரான வழியைக் கொண்டும் சத்தியமான மார்க்கத்தைக் கொண்டும் அதை எல்லா*

*மார்க்கங்களை விட மேலோங்க வைப்பதற்காக அனுப்பி வைத்தான். இதற்கு இறைவனே போதுமான சாட்சியாவான்.” (48:28)*

*இதனைப் போன்ற கருத்து நபிமொழி நூலான புகாரியில் பதிவு செய்யப்பட்டுள்ளது*

*“இறைவனின் கட்டளைப்படி மக்களைச் சரியான பாதையில் கொண்டு வராதவரை (முஹம்மத் நபி) இந்த உலகை விட்டு போக மாட்டார்.” (449—8 ஃபத்ஹுல் பாரி)*

*இறைச்செய்தியை மக்களிடம் கொண்டு போய்ச் சேர்ப்பது மட்டும் இதற்கு முந்தைய தூதர்களின் பணியாக இருந்தது, மாறாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பொறுப்பு அதை விட அதிகமாக சொல்ல வந்த இறைச்செய்தியை சொல்வதும், அதை நடைமுறையில் செயல்படுத்திக் காட்டுவதுமாக இருந்தது என்பதை இது காட்டுகிறது.*

*முந்தைய இறைத்தூதர்களின் இலக்கு இறைச்செய்தியை முழுமையாக மக்களிடம் கொண்டு போய் சேர்ப்பதாக மட்டும் இருந்தது. ஆனால், முஹம்மத் நபி அவர்களின் வருகை இறைவனின் திட்டப்படி, உலகில் நடைமுறைப் புரட்சியைக் கொண்டு வருவதுமாக இருந்தது. அதனால் அவருடைய செய்தி வெறுமனே கொள்கை / கோட்பாடு என்கிற அளவில் இல்லாமல் இருந்தது.*

*இறைத்தூதரின் செய்தியை எப்படி உண்மையாக ஆக்கப்பட்டது என்பது மனிதனால் சாத்தியப்படும் என்பதற்கும் அப்பாலானதாக இருந்தது. இறைத்தூதருக்கு இறைவனின் சிறப்பான உதவி கிட்டியதால் இது சாத்தியமானது. அடிப்படையான இரண்டு பகுதிகளை இந்த இறைத்திட்டம் கொண்டிருந்தது. இறைத்தூதருக்கு ஆற்றல் வாய்ந்த மிகவும் நம்பிக்கைக்குரிய குழு ஒன்று அமைந்தது. மற்றது சிறப்புத் திட்டத்தின் மூலம் இறைத்தூதரும் அவர்தம் தோழர்களும் தங்கள் எதிரிகள் மீது எளிதாக ஆதிக்கம் செலுத்தும்படி ஓரிறைக் கோட்பாட்டின் எதிரிகள் குறிப்பிடத்தக்க வகையில் பலவீனப்படுத்தப்பட்டதாக இருந்தது.*

*இப்ராஹீம் அவர்களின் மகன் இஸ்மாயீல் அவர்களை மக்கள் நடமாட்டமற்ற அரேபியப் பாலைவனத்தில் இரண்டாயிரத்து*

*ஐநூறு ஆண்டுகளுக்கு முன் குடியமர்த்தி இந்த இறைத்திட்டத்தின் முதல் பகுதி தொடங்கப்பட்டது. அந்த நேரத்தில் இது முழுக்க முழுக்க மனித நாகரிகத்தில் இருந்து அன்னியப்பட்ட தனிப் பகுதியாக இருந்தது. இஸ்மாயீல் மூலம் ஒரு சமூகம் தோற்றுவிக்கப்பட்டு, இயற்கையில் இருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள எந்த வழியும் இல்லா பாலைவனச் சூழலில் அவர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். கலப்படமற்ற இந்தச் சூழலின் விளைவாக இந்தப் பாலைவனவாசிகளின் மனித மாண்புகள் முழுக்க முழுக்க பாதுகாக்கப்பட்டது. மனிதனின் உயர் ஆளுமை பாலைவனச் சூழலில் செழித்து வளர்ந்தது. அது ஒரு வகையில் பரந்த திறந்தவெளி பயிற்சிக் கூடமாக இருந்தது. உயர் குணங்கள் நிரம்பிய ஒரு முழுச் சமூகத்தை உருவாக்க இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகள் பிடித்தன. ஒரு மேற்கத்திய அறிஞர் "நாயகர்களின் தேசம்" என அதை குறிப்பிடுகிறார். அரேபிய வரலாறு இவர்களை இஸ்மாயீலர்கள் என்கிறது. அவர்களிடையே பல்வேறு மதம் உள்நுழைந்து இருந்தாலும், அவர்களுக்குக் கிடைத்த பயிற்சியின் காரணமாக மனித ஆளுமையில் அவர்களுக்கு இடையில் எவராலும் முன்பும் பின்பும் அப்படி வர முடியவில்லை.*

*பனூ இஸ்மாயில் கோத்திரத்தின் குறிப்பிடத்தக்க அங்கத்தினர்களில் ஒருவரான இறைத்தூதர் முஹம்மது (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) மக்காவில் பதின்மூன்றாண்டுகளும், மதீனாவில் பத்தாண்டுகளும் கடுமையாக உழைத்தார்.*

*இறுதியில் ஒரு லட்சம் மக்களுக்கும் மேல் அவர் மீது நம்பிக்கை கொண்டு, அவருடன் பணியாற்ற இணைந்தனர். இறைத்தூதர் முஹம்மது (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) எவருமே சாதித்திராத விதிவிலக்கான முறையில் தூதுத்துவச் செய்தியை பலனளிக்கும்படி செயல்படக்கூடிய பெருங்குழு ஒன்றைப் பெற்றார். அக்குழு தூதுத்துவத்தைக் கொள்கை என்ற நிலையிலிருந்து புரட்சிகரமாக அதனை நடைமுறைப்படுத்துவது என்ற நிலைக்குக் கொண்டு வந்தது.*

*ஓரிறைக் கோட்பாட்டின் எதிர்ப்பாளர்களை இறுதித்தூதரிடம் பணிந்து போக வைப்பதையும், முதல் தலைமுறையிலேயே விரும்பிய புரட்சியை நிகழ்த்துவதையும் இறைத்திட்டத்தின்*

அடுத்தப் பகுதி கொண்டிருந்தது. இந்த இறுதி முடிவை எட்ட அரேபியப் பழங்குடிகள் இரத்தம் சிந்தும் போரில் நீண்ட காலம் ஈடுபட்டனர். இதனைத்தொடர்ந்து சிலை வணக்கம் புரிந்த அரேபியப் பழங்குடிகள் இறைத்தூதர் முஹம்மது உலகுக்கு அனுப்பப்பட்ட போது தொடர்ந்து எதிர்த்து நிற்க இயலாமல் போனது. இது முஹம்மது (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) அவர்களை அரேபியாவை வென்றெடுக்கவும், அங்கிருந்த சிலை வழிப்பாட்டு முறையைக் குறுகிய காலத்திற்குள் துடைத்தெறியச் செய்ய முடியும்படியும் ஆக்கியது.

அந்தக் காலத்தில் அரேபியாவுக்கு வெளியே இரண்டு பெரும் பேரரசுகள் இருந்தன. ஆசியா மற்றும் ஆப்ரிக்காவின் பெரும் பகுதி முழுக்க அவர்களுடைய கட்டுப்பாட்டில் இருந்தது. அவர்களை வெல்வது என்பதை அரபியேர்களால் கற்பனை கூட செய்ய முடியாத நிலை இருந்தது. இந்த வேறுபாட்டை மனதில் கொண்டு, அரபுகள் எப்படி முதல் தலைமுறையிலேயே இவர்களை வெற்றி கொள்ள முடிந்தது என்பதை யோசித்துப் பாருங்கள். ரோமர்கள் மற்றும் சாசனிட் என்கிற பாரசீகப் பேரரசு ஆகிய இரண்டையும் நொறுக்கித் தள்ளி முழுமையாக கிடைத்த வெற்றி அது. இதனால் ஓரிறைக் கொள்கை பல தெய்வ நம்பிக்கையை அந்தப் பகுதி முழுக்க துடைத்து எறிந்தது. அற்புதமான இந்தத் திட்டம் இறைவனின் சிறப்பான அமைப்பிலிருந்தது. ரோமர்களுக்கும் இதுவே நிகழ்ந்தது.

“அலிஃப் லாம் மீம், (நமக்கு) சமீபமான பூமியிலுள்ள ரூம்(ரோம்) நாட்டுவாசிகள் தோல்வி அடைந்தனர். அவர்கள் (இன்று) தோல்வியடைந்து விட்ட போதிலும் அதி சீக்கிரத்தில் வெற்றி அடைவார்கள்.” (30:01—03)

கி.பி. 602 முதல் 628 வரை இவ்விரண்டு பேரரசுகளில் மிகவும் தீவிரமான, அசாதாரண செயல்கள் நிகழ்ந்து இருப்பதை வரலாறு நமக்கு காட்டுகிறது.

முதலில் இந்த நாடுகளின் அரச குடும்பத்தினர் தங்களுக்குள் மோதிக் கொண்டனர். அதன் விளைவாக அரசியல் முக்கியத்துவம் மிக்கப் பல தனி நபர்கள் கொல்லப்பட்டனர். உண்மையில் இந்த மோதல்கள் இந்தப் பேரரசுகளுக்கு மரண அடியைக் கொடுத்து அவற்றின் வேர்களையே ஆட்டம் காண

வைத்தன. அதனைத் தொடர்ந்த சில குறிப்பிட்ட காரணிகள் இந்தப் பேரரசுகள் ஒன்றுடன் ஒன்று மோதி நாசமாவதற்கு இட்டுச் சென்றது. பழங்கால பாரசீகப் பேரரசின் படைகள் தாக்குவதற்காக ரோமப்பேரரசின் எல்லைக்குள் புகுந்தன. சூழ்நிலை அவர்களுக்குச் சாதகமாகவே ரோமப் பேரரசர் ஹிராக்ளியஸ் கான்ஸ்டாண்டிநோபிளிலிருந்த தனது அரண்மனையை விட்டு ஓட முடிவெடுக்கும் அளவுக்கு பாரசீகப் பேரரசு வெற்றி பெற்றது. ஆனால் நிகழ்வுகள் புதிய திருப்பத்தை எடுத்தன. ஹிராக்ளியஸ் இழந்த தன் நம்பிக்கையை மீண்டும் பெற்று, போருக்கான முழு ஆயத்தங்களையும் செய்து பாரசீகப் பேரரசைத் தாக்கி அவர்களது படையினரை அழித்து ஜெருசலம் நகருள் புகுந்தார்.

கிட்டத்தட்ட 25 ஆண்டுகள் நீடித்த இந்த உள்நாட்டுப்போர் இந்த இரு பேரரசுகளையும் பெருமளவு பாதித்து பலவீனமடையச் செய்தது. ஆக, (இறைத்தூதர் முஹம்மத் நபிக்கு பிறகு) நேர்வழியில் நடத்தப்பெற்ற பிரதிநிதிகளின் ஆட்சிக் காலத்தில் அரேபியப் படையினர் ரோம மற்றும் பாரசீகப் பேரரசின் எல்லைக்குள் மிக வேகமாக உள்ளே நுழைய முடிந்தது.

**வரலாற்றுப் புரட்சி**

இவ்வகையில் இஸ்லாமியப் பேரரசு விரிவடைந்தது என்பது வெறுமனே அரசியல் நிகழ்வாக மட்டுமல்ல அதன் நோக்கம், உண்மையில் ஒரு புரட்சிகரமான வரலாற்றைத் தொடங்குவதாக இருந்தது. அதற்கான நடைமுறை மெக்காவிலேயே தொடங்கி பிறகு மதினாவுக்குள் சென்று அங்கிருந்து டமாஸ்கஸ், பாக்தாத் என ஸ்பெயினுக்குள் கடந்து இறுதியில் ஐரோப்பா மற்றும், முழு உலகம் வரை பரவி விட்டது. 20ஆம் நூற்றாண்டு அதன் பலனை அறுவடை செய்தது என்று சொல்வது சரியாக இருக்கும்.

இந்த இயக்கத்தில் இரண்டு அடிப்படைகள் இருந்தன. முதலில் மத ஒடுக்குமுறையை முடிவுக்குக் கொண்டு வருவது, இந்த ஒடுக்குமுறை குர்ஆனில் ஃபித்னா எனப்படுகிறது.

“(நம்பிக்கையாளர்களே இந்நிராகரிப்பவர்களின்) விஷமத்தனம் முற்றிலும் நீங்கி அல்லாஹ்வுடைய மார்க்கம் நிலைபெறும் வரையில் (மக்காவாசிகளாகிய நிராகரிக்கும்) இவர்களுடன்

*போர் புரியுங்கள் (விஷமம் செய்வதிலிருந்து) அவர்கள் விலகிக் கொண்டால் நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்வதை உற்று நோக்கியவனாகவே இருக்கின்றான்." (08:39)*

*சிலை வழிபாடு என்கிற நடைமுறை (அரேபியாவில்) முஹம்மத் நபியின் வாழ்நாளிற்குள்ளேயே முடிவுக்கு கொண்டு வரப்பட்டு விட்டது. அடுத்து, மதச் சுதந்திரம் என்பது (இறைத்தூதர் முஹம்மத் நபிக்குப் பிறகு) நேர்வழியில் நடத்தப்பெற்ற பிரதிநிதிகளின் ஆட்சிக் காலத்தில் நடைமுறைக்கு வந்தது. மத ஒடுக்குமுறையில் ஈடுப்பட்டு வந்த இரண்டு பேரரசுகளின் வீழ்ச்சிப் பிறகு மதச் சுதந்திரம் நடைமுறைக்கு வந்தது. எந்த ஒரு புரட்சியும் உடனடியாக நிகழ்ந்து விடுவதில்லை. மிக நீண்ட வரலாற்றுச் செயல்பாடுகளால் பலன்கள் உண்டாகின்றன. அந்த வகையில் இஸ்லாமியப் புரட்சியும் விதிவிலக்கல்ல. இஸ்லாத்தில் தொடங்கி வைக்கப்பட்ட மனித விடுதலை தனி மனிதர்களுக்குள்ளும், குழுக்களுக்கு இடையிலும் செல்ல பல்வேறு வகைகளிலான முயற்சிகள் நீண்ட காலம் தொடர்ந்து செய்யப்பட்டது. இஸ்லாமிய பேரரசின் இரண்டாவது பிரதிநிதியான உமர் ஃபாரூக் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அவருடைய ஆளுநர் ஒருவர் மற்றும் அவர் மகன் ஆகிய இருவரையும் பார்த்து உமர் கேட்டார், "அவர்களின் தாய்மார்கள் அவர்களைச் சுதந்திரமானவர்களாகப் பெற்று இருக்கும்பொழுது நீங்கள் எப்படி அவர்களை அடிமைகளாக நடத்தலாம்?" என்று. இந்த நிகழ்ச்சி மிகவும் பிரபலமான ஒன்றாகும். (**அல்பஃக்ரியாத் அல்இஸ்லாமியா**)*

*பதினோரு நூற்றாண்டுகளுக்குப் பிறகு பிரபலமான பிரெஞ்சு சீர்திருத்தவாதி ரூசோ (மரணம் 1778) இதே குரலை எதிரொலிக்கிறார். 'சமூக ஒப்பந்தம்' என்ற அவரது நூல் பிரசித்தி பெற்ற இந்த வாக்கியத்தைக் கொண்டு தொடங்குகிறது :*

*"மனிதன் சுதந்திரமானவனாகப் பிறந்தான், ஆனால், அவனை நான் பிணைக்கப்பட்ட விலங்குடன் கண்டேன்".*

*20ஆம் நூற்றாண்டின் இறுதியில் தான் அறிவார்ந்த மற்றும் மதச் சுதந்திரம் முழுமையாக முதிர்ச்சி பெற்றது. ஐக்கிய நாடுகள் சபை அமைந்து மனித உரிமைப் பிரகடனம் வெளியாகி, அறிவார்ந்த மற்றும் மதச் சுதந்திரம் ஆகியவை எக்காரணத்தை*

முன்னிட்டும் மனிதனிடம் இருந்து பறிக்கப்பட முடியாத சுதந்திரம் என்பதாக வரையறை செய்தது.

**தேர்வுச் சுதந்திரம்**

மனிதன் தான் விரும்பியதைத் தேர்வு செய்யும் சுதந்திரம் உள்ளவன் என்கிற நடைமுறை வர மிக நீண்ட காலம் பிடித்தது. தனக்கு பிடித்த மதத்தை தேர்வு செய்து, அதைப் பிரச்சாரம் செய்தல் என்பதை வன்முறை வழியில் இல்லாமல் முழுமையாக பின்பற்ற முழு உரிமை அவனிடம் உள்ளது. இந்த மாற்றம் உலகில் நிகழ தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் உதவியால் ஓரிறைக் கொள்கை பரப்புரை செய்ய முடியும். முற்காலங்களில் எதேச்சாதிகார சக்திகள் மூடி வைத்திருந்த கதவுகள் இன்று திறந்து கொண்டன.

மனிதர்கள் குறித்த இறைவனின் படைப்புத் திட்டம் பற்றி குர்ஆன் இப்படிக் கூறுகிறது :

“உங்களில் மிகத்தூய்மையான செயலை செய்பவர்கள் யார் என்று சோதிப்பதற்காகவே அவன் மரணத்தையும் வாழ்க்கையையும் படைத்திருக்கின்றான் அவன் (அனைத்தையும்) மிகைத்தவன் மிக மன்னிப்பவன்.” (67:02)

இந்த முடிவை எட்ட, ஒவ்வொருவரும் எந்தவித தடையுமின்றி செயல்படும்படியான சுதந்திரச் சூழல் இவ்வுலகில் நிலவுவது அவசியமாக இருந்தது. பரிசு அல்லது தண்டனை என்பதை அறிவிக்க விடுதலை இன்றி இது சாத்தியமே இல்லை. இறைவன் மனிதனை ஒரு திட்டத்தின்படி படைத்து இருக்கிறான், இந்தச் சூழலில் அறிவார்ந்த சுதந்திரம் இல்லாமல் போவது இறைவனின் திட்டத்தையே செல்லுபடியற்றதாக்கி விடுகிறது. பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வேர்விட்ட இந்த எதேச்சதிகார அரசுகள் இதனால்தான் தூக்கி எறியப்பட வேண்டியவையாக இருந்தன.

சமீப காலங்களில் பண்டைய அமைப்பின் அடிப்படையில் இருந்தப் பேரரசை அமைக்க 1917ஆம் ஆண்டு நிகழ்ந்த கம்யூனிசப் புரட்சி முயற்சித்தது. ஆனால் இது இறைவனின் திட்டத்திற்கு மாறானதாக இருந்ததால் 1991ஆம் ஆண்டு சோவியத் யூனியன் உடைந்து போகும் நிலை ஏற்பட்டது.

உலகின் ஏனைய பகுதிகளில் கிடைத்த அதே சுதந்திரம் மனிதனுக்கு மீண்டும் கிடைத்தது.

**மூட நம்பிக்கைக்காலம் முடிவுக்கு வந்தது**

இஸ்லாமியப் புரட்சி கொண்டு வந்த இன்னுமொரு அடிப்படை மாற்றம் சில வகைகளில் நவீன காலத்தில் ஏற்பட்ட அறிவியல் புரட்சியைப் போன்றே இருந்தது. அது மூட நம்பிக்கையின் அடிப்படையிலான சிந்தனையை அறிவியலைக் கொண்டு களைவதும் உண்மையின் அடிப்படையில் பொதுவாக கிடைப்பதைக் கொண்டு சிந்திப்பதாகும்.

மேற்குறிப்பிட்டவாறு, பழங்காலத்தில் நிலவி வந்தச் சிலை வழிபாடு என்கிற வாழ்க்கைமுறை சிந்தனை ஆகியவை இயற்கையைப் பற்றிய அறியாமையின் விளைவாகும். பழங்காலத்தில் இயற்கை நிகழ்வுகளை அப்படியே அவற்றை தெய்வீகமாக நம்பி பக்தியுடன் வணங்கி வந்தனர். முதல் முறையாக மனித வரலாற்றில், இயற்கை என்பது படைப்பாளி அல்ல, அது நம்மைப் போன்ற படைப்பே என்கிற விளக்கம் மக்கள் ஏற்றுக்கொள்ளும்படி சொல்வதில் வெற்றி கண்டது. அவை உதவி செய்யும் நிலையில் இல்லாத வெறும் படைப்புகள், மனிதனை விட மேம்பட்ட தெய்வீகத் தன்மை எதுவும் அதற்கு இல்லை என நிறுவப்பட்டது.

இந்த புரட்சிகர மாற்றத்தின் மூலம், சிலை வழிபாட்டுத் தத்துவம் ஒட்டு மொத்தமாக துடைத்தெறியப்பட்டது. தெய்வீகத்தன்மை கொடுக்கப்பட்ட அனைத்தும் வெறும் படைப்புகள் எனத் தெளிவுபடுத்தப்பட்டது. மனிதனால் இயற்கை ஆற்றலை கட்டுப்படுத்தி பயன்படுத்த முடியும் எனவும், மாறாக அதற்கு அடிமையாக இருக்க கூடாது எனவும் கூறப்பட்டது. பண்டைய காலத்தில் சூரியன் கடவுளாக வணங்கப்பட்டது. இன்றைய மனிதன் சூரியனிலிருந்து சூரிய மின்சக்தியைப் பெறுகிறான். பண்டைய மனிதன் நிலவை புனிதமாக எண்ணினான். நவீன மனிதனோ அதில் கால் பதித்து விட்டான் பண்டைய மனிதன் நதியை வணங்கினான். நவீன மனிதன் அதிலிருந்து நீர் மின் சக்தியை உற்பத்தி செய்கிறான். இது போல பலவும்.

*அந்த வகையில், பயபக்தியுடன் கடைபிடிக்கப்பட்டு வந்த இயற்கை வழிபாடு மனித வரலாற்றில் முதல் முறையாக ஆய்வுப் பொருளாக மாற்றம் கண்டது. வேறு வார்த்தையில் சொல்வதானால், இஸ்லாம் அறிவியல் தேடலை ஆரம்பித்து வைத்தது. திருக்குர்ஆன் தொடர்ந்து பிரபஞ்சத்தைப் பார்த்துச் சிந்திக்கத் தூண்டுகிறது. இது சாதாரண விஷயமல்ல. இயற்கையைக் கண்டு வியப்பது, அதை வழிபடுவதற்கு ஒப்பாகும் என கண்டிக்கிறது. இந்த சிந்தனையால் மனித வரலாற்றில் முதல் முறையாக பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் ஆய்வுக்கும், தேடலுக்குமுரியதாக மாறியது.*

*இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் நவீன கால அறிவியல் சிந்தனை தோற்றம் கண்டு, பிறகு படிப்படியாக வளர்ந்து, ஒவ்வொரு நாடாக விரிவடைந்து, மேற்கு நாடுகளில் நல்ல வளர்ச்சி அடைந்தது. இந்த வகையில் இந்தப் புரட்சிகரமான அறிவியல் சிந்தனை இஸ்லாத்திற்கே விருப்பமானதாகும்.*

*இந்தப் புரட்சிக்கு பிறகு, மனித வரலாற்றில் முதல் முறையாக சிலை வழிப்பாட்டுச் சிந்தனை தத்துவார்த்த அடித்தளத்தை இழந்தது. இயற்கையை புனிதபடுத்துவது என்பது மூட நம்பிக்கை என்றானது. நவீன அறிவியல் ஆய்வு முறை இவ்வாறான மூடநம்பிக்கையை அடிப்படையற்றதாக நிறுவியது.*

*நிகழ்ந்தவையெல்லாம் இறைத்திட்டத்தின்படியே சரியாக நிகழ்ந்தது. அந்த இறைத்திட்டத்தை செயல்படுத்தும்படி இறைத்தூதரும் அவர் தம் தோழர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.*

*“(நம்பிக்கையாளர்களே! இந்நிராகரிப்பவர்களின்) விஷமத்தன்மை முற்றிலும் நீங்கி இறைவனுடைய மார்க்கம் நிலைபெறும் வரையில் (மக்காவாசிகளாகிய நிராகரிக்கும்) இவர்களுடன் போர் புரியுங்கள் (விஷமம் செய்வதிலிருந்து) அவர்கள் விலகிக் கொண்டால் நிச்சயமாக இறைவன் அவர்கள் செய்வதை உற்று நோக்கினவனாக இருக்கின்றான்.” (08:39)*

*இறைவனின் பாதையைத் தேர்ந்தெடுப்பதில் எந்த ஒரு தடையும் இனி மனிதன் முன் இல்லை என்பது இதன் பொருள்.*

இதுவே முஹம்மத் நபி (ஸல்) மற்றும் அவரின் தோழர்கள் செய்து காட்டிய புரட்சியின் இறுதி இலக்காகும். மத நம்பிக்கை குறித்து தனி மனித முடிவுகளில் இடையூறாக இருந்த எதேச்சாதிகார முறைக்கு இது முடிவு கட்டியது. மக்களை முகத்திரையிட்டு வழிகெடுத்துக் கொண்டிருந்த தடைகளை விலக்கியது. படைப்பாளனை வணங்காமல் படைப்புகளை வணங்கும் முறை முடிவுக்கு வந்தது.*

(இஸ்லாம் மார்க்கத்தில் நிர்ப்பந்தமேயில்லை. ஏனென்றால் வழிக்கேட்டிலிருந்து (விலகி) நேர்வழி (அடைவது எவ்வாறென்று) தெளிவாகி விட்டது. ஆகவே எவர் ஷைத்தானை நிராகரித்து விட்டு இறைவன் மீது நம்பிக்கை கொள்கின்றாரோ அவர் நிச்சயமாக அறுபடாத பலமானதொரு கயிற்றைப் பிடித்துக் கொண்டார். இறைவன், (அனைத்தையும்) நன்கு செவியுறுபவனாகவும் மிக அறிந்தவனாகவும் இருக்கின்றான்." (02:256)

சூரியன் உதித்ததும் இருள் மறைந்து ஒளி தோன்றுவது போல உண்மையும் பொய்மையும் ஒன்றிலிருந்து ஒன்று தெளிவாக விலகி நிற்கின்றன. இஸ்லாமியப் புரட்சிக்குப் பின் சந்தேகத்தின் நிழலுக்கு அப்பால் திறந்த மனதுடன் உண்மையைத் தேடும் எவரொருவராலும் புரிந்து கொள்ளக் கூடியதாக இது உள்ளது.

**உண்மையின் வெளிப்பாடு**

இறுதியாக இறைவன் மனித வரலாற்றில் ஒரு புரட்சியை மேற்குறிப்பிட்டவாறு கொண்டு வந்தான். உண்மை, பொய்மை இரண்டுக்கும் இடையில் தடிமனான, அல்லது மெல்லிய திரை எதுவும் இல்லை. இன்று மனிதனுக்கு முழு சுதந்திரம் உண்டு எனும் விளக்கமளிக்கும் இலக்கு முழுமையாக நிறைவேறி விட்டது. தத்துவார்த்த கொள்கைகளோ அல்லது நடைமுறை தடைகளோ எதுவுமே இறைவனை நோக்கிய மனித பயணத்தின் குறுக்கே இனி இல்லை.

---

*மேற்கொண்டு கூடுதல் தகவலுக்கு ஆசிரியரின் "நவீன உலகை உருவாக்கியது இஸ்லாம்'' என்ற நூலை வாசிக்கவும்

# 9

# இஸ்லாமிய முன்னெடுப்பில் முஸ்லிம்மல்லாதவர்களின் பங்களிப்பு

*சமூகத்தின் அனைத்து பிரிவினரையும் பாரபட்சமின்றி கை கோர்த்து பீடு நடைபோடும் இயற்கை பாதையே இஸ்லாம். இணக்கமற்ற, விறைப்பான, பிடிவாதப் போக்கு என்பது வளர்ச்சிக்கு முற்றிலும் புறம்பான குணமாகும்.*

*மரபுச் செய்தி தொகுப்பு நூலான புகாரியில் மிகவும் பொருள் பொதிந்த நபிமொழி ஒன்று பதிவாகியுள்ளது.*

*இறைத்தூதர் கூறினார் : இறைவன் விரும்பினால் முஸ்லிம் அல்லாத நபரைக் கொண்டும் தன் மார்க்கமான இஸ்லாத்தை வலுப்படுத்துவான்.*

*இது இறைத்தூதரின் மிக முக்கியமான பிரகடனமாகும். ஏனெனில் எந்த இயற்கைச் செயல்பாடும் இஸ்லாத்தில் நிகழ்ந்தது போலவே பல்வேறுபட்ட சக்திகளின் பங்களிப்பினாலேயே தொடங்கியுள்ளது. மனிதம் முழுவதும் ஒன்றை ஒன்று சார்ந்ததே. அதற்கு இஸ்லாமும் விதிவிலக்கல்ல.*

*இஸ்லாமியக் கொள்கை மனிதனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. ஆக பெருமளவில் மனிதப் பங்களிப்பும், நீடித்த ஒத்துழைப்பும் இல்லாமல் இது சாத்தியமில்லை. இதனைக் குறித்து விளக்கும் பல்வேறு படிநிலைகள் இஸ்லாமிய வரலாற்றில் உள்ளது.*

*இறைத்தூதுப்பணியின் மையக் களமாக இருந்த மெக்கா நகரில் ஆரம்ப பதிமூன்று ஆண்டுகாலம் முஹம்மது நபி செயல்பட்டார். அந்த நேரத்தில், மெக்கா நகரம் பழங்குடிச் சமுகமாக இருந்தது. இன்று நம் புரிதலில் உள்ள அமைப்பு ரீதியான அரசு எதுவும் அங்கு நிலவாத காலம் அது. ஆக எந்த ஒரு தனி நபரின் பாதுகாப்பும் ஏதாவதொரு இனக்குழுத் தலைமையின் கீழே இருந்தது. ஆக, அந்த மரபையொட்டி அபூ தாலிப் மற்றும் முத்யிம் இப்னு அதி என்கிற (முஸ்லிம் அல்லாத) தலைவர்களின் பாதுகாப்பின் கீழே முஹம்மது நபி அபயம் பெற்று இருந்தார்.*

*மெக்கா நகரில் பதின்மூன்று ஆண்டுகாலம் கழித்த பின் இறைத்தூதர் மதீனாவுக்குப் புலம் பெயர்ந்தார். அந்தப் பயணம் மிகவும் அபாயகரமானதாக இருந்தது. ஏனெனில் அவருடைய எதிரிகள் இறைத்தூதரின் தலையை கொண்டு வருபவருக்கு 100 ஒட்டகங்கள் பரிசளிப்பதாக அறிவித்திருந்தனர். இவற்றை எல்லாம் மீறி தனது பயணத்திற்கான வழிகாட்டியாக எதிர் குழுவைச் சேர்ந்த ஒருவரை இறைத்தூதர் தேர்ந்தெடுத்துக் கொண்டார். அந்த மனிதர் தனது பணியில் மிக நேர்மையானவராக உண்மையானவராக அறியப்பட்டவராவார். இஸ்லாமிய வரலாற்றில் அவர் அப்துல்லா பின் உரைக்கித் என்று அறியப்பட்டவராவார். அவர் முஸ்லிமல்லாதவராக இருந்தார். முஸ்லிமல்லாதவராகவே மக்காவில் அவர் மரணித்தார்.*

*புலம் பெயர் வாழ்க்கை தொடங்கிய பின், முஹம்மது நபிக்கும், அவரின் எதிர்ப்பாளர்களுக்கும் இடையில் பல்வேறு ஆயுத மோதல் நிகழ்ந்தது. அவ்வாறான மோதல்களில் ஒன்றை அகழி யுத்தம் என வரலாறு கூறுகிறது. இஸ்லாமிய இயக்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கிய நிகழ்வாக திருக்குர்ஆனும் அதை பார்க்கிறது. எதிர்ப்பாளர்களின் பயங்கரவாதத்துக்கு முன்பாக முஸ்லிம்கள் ஒன்றுமே செய்யமுடியாத இக்கட்டான நிலமை அது. இரு தரப்புக்கும் பொதுவான மதீனாவைச் சேர்ந்த ஒரு மனிதர் செய்த செயல் அந்தப் பிரச்சினையின் தீவிரத்தைத் தணித்தது.*

*மதீனா நகரம் முற்றுகையிடப்பட்டு இருந்த நடு இரவில் அந்த மனிதர் முஹம்மது நபியைச் சந்தித்தார். "நான் மனதளவில்*

ஒரு முஸ்லிம். ஆனால், அதை வெளிப்படையாக இதுவரை அறிவிக்கவில்லை. அதனால் இணைவைப்பாளர்களும், யூதர்களும் என் மீது நம்பிக்கை வைத்துள்ளனர்” என்றார் அவர். அப்பொழுது முஹம்மத் நபி அவரைப் பார்த்து கூறினார் :

“நமக்கும், நமது எதிர்ப்பாளர்களுக்கும் இடையில் சமாதானம் செய்து வைக்கும் வாய்ப்புடையவர் நீர் மட்டுமே. காரணம் இரு தரப்பின் நம்பிக்கையை நீர் பெற்று இருக்கிறீர், அந்தத் தகுதி இங்கு இருப்பவர்களில் உமக்கு மட்டுமே உண்டு”

மோதிக்கொள்ள இருக்கும் இரண்டு தரப்பாருக்கு மத்தியில் சமாதானம் செய்து வைக்க அந்த மனிதர் புறப்பட்டுச் சென்றார். அவருடைய முயற்சியால், எதிரிகள் மதீனா முற்றுகையை கைவிட்டு தங்கள் வீடுகளுக்கு திரும்பினர்.

இஸ்லாத்தின் வளர்ச்சியில் முஸ்லிம் அல்லாதவர்கள் செய்த ஏராளமான பங்களிப்பை வரலாறு பதிவு செய்து வைத்திருக்கிறது. இஸ்லாத்தின் வரலாற்றில் முஸ்லிம அல்லாதவர்களின் பங்களிப்பு என்பது, தனி மனித அளவில் இருந்து ஒட்டு மொத்தக் குழுவும் செய்துள்ளதை கூறிக் கொண்டே போகலாம்.

இன்றைய காலத்தில் மேற்கத்திய பண்பாடு சரியான எடுத்துக்காட்டாகும். முஸ்லிம் அல்லாத சமுகத்தில், முஸ்லிம்களின் நேரடிச் சிந்தனை இல்லாமல் உருவானது தான் மேற்கத்திய பண்பாடு. இருந்தாலும் அது பலவகையில் இஸ்லாத்துக்கு உதவியாக இருந்து இருக்கிறது. மத ஒடுக்குமுறையை முற்றிலுமாக களைந்த சமுதாயம் மேற்கத்திய பண்பாட்டில்தான் உருவானது. அதனால் மதச் சுதந்திரம் பரவலாக மாறியது, இறை அழைப்புப் பணிக்கான வாயில் திறந்து கொண்டது. அதே போன்று, மேற்கத்திய பண்பாடு தான் நவீன தகவல் தொழில் நுட்பத்தைக் கண்டுபிடித்து, முஸ்லிம்கள் இன்று முழு உலகிலும் அழைப்புப் பணியாற்றக் கூடிய வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்தது. இஸ்லாமிய நம்பிக்கைகள் பலவற்றை அறிவியல் அடிப்படையில் நிரூபிக்க மேற்குலகின் கண்டுபிடிப்புகள் உதவியாக இருந்தன.

அனுமான வாதங்களால் எதிர்கொள்ளக்கூடிய நேரடியான தர்க்கங்களால் எதிர்கொள்ள முடியாத மத நம்பிக்கைகளை

கொண்டதாகவே இஸ்லாம் முன்பு கருதப்பட்டது. ஆனால், நவீன அறிவியல் மனிதச் சிந்தனைகளை மாபெரும் பிரபஞ்ச அளவு என்பதிலிருந்து நுண்ணிய பிரபஞ்ச அளவு என்பது வரை கொண்டு வந்து நம்பிக்கையாலான அனுமான காரணங்களும் நேரடி காரணங்கள் போல மதிப்பு மிக்கவையே என்று ஏற்றுக் கொள்வதைச் சாத்தியமாக்கியுள்ளது.

இது போன்ற சில உதாரணங்களால், முஸ்லிம் அல்லாதவர்களும் கூட இஸ்லாத்துக்குப் பல வழிகளில் உதவியாக இருந்து வருகின்றனர். இஸ்லாமிய வளர்ச்சி என்பது அதனை நிறைவு செய்யும் வகையில் முஸ்லிம்களும் முஸ்லிமல்லாதோரும் பங்களிப்பு செய்யக் கூடிய உலகளாவிய செயல்பாடாக உள்ளது.

இஸ்லாமிய வளர்ச்சியில் முஸ்லிம் அல்லாதவர்களின் பங்களிப்பு தார்மீக ரீதியானதும் கூட. அந்த வகையில் உலகில் பிறரை நோக்கிய முஸ்லிம்களின் உணர்வு அன்பால் நிரம்பி இருக்க வேண்டும், வெறுப்பு, பகை, நம்பிக்கையின்மையால் அல்ல.

முஸ்லிம் அல்லாதவர்கள் இஸ்லாத்துக்கு செய்த பங்களிப்பு தற்காலிகமானதல்ல. அது இஸ்லாமிய வரலாறு நெடுக தொடர்ந்து வருகிறது. இன்றைய காலத்தில் முஸ்லிம் அல்லாதவர்கள் செய்த பங்களிப்பு, குறிப்பாக அறிவியல் கண்டுபிடிப்புகள் முன் எப்பொழுதும் இல்லாத அளவுக்குப் பிரமாண்டமானது.

என்ன இந்த அறிவியல் கண்டுபிடிப்புகள்? உண்மையில் அவை இயற்கையின் கண்டுபிடிப்புகளே. திருக்குர்ஆன் சொல்வதைப் போல சொர்க்கம் மற்றும் பூமியில் உள்ளவை அனைத்தும் இறைவனின் சான்றுகளே. அதனால் பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் இஸ்லாமிய போதனைகளின் அறிவியல் வாதங்களாக உள்ளன. இவ்வகையில் இந்த கண்டுபிடிப்புகள் அனைத்தும் இஸ்லாமிய போதனைகளை நிரூபிப்பவையாக இருக்கின்றன. நான் எழுதியுள்ள பிற நூல்களில் இதனைக் குறித்து விரிவாக விளக்கியுள்ளேன். ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் இங்கு தருகிறேன்.

*திருக்குர்ஆனில் உள்ள வசனம்*

*“எனினும், உனக்குப் பின்னுள்ளவர்களுக்கு ஓர் அத்தாட்சியாவதற்காக உன்னுடைய உடலை (அது அழியாமல்) நாம் இன்றைய தினம் பாதுகாத்துக் கொள்வோம் (என்று கூறினோம்) எனினும் நிச்சயமாக மனிதர்களில் பலர் நம்முடைய (அத்தகைய) அத்தாட்சிகளைப் பற்றியும் பாராமுகமாயிருக்கின்றனர்.” (10:92)*

*மேற்காணும் வசனம், மூசா நபி காலத்தில் எகிப்தை ஆண்ட பாரோ மன்னனை குறிக்கிறது. இறைவன் அந்த மன்னனை கடலில் மூழ்கடித்தான். அப்பொழுது அவனுடைய உடலைப் பாதுகாத்து வைப்பதென முடிவு செய்து, அதை இறைவனின் அடையாளமாகலாம் என்று பிற்கால தலைமுறைக்கு விட்டு வைத்தான்.*

*திருக்குர்ஆன் அருளப்பட்ட காலத்திலோ அல்லது அதன் பிறகோ ஆயிரம் ஆண்டு காலம் வரை அந்த மன்னனின் உடல் என்னவாயிற்று என அறியாமல் இருந்தனர். முஸ்லிம் உலகம் கூட இதைக் குறித்த அறியாமையிலேயே இருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் அந்த மன்னனின் உடல் கண்டெடுக்கப்பட்டது. அந்த வகையில் திருக்குர்ஆனின் வழியே இறை வாக்குறுதி உண்மையென நிரூபணமானது. ஆனால் இந்தச் செயல் முஸ்லிம் அல்லாதவர்களால்தான் செய்யப்பட்டது.*

*‘திபெஸ்ஸின் கிங்க்ஸ்’ பள்ளத்தாக்கிலிருந்து பாரோ மன்னனின் பாதுகாக்கப்பட்ட உடலைக் கண்டுபிடித்தவர் பிரெஞ்சு அறிஞரான பேராசிரியர் லோரெட் ஆவார். பின்னர் அந்த உடல் கெய்ரோவுக்குக் கொண்டு வரப்பட்டது. 1907ஆம் ஆண்டு ஜூலை எட்டாம் நாள் பேராசிரியர் எலியட் ஸ்மித் என்பவரால் பாரோவின் உடலை மூடியிருந்தவை நீக்கப்பட்டன. தனது* The Royal Mummies *(1912) என்ற நூலில் அதனை ஆய்வு செய்து கண்டறிந்ததை அவர் விளக்கமாக எழுதியுள்ளார்.*

*பாரோ மன்னனின் உடலை ஆய்வு செய்ய டாக்டர் மௌரிஸ் புக்கெய்ல் என்பவருக்கு 1975ஆம் ஆண்டு எகிப்து அரசு அனுமதி அளித்தது. சிறப்பு நிபுணர்கள் அடங்கிய குழுவுடன் சிறப்பு ஆய்வுகளும் சோதனைகளும் நடத்தப்பட்டன.*

*ஒளிக்கதிரியக்கம், கார்பன் 14 ஆய்வு முறை, உடலுக்குள் அனுப்பி படமெடுக்கும் கருவி ஆகியவற்றைக் கொண்டு செய்யப்பட்ட ஆய்வுகள் மூலம் அந்த உடலின் காலகட்டம் வரையறுத்துக் கூறப்பட்டது. மேற்கத்திய நிபுணர்களால் பல ஆண்டுகள் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் அந்த உடல் மூஸா நபி காலத்தது என்பது அறிவியற்பூர்வமாக நிரூபிக்கப்பட்டது.*

*மேலும் பாரோ மன்னனின் மரணம் நீரில் முழ்கியதாலோ அல்லது நீரில் மூழ்கிய அதிர்ச்சியினாலோதான் சம்பவித்திருக்க முடியும் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டது.*

*டாக்டர் மௌரிஸ் புக்கெய்ல் தனது* 'The Exodus' *என்னும் நூலின்,* The Bible, the Qur'an and Science, *என்ற அத்தியாயத்தில் இந்த சிலிர்க்க வைக்கும் வரிகளை எழுதியுள்ளார்.*

*"புனித நூல்களில் கூறப்பட்டுள்ள உண்மைகளுக்கான நிரூபணத்தை நவீன தகவல்கள் மூலம் தேடுபவர்கள் பாரோவின் உடலைப் பற்றி குர்ஆனின் வாக்கியங்கள் மிக அற்புதமாக விளக்கியுள்ளதை கெய்ரோ நகரில் அமைந்துள்ள எகிப்து அருங்காட்சியகத்தில்* Royal Mummies Room—*க்கு செல்வதன் மூலம் அறிந்து கொள்ள முடியும்."*

*மவ்லானா வஹீதுத்தின் கான் அவர்கள் இருநூறுக்கும் மேற்பட்ட நூல்களை உருது, ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். அந்நூல்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட சில நூல்கள் இங்கு பட்டியலிடப்பட்டுள்ளன.* God Arises *என்றொரு நூல் அரபியில் மொழிபெயர்க்கப்பட்டு வளைகுடா நாடுகளின் பல்கலைக்கழகங்களில் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் அவரின் பல நூல்கள் பன்னாட்டு மொழிகள் பலவற்றிலும், இந்தியாவில் ஹிந்தி, குஜராத்தி, மராட்டி, தெலுங்கு, கன்னடம், மலையாளம் என கிடைக்கின்றன. தமிழில் இந்த முயற்சி நடந்து வருகிறது. இறைவன் நாடினால், கூடிய விரைவில் ஒவ்வொன்றாக அவை வெளிவரும்.*

**Quran - An Abiding Wonder**

**Treasury of the Quran**

**Quranic Wisdom**

**Muhammad : A Prophet for All Humanity**

**Prophet Muhammad : A Simple Guide to His Life**

**The Prophet of Peace (Penguin Publishers)**

**Age of Peace**

**Ideoglogy of Peace**

**Islam and Peace**

**The Vision of Islam**

**In Search of God**

Introducing Islam

Islam As It Is

Islam Rediscovered

Islam : Creator of Modern Age

Islam : The Voice of Human Nature

Principles of Islam

True Face of Islam

Non Violence and Peace Building

True Jihad

Political Intrepetataion of Islam

Tazkiya - The Purification of Soul

Leading A Spiritual Life

God Arises

Religion and Science

Simple Wisdom


## திருக்குர்ஆன்

*ஆன்மிகம் மற்றும் அறிவார்ந்த தளத்தில் உண்மையைக் கண்டடைய முக்கியத்துவம் கொடுக்கும் தெய்வீக அறிவுரை நிச்சயம் மனித குலத்துக்கான நற்செய்தியாகவே இருக்கும். அறிவொளி, இறைவனை நெருங்குதல், அமைதி, ஆன்மிகம் ஆகியவையே திருக்குர்ஆனின் முக்கிய கருப்பொருள்கள். இறைவனின் படைப்புத் திட்டத்தைப் பற்றி மனிதனுக்கு விளக்கம் கொடுப்பது மட்டுமே திருக்குர்ஆனின் ஒற்றை நோக்கம்.*

*புரிந்துகொள்வதற்கு எளிதான நடையில் பல மொழிகளிலும் கிடைக்கிறது.*



TAMIL



ENGLISH



HINDI



MALAYALAM




TELUGU



KANNADA




FRENCH



SINHALA

*மேலும் மராத்தி, ஹிந்தி, ஸ்பானிஷ், ஜெர்மன், சீனம், டச்சு, ஃபிரெஞ்சு, இத்தாலி, போர்ச்சுகீஸ் என உலக மொழிகள் பலவற்றின் திருக்குர்ஆன் மொழிபெயர்ப்புகள் கிடைக்க கீழ்காணும் இணையதளத்தை தொடர்பு கொள்ளவும்.*

www.goodwordbooks.com



# இஸ்லாமிய சிந்தனை

## - சில கட்டுரைகள்

Islam Rediscovered (Discovering Islam from its original sources) என்னும் ஆங்கில நூலின் தேர்ந்தெடுக்கப்பட்ட சில கட்டுரைகளின் தமிழ் மொழிபெயர்ப்பே இந்நூல். இஸ்லாத்தை உள்ளது உள்ளபடியே எடுத்துரைப்பதுதான் இதன் ஒன்றை நோக்கம். பிற்காலத்திரிபுகளையோ, விளக்கங்களையோ உலகின் பல்வேறு பகுதிகளிலுள்ள முஸ்லிம்கள் இன்று நடந்து கொள்ளும் முறைகளையோ அடிப்படையாகக் கொள்ளாமல் மூலச்சான்றுகளிலிருந்து இஸ்லாத்தை அறிந்து கொள்வதே சரியான முறையாகும். எனவே, திருக்குர்ஆன் மற்றும் நபிமொழிப் பதிவுகளின் அடிப்படையில் இஸ்லாத்தைச் சுருக்கமாகவும், எளிய முறையிலும் முன்வைக்கிறார் இந்நூலின் ஆசிரியர்.

இஸ்லாம் குறித்து அறிந்து கொள்ள விரும்புவோருக்கு இந்நூல் அடிப்படையான அறிமுகத்தை வழங்குகிறது.

குட்வேர்ட்

www.goodwordbooks.com

978-93-86589-18-7

9 789386 589187